# பொருளடக்கம்




வரலாறு 01





20 அரசியல் அறிவியல்





புவியியல் 25





27 பொருளாதாரம்






அறிவியல் 32




தினசரி
தேசிய நிகழ்வு 35



56 சர்வதேச நிகழ்வு



தமிழ்நாடு 63

# 1. வரலாறு






## 1.1 முக்கிய தினங்கள்

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| **செப்டம்பர் 6–12** | **உணவு பாதுகாப்பு வாரம்** | ▪ உணவு பாதுகாப்பு அமைச்சகம் உணவு பாதுகாப்பு வாரத்தை செப்டம்பர் 06–12 வரை, ஆசாதி கா அமிரித் மஹோத்சவ்–ன் ஒரு பகுதியாக கடைப்பிடிக்கிறது. |
| **செப்டம்பர் 8** | **சர்வதேச கல்வி அறிவு தினம்** | ▪ 1967ஆம் ஆண்டு முதல் யுனெஸ்கோவால் இந்த தினம் கடைபிடிக்கப்படுகிறது<br>▪ ஐம்பத்தி ஐந்தாம் ஆண்டு சர்வதேச கல்வி தினத்தின் மையக்கருத்து– "Literacy for a human–centred recovery: Narrowing the digital divide". |
| **செப்டம்பர் 11** | **தேசிய ஹிந்தி தினம்** | ▪ 1949 ஆம் ஆண்டு இந்தியா பாராளுமன்றத்தால் தேவநாகரியில் எழுதப்படும் ஹிந்தி இந்திய குடியரசின் அலுவல் மொழியாக தேர்ந்தெடுக்கப்பட்ட தினமாகும்.<br>▪ இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 343 சரத்தின் கீழ் அலுவல் மொழியாக்கப்பட்டது. |
| **செப்டம்பர் 15** | **தேசிய பொறியாளர்கள் தினம்** | ▪ நாட்டின் முன்னேற்றத்திற்காக பொறியாளர்களின் பங்களிப்பை கௌரவிக்கும் வகையில் 1968 முதல் ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் 15 அன்று கொண்டாடப்படுகிறது.<br>▪ செப்டம்பர் 15 சர் மோக்ஷகுண்டம் விஸ்வேஸ்வரய்யா அவர்களின் பிறந்தநாளாகும். "நவீன மைசூரின் தந்தை" என்றழைக்கப்படுபவர்.<br>▪ 1955 ஆம் ஆண்டு பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது. |

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| **செப்டம்பர் 25** | **உலக மருந்தாளுநர் தினம்** | ▪ உலக மருந்தாளுநர் தினம் ஆண்டுதோறும் செப்டம்பர் 25–ம் தேதி கொண்டாடப்படுகிறது. |
| **செப்டம்பர் 26** | **உலக நதிகள் தினம்** | ▪ மையக்கருத்து – நம் சமூகங்களில் நீர்வழிகள் ("waterways in our communities"). |
| **செப்டம்பர் 27** | **உலக சுற்றுலா தினம்** | ▪ மையக்கருத்து – "உள்ளடக்கிய வளர்ச்சியில் சுற்றுலா". |

## 1.2 பாதுகாப்பு, தேசியப் பாதுகாப்பு மற்றும் பயங்கரவாதம்

### இந்தியா கஜகஸ்தான் கூட்டு இராணுவ பயிற்சி – KAZIND–21

- 5வது இந்தியா கஜகஸ்தான் இடையேயான கூட்டு இராணுவ பயிற்சி KAZIND–21 தஜகஸ்தானில் பிரிவில் நடைபெற உள்ளது.

### மொரிஷியஸ் நாட்டு கடலோர காவல் படைக்கு இந்திய கடற்படையின் டார்னியர் விமானம்

- பயணிகள் ரக டார்னியர் விமானம் ஒன்றை ஒப்பந்த அடிப்படையில் மொரிஷியஸ் நாட்டு கடலோர காவல் படைக்கு இந்திய கடற்படை வழங்கியுள்ளதாக மத்திய பாதுகாப்புத் துறை தெரிவித்துள்ளது.
- இதுகுறித்து மத்திய பாதுகாப்புத் துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:
- மொரிஷியஸ் தேசிய கடலோர காவல் படைக்கு, மீட்புப் பணி, தேடல், கண்காணிப்பு, கரோனா நோய்த்தொற்று அவசரகாலப் பணிகள் போன்றவற்றில் ஈடுபட குறைந்த வேகத்தில் செல்லும் டார்னியர் விமானம் தேவைப்பட்டது. இந்திய பாதுகாப்புப் படைகளில் வெற்றிகரமாகச் செயல்படும் இந்த டார்னியர் விமானத்தை மொரிஷியஸ் கோரியது.
- இதைக் கருத்தில் கொண்டு இந்தியக் கடற்படையால் மொரிஷியஸ் நாட்டின் காவல் துறைக்கு ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஒரு விமானம் வழங்கப்பட்டுள்ளது. மொரிஷியஸ் நாட்டில் (செப்டம்பர் 13) நடைபெற்ற நிகழ்ச்சியில் பயணியர் ரக டார்னியர் விமானம் ஒப்படைக்கப்பட்டது.

### இந்திய பெருங்கடல் பிராந்திய பாதுகாப்பில் கடற்படை முன்னிலை

- இந்திய பெருங்கடல் பிராந்தியத்தின் பாதுகாப்பை உறுதி செய்வதில் இந்திய கடற்படை முன்னிலை வகித்து வருவதாக குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் புகழாரம் சூட்டினார்.
- முப்படைகள், மத்திய, மாநில காவல் படைகள் ஆகியவற்றில் நாட்டுக்கு சிறப்பாக சேவையாற்றும் பிரிவுகளுக்கு 'பிரசிடன்ட்ஸ் கலர்' என்ற உயரிய விருது குடியரசுத் தலைவரால் வழங்கப்படும். கோவாவை மையமாகக் கொண்ட ஐஎன்எஸ் ஹன்ஸா கடற்படைப் பிரிவுக்கு அந்த விருதை குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் வழங்கினார். நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது:
- இந்தோ–பசிபிக் பிராந்தியத்தில் பாதுகாப்பு சார்ந்த பணிகள் அனைத்தையும் கடற்படை வெற்றிகரமாக மேற்கொண்டு வருகிறது. அந்த பிராந்தியத்தில் அமைதியை நிலைநாட்டுவதற்காக கூட்டு நாடுகளுடன் இணைந்து மத்திய அரசு செயல்பட்டு வருகிறது.

## எதிரி நாட்டு ஏவுகணையை கண்டறிந்து எச்சரிக்கும் ஐஎன்எஸ் துருவ் கப்பல்

- ராணுவ ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிறுவனம் (டிஆர்டிஓ), தேசிய தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனம் (என்டிஆர்ஓ) ஆகியவற்றின் ஒத்துழைப்புடன், இந்துஸ்தான் கப்பல் கட்டும் மையம் சார்பில் இந்த ஐஎன்எஸ் துருவ் கப்பல் உருவாக்கப்பட்டுள்ளது. சுமார் 10 ஆயிரம் டன் எடை கொண்ட இந்தக் கப்பல், இந்தியக் கடற்படையில் வரும் 10–ம் தேதி இணைக்கப்படுகிறது.
- ஆந்திராவின் விசாகப்பட்டினத்தில் நடைபெறும் இந்நிகழ்ச்சிக்கு தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் தலைமை வகிக்கிறார். கடற்படை தளபதி கரம்பீர் சிங், என்டிஆர்ஓ தலைவர் அனில் தஸ்மானா மற்றும் டிஆர்டிஓ அதிகாரிகள் கலந்து கொள்கின்றனர்.

## குஜராத் காந்தி நகரில் 12வது பாதுகாப்பு கண்காட்சி

- குஜராத் மாநிலம் காந்தி நகரில் 2022ம் ஆண்டு 12வது பாதுகாப்பு கண்காட்சி நடைபெற உள்ளது.

## இந்தியாவின் முதல் நீண்ட தூரத்தில் ஏவப்பட்ட அணுகுண்டை கண்டறியும் போர்க்கப்பல்

- எதிரி நாட்டிலிருந்து அதிக தூரத்தில் நம்மை நோக்கி ஏவப்பட்ட அணுசக்தி ஏவுகணைகளை கண்டறியும் INS துருவ் போர்கல் DRDO மற்றும் ஹிந்துஸ்தான் கப்பல் கட்டும் நிறுவனங்களால் உருவாக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

## உத்தரகாண்டில் இந்தியா–நேபாளம் கூட்டு ராணுவப் பயிற்சி (சூரிய கிரண் XV)

- இந்திய–நேபாள ராணுவங்களுக்கு இடையே நடைபெறும் 15–ஆவது சூர்ய கிரண் கூட்டுப்பயிற்சி உத்தரகண்ட் மாநிலம் பிதோராகரில் செப்டம்பர் –20 ஆம் தேதி தொடங்கியது.
- 14வது சூரிய கிரண் பயிற்சி நேபாளத்தில் 2019ஆம் ஆண்டு நடைபெற்றுது. கரோனா காரணமாக 2020ஆம் ஆண்டு நடைபெறவில்லை.
- அடுத்த மாதம் 3–ஆம் தேதி வரை நடைபெறும் இந்த கூட்டுப் பயிற்சியில் இருநாட்டு ராணுவங்களைச் சேர்ந்த 650 வீரர்கள் ஈடுபடுகின்றனர். இதன் மூலம் இருநாட்டு ராணுவங்களுக்கு இடையிலான செயல்பாடுகள் மேம்படும் என்றும் தீவிரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகள் மற்றும் பேரிடர் நிவாரண நடவடிக்கைகளில் அனுபவங்கள் பகிரப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்திய, இந்தோனேசிய கடற்படை கூட்டுப் பயிற்சி தொடக்கம்

- இந்திய, இந்தோனேசிய கடற்படைகள் இணைந்து மேற்கொள்ளும் கூட்டுப்பயிற்சி தொடங்கியது.
- கடந்த 2018–ஆம் ஆண்டு முதல் இந்தியா, இந்தோனேசியா கடற்படைகள் இணைந்து 'சமுத்திர சக்தி' என்ற பெயரில் கூட்டுப் பயிற்சி மேற்கொள்கின்றன. இந்தப் பயிற்சி 3–ஆவது முறையாக இந்தோனேசியாவின் ஜாவா, சுமத்ரா தீவுகளுக்கு இடையே உள்ள சுன்டா நீரிணைப் பகுதியில் தொடங்கியது. இந்தப் பயிற்சியில் இந்திய கடற்படையின் ஷிவாலிக், கட்மத் போர்க்கப்பல்களும், கடற்பகுதியில் நீண்ட தூரம் உளவு பார்க்கும் பி81 விமானமும் பங்கேற்கின்றன.

## 118 நவீன பீரங்கிகள் தயாரிப்பு

- சென்னை அருகே உள்ள ஆவடியில் ரூ.7,523 கோடியில் 118 அதிநவீன எம்பிடி எம்கே–1ஏ அர்ஜுன் பீரங்கிகளைத் தயாரிக்க ஆவடி கனரக வாக தொழிற்சாலையுடன் பாதுகாப்பு அமைச்சகம் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.
- ஆவடி கனரக வாகனம் தொழிற்சாலையில் ரூ.7,523 கோடியில் 118 அதிநவீன எம்பிடிகே–1ஏ அர்ஜுன் பீரங்கிகளை தயாரிக்க மத்திய அரசு ஒப்பந்தம் மேற்கொண்டது. இதன் மூலம் பாதுகாப்புத் துறையில் "இந்தியாவில் தயாரிப்போம்" திட்டம் ஊக்குவிக்கப்படுவதுடன், "தற்சார்பு பாரதம்" திட்டத்தின் முன்னோடியாகவும் இது திகழ்கிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆகாஷ் பிரைம் சோதனை

- ஒடிஸா மாநிலம், சண்டிபூரிலிருந்து வெற்றிகரமாக ஏவப்பட்ட "ஆகாஷ் பிரைம்" ஏவுகணை. வானில் இருந்த இலக்கை புதிய ரக ஆகாஷ் ஏவுகணை துல்லியமாகத் தாக்கி அழித்ததாக பாதுகாப்புத் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

## ராணுவ தளவாடங்கள் கொள்முதல்

- ராணுவத்துக்கு 25 அதிநவீன இலகுரக விமானங்கள் உள்பட ரூ.13,165 கோடி

மதிப்பிலான ராணுவத் தளவாடங்களைக் கொள்முதல் செய்வதற்கு பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத்சிங் தலைமையிலான ராணுவக் கொள்முதல் கவுன்சில் (டிஏசி) ஒப்புதல் அளித்துள்ளது.

### போர்ப் பயிற்சி

- வங்ககடலில் தொடங்கிய இந்திய–ஆஸ்திரேலிய கடற்படையின் ஆஸிண்டெக்ஸ் கூட்டுப் பயிற்சியில் கலந்து கொண்ட ஐஎன்எஸ் ஷிவாலிக் கட்மத் போர்க் கப்பல்கள்.

# 1.3 உலக அமைப்புகள் உடன்படிக்கைகள் மற்றும் மாநாடுகள்

### 8வது பிம்ஸ்டெக் (BIMSTEC) வேளாண் வல்லுநர்கள் கூட்டம்

- இந்தியா 8வது பிம்ஸ்டெக் வேளாண் வல்லுநர்கள் கூட்டத்திற்கு தலைமை தாங்கி நடத்தியுள்ளது.
- BIMSTEC – (Bay of Bengal Initiative for Multi–Sectoral Technical and Economic Cooperation)
- துவக்கம் – 1997
- உறுப்பு நாடுகள் – வங்கதேசம், பூடான், இந்தியா, நேபாளம், இலங்கை, மியான்மர், தாய்லாந்து.

### 2023–இல் இந்தியா தலைமையில் ஜி20 மாநாடு

- வரும் 2023–ஆம் ஆண்டில் ஜி20 நாடுகள் மாநாடு இந்தியா தலைமையில் நடைபெற உள்ளது. அதற்கான இந்தியாவின் ஒருங்கிணைப்பு அதிகாரியாக மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல் நியமிக்கப்பட்டுள்ளார்.
- அடுத்த ஜி20 மாநாடு இத்தாலி தலைமையில் வருகிற அக்டோபர் 30–ஆம் தேதி முதல் 31–ஆம் தேதி வரை நடைபெற உள்ள நிலையில், 2023–ஆம் ஆண்டு மாநாட்டுக்கு இந்தியா முதன் முறையாக தலைமை வகிக்க உள்ளது. ஜி20 கூட்டமைப்புக்கு வரும் 2024–ஆம் ஆண்டு நவம்பர் 30–ஆம் தேதி வரை இந்தியா தலைமை வகிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
- இதற்கான அறிவிப்பை மத்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டது. அதில் கூறியிருப்பதாவது:
- ஜி20 நாடுகள் கூட்டமைப்புக்கு வரும் 2022–ஆம் ஆண்டு டிசம்பர் 1–ஆம் தேதி முதல் இந்தியா தலைமை வகிக்க உள்ளது. அதன் மூலம், 2023–ஆம் ஆண்டில் முதன் முறையாக இந்தியா தலைமையில் அந்த கூட்டமைப்பின் மாநாடு நடைபெற உள்ளது. அந்த மாநாட்டுக்கான இந்தியாவின் ஒருங்கிணைப்பு அதிகாரியாக மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் நியமிக்கப்பட்டுள்ளார். இதுவரை ஜி20 ஒருங்கிணைப்பு அதிகாரியாக மத்திய அமைச்சர் சுரேஷ் பிரபு இருந்துவந்தார்.

### பசுமை ஆற்றலை உருவாக்க இந்தியா அமெரிக்கா ஒப்பந்தம்

- இரு நாடுகளும் இணைந்து 2030க்குள் 450Gw பசுமை ஆற்றலை நிறுவ ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.
- 2021–22 வரை இந்தியா நிறுவியுள்ள திட்டங்கள் 476Gw உற்பத்தி திறன் கொண்டவை. இது 2030ஆம் ஆண்டில் 817Gw உயரும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

### ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் நிரந்த உறுப்பினர்

- ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தர உறுப்பினராக இந்தியா இணைவதற்கு அமெரிக்கா மீண்டும் ஆதரவு தெரிவித்துள்ளது.
- ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் அமெரிக்கா, சீனா, ரஷியா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகள் நிரந்தர உறுப்பினர்களாக உள்ளன. கவுன்சிலில் 10 நிரந்தரமற்ற உறுப்பு நாடுகள் இருந்தாலும் நிரந்தர உறுப்பு நாடுகளிடம் மட்டுமே "வீட்டோ" அதிகாரம் உள்ளது.
- பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தர உறுப்பு நாடாகவும், அணுசக்தி விநியோகக் குழுவிலும் (என்எஸ்ஜி) இணைவதற்கு உலக நாடுகளின் ஆதரவை இந்தியா திரட்டி வருகிறது. இந்த விவகாரத்தில் இந்தியாவுக்கு அமெரிக்கா தொடர்ந்து ஆதரவு தெரிவித்து வருகிறது.

## செப்டம்பர் 24–இல் க்வாட் கூட்டம்: பிரதமர் மோடி அமெரிக்கா பயணம்

- க்வாட் கூட்டமைப்பில் இடம்பெற்றுள்ள நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கும் கூட்டம் அமெரிக்க தலைநகர் வாஷிங்டனில் வரும் 24–ஆம் தேதி நடைபெறவுள்ளது. இதையொட்டி பிரதமர் நரேந்திர மோடி அமெரிக்கா செல்கிறார்.
- க்வாட் கூட்டமைப்பில் இந்தியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நாடுகள் இடம்பெற்றுள்ளன. இந்நிலையில் அமெரிக்காவின் வெள்ளை மாளிகையில் முதல்முறையாக வரும் 24–ஆம் தேதி க்வாட் தலைவர்களின் கூட்டம் நடைபெறவுள்ளது. அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் இந்திய பிரதமர் மோடி, ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்காட் மோரிஸன், ஜப்பான் பிரதமர் யோஷிஹிடே சுகா ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.
- க்வாட் கூட்டமைப்பிலுள்ள நாடுகளுக்கு இடையிலான உறவை வலுப்படுத்துவது, கரோனா தொற்று போன்ற பிரச்னைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது, பருவநிலை மாற்றம், கட்டுப்பாடற்ற இந்தோ–பசிபிக் பிராந்தியம், புதிய தொழில் நுட்பங்கள் உள்ளிட்டவை தொடர்பாக கூட்டத்தில் விவாதிக்கப்படும்.

## AUKUS

- குவாட் உச்சி மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், ஜப்பானின் யோஷிஹைட் சுகா மற்றும் ஆஸ்திரேலியாவின் ஸ்காட் மோரிசன் ஆகியோருடன் செப்டம்பர் 24 அன்று வெள்ளை மாளிகையில் சந்திக்கிறார்.
- புதிய மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் காலநிலை மாற்றம், உள்கட்டமைப்பு, கடல் பாதுகாப்பு, கல்வி, மனிதாபிமானம் உதவி மற்றும் பேரிடர் நிவாரணம் பற்றி இந்த கூட்டத்தில் விவாதிக்கப்பட உள்ளது.
- AUKUS–ஒரு பாதுகாப்பு கூட்டணி ஆகும். எனவே (Quad) இரு அமைப்பிற்கும் எந்த சம்பந்தமில்லை என்று ஹர்ஷ் ஷ்ரிங்லா தெரிவித்தார்.

# 1.4 சிறந்த நபர்கள்

## மூத்த பத்திரிகையாளர் சந்தன் மித்ரா

- மூத்த பத்திரிகையாளரும் மாநிலங்களவை முன்னாள் உறுப்பினருமான சந்தன் மித்ரா (65) புதுதில்லியில் காலமானார்.

## பெரியார் பிறந்த தினம் சமூகநீதி நாளாகக் கடைப்பிடிப்பு

- ஈ.வெ.ரா. பெரியாரின் பிறந்த தினம் (செப்டம்பர் 17). இனி ஆண்டுதோறும் சமூக நீதி நாளாகக் கடைப்பிடிக்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார். மேலும், அரசு அலுவலகங்களில் உறுதிமொழியேற்கவும் ஏற்பாடு செய்யப்படும் என்றும் அவர் அறிவிப்புச் செய்தார்.

## கேஷவ் தேசிரஜு

- முன்னாள் குடியரசு தலைவர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் அவர்களின் பேரனும் முன்னாள் இந்திய சுகாதாரத் துறை செயலாளருமான கேஷவ் தேசிரஜா சமீபத்தில் காலமானார்
- 2017 ஆம் ஆண்டு இந்திய மனநல சுகாதார சட்டத்தை உருவாக்கியதில் மிக முக்கிய பங்கு வகித்தவர்.

## புலவர் புலமைபித்தன் காலமானார்

- பிரபல புலவரும், தமிழக சட்ட மேலவை முன்னாள் துணைத் தலைவருமான புலமைப்பித்தன் உடல்நலக் குறைவு காரணமாக சென்னையில் காலமானார்.
- ராமசாமி என்ற இயற்பெயர் கொண்ட புலமைப்பித்தன் சென்னை சாந்தோம் உயர்நிலைப்பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றியவர்.
- மரபுக் கவிதைகளில் தோய்ந்த புலமைப்பித்தன் குடியிருந்த கோயில் திரைப்படத்தில் நான் யார் நான் யார்' பாடலின் மூலம் எம்ஜிஆரின் அபிமானத்தைப் பெற்றார். பின்னர் அடிமைப்பெண் படத்தில் ஆயிரம் நிலவே வா...' போன்ற பாடல்களையும் எழுதி தொடர்ந்து புகழ்பெற்றார்.
- இதயக்கனி திரைப்படத்தில் 'நீங்க நல்லா இருக்கணும் நாடு முன்னேற என்ற புகழ்பெற்ற

பாடலை எழுதியவரும் இவரே. சிரித்து வாழ வேண்டும்', 'ஓடி ஓடி உழைக்கணும்' உள்ளிட்ட இவர் எழுதிய ஏராளமான சமூக அக்கறையுள்ள பாடல்கள் தமிழ் சினிமா ரசிகர்கள் மத்தியில் மறையாத இடத்தைப் பெற்றுத்தந்தன.

- தமிழக சட்ட மேலவை முன்னாள் துணைத் தலைவராக, அரசவைக் கவிஞராக, அதிமுக அவைத்தலைவராகவும் பணியாற்றியவர்.

## ரஷிய, ஆப்பிரிக்க சிகரங்களின் உச்சியை எட்டி சிஐஎஸ்எஃப் வீராங்கனை சாதனை

- ரஷியா,ஆப்பிரிக்காவிலுள்ள இரண்டு சிகரங்களின் உச்சியை குறுகிய இடைவெளியில் அடைந்து மத்திய தொழிலக பாதுகாப்புப்படை வீராங்கனை (சிஐஎஸ்எஃப்) சாதனை படைத்துள்ளார்.
- இதுதொடர்பாக தன்சானியாவிலுள்ள இந்திய தூதரக அதிகாரி பினயா பிரதான் சுட்டுரையில் வெளியிட்ட பதிவில், "சிஐஎஸ்எஃப் வீராங்கனை கீதா சாமோத்தா கடந்த ஆகஸ்ட் 13–ஆம் தேதி ரஷியாவிலுள்ள எல்பிரஸ் சிகரத்தின் உச்சியை அடைந்தார். அவர் ஆப்பிரிக்ககண்டத்தின் மிக உயர்ந்த சிகரமான கிளிமாஞ்சாரோ உச்சியை எட்டினார். இதன் மூலம் இரண்டு சிகரங்களின் உச்சியை குறுகிய கால இடைவெளியில் எட்டிய இந்தியர் என்ற சாதனையை அவர் படைத்துள்ளார்" என்று தெரிவித்தார்.
- ரஷியாவிலுள்ள எல்பிரஸ் சிகரம் கடல் மட்டத்திலிருந்து 5,642 மீட்டர் உயரம் கொண்டது. கிழக்கு ஆப்பிரிக்க நாடான தான்சானியாவிலுள்ள கிளிமாஞ்சாரோ சிகரம் 5,895 மீட்டர் உயரம் கொண்டது.

## குஜராத் புதிய முதல்வர் பூபேந்திர படேல்

- குஜராத் மாநிலத்தின் புதிய முதல்வராக பூபேந்திர படேல் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## மூத்த எழுத்தாளர் கு. ராஜவேலு

- நூறாண்டுகள் கடந்த மூத்த எழுத்தாளர் கு. ராஜவேலு (101) உடல்நலக்குறைவு காரணமாக சென்னையில் காலமானார்.
- கு.ராஜவேலு சேலம் மாவட்டம் போடிநாயக்கன்பட்டியில் கடந்த 1920–ஆம் ஆண்டு ஜனவரி 29–ம் தேதி பிறந்தவர்.
- முன்னாள் தமிழக முதல்வர் காமராஜருக்கு நெருங்கிய நண்பராகத் திகழ்ந்தவர். காந்தி, நேரு, நேதாஜி போன்ற தேசியத் தலைவர்களைக் கண்டு உரையாடியவர். 11 ஆண்டுகள் முழு நேர அரசியல் வாழ்க்கையும், ஈராண்டுகள் சிறை வாழ்வையும் கண்டவர். அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவராக நீண்ட காலம் பணியாற்றினார்.
- கொடைவளம், சத்தியச் சுடர்கள், வைகறை வான் மீன்கள், வள்ளல் பாரி, வான வீதி, காந்த முள், மகிழம் பூ, தேயாத நிறை நிலை, இடிந்த கோபுரம் போன்ற பல்வேறு நூல்களை எழுதியுள்ளார். இவரது நூற்றாண்டு விழாவைச் சிறப்பிக்கும் வகையில் இந்திய அரசு அஞ்சல் தலை வெளியிட்டுச் சிறப்புச் செய்துள்ளது.

## உலகின் 100 செல்வாக்கு மிக்க மனிதர்கள்

- டைம் பத்திரிக்கையின் "உலகின் 100 செல்வாக்கு மிக்க மனிதர்கள்" பட்டியலில் 5வது முறையாக மோடி இடம்பிடித்தார் (2014, 2015, 2017 மற்றும் 2020).
- இந்த பட்டியலில் மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பேனர்ஜி மற்றும் சீரம் இன்ஸ்டியூட் ஆஃப் இந்தியா தலைமை நிர்வாக அதிகாரி அதர் பூனாவாலா ஆகியோறும் இடம் பிடித்துள்ளனர்.
- உலகளவில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன், துணை அதிபர் கமலா ஹாரிஸ், முன்னாள் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப சீன அதிபர் Xi–ஜின்பிங், இங்கிலாந்து இளவரசர் ஹாரி மனைவி மேகன் தலிபானின் இணை நிறுவனர் முல்லா. அப்துல் கனிபரதர் ஆகியோறும் இப்பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.

## பிரபல இயற்பியல் விஞ்ஞானி தாணு பத்மநாபன் மறைவு

- பிரபல இயற்பியல் பேராசிரியரும் பத்மஸ்ரீ விருது பெற்ற விஞ்ஞானியுமான தாணு பத்மநாபன் மாரடைப்பு காரணமாக புணே நகரில் காலமானார்.

## சர்வதேச சிவில் விமான அமைப்பின் முதல் பெண் தலைவரானார் ஷெஃபாலி ஜுனேஜா

- 12 வருடங்களுக்கு பிறகு விமான பாதுகாப்பு குழுவில் இந்தியா பங்கெடுக்கிறது. ஷெஃபாலி விமான போக்குவரத்து அமைச்சகத்தில் இணை செயலாளராக பணியாற்றினார்.

## கல்வியாளர் பாலா வி.பாலச்சந்திரன்

- இந்தியாவில் மேலாண்மைக் கல்வியை வடிவமைத்தவர்களில் முதன்மையானவராகக் கருதப்படுபவரும், பிரபல கிரேட் லேக்ஸ்

மேலாண்மைக் கல்வி நிறுவனத்தின் நிறுவனருமான பேராசிரியர் பாலா வி.பாலச்சந்திரன் (84) உடல்நலக் குறைவு காரணமாக அமெரிக்காவில் காலமானார்.

### அயன் ஷங்க்தா "2021 சர்வதேச இளம் சுற்றுச்சூழல் கதாநாயகன்" என்று அறிவிக்கப்பட்டவர்.

- போவாய் ஏரியின் பாதுகாப்பு மற்றும் மறுவாழ்வு என்ற திட்டத்திற்காக 8–14 வயதுக்குட்பட்டவர்களுக்கான போட்டியில் 3வது பரிசை வென்றார் மற்றும் இளம் சுற்றுச்சூழல் கதாநாயகன் விருது 2021இன் 25 உலகளாவிய வெற்றியாளர்களில் ஒருவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- சான்பிரான்சிஸ்கோவை அடிப்படையாகக் கொண்ட என்ஜிஓ அரசு சாரா நிறுவனம் சுற்றுச்சூழல் சாதனைகளுக்கான இளைஞர்களை (8 முதல் 16வது வரை) அங்கீகரிக்கிறது.

### டி.இ.எஸ். ராகவனுக்கு சாகித்ய அகாடமி விருது

- திருக்குறளை இந்தியில் மொழிபெயர்த்த டி.இ.எஸ். ராகவன், தாகூரின் 'கோரா' நாவலைத் தமிழில் மொழிபெயர்த்த கா.செல்லப்பன் ஆகியோர் 2020–ஆம் ஆண்டு மொழிபெயர்ப்புக்கான சாகித்ய அகாடமி விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டனர்.

### கின்னஸ் அமைப்பு அங்கீகரித்துள்ள மிக வயதான இரட்டையர்கள்

- ஜப்பானைச் சேர்ந்த 107 வயதான இரட்டைச் சகோதரிகள் உமேமோ சுமிம்மா, கவுமே கோடமா ஆகியோர் உலகின் மிக வயதான இரட்டையர்கள் என்று கின்னஸ் அமைப்பு அங்கீகரித்துள்ளது.

## 1.5 விளையாட்டு

### மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டி

- மகாபலிபுரத்தில் நடைபெற்ற முதல் தேசிய கடற்கரை மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் ஆடவர் அணிகள் பிரிவில் மகாராஷ்டிரமும், மகளிர் அணிகள் பிரிவில் ஹரியாணாவும் சாம்பியன் ஆகின.

### பிரவீண் குமாருக்கு வெள்ளி

- டோக்கியோ பாராலிம்பிக் போட்டியில் உயரம் தாண்டுதல் டி64 பிரிவில் இந்திய வீரர் பிரவீண்குமார் வெள்ளிப் பதக்கம் வென்றார். மேலும் துப்பாக்கி சுடுதலில் இந்தியாவின் அவனி லெகராவும், வில்வித்தையில் ஹர்விந்தர் சிங்கும், வெண்கலப் பதக்கத்தை கைப்பற்றினர். இதன் மூலம் இந்தியாவின் மொத்த பதக்க எண்ணிக்கை 13 ஆக உயர்ந்தது.
- புதிய ஆசிய சாதனை: முதன்முறையாக பாராலிம்பிக் போட்டியில் பங்கேற்றுள்ள 18 வயதான பிரவீண்குமார் 2.07 மீ உயரம் குதித்து புதிய ஆசிய சாதனையுடன் வெள்ளிப்பதக்கம் வென்றார்.
- பிரிட்டன் வீரர் ஜோனத்தான் புரூம் 2.10 மீ குதித்து தங்கமும், நடப்பு சாம்பியன் போலந்தின் லெபிடியோ 2.04 மீ உயரம் குதித்து வெண்கலமும் வென்றனர்.
- உத்தரபிரதேச மாநிலத்தின் கௌதம புத்தர் நகர் மாவட்டத்தைச் சேர்ந்த ஜேவார் கிராமத்தைச் சேர்ந்த ஏழை விவசாயின் மகன் பிரவீண், இடுப்பு எலும்பு பிரச்னையால் இடது கால் பாதிக்கப்பட்டார்.

### வில்வித்தை ஹர்விந்தருக்கு வெண்கலம்

- இந்திய ஆடவர் இணையான ஹர்விந்தர் சிங்–விவேக் சிக்கரா ரெக்கர்வ் பிரிவில் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறி பதக்கம் வெல்லும் வாய்ப்பை தக்க வைத்துள்ளனர். ஹர்விந்தர் சிங் 6–5 என்ற புள்ளிக்கணக்கில் இத்தாலியின் ஸ்டெபனோ டிரைய்விஸ்னியை வீழ்த்தினார். அடுத்த சுற்றில் ரஷிய வீரர் பேட்டோவுடன் மோதுகிறார் சிங்.

### பாராலிம்பிக்கில் இந்தியா பதக்க வேட்டை

- டோக்கியோ பாராலிம்பிக் போட்டியில் ஒரே நாளில் இந்தியாவுக்கு 2 தங்கம், 1 வெள்ளி, 1 வெண்கலம் என 4 பதக்கங்கள் கிடைத்துள்ளன. இதையடுத்த இந்த பாராலிம்பிக்கில் இந்தியாவின் பதக்க எண்ணிக்கை 17–ஆக அதிகரித்துள்ளது. இதில் 4 தங்கம் 7 வெள்ளி, 6 வெண்கலம் ஆகியவை அடங்கும்.

- துப்பாக்கி சுடுதல் : துப்பாக்கி சுடுதலில் பி4 கலப்பு 50 மீட்டர் பிஸ்டல் எஸ்ஹெச்1 பிரிவில் இந்தியாவின் மணீஷ் நர்வால் (19) முதலிடம் பிடித்து தங்கம் வென்றார். அதே பிரிவில் களம் கண்ட மற்றொரு இந்தியரான சிங்ராஜ் அதானா (39) இரண்டாம் இடம் பிடித்து வெள்ளி வென்றார். இதில் நர்வால் தனது முதல் பாராலிம்பிக்கிலேயே தங்கம் வென்றுள்ளார். அதானா, இதே பாராலிம்பிக்கில் ஏற்கெனவே 10 மீட்டர் ஏர் பிஸ்டல் எஸ்ஹெச்1–இல் வெண்கலம் வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.
- பாட்மிண்டன் : பாட்மிண்டன் விளையாட்டில் ஆடவர் ஒற்றையர் எஸ்எல்3 பிரிவில் இந்தியாவின் பிரமோத் பகத் (33) தங்கமும், மனோஜ் சர்கார் (31) வெண்கலமும் வென்றனர்.

## 19 பதக்கங்களுடன் இந்தியா சாதனை : இறுதி நாளில் தங்கம், வெள்ளி

- டோக்கியோ பாராலிம்பிக் போட்டியில் 5 தங்கம் உள்பட 19 பதக்கங்கள் என்ற பிரம்மாண்ட சாதனையை இந்தியா படைத்தது. இதுவரை நடைபெற்ற பாராலிம்பிக் போட்டிகளில் ஒட்டு மொத்தமாக 15 பதக்கங்களை மட்டுமே பெற்றிருந்தது. நிறைவு நாளன்று பாட்மிண்டனில் ஜெய்ப்பூரைச் சேர்ந்த கிருஷ்ணா நாகர் தங்கப் பதக்கமும், தில்லி நொய்டாவைச் சேர்ந்த சுஹாஸ் யதிராஜ் வெள்ளிப் பதக்கமும் வென்றனர்.
- கரோனா பாதிப்பு காரணமாக ஓராண்டு தள்ளிவைக்கப்பட்ட நிலையில் கடந்த மாதம் ஆகஸ்ட் 24 ஆம் தேதி டோக்கியோவில் பாராலிம்பிக் போட்டிகள் தொடங்கி 13 நாள்களாக நடைபெற்று வந்தன. இந்தியா சார்பில் மொத்தம் 54 பேர் கொண்ட அணியினர் கலந்து கொண்டனர்.
- நிறைவு விழா: இந்நிலையில், பாராலிம்பிக் போட்டி வண்ணமிகு கலைநிகழ்ச்சிகள், வாணவேடிக்கைகளுடன் நிறைவு பெற்றது. ஜப்பான் பட்டத்து இளவரசர் அகிஷினோ தேசிய விளையாட்டரங்கில் நடைபெற்ற நிறைவு விழாவுக்கு தலைமை தாங்கினார். அடுத்த பாராலிம்பிக் போட்டி வரும் 2024–இல் பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் நடைபெறவுள்ளது.

## வேலவன் மற்றும் தன்வி மீண்டும் வெற்றி

- ஷிவ் நாடார் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற HCL PSA ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் போட்டியில் வேலவன் மற்றும் தன்வி ஆகியோர் பட்டம் வென்று உள்ளனர்.

## "குவாலிஃபையர்"

- அமெரிக்காவில் நடைபெற்ற யுஎஸ் ஓபன் டென்னிஸ் போட்டியில் மகளிர் ஒற்றையர் பிரிவில் இங்கிலாந்து வீராங்கனை எம்மா ராடுகானு (18) சாம்பியன் ஆனார். கிராண்ட்ஸ்லாம் போட்டியில் தகுதிச்சுற்று (குவாலிஃபயர்) வழியே முன்னேறி வந்து வாகை சூடிய முதல் போட்டியாளர் என்ற வரலாற்று சாதனையை அவர் எட்டியுள்ளார்.

## சாதித்தார் மெத்வதேவ்

- டென்னிஸ் காலண்டரில் கடைசி கிராண்ட்ஸ்லாம் போட்டியான யுஎஸ் ஓபனில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் ரஷியாவின் டேனியல் மெத்வதேவ் (25) சாம்பியன் ஆனார். அவருக்கு இது முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டம்.

## சமந்தா – ஷுவாய் ஜோடி சாம்பியன்

- யுஎஸ் ஓபன் மகளிர் இரட்டையர் பிரிவில் ஆஸ்திரேலியாவின் சமந்தா இறுதிச்சுற்றில் இந்த ஜோடி 6–3, 3–6, 6–3 என்ற செட்களில் அமெரிக்காவின் கோகோ கௌஃப்/கேட்டி மெக்னாலி இணையை 2 மணி நேரத்தில் வீழ்த்தியது.
- கடந்த 2019–ஆம் ஆண்டு ஆஸ்திரேலிய ஓபனில் பட்டம் வென்ற இந்த ஜோடிக்கு, இது 2–ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டமாகும்.

## ரூ.18.43 கோடி

- சாம்பியனாகியிருக்கும் டேனியல் மெத்வதேவுக்கு ரூ.18.43 கோடியும், 2–ஆம் இடம் பிடித்த ஜோகோவிச்சுக்கு ரூ.9.22 கோடியும் பரிசுத்தொகையாக வழங்கப்பட்டது.

## சர்வதேச கால்பந்து போட்டிகளில் அதிக கோல் அடித்த வீரர்

- போர்ச்சுகல் வீரர் கிரிஸ்டியோனோ ரொனால்டோ சர்வதேச கால்பந்து போட்டிகளில் அதிக கோல் அடித்த வீரர் என்ற கின்னஸ் சாதனை படைத்தார்.
- அயர்லாந்திற்கு எதிரான உலகக்கோப்பை தகுதிச் சுற்றில் இந்த கோலை செப்டம்பர் 1, 2021 அன்று அடித்தார்.
- 36 வயதான ரொனால்டோ மேன்ச்சஸ்டர் யுனைடெட் அணிக்காக விளையாட உள்ளார். போர்ச்சுகல் நாட்டிற்காக விளையாடிய 180 போட்டிகளில் 111 கோல்களை அடித்துள்ளார்.

## யுஎஸ் ஓபன்: சக்கர நாற்காலியில் இரு சாதனையாளர்கள் குரூட், அல்காட்க்கு "கோல்டன் ஸ்லாம்"

- யுஎஸ் ஓபன் போட்டியில் ஆடவர், மகளிர் ஒற்றையர் மற்றும் இரட்டையர் பிரிவு போட்டிகளுடன், ஜூனியர் பிரிவு போட்டிகளும், சக்கர நாற்காலியுடன் விளையாடும் மாற்றுத்திறனாளிகளுக்கான போட்டிகளும் நடைபெறுவது வழக்கம்.
- அந்த வகையில் இந்த முறை சக்கர நாற்காலி வீரர், வீராங்கனைகளுக்காக நடத்தப்பட்ட போட்டியில் மகளிர் பிரிவில் நெதர்லாந்தின் டைடே டி குரூட் (24), ஆடவர் பிரிவில் ஆஸ்திரேலியாவின் டைலன் அல்காட் (30) சாம்பியனாகியுள்ளனர்.
- இவர்கள் இருவமே இந்த சாம்பியன்ஷிப் பட்டம் மூலம் 'கோல்டன் ஸ்லாம்' சாதனையை எட்டியிருக்கிறார்கள். ஒரே டென்னிஸ் காலண்டரில் வரும் 4 கிராண்ட்ஸ்லாம் போட்டிகளிலும் சாம்பியனாகி, அதே ஆண்டில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டியிலும் சாம்பியன் ஆவதே 'கோல்டன் ஸ்லாம்' எனப்படுகிறது.

## தடகள சாம்பியன்ஷிப்: பவித்ரா வெங்கடேஷ் வெற்றி

- தேசிய ஓபன் தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் கம்பு ஊன்றித் தாண்டுதலில் தமிழக வீராங்கனை பவித்ரா வெங்கடேஷ் முதலிடம் பிடித்தார்.
- அவர் 3.90 மீட்டர் தாண்டி முதலிடம் பிடிக்க, ரயில்வேஸின் மரியா ஜெய்சன் (3.80 மீ), கிருஷ்ணா ராச்சன் (3.60 மீ) ஆகியோர் 2 மற்றும் 3–ஆம் இடங்களைப் பிடித்தனர்.

## டேபிள் டென்னிஸ்: இந்தியா அபாரம்

- துனிசியாவில் நடைபெறும் உலக டேபிள் டென்னிஸ் கன்டெண்டர் போட்டியில் 19 வயதுக்கு உள்பட்டோர் பிரிவில் இந்தியாவின் ஸ்வாதிகா கோஷ் சாம்பியன் ஆனார்.
- இறுதிச்சுற்றில் அவர் சக இந்தியரான யஷஸ்வினி கோர்படேவை 6–11, 11–6, 6–11, 11–6, 11–8 என்ற செட்களில் வீழ்த்தினார்.

## தேசிய தடகளம்: ஹர்மிலன் சாதனை

- தேசிய ஓபன் தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் 1,500 மீட்டர் ஓட்டத்தில் பஞ்சாபின் ஹர்மிலன் கௌர் பெய்ன்ஸ் 19 ஆண்டு ஆசிய சாதனையை முறியடித்து முதலிடம் பிடித்தார்.
- அவர் 4 நிமிடம் 5.39 விநாடிகளில் பந்தய இலக்கை எட்டினார். முன்னதாக இப்பிரிவில் சுனிதா ராணி 2002 ஆசிய விளையாட்டுப் போட்டியில் 4 நிமிடம் 6.03 விநாடிகளில் இலக்கை எட்டியதே சாதனையாக இருந்தது.

## ஆசிய சுநூக்கர் பட்டத்தை வென்றார் இந்திய வீரர் பங்கஜ் அத்வானி

- ஈரான் நாட்டைச் சேர்ந்த முன்னாள் சாம்பியன் அமீர் சர்கோஷை 6–3 என்ற செட் கணக்கில் வீழ்த்தினார்.

## தேசிய விளையாட்டு

- தூரம் தாண்டுதல் போட்டியில் ஐஸ்வர்யா தங்க பதக்கம் வென்றார். 6.52 மீட்டர் தூரம் தான்டி சாதனை படைத்தார்.
- மகாராஷ்டிராவை சேர்ந்த அசோக் ஷிர்சே 110m ஹர்டுல்ஸ் போட்டியில் தங்கம் வென்றார். நைரோபில் நடைபெற்ற 20 வயதுக்குட்பட்டோருக்கான உலக சாம்பியன்ஷிப் போட்டியில் இவர் பங்கேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.
- கலப்பு (4x400m) ரிலே ஓட்டப்பந்தய போட்டியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த அணி தங்கப்பதக்கத்தை வென்றது.

## தமிழகத்தின் வித்யா ராம்ராஜ், சந்தோஷ்குமாருக்கு தங்கம் ஹர்மிலன் பெயின்ஸ், ஐஸ்வர்யாவுக்கு இரட்டை பதக்கம்

- தேசிய ஓபன் தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் பஞ்சாப் வீராங்கனை ஹர்மிலன் பெயின்ஸ், ரயில்வே வீராங்கனை ஐஸ்வர்யா ஆகியோர் இரட்டை தங்கப் பதக்கம் வென்றனர்.
- ஆந்திர மாநிலம் வாரங்கல் நகரில் தேசிய ஓபன் தடகள சாம்பியன் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. 1500 மீ. ஓட்டத்தில் ஏற்கெனவே புதிய சாதனையுடன் தங்கம் வென்றிருந்த ஹர்மிலன் பெயின்ஸ், 800 மீ ஓட்டத்திலும் 2:03:82 நிமிஷ நேரத்தில் பந்தய தூரத்தைக் கடந்து தங்கப் பதக்கம் வென்றார்.

## தேசிய தடகள சாம்பியன்ஷிப்: தமிழக வீரர் பிரவீணுக்கு தங்கம்

- தேசிய ஓபன் தடகள சாம்பியன்ஷிப்பில் மும்முறை தாண்டுதலில் தமிழக வீரர் பிரவீண் சித்ரவேல் தங்கம் வென்றார்.

- அவர் தனது முதல் முயற்சியிலேயே 16.88 மீட்டர் தூரம் தாண்டி முதலிடம் பிடித்தார். சர்வீசஸ் வீரர் அப்துல்லா அபுபக்கர் 16.84 மீ கடந்து வெள்ளியும், சக வீரர் கார்த்திக் உன்னிகிருஷ்ணன் 16.80 மீ கடந்து வெண்கலமும் வென்றனர். இந்திய வீரர்களில் இதுவரை சிறப்பாகச் செயல்பட்டவர்கள் வரிசையில், ரஞ்சித் மஹேஸ்வரி (17.30 மீ), அர்விந்தர் சிங் (17.17மீ) ஆகியோரை அடுத்து பிரவீண் 3–ஆவது இடத்தில் இருக்கிறார்.

## வாரங்கலை சேர்ந்த R.ராஜா ரித்விக் "இந்தியாவின் 70வது செஸ் கிராண்ட் மாஸ்டர்"

- 17 வயதான அவர் ஹங்கேரியின் புத்தபெஸ்டில் நடந்த வெசர்கெப்ஸோ கிராண்ட் மாஸ்டர் செஸ் போட்டியில் இந்த பட்டத்தை வென்றார்.

## தோஹாவில் 24வது உலக சாம்பியன் பட்டத்தை வென்றார் பங்கஜ் அத்வானி

- பாகிஸ்தானின் பாபர் மஸிஹ்–வை தோற்கடித்தார்.
- கடந்த வாரம் அத்வானி அவர்கள் 11வது ஆசிய சாம்பியன் பட்டம் வென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## உலக வில்வித்தை: இந்தியாவுக்கு இரு வெள்ளி

- அமெரிக்காவில் நடைபெறும் உலக வில்வித்தை சாம்பியன்ஷிப் போட்டியின் காம்பவுண்ட் விளையாட்டில் மகளிர் அணி, கலப்பு அணி ஆகிய இரு பிரிவுகளில் இந்தியா 2–ஆம் இடம் பிடித்து வெள்ளிப் பதக்கம் வென்றது.
- இரு பிரிவுகளின் இறுதிச்சுற்றிலுமே இந்தியாவிடம் இருந்து கொலம்பியா தங்கத்தை தட்டிப் பறித்தது.
- காம்பவுண்ட் கலப்பு அணிகள் பிரிவு இறுதிச்சுற்றில் இந்தியாவின் அபிஷேக் வர்மா/ ஜோதி சுரேகா இணை – கொலம்பியாவின் டேனியல் முனோஸ்/சாரா லோபஸ் ஜோடியை சந்தித்தது. அதில் கொலம்பியா 154 – 150 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றி பெற்றது.

## வில்வித்தை: ஜோதிக்கு வெள்ளி

- உலக வில்வித்தை சாம்பியன்ஷிப் போட்டியில் காம்பவுண்ட் மகளிர் தனிநபர் பிரிவில் இந்தியாவின் ஜோதிசுரேகா வெள்ளிப்பதக்கம் வென்றார்.
- இறுதிச்சுற்றில் அவர் கொலம்பியாவின் சாரா லோபஸிடம் 146 – 144 என்ற புள்ளிகள் கணக்கில் தோற்றார்.
- உலக சாம்பியன்ஷிப்பில் 5 பதக்கங்கள் வென்ற ஒரே இந்திய வீராங்கனை என்ற பெருமையை ஜோதி பெற்றுள்ளார்.

## லேவர் கோப்பை டென்னிஸ்

- அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சலீஸ் நகரில் நடைபெற்ற லேவர் கோப்பை அணிகள் டென்னிஸ் போட்டியில் ஐரோப்பிய சாம்பியன் பட்டம் வென்றது. இப்போட்டியில் ஐரோப்பிய அணி தொடர்ந்து 4–ஆவது முறையாக சாம்பியன் ஆகியுள்ளது.
- ஐரோப்பிய கண்டத்தில் உள்ள நாடுகளின் வீரர்களைக் கொண்ட ஒரு அணியும், உலகில் எஞ்சியிருக்கும் இதர கண்டத்தைச் சேர்ந்த வீரர்களைக் கொண்ட ஒரு அணியும் மோதும் இந்தப் போட்டி 2017 முதல் நடைபெறுகிறது.

## "100" –ஆவது எஃப் 1 பட்டம்

- ரஷியாவின் சோச்சி நகரில் நடைபெற்ற ரஷிய ஃபார்முலா ஒன் கிராண்ட் பிரீகார் பந்தயத்தில் சாம்பியன் ஆகிய இங்கிலாந்து பந்தய வீரர் லீவிஸ் ஹாமில்டன். இதன் மூலம் எஃப்1–இல் 100 பந்தயங்களில் சாம்பியன் ஆன முதல் வீரர் என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார்.

## ஆஸ்ட்ரவா ஓபன் டென்னிஸ் சானியா ஜோடி சாம்பியன்

- செக் குடியரசு நாட்டில் நடந்த ஆஸ்ட்ரவா ஓபன் மகளிர் டென்னிஸ் போட்டியின் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சானியா மிர்சா, சீனாவின் ஷுவாய் ஸாங் ஜோடி சாம்பியன் பட்டம் வென்றது.
- இறுதிப் போட்டியில் அமெரிக்காவின் கிறிஸ்டியன் கெய்ட்லின் – எரின் ரவுட்லைப் (நியூசி.) ஜோடியுடன் மோதிய சானியா ஜோடி 6–3, 6–2 என்ற நேர் செட்களில் வென்று கோப்பையை முத்தமிட்டது.

# 1.6 புத்தகங்கள் மற்றும் எழுத்தாளர்கள்

## 'பொருநை–ஆற்றங்கரை நாகரிகம்' நூல் வெளியீடு

- தென்னிந்தியாவின் நாகரிகத் தொட்டில் என அழைக்கப்படும் பொருநை ஆற்றங்கரை பெயரிலான புத்தகம் தமிழக அரசின் தொல்லியல் துறை சார்பில் சட்டப்பேரவையில் வைக்கப்பட்டது.
- மேலும், ஆதிச்சநல்லூர், சிவகளை மற்றும் கொற்கை உள்ளிட்ட பகுதிகளில் கிடைத்த அரிய பொருள்களைக் காட்சிப்படுத்தும் விதமாக திருநெல்வேலியில் நவீன வசதிகளும் பொருநை அருங்காட்சியகம் அமைக்கப்படும் என அறிவித்தார்.

## புலம்பெயர்ந்த தமிழர்கள் அவர்களின் இடம்பெயர்வு வடிவங்கள் பற்றிய புத்தகம் வெளியாகிறது

- புலம்பெயர்ந்த தமிழர்கள் பற்றிய புதிய தகவல்களை இந்த புத்தகம் வழங்கக்கூடும்.
- புத்தகத்தின் பெயர் – "புலம்பெயர் தமிழர்கள் – மக்கள்தொகை, சமூக, பொருளாதார பகுப்பாய்வு".
- நிறுவன தலைவர் – இந்த புத்தகத்தின் நூலாசிரியர் எஸ்.இருதய ராஜன்.
- சர்வதேச இடம்பெயர்வு மற்றும் மேம்பாட்டு நிறுவனம் – திருவனந்தபுரம்.
- 2015ஆம் ஆண்டில் மாநிலத்தின் உள்நாட்டு உற்பத்தியில், வெளிநாட்டு வாழ் தமிழர்களின் பங்களிப்பு 14% ஆகும். இது தேசிய அளவில் ஒப்பிடுகையில் மூன்று மடங்கு அதிகம். இதற்கு பின்னணியில் உள்ள அறிவியலை இந்த புத்தகம் விளக்கக்கூடும்.
- ஓரியண்ட் ஸ்வேன் நிறுவனம் இப்புத்தகத்தை வெளியிடுகிறது.
- 2015 இல் தமிழ்நாடு அரசு வெளியிட்ட புலம்பெயர்ந்தவர்கள் கணக்கெடுப்பின் தகவல்களை கொண்டு எழுதப்பட்டுள்ளது.
- இந்த தகவல்களுடன், வெளிநாடு வாழ் தமிழர்கள் பங்களிப்பு மாநிலத்திற்குள் புலம் பெயர்பவர்கள், புலம்பெயர்வுக்கான பொருளாதார காரணங்களையும் கொண்டு எழுதப்பட்டுள்ளது.
- டிவிஎஸ் மோட்டார் நிறுவனத்தின் தலைவர் வேணு சீனிவாசன் ஒரு அமைதி புரட்சி – ஸ்ரீனிவாசன் சர்வீசஸ் ட்ரஸ்டின் பயணம் ("A Silent Revolution –The Journey of the Srinivasan Services Trust), புத்தகம் முதலமைச்சர் ஸ்டாலின் அவர்களால் வெளியிடப்பட்டது.

# 1.7 விருதுகள் மற்றும் கௌரவங்கள்

## குடியரசுத் தலைவரின் வண்ண (கலர்) விருது

- இராணுவ குழுக்களுக்கு வழங்கப்படும் உயரிய கலர் விருது இந்த ஆண்டு INS ஹன்சா விமான படைத்தளத்தில் நடைபெறும் விழாவில் INS கருடாவிற்கு வழங்கப்பட உள்ளது.
- 1951 ஜனவரி–13ல் INS கருடா பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது.

## இந்தியருக்கு சர்வதேச விருது

- இந்தியாவை சேர்ந்த முதலைகள் பாதுகாப்பாளர் சைலேந்திர சிங் சர்வதேச பெஹ்லர் முதலைகள் பாதுகாப்பு விருது பெற்றுள்ளார்.

## ராமன் மகசேசே விருது–2021

- 2021ம் ஆண்டின் ராமன் மகசேசே விருது அறிவிக்கப்பட்டுள்ளது.
- பாகிஸ்தானின் – முகமது அம்ஜத் சாஹிப்
- வங்கதேசத்தின் – பிர்தௌசி காத்ரி
- தெற்காசியாவில் – ஸ்டீவன் முன்சி
- இந்தோனேசியாவின் – வாட்ச் டாக்
- ராபர்டோ பலூன் – பிலிப்பைன்ஸ்

## ஆண்டுதோறும் 'கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. விருது'

- கப்பல் கட்டுமானம், தொழில்நுட்பம், போக்குவரத்து ஆகிய கப்பல் தொடர்பான துறைகளில் ஈடுபட்டு, சிறந்த பங்காற்றி வரும் தமிழர் ஒருவருக்கு 'கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. விருது' ஆண்டுதோறும் அளிக்கப்படும். இந்த விருது ரூ.5லட்சமும், பாராட்டுச் சான்றும் உள்ளடக்கியது.
- வ.உ.சிதம்பரனார் 1936, நவம்பர் 18–இல் மறைந்தார். இந்தத் தினம் தியாகத் திருநாளாக கடைப்பிடிக்கப்படும்.

- அரசுக் கட்டடங்களுக்கு பெயர்: இந்த ஆண்டு செப்டம்பர் 5–ஆம் தேதி முதல் அடுத்த ஆண்டு செப்டம்பர் 5–ஆம் தேதி வரை ஓராண்டில் தூத்துக்குடி, திருநெல்வேலியில் உருவாகும் அரசுக் கட்டடங்களுக்கு கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனார் பெயர் சூட்டப்படும்.

## சுற்றுச்சூழலை பாதுகாக்கும் 100 பேருக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பாளர் விருது

- சுற்றுச்சூழல் அமைச்சர் V.மெய்யநாதன் சுற்றுச்சூழல் பாதுகாவலர்கள் மற்றும் ஆர்வலர்களுக்கு 1 இலட்சம் தொகையிலான 100 பேருக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பாளர் விருது வழங்கப்படும் என தெரிவித்துள்ளார்.

## பிரிட்டிஷ் அகாதெமி பரிசு: இந்திய வம்சாவளி எழுத்தாளர்

- 2021–ஆம் ஆண்டுக்கான பிரிட்டிஷ் அகாதெமி புத்தகப் பரிசுக்கான இறுதிப் பட்டியலில் இந்திய வம்சாவளி எழுத்தாளர் மஹ்மூத் மம்தானியின் பெயர் இடம் பெற்றுள்ளது.
- இதுகுறித்து செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளதாவது: சர்வதேச கலாசாரப் புரிதலுக்கான பிரிட்டிஷ் அகாதெமி புத்தகப் பரிசுக்குத் தகுதியுடையவர்களின் இறுதிப் பட்டியல் வெளியிடப்பட்டது.
- உலகம் முழுவதிலிருந்தும் தேர்வு செய்து இறுதி செய்யப்பட்ட அந்தப் பட்டியலில் 4 எழுத்தாளர்கள் இடம் பெற்றுள்ளனர். அவர்களில், இந்திய வம்சாவளி எழுத்தாளர் மஹ்மூத் மம்தானியும் ஒருவர். 75 வயதான அவர், இந்தியாவைப் பூர்விகமாகக் கொண்டவர்.
- மும்பையில் பிறந்தவர். இவரது 'நெய்தர் செட்லர் நார் நேட்டிவ்: தி மேக்கிங் அண்ட் அன்மேக்கிங் ஆஃப் பர்மனன்ட் மைனாரிட்டிஸ்' என்ற புத்தகம் பிரிட்டிஷ் அகாதெமி பரிசுக்கான இறுதிப் பட்டியலில் இடம் பெற்றுள்ளது.

## முனைவர் ஆ.இரா. வேங்கடாசலபதிக்கு 'மகாகவி பாரதி விருது'

- பாரதி பாசறை அமைப்பின் சார்பில் முனைவர் ஆ.இரா. வேங்கடாசலபதிக்கு இந்த ஆண்டுக்கான 'மகாகவி பாரதி விருது' வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- கடந்த 2014–ஆம் ஆண்டு முதல் 'கோவை பாரதி பாசறை' ஆண்டுதோறும் பாரதிக்கும், பாரதி இயலுக்கும் சேவை ஆற்றியவர்களுக்கு அவர்கள் சேவையை அங்கீகரிக்கும் வகையில் 'மகாகவி பாரதி' விருதும் ரூ. 50 ஆயிரம் விருதுத் தொகையும் வழங்கி கௌரவித்து வருகிறது.
- எனவே பாரதிக்கும், பாரதியியலுக்கும் அவர் ஆற்றிய பணியைக் கௌரவிக்கும் வகையிலும் இந்த ஆண்டுக்கான 'மகாகவி பாரதி விருது' அவருக்கு வழங்கப்படுகிறது.

## இந்திய ஆவணப்படத்திற்கு சர்வதேச விருது

- வெனிஸ்–இல் நடைபெற்ற ஹேர்மெடிக் சர்வதேச திரைப்பட திருவிழாவில் இந்திரா காந்தி தேசிய கலை மையத்தின் வேதிக் ஜிபிஎஸ் என்ற ஆவணப்படத்திற்கு சர்வதேச விருது வழங்கப்பட்டுள்ளது.

## தமிழ்ப் பல்கலைக்கழகம்: திறனாய்வு செம்மல் விருதுக்கு பஞ்சாங்கம் தேர்வு

- தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக்கழகத்தின் ந.சுப்புரெட்டியார் நூற்றாண்டு அறக்கட்டளை சார்பில் வழங்கப்படும் திறனாய்வுச் செம்மல் விருதுக்கு க.பஞ்சாங்கம் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- இதுகுறித்து தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்டுள்ள பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் நூற்றாண்டு அறக்கட்டளை சார்பில் திறனாய்வுச் செம்மல் பஞ்சாங்கம் விருது நிகழாண்டு முதல் வழங்கப்படவுள்ளது.
- இவ்விருதுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டு விண்ணப்பங்கள், பரிந்துரைகள் பெறப்பட்டன. இதில் 2021–ஆம் ஆண்டுக்கான திறனாய்வுச் செம்மல் விருதுக்குத் தமிழின் முன்னோடி இலக்கியத் திறனாய்வாளரான புதுச்சேரியைச் சேர்ந்த பேராசிரியர் க.பஞ்சாங்கம் ஒருமனதாகத் தேர்வுக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## சாகித்திய அகாதெமி விருதாளர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து

- மொழிபெயர்ப்புக்கான சாகித்திய அகாதெமி விருது, வங்கக்கவிஞர் தாகூரின் புதினத்தைத் தமிழில் வடித்துள்ள முனைவர் கா.செல்லப்பனுக்கும், உலகப் பொதுமறையாம் திருக்குறளை ஹிந்தியில் மொழிபெயர்த்துள்ள ராகவனுக்கும், கவிஞர்

சல்மாவின் இரண்டாம் ஜாமங்களின் கதை புதினத்தை மராத்தியில் மொழிபெயர்த்துள்ள சோனாலி நவாங்குள்.

## துபாய் கோல்டன் விசா பெறும் முதல் கோல்ஃப் வீரர்

- இந்தியாவின் நட்சத்திர கோல்ஃப் வீரர் ஜீவ் மில்கா சிங் 10 வருட "துபாய் கோல்டன் விசா" பெறும் முதல் கோல்ஃப் வீரர் எனும் பெறுமையை பெற்றார்.

## தமிழகத்தைச் சேர்ந்த எழுத்தாளர் இமையம் உள்ளிட்டோருக்கு சாகித்திய அகாதெமி விருது

- தமிழகத்தைச் சேர்ந்த எழுத்தாளர் இமையம் உள்பட பல்வேறு இந்திய மொழிகளைச் சேர்ந்த எழுத்தாளர்களுக்கு சிறந்த இலக்கியத்துக்கான சாகித்திய அகாதெமி விருதும், ஒரு லட்ச ரூபாய் பரிசுத்தொகையும், தாமிரப்பட்டயமும் தில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கப்பட்டன. இலக்கிய உலகில் சிறந்த படைப்புகளுக்கான உயரிய விருதாக சாகித்திய அகாதெமி கருதப்படுகிறது.
- 2020–ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமி விருது இந்த ஆண்டு பிப்ரவரியில் அறிவிக்கப்பட்டது. அதில் தமிழ் எழுத்தாளர் இமையம், ஹிந்தி, உருது, தெலுங்கு, கன்னடம் உள்பட 24 மொழிகளைச் சேர்ந்த எழுத்தாளர்களுக்கு இந்த விருது அறிவிக்கப்பட்டது.
- இந்திரா பார்த்தசாரதிக்கு 'ஃபெல்லோ' அந்தஸ்து: சாகித்திய அகாதெமியில் எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதி ரதிக்கு "ஃபெல்லோ" அந்தஸ்து அளிக்கப்பட்டுள்ளது. அதாவது சாகித்திய அகாதெமியில் உயர்ந்த கௌரவமாக இது கருதப்படுகிறது.
- இதற்கு முன்பு சாகித்திய அகாதெமியில் இந்த சிறப்புக்குரிய அந்தஸ்தை எழுத்தாளர் ஜெயகாந்தன் பெற்றிருந்தார்.

## சாகித்திய அகாதெமி விருதுகள் அறிவிப்பு

- பிரபல ஆங்கில எழுத்தாளர் ரஸ்கின் பாண்ட், ஹிந்தி எழுத்தாளர் விநோத் குமார் ஷுக்லா இவர்களுடன் 6 எழுத்தாளர்களுக்கு சாகித்திய அகாதெமி ஃபல்லோஷிப் அறிவிப்பு.
- சிர்ஷெண்டு முகோபத்யாய் (பெங்காலி), M.லீலாவதி (மலையாளம்) பால்சந்தர நிமேடே (மராத்தி), தெஜ்வந்த் சிங் கில் (பஞ்சாப்), சுவாமி ரம்பத்ரச்சார்யா (சமஸ்கிருதம்), இந்திரா பார்த்தசாரதி (தமிழ்).
- 2020க்கான சாகித்திய அகாதெமி விருதுகள் எழுத்தாளர் மற்றும் அரசியல் பிரமுகர் M.வீரப்பமொய்லி கவிஞர் அருந்ததி சுப்ரமணியம் உட்பட 20 பேருக்கு வழங்கப்பட்டது. மொய்லி அவர்களுக்கு அவரது கன்னட கவிதை "லஹி பாகுபலி அஹிம்சாதிக்விஜயா" "when god is a traveller" என்கிற ஆங்கில கவிதை தொகுப்பிற்கு அருந்ததிக்கு இவ்விருது கொடுக்கப்படுகிறது.
- கவிதை பிரிவில் விருது வாங்கியோர் "ஹரிஷ் மீனாக்ஷி (குஜராத்தி), அனாமிக்கா (ஹிந்தி), R.S.பாஸ்கர் (கொங்கனி), இருங்பம் தேவன் (மணிப்பூர்) ருப்சந்த் விரன்ஸ்டா (சன்பிலி) மற்றும் நிக்கிலேஸ்வர் (தெலுங்கு).
- 1996ஆம் ஆண்டு 62 வயதில் திரு ஜெயகாந்தன் (சாகித்திய அகாதெமி) ஃபல்லோஷிப் குறைந்த வயதில் இவ்விருதை வென்றவர் என்ற பெருமையை பெற்றார்.
- இவருக்கு முன்னர் தமிழ் இலக்கியத்தில் திரு ராஜாஜி (1969) டி.பி.மீனாட்சி சுந்தரம் அவர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டது. ராகவன் (1979), சமஸ்கிருதத்திற்கும், ஸ்ரீனிவாசன் அய்யங்கர் (1985) ஆங்கிலத்திற்கும் இவ்விருதை பெற்றனர்.
- 1988–1922 வரை இவர் புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தின் நிறுவனத் தலைவராகவும் கலாச்சார அமைச்சகத்தின் உறுப்பினராகவும் பணியாற்றினார்.

### சாகித்திய அகாடமி

- இந்திய மொழிகளின் இலக்கிய வளர்ச்சிக்கான அமைப்பாகும்.
- உருவாக்கம் – மார்ச் 12, 1954
- தலைமையகம் – இரவீந்திர பவன், புதுதில்லி
- தலைவர் – டாக்டர் விஸ்வநாத் பிரசாத் திவாரி.
- சாகித்திய அகாதெமியின் மண்டல அலுவலகங்கள் பெங்களூரு, சென்னை, மும்பை மற்றும் அகர்தலாவில் அமைந்துள்ளன.

### சிறந்த மொழிபெயர்ப்பாளர்களுக்கான விருது

- இதையடுத்து, தமிழ், அஸ்ஸாமி, வங்காளி, போடோ, டோக்ரி, ஆங்கிலம், குஜராத்தி, ஹிந்தி, கன்னடம் உள்பட 24 இந்திய மொழிகளில் மொழிபெயர்ப்பு நூல்களின் படைப்புகளை உருவாக்கிய

படைப்பாளிகளின் பெயர்கள் அறிவிக்கப்பட்டன. இந்தப் பட்டியலில், திருவள்ளுவரின் திருக்குறள் ஹிந்தி மொழி பெயர்ப்புக்கும், கவிஞர் ரவீந்திரநாத்தாகூரின் 'கோரா' எனும் வங்காளி நாவலை தமிழில் மொழிபெயர்ப்பு செய்தமைக்கான விருதும் இடம்பெற்றுள்ளன.

## புளோரன்ஸ் நைட்டிங்கேல் விருது: எஸ்.வி.சரஸ்வதிக்கு வழங்கினார் குடியரசுத் தலைவர்

- ராணுவ செவிலியர் சேவை (எம்என்எஸ்) துணைத் தலைமை இயக்குநர் பிரிகேடியர் எஸ்.வி.சரஸ்வதிக்கு 2020–ஆம் ஆண்டுக்கான தேசிய புளோரன்ஸ் நைட்டிங்கேல் விருதை குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் வழங்கி கௌரவித்தார். ராணுவ செவிலியர் சேவையில் மகத்தான பங்களிப்புக்காக அவருக்கு செவிலியர்களுக்கான மிக உயர்ந்த விருது வழங்கப்பட்டுள்ளது. காணொலி வாயிலாக நடைபெற்ற இந்த விழாவில் குடியரசுத் தலைவர், பிரிகேடியர் எஸ்.வி.சரஸ்வதிக்கு இந்த விருதை வழங்கினார்.
- ஆந்திராவின் சித்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த பிரிகேடியர் சரஸ்வதி டிசம்பர் 28, 1983–ல் எம் என் எஸ்–ல் பணி நியமனம் செய்யப்பட்டார்.

## 10 ஆண்டுகளுக்கான 'கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதுகள்' அறிவிப்பு

- செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தால் வழங்கப்படும் கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது' கடந்த 2010 முதல் 2019 வரையிலான பத்து ஆண்டுகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
- செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் முக்கியத்துவம் கருதி முன்னாள் முதல்வர் கருணாநிதி தமது சொந்த நிதியிலிருந்து ரூ.1 கோடி வழங்கி கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழாய்வு அறக்கட்டளையை சென்னையில் உள்ள செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நிறுவினார்.
- ரூ.10 லட்சம் பரிசுத் தொகை: அந்த அறக்கட்டளையின் மூலமாக செம்மொழித் தமிழாய்வுக்கு சிறந்த பங்களிப்பினை வழங்கிய அறிஞர்களுக்கு ஆண்டுதோறும் 'கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது' வழங்கப்படுகிறது. இந்த விருது இந்தியாவிலேயே உயரிய விருதாக கருதப்படுகிறது. இவ்விருதில் ரூ.10 லட்சம் பரிசுத் தொகையுடன் பாராட்டுச் சான்றிதழும்,முன்னாள் முதல்வர் கருணாநிதியின் உருவச் சிலையும் அடங்கியதாகும்.
  - 2010 – முனைவர் வீ.எஸ்.ராஜம் – அமெரிக்காவின் பென்சில்வேனியா பல்கலைக்கழக தெற்காசிய பிராந்திய கல்வித்துறையின் முன்னாள் பேராசிரியர்.
  - 2011– பேராசிரியர் பொன். கோதண்டராமன் (பொற்கோ) – (முன்னாள் துணைவேந்தர், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை)
  - 2012 – பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி– (முன்னாள் துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக்கழகம்)
  - 2013 பேராசிரியர் ப. மருதநாயகம் – (முன்னாள் இயக்குநர், புதுவை மொழியியல் பண்பாட்டு நிறுவனம், முன்னாள் பதிவாளர், புதுவைப் பல்கலைக்கழகம்)
  - 2014 – பேராசிரியர் கு. மோகனராசு– (முன்னாள் பேராசிரியர் மற்றும் தலைவர், திருக்குறள் ஆய்வு மையம் சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை)
  - 201 5– பேராசிரியர் மறைமலை இலக்குவனார்– (முன்னாள் தமிழ்ப் பேராசிரியர், மாநிலக்கல்லூரி)
  - 2016 – பேராசிரியர் கா. ராஜன் – (முன்னாள் பேராசிரியர், வரலாற்றுத் துறை, புதுவைப் பல்கலைக்கழகம்).
  - 2017 – பேராசிரியர் உல்ரிக் நிக்லாஸ்– ஜெர்மனியின் கொலாகின் பல்கலைக்கழக இந்தியவியல் மற்றும் தமிழ்த்துறைத் தலைவர்.
  - 2018– கவிஞர் ஈரோடு தமிழன்பன்– (முன்னாள் தமிழ்ப் பேராசிரியர், புதுக் கல்லூரி, சென்னை).
  - 2019 – பேராசிரியர் கு.சிவமணி– (முன்னாள் முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர் மற்றும் திருவள்ளுவர் கல்லூரி, நெல்லை).)
  - விரைவில் வழங்கப்படும்: தமிழறிஞர்கள் மற்றும் தமிழ்நாட்டு பெருமக்களின் முன்னிலையில் மாநில அளவிலான தமிழ்மொழி சார்ந்த விழாவில் கூடிய விரைவில் விருது வழங்கப்படவுள்ளது.

## 42 பேருக்கு (2019–20) ஆம் ஆண்டிற்கான நாட்டு நலப்பணித் திட்டம் (NSS) விருதை வழங்குகிறார் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த்

- தன்னார்வ சமூக சேவை மூலமாக இளைஞர்களின் ஆளுமைத் தன்மையை வளர்க்க (NSS) 1969 ஆண்டு தொடங்கப்பட்டது.
- NSS விருது மத்திய அரசின் இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டு துறை அமைச்சகம் மூலம் வழங்கப்படுகிறது.

# 1.8 கலாச்சாரம்

### அகரத்தில் 13 அடுக்கு உறை கிணறு கண்டெடுப்பு

- 7–ஆம் கட்ட அகழாய்வில் 13 அடுக்கு உறை கிணறு கண்டெடுக்கப்பட்டுள்ளதாக தமிழக தொல்லியல் துறை அலுவலர்கள் தெரிவித்தனர்.
- கீழடி, அகரம், கொந்தகை, மணலூர் ஆகிய பகுதிகளில் 7–ஆம் கட்ட அகழாய்வுப் பணிகள் கடந்த பிப்ரவரி மாதம் முதல் நடைபெற்ற வருகின்றன. இதில், சுடுமண் முத்திரை, காதணிகள், தந்தத்தினாலான பகடை, முதுமக்கள் தாழி, உருவ பொம்மை, கருப்பு, சிவப்பு பானை ஓடுகள், தமிழி எழுத்துகள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள், பழங்கால மக்கள் பயன்படுத்திய புழங்குப் பொருள்கள் உள்ளிட்ட ஏராளமான தொல்பொருள்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
- இதனிடையே, அகரத்தில் நடைபெற்று வரும் அகழாய்வுப் பணியில் 13 அடுக்கு உறைகள் கொண்ட கிணறு அண்மையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

### 200 மில்லியன் ஆண்டுகள் பழமையான டைனோசர் படிமங்கள்

- ராஜஸ்தான் மாநிலத்தின் தார் பாலைவன பகுதியில் ஜெய்சால்மர் மாவட்டத்தின் பகுதியில் 200 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் மிசோலிக் காலத்தை சேர்ந்த டைனோசர்கள் வாழ்ந்ததற்கான தடயங்கள் கிடைத்துள்ளன.

### நுவாகாய் அறுவடை திருவிழா ஒடிசாவில் கொண்டாடப்பட்டது

- செப்டம்பர் 11, 2021 அன்று பாரம்பரிய முறைபடி மேற்கு ஒடிசாவில் கொண்டாடப்பட்டது.
- விநாயகர் சதுர்த்திக்கு ஒரு நாள் கழித்து இப்பண்டிகை கொண்டாடப்படுகிறது.
- தெற்கு சட்டீஸ்கர், மேற்கு ஒடிசா ஆகிய பகுதிகளில் "புதிய பயிர் காலத்தை" வரவேற்க இந்த பண்டிகை கொண்டாடப்படுகிறது.

### அகரத்தில் நடந்து கொண்டிருக்கும் 7ஆம் கட்ட அகழ்வராய்ச்சி இரண்டு புதிய வட்ட கிணறுகள் கண்டுபிடிப்புடன் முடிவு பெற உள்ளது

- தமிழ்நாடு தொல்லியல் துறையால் மதுரையின் தென்கிழக்கு பகுதியில் 12 கி.மீ தொலைவில் மணலூர் மற்றும் கொந்தகலில் 2,600 ஆண்டுகளுக்கு முன் வைகை நதிக்கரையில் நகர்ப்புற குடியேற்றத்தை நிறுவ அகழ்வராய்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.
- அகரத்தில் இரண்டு ஏக்கரில் அதிக அளவிலான வட்ட கிணறுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அதில் 4 கிணறுகள் பிப்ரவரி–ஆகஸ்ட் வரையிலும் இரண்டு புதிய கிணறுகள் கடந்த வார இறுதியில் கண்டுபிடிக்கப்பட்டது.
- கீழடியில் காணப்படும் இரண்டு வளைய கிணறுகளில் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் 44 செ.மீ உயரத்தில் மேல் வளையத்தில் பட்டையிடப்பட்ட கயிறு வடிவமைப்பை கொண்ட கிணறை கண்டுபிடித்தனர்.
- மோதிர கிணறு இப்போது 140 செ.மீ. ஆழம் வரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஏழவாது அடுக்கு உடைந்து காணப்படுகிறது.
- கொந்தகையின் அகழ்வராய்ச்சியில் எலும்புக்கூடு எச்சங்கள் மற்றும் 11 அடக்கம் மற்றும் சேமிப்பு கலசங்கள், மணலூர் மற்றும் கீழடி சுற்றி உள்ள பகுதிகளில் கிடைக்கப்பெற்றது.

- மணிகள், ஓடுகள், கண்ணாடி, கல், டெரகோட்டா மற்றும் விலைமதிப்பற்ற கற்கள் மற்றும் வளையல்கள் ஆகியவை சங்ககாலத்தில் பானை ஓடுகள் மற்றும் வர்த்தக நடவடிக்கையை குறிக்கிறது.

## சிவகங்கை மாவட்டம், இளயான்குடி அருகே 3,200 ஆண்டுகளுக்கு முந்தைய தாழி, கீறல் குறியீடுகள் கண்டெடுப்பு

- சிவகங்கை மாவட்டம், இளையான் குடி அருகே முனைவென்றியில் 3,200 ஆண்டுகளுக்கு முந்தைய மூடியுடன் கூடிய முதுமக்கள் தாழிகள், கீறல் குறியீடுகள் கண்டெடுக்கப்பட்டன.
- முனைவென்றி என்பது கொடுமணலுக்கு இணையான ஊர். இங்குள்ள வயல்வெளி, கொழுஞ்சித் திடல், ஆவடியாத்தாள் கண்மாய் பகுதிகளில் 100 ஏக்கரில் பெருங்கற்கால தொல்சான்றுகள் பரவிக் கிடக்கின்றன.
- இங்கு மூடியுடன் கூடிய முதுமக்கள் தாழிகள், கருப்பு, சிவப்புநிறப் பானை ஓடுகள், கீறல் குறியீடுகள், செங்கல் வட்டு சில்கள், சிறிய கலயங்கள், கற் கருவிகள், மனித எலும்புகள் காணப்படுகின்றன. இந்த தொல்பொருட்களை ஆய்வு செய்ததில், அவை 3,200 ஆண்டுகளுக்கு முந்தையதாக உள்ளது. ஆதிச்சநல்லூர், அழகன்குளம், கொடுமணல், பொருந்தல், கீழடி, சிவகளை அகழாய்வுகளில் கிடைத்த தொல்பொருட்கள் பல இங்கும் காணப்படுகின்றன.

### 400 ஆண்டு பழமையான சதிக்கல்

- விருதுநகர் மாவட்டம், திருச்சுழி அருகே உள்ள புரசலூரில் பள்ளி சுற்றுச்சுவர் கட்ட பள்ளம் தோண்டியபோது சுமார் 400 ஆண்டுகள் பழமையான சதிக்கல் கண்டெடுக்கப்பட்டது.
- இச்சிற்பத்தை ஆய்வுசெய்த தொல்லியல் ஆய்வாளர் வே.ராஜகுரு கூறியதாவது:
- இந்தச் சிற்பம் உடன்கட்டை ஏறி உயிரை மாய்த்துக் கொண்ட பெண்ணுக்கு வைத்த சதிக்கல் ஆகும். பழங்காலத்தில் போரிலோ, வேறு காரணத்தாலோ கணவர் உயிரிழந்தால், அவருடனோ அல்லது தனியாகவோ உடன்கட்டை ஏறி உயிர்துறந்த பெண்களுக்கு நினைவுச் சின்னம் அமைத்து வழிபடும் வழக்கம் இருந்துள்ளது.
- இவற்றை மாலையீடு, மாலையடி, தீப்பாஞ்சம்மன், மாலைக்காரி, சீலைக்காரி என்றும் அழைக்கிறார்கள். சதி, மாலை ஆகிய சொற்களுக்கு பெண் என்றும் பொருள் உண்டு. இந்நிலையில் புரசலூரில் கண்டெடுக்கப்பட்ட சதிக்கல் 2.5 அடி உயரமும், 1.5 அடி அகலமும் கொண்டது. இச்சதிக்கல் அமைப்பைக் கொண்டு பார்க்கும்போது, இது கி.பி.17–ம்நூற்றாண்டைச் சேர்ந்தது எனலாம். இவ்வாறு அவர் கூறினார்.

## கங்கை கொண்ட சோழபுரத்தில் "செங்கற் கட்டிடங்கள்" கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

- செப்பு நாணயம், யானை தந்தத்திலான பொருள், கண்ணாடி மணிகள், வளையல்கள் கண்டுபிடிக்கப்பட்டன.
- கங்கை கொண்ட சோழபுரம் அருகில் உள்ள மாளிகைமேடு பகுதியில் நடந்த அகழ்வராய்ச்சியில் இப்பொருட்களை கிடைக்கப் பெற்றது.
- இரும்பு ஆணிகள், கூரையில் பதிக்கப்படும் ஓடுகள் கிடைத்தது. இதனுடன் டெரகோட்டா பொருட்கள், சிகப்பு, கருப்பு வண்ணங்களில் அலங்கார பொருட்கள் கிடைத்தன.
- கங்கை நதியை ஒட்டிய பகுதிகளை (1012–1044 CF) வென்ற பிறகு ராஜேந்திர சோழன் அவர்களால் கங்கைகொண்ட சோழபுரம் உருவாக்கப்பட்டது. (250 ஆண்டுகள் அவர்களின் தலைநகரமாக இருந்தது.)
- 1980ஆம் ஆண்டு தமிழ்நாடு தொல்லியல் துறையில் நடத்தப்பட்ட அகழ்வராய்ச்சியில் இந்த நகரம் கண்டுபிடிக்கப்பட்டது.

# 1.9 நியமனங்கள்

## சர்வதேச வானியியல் யூனியனில் கௌரவ உறுப்பினராக இந்தியர்

- இந்திய வானியியலாளர் டோர்ஜி அங்சஜ் சர்வதேச வானியியல் யூனியனின் கௌரவ உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவர் தற்போது இந்திய வானியியற்பியல் நிறுவனத்தில் லடாக்கில் பணிபுரிகின்றனர். இவருடன் உலகம் முழுதும் 20 அறிஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

## மத்திய நேரடிவரிகள் ஆணையத்தின் தலைவராக J.B.மோக பத்ரா நியமனம்

- 1985ம் ஆண்டு வருவாய் பணியாளர் J.B.மோக பத்ரா நேரடி வரிகள் ஆணையத்தின் தலைவராக சமீபத்தில் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

## எல்லைச் சாலை படையின் தலைவராக பங்கஜ் குமார் சிங்

- எல்லைச் சாலை படையின் தலைவராக பங்கஜ் குமார் சிங் பொறுப்பேற்றுக் கொண்டார். எல்லைச் சாலைப் படையின் தலைமையிடம் புதுதில்லியில் உள்ளது.

## உயர்நீதிமன்ற நீதிபதிகள் தேர்வு

- நாடு முழுவதும் பல்வேறு நீதிமன்றங்களின் நீதிபதிகள் 68 பேர் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி N.V. ரமணா தலைமையிலான குழு தேர்வு செய்துள்ளது.
- பழங்குடியின வகுப்பை சேர்ந்த மார்லிவான்குங் அஸ்ஸாம் மாநில உயர்நீதிமன்றத்திற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார் அரசால் நியமனம் செய்யப்படும் பட்சத்தில் மணிப்பூர் மாநிலத்தில் இருந்து அந்த உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாக நியமனம் செய்யப்படும் முதல் பெண் நீதிபதியாவார்.

## தமிழக புதிய ஆளுநர் ஆர்.என். ரவி

- தமிழக புதிய ஆளுநராக 1976–கேரள பிரிவைச் சேர்ந்த முன்னாள் ஐபிஎஸ் அதிகாரியும், நாகாலாந்து மாநிலத்தின் ஆளுநருமான ரவீந்திர நாராயண ரவியை (69) குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் நியமித்தார்.
- தற்போதைய ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் பஞ்சாப் மாநிலத்தின் முழு நேர ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார். உத்தரகண்ட் ஆளுநராக ஒய்வு பெற்ற ராணுவ துணைத் தளபதி குர்மீத் சிங் நியமிக்கப்பட்டுள்ளார். அஸ்ஸாம் மாநிலத்தின் ஆளுநர் ஜெகதீஷ் முகிக்கு நாகாலாந்து மாநில ஆளுநராக கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

## ராஜ்ஜிய சபை புதிய செயலாளர் நியமனம்

- பாராசரம் பட்டாபி கேசவ ராமசாரியலு ராஜ்ஜிய சபை செயலாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

## இந்தியன் வங்கி நிர்வாக இயக்குநர் பொறுப்பேற்பு

- இந்தியன் வங்கியின் புதிய நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரியாக சாந்தி லால் ஜெயின் (செப்டம்பர் 1) பொறுப்பேற்று கொண்டார்.

## IGCAR – புதிய இயக்குநர் நியமனம்

- இந்திரா காந்தி அணுசக்தி ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநராக B.வெங்கடராமன் நியமனம் செய்யப்பட்டு உள்ளார்.

## சட்டத்துறை இரண்டாகப் பிரிப்பு இரண்டு செயலாளர்களை நியமித்து அரசு உத்தரவு

- தமிழக சட்டத் துறையில் சட்ட விவகாரங்களைக் கவனிப்பதற்கென தனிசெயலாளர் நியமிக்கப்பட்டுள்ளார். இதன்மூலம், சட்டத் துறையானது இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவை தலைமைச் செயலாளர் வி.இறையன்பு பிறப்பித்தார். அவரது உத்தரவு விவரம்:–
- சிறிய வழக்குகளுக்கான நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக இருந்த பி.கார்த்திகேயன், சட்டத் துறையில் சட்ட விவகாரங்களைக் கவனிக்கும் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். சட்டத் துறை செயலாளராக இருந்த சி.கோபி ரவிகுமார், சட்டத் துறையின் சட்டமியற்றல் விவகாரங்களைக் கவனிக்கும் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளதாக தனது உத்தரவில் தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு தெரிவித்துள்ளார்.
- புதிதாக உருவாக்கம்: அரசின் மற்ற துறைகளைப் போன்றே சட்டத் துறை ஒரு செயலாளர் தலைமையில் இயங்கி வந்தது. முக்கிய அரசமைப்புச் சட்டங்களை நிறைவேற்றுவது மட்டுமின்றி, வழக்குகளும் நிலுவையில் இருக்கின்றன.

## கேரள அரசின் சிறப்பு அதிகாரியாக வேணுராஜாமணி நியமனம்

- கேரள மாநில அரசின் சிறப்பு அதிகாரியாக ஓய்வு பெற்ற ஐ.எஃப்.எஸ். அதிகாரி வேணுராஜாமணி நியமிக்கப்பட்டிருக்கிறார்.
- உலகம் முழுவதும் புலம்பெயர்ந்துள்ள மலையாளிகள் தொடர்பான பொதுவான பிரச்னைகள் குறித்து மத்திய அரசு, வெளிநாடுகள், இந்திய தூதரக அலுவலகங்களுடன் தொடர்பு கொள்வதற்காக அவர் நியமிக்கப்பட்டுள்ளதாக மாநில முதல்வர் பினராயி விஜயன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

## உத்தரகாண்ட் ஆளுநராக குர்மீத் சிங் பதவியேற்றார்

- உத்தரகாண்ட் மாநில ஆளுநராக ஓய்வுபெற்ற ராணுவ தலைமைத் தளபதி குர்மீத் சிங் பதவியேற்றார்.

## தமிழக ஆளுநராக ஆர்.என்.ரவி பதவியேற்பு

- தமிழகத்தின் 15–வது ஆளுநராக ஆர்.என்.ரவி பதவியேற்க உள்ளார். ஆளுநர் மாளிகையில் நடைபெறும் நிகழ்ச்சியில், புதிய ஆளுநருக்கு சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி சஞ்சீவ் பானர்ஜி பதவியேற்பு உறுதிமொழி செய்து வைக்கிறார்.
- தமிழகத்தின் ஆளுநராக இருந்த பன்வாரிலால் புரோஹித், பஞ்சாப் மாநில ஆளுநராக நியமிக்கப்பட்டார். இதைத் தொடர்ந்து மாநிலத்தின் புதிய ஆளுநராக ஆர்.என்.ரவி நியமிக்கப்பட்டுள்ளார்.

## ஐசிஏஓ பாதுகாப்புக் குழுவின் முதல் பெண் தலைவராக இந்தியர் தேர்வு

- ஐ.நா. சர்வதேச விமானப் போக்குவரத்து அமைப்பின் (ஐசிஏஓ) பாதுகாப்புக் குழுத் தலைவராக இந்தியாவைச் சேர்ந்த ஷெஃபாலி ஜுனேஜா தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- ஐ.நா.வின் ஐசிஏஓ அமைப்பு விமானப் போக்குவரத்து செயல்பாடுகள், அதன் உள்கட்டமைப்பு, சட்டவிரோத செயல்கள் தடுப்பு, எல்லை தாண்டிய போக்குவரத்தின் நடைமுறைகள் சார்ந்து இயங்கி வருகிறது. இந்த அமைப்பின் பாதுகாப்புக் குழுவுக்கு முதல் பெண் தலைவராக இந்தியாவைச் சேர்ந்த ஷெஃபாலி ஜுனேஜா தேர்வு செய்யப்பட்டார். கடந்த 1992–ஆம் ஆண்டின் இந்திய வருவாய் பணி (ஐஆர்எஸ்) பிரிவு அதிகாரியான இவர், மத்திய விமானப் போக்குவரத்து அமைச்சகத்தின் இணைச் செயலராக பணிபுரிந்துள்ளார்.

**ICAO (ஐ.நா. சர்வதேச விமானப் போக்குவரத்து அமைப்பு)**

- தலைமையகம் – மாண்ட்ரியல், கனடா
- உருவாக்கம் – ஏப்ரல் 4, 1947
- தலைவர் – Salvatone Sciaccitano

## இந்திய விமானப் படை புதிய தலைமைத் தளபதி விவேக் ராம் சௌத்ரி

- இந்திய விமானப் படையின் புதிய தலைமைத் தளபதியாக விவேக்ராம் சௌத்ரி நியமிக்கப்படவுள்ளார் என்று பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- விமானப் படைத்தலைமைத் தளபதி ஆர்கேஎஸ். பதௌரியா செப்டம்பர் 30–ஆம் தேதி ஓய்வு பெறுகிறார்.
- விவேக்ராம் சௌதரி தேசிய பாதுகாப்பு அகாதெமியில் பயின்றவர். கடந்த 1982 ஆம் ஆண்டு டிசம்பர் 29–ஆம் தேதி இந்திய விமானப் படையில் போர் விமானியாக சேர்ந்தார்.

## செம்மொழி நிறுவனத்தின் துணைத் தலைவராக பேராசிரியர் இ.சுந்தரமூர்த்தி நியமனம்

- சென்னையில் செயல்பட்டு வரும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் துணைத் தலைவராக பேராசிரியர் இ.சுந்தரமூர்த்தி நியமிக்கப்பட்டுள்ளார்.
- செம்மொழி நிறுவனத்தில் 2018–ஆம் ஆண்டு முதல் துணைத் தலைவராகப் பணியாற்றிய பேராசிரியர் தெ.ஞானசுந்தரத்தின் பணிக் காலம் கடந்த ஜூலை மாதத்துடன் நிறைவடைந்தது.

## தேவாப்ரத முகர்ஜி ABC தலைவராக தேர்வு

- அவர் யுனைடைட் பிருவரிஸ்–ன் தலைமை மார்கேட்டிங் அதிகாரி ஆவார்.

### உலக சுகாதார நிதிக்கான தூதர் நியமனம்

- உலக சுகாதார நிதிக்கான தூதராக முன்னாள் இங்கிலாந்து பிரதமர் கார்டன் பிரவுன் நியமிக்கப்பட்டுள்ளார்.

### முதல் பெண் சபாநாயகர்

- மூத்த சட்டமன்ற உறுப்பினர் நிமாபெண் ஆச்சார்யா குஜராத் சட்டசபையின் முதல் பெண் சபாநாயகராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## 1.10 இந்தியா மற்றும் அண்டை நாடுகள்

### ஆப்கான் பயங்கரவாதத்தை எதிர்கொள்வதாக க்வாட் தலைவர்கள் அறிவிப்பு

- கொரோனா தடுப்பூசி, புதிய உள்கட்டமைப்பு வசதிகளுக்கான கூட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் க்வாட் தலைவர்களால் அறிவிக்கப்பட்டது.
- அனைத்து நாடுகளும் இணைந்து ஆப்கான் நாட்டின் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிரான ஒற்றை குறளாக ஒளிப்போம் என்றும் பொருளாதார மற்றும் மனித உரிமைக் கொள்கைகள் பின்பற்றப்படும் என்றும் தெரிவித்தனர்.
- "க்வாட்" அமைப்பின் புதிய உள்கட்டமைப்புக்கான திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. Blue Dot Network (அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் ஜப்பான்) இணைந்து தொடங்கியுள்ள திட்டமாகும். சீனாவின் (Belt and Road) திட்டத்தை போல், நான்கு நாடுகளில் தொடங்கப்பட்டுள்ள திட்டமாகும்.

### காஷ்மீரின் ஸ்ரீநகர் பள்ளத்தாக்கையும், லடாக்கின் லே பகுதியையும் இணைக்கும் சுரங்கப்பாதை

- காஷ்மீரின் ஸ்ரீநகர் பள்ளத்தாக்கையும், லடாக்கின் லே பகுதியையும் இணைக்கும் வகையில் ஜோஜில்லா – இசட் – மோர்ஹ் சுரங்கப் பாதை கட்டப்பட்டு வருகிறது. இந்தக் கட்டுமானப் பணியை மத்திய சாலைப் போக்குவரத்து துறை அமைச்சர் நிதின் கட்கரி ஆய்வு செய்தார்.

### இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா கடற்படை இடையே பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கான ஒப்பந்தம் கையெழுத்தானது

- இந்தே–பசிபிக் பகுதியில் அமைதியை ஊக்கவிக்கவும், பாதுகாப்பு, நிலைத்தன்மை உறுதி செய்ய இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது.
- இரு நாடுகளுக்கும் இடையே பரஸ்பர புரிதல், நம்பிக்கை, வெளிப்படைத்தன்மை, மேம்பட்ட நல்லெண்ணம் மற்றும் எதிர்கால செயல்பாடுகளில் புரிதல் ஆகியவற்றின் பரந்த நோக்கத்தை இவ்வொப்பந்தம் வலியுறுத்துகிறது.
- இந்திய பெருங்கடல் கடற்படை கருத்தரங்கம் (IONS), மேற்கு பசிபிக் கடற்படை கருத்தரங்கம் (WPNS) மற்றும் இந்திய பெருங்கடல் வளைய கூட்டமைப்பு (IORA), ஆகியவற்றில் நெருக்கமாக ஒத்துழைப்பையும் இவ்வொப்பந்தம் உள்ளடக்கியது.



# 2. அரசியல் அறிவியல்

## 2.1 அரசியல் கட்சிகள் மற்றும் இந்திய அரசியல் அமைப்புகள்

### "சமூக நீதி இயக்கத்தின் தொடக்கமான அரசாணை வெளியிடப்பட்டு 100 ஆண்டுகள் ஆகிறது

- "வகுப்புவாத அரசாணை" – செப்டம்பர் 16, 1921 அன்று நீதிக்கட்சியால் வெளியிடப்பட்டது.
- இந்த ஆணை மூலம் பிராமணல்லாதோர் பிரதிநித்துவம் அரசு வேலைகளில் உயர்த்தப்பட்டது. இதில் (இந்திய கிறிஸ்தவர்கள் முஸ்லிம்கள், ஆதிதிராவிடர்கள்) அடங்கும்.
- 1912ஆம் ஆண்டின் "மதராஸ் மாகாண அரசாங்கம்" சமர்பித்த தகவலின் படி உயர் பதவியல் இருக்கும் இந்தியர்களில் பிராமணர்கள் – 53% (துணை ஆட்சியர்கள்), பிராமணர்கள் – 83% (துணை நீதிபதிகள்), பிராமணர்கள் – 72.6% ( மாவட்ட முன்சீப்கள்).
- 1917இல் வருவாய் நீதித்துறையால் இந்த தகவல்கள் உறுதி செய்யப்பட்டுள்ளது.
- 1870–1918 ஆம் ஆண்டு வரை உயர்கல்வியில் பிராமணர்களின் சதவீதம் (67.71%).
- இதற்கு முன்றே நீதிக்கட்சி ஆங்கிலேயர்களிடம் "வகுப்புவாத வாக்காளர்களை அறிமுகப்படுத்த கோரியது. இதன் மூலம் அனைத்து சமூகத்தை சேர்ந்தவர்களுக்கும் சென்னை சட்டமன்றத்தில் இடம் கிடைக்கும் என்று எடுத்துரைத்தது.

### பிரதமரின் பயிர்க் காப்பீட்டுத்த திட்டம்

- பிரதமரின் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்துக்கான காப்பீட்டு கட்டண மானியத்தில் மாவட்டங்களுக்கு 30 சதவீதம் வரையிலும், பாசன வசதி உள்ள மாவட்டங்களுக்கு 25 சதவீதம் வரையிலும் மத்திய, மாநில அரசுகளின் பங்களிப்புடன் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நிகழாண்டில் சம்பா பருவத்தில் காப்பீட்டுத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான உத்தரவு வேளாண்மைத்துறையால் வெளியிடப்பட்டுள்ளது.

பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டம் (Pradhan Mantri Fasal Bima Yojana)

- இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு இழப்பீட்டை சரியாகவும், விரைவாகவும் கிடைக்கச் செய்ய 17 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கர்நாடக மாநிலம் பெலகாவில் பிரதமர் மோடி பிப்ரவரி 18, 2016 அன்று இத்திட்டத்தை தொடங்கி வைத்தார்.
- இதன் சராசரி தொகை ஒரு ஹெக்டேருக்கு 15, 100 என்பது 40, 700 ஆக உயர்த்தப்பட்டது.

**விவசாயிகள் செலுத்தும் பிரிமியம் தொகை விவரம்**

- அனைத்து காரிப் உணவு மற்றும் எண்ணெய் வித்து பயிர்களுக்கு – 2%
- ரபி உணவு மற்றும் எண்ணெய் வித்து பயிர்களுக்கு – 1.5%
- வருடாந்திர வணிக / தோட்டக்கலை பயிர்களுக்கு – 5%.

### PM KUSUM திட்டத்தை மறுஆய்வு செய்தது மத்திய அரசு

- விவசாயிகளுக்கு பகல் நேரங்களில் பாசனத்திற்கான மின்சாரம் உற்பத்தி செய்யவும் மின்சாரத்திற்கான மானியத்தை குறைக்கவும் விவசாயம் மூலம் உற்பத்தி செய்யப்படும் கரிமவாயுவை குறைக்கவும் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- விவசாயிகள் சூரிய ஒளியில் இயங்கும் பம்புகளை நிறுவ PM–KUSM உதவுகிறது.

| துறை | வளர்ச்சி விகிதம் |
|---|---|
| தகவல் தொழில்நுட்பம்/BPO | 152% |
| சுகாதாரத்துறை | 77% |
| போக்குவரத்து | 68% |
| நிதி சேவைகள் | 48% |
| கட்டுமானத்துறை | 42% |
| கல்வித்துறை | 69% |
| உற்பத்தித் துறை | 22% |

| துறை | வீழ்ச்சி |
|---|---|
| வர்த்தக துறை | 25% |
| உணவகங்கள் மற்றும் தங்கும் விடுதிகள் | 25% |

PM KUSUM

- ஒன்றிய மின்துறை புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.
- 2019 ஆண்டு முதல் இத்திட்டம் செயல்பாட்டில் உள்ளது.

# 2.2 பொது விழிப்புணர்வு மற்றும் நிர்வாகம்

## 2013–14ஐ ஒப்பிடுகையில் வேலைவாய்ப்பு 29% முன்னேற்றம்

- தேசிய நிறுவனங்களுக்கான (காலாண்டு ஆய்வு) வேலைவாய்ப்பு ஆய்வில் தகவல்.
- தொழில்துறை மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தால் இந்த ஆய்வு வெளியிடப்பட்டது.
- பாதுகாப்பு தொழில்துறை மண்டலத்திற்கு மத்திய அரசின் உதவி தேவை என அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்தார்.
- பாதுகாப்பு சோதனை உள்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் 5 திட்டங்களுக்கு அனுமதி வழங்குமாறு மத்திய ராஜ்நாத் சிங்கிடம் கோரிக்கை விடுத்தார். திட்டங்களின் அமைச்சர் விவரங்கள்:

| | |
|---|---|
| தொலை தொடர்பு அமைப்பு மற்றும், RF Antenna | சென்னை |
| ஆளில்லா விமானங்களை சோதனை செய்வதற்கான உள்கட்டமைப்பு மையம் | உளுந்தூர்பேட்டை/ சோழவரம் |
| இயந்திர மற்றும் பொருள் சோதனை செய்யும் மையம் | திருச்சி |
| மின்காந்த குறுக்கீடு மற்றும் மின்காந்த சோதனை மையம் | சென்னை |
| வெடிமருந்துகள் சோதனை செய்வதற்கான உள்கட்டமைப்புடன் கூடிய சோதனை மையம் | திருச்சி |

- TIDCO மூலமாக அரசு மற்றும் தனியார் (PPP) பங்களிப்பில் இத்திட்டங்களை வணிக மையமாக்க அரசு முடிவு செய்துள்ளது.

# 2.3 சமீபத்திய நீதிமன்ற தீர்ப்புகள்

## தேசிய நீதித் துறை உள்கட்டமைப்புக் கழக திட்டம்

- "நீதித்துறையில் உள்கட்டமைப்பு பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் வகையில் தேசிய நீதித்துறை உள்கட்டமைப்புக் கழகம் என்ற திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. விரைவில் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்படும்" என உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி என்.வி.ரமணா தெரிவித்தார்.
- இந்திய பார் கவுன்சில் சார்பில் தில்லியில் நடைபெற்ற பாராட்டு விழாவில் அவர் பேசியது: உள்கட்டமைப்பு, நிர்வாக அலுவலர்கள் பற்றாக்குறை, நீதிபதிகள் பணியிடங்கள் அதிக அளவில் காலியாக இருப்பது போன்ற கடினமான சவால்களை நீதித்துறை சந்தித்து வருகிறது. உயர்நீதிமன்றங்களில் பணியிடங்களை நிரப்புவதற்கு முயற்சி மேற்கொண்டு வருகிறேன். கூட்டு முயற்சி காரணமாக உச்சநீதிமன்றத்தில் ஒரே ஒரு நீதிபதி பணியிடம் மட்டுமே காலியாக இருக்கும் அளவுக்கு குறைக்கப்பட்டுள்ளது. அதே போல நான் பொறுப்பேற்ற பிறகு, பல்வேறு உயர்நீதிமன்றங்களுக்கு 82 நீதிபதிகளின் பெயர்களை கொலீஜியம் பரிந்துரை செய்துள்ளது. உச்சநீதிமன்றத்துக்கு 9 நீதிபதிகளின் பெயர்களுக்கு ஒப்புதல் அளித்தது போல இதற்கும் மத்திய அரசு விரைவில் ஒப்புதல் அளிக்கும் என நம்புகிறேன். அனைத்து உயர்நீதிமன்றங்களிலும் இருக்கும் 41 சதவீத காலி பணியிடங்களை பூர்த்தி செய்யும் சவால்களை எதிர்கொள்வோம் எனவும் நம்புகிறேன். இதில் 90 சதவீத பணியிடங்கள் அடுத்த ஒரு மாதத்தில் நிரப்பப்பட்டுவிடும் என எதிர்பார்க்கிறேன்.

# 2.4 மத்திய அரசாங்கம்–பொதுநலம் சார்ந்த அரசுத் திட்டங்கள், அவற்றின் பயன்பாடுகள்

## முறைசாரா தொழிலாளர்களுக்கு திறன் சான்றிதழ்

- முறைசாரா தொழலாளர்களின் ஒரு இலட்சம் பேரைக் கண்டறிந்து அவர்களுக்கு தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் பயிற்சி அளித்து சான்றிதழ்கள் வழங்க உள்ளதாக தொழிலாளர் விவகார அமைச்சர் C.V.கணேசன் தெரிவித்துள்ளார்.

## போஷான் அபியான்

- 2018–ம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டின் செப்டம்பர் மாதமும் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் ஊட்டச்சத்து பற்றாக்குறையை போக்குவதை நோக்கமாக கொண்டு போஷான் மாதமாக கடைப்பிடிக்கப்படுகிறது (POSHAN MAAH) போஷான் அபியான் 2018ல் ராஜஸ்தானில் 2022க்குள் ஊட்டச்சத்து பற்றாக்குறை அந்த நாடாக இந்தியாவை மாற்ற இலக்கு நிர்ணயித்து துவங்கப்பட்டது.

## தோல், காலணி நிறுவன ஊக்குவிப்புத் திட்டம் : 2025–26 வரை நீட்டிக்க பரிந்துரை

- தோல் மற்றும் காலணி உற்பத்தித் துறை ஊக்குவிப்பு திட்டத்தை வரும் 2025–26 நிதி ஆண்டுவரை நீட்டிக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. அதற்கென ரூ.1,700 கோடி செலவில் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட உள்ளன என்று மத்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.
- இதுகுறித்து அதிகாரிகள் மேலும் கூறியதாவது : இந்திய காலணி தோல் மற்றும் துணைப் பொருள்கள் மேம்பாட்டுத் திட்டத்தை (ஐஎஃப்எல்ஏடிபி) ரூ.1,700 கோடி திட்டச் செலவுடன் 2021–22 முதல் 2025–26 ஆண்டு வரை நடைமுறைப்படுத்துவதற்கான பரிந்துரையை மத்திய வணிகம் மற்றும் தொழில் துறை அமைச்சகம் மத்திய அரசிடம் சமர்ப்பித்துள்ளது. இந்த பரிந்துரைக்கு மத்திய அமைச்சரவை விரைவில் ஒப்புதல் அளிக்க உள்ளது.

- அதன் மூலம், 6 வகையான மேம்பாட்டுத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட உள்ளன. அதில், தோல் மற்றும் காலணி உற்பத்தித் துறையில் நிலைத்த தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச் சூழல் மேம்பாட்டு திட்டம் ரூ. 500 கோடி செலவில் மேற்கொள்ளப்பட உள்ளது. அதுபோல, ஒருங்கிணைந்த தோல் துறை மேம்பாட்டுத் திட்டம் ரூ. 500 கோடி செலவிலும், தொழில்நிறுவன வசதிகளை மேம்படுத்த ரூ.200 கோடி செலவிலும், மிகப் பெரிய அளவிலான தோல் காலணி மற்றும் துணைப் பொருள்கள் தொழிற் பேட்டைகளை மேம்படுத்த ரூ.300 கோடி செலவிலும், தோல் மற்றும் காலணி துறையில் இந்திய உற்பத்தி தர ஊக்குவிப்புக்கு ரூ.100 கோடி செலவிலும், மேம்பாடு மற்றும் வடிவப் பிரிவை உருவாக்க ரூ.100 கோடி செலவிலும் திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன.

## PM–KUSUM திட்டத்தின் கீழ் சூரிய ஒளியில் இயங்கும் பம்புகளை நிறுவுவதில் ஹரியானா மாநிலம் முதலிடம்

- புதிய மற்றும் புதிப்பதக்க ஆற்றலின் ஒன்றிய அமைச்சகத்தால் இந்த பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.
- ஒதுக்கப்பட்ட 15,000 பம்புகளில் 14,418 பம்புகளை (2020–21) நிறுவியுள்ளது.
- PM–KUSUM திட்டம் 20 லட்சம் சூரிய ஒளியில் இயங்கும். பம்புகளை நிறுவுவதை இலக்காக கொண்டு தொடங்கப்பட்டது.
- 520 கோடிகளில் 15,000 பம்புகளை (2020–21) இல் நிறுவுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

## வாகனம், ட்ரோன் தொழில் துறையை ஊக்குவிக்க ரூ.26,000 கோடி திட்டம்

- வாகனம், உதிரி பாகங்கள், ட்ரோன் (ஆளில்லா சிறு விமானம்) உற்பத்தித் துறையில் ரூ.26,000 கோடி மதிப்பிலான திட்டங்களுக்கு (பிஎல்ஐ) மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இதுகுறித்து அமைச்சர் அனுராக் தாக்குர் கூறியதாவது: 2021–22–ஆம் நிதியாண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், 13 துறைகளில் ரூ.1.97 லட்சம் கோடி மதிப்பிலான உற்பத்தி சார்ந்த ஊக்குவிப்புத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று மத்திய அரசு அறிவித்திருந்தது. அதன் ஒரு பகுதியாக, வாகனம், உதிரி பாகங்கள், ட்ரோன் தொழில் துறையில் ரூ.26,058 கோடி மதிப்பிலான திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இந்தத் தொகை அடுத்த 5 ஆண்டுகளுக்கு வழங்கப்படும்.
- இதனால் கூடுதலாக 7.5 லட்சம் வேலைவாய்ப்புகள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஊக்குவிப்புத் திட்டம், அதிநவீன தொழில்நுட்பத்துடன் வாகனங்களை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்வதற்கு புதிய முதலீடுகளைப் பெறுதற்கும் ஊக்குவிக்கும்.

## இரயில் கௌஷல் யோஜனா திட்டத்தை மத்திய அரசு அறிமுகப்படுத்தியது

- பிரதான் மந்திரி கௌசல் விகாஸ் யோஜனா திட்டத்தின் கீழ் இது செயல்படும்.
- இத்திட்டத்தின் கீழ் ரயில்வே பயிற்சி நிறுவனங்கள் மூலம் இளைஞர்களுக்கு தொழில் நிலை திறன்கள் 50,000 பேருக்கு வழங்கப்படும்.

## NIPUN பாரத் திட்டம்

- மத்திய கல்வி அமைச்சகத்தின் கீழ் இயங்கும் பள்ளிக்கல்வி எழுத்தறிவுத்துறை இத்திட்டத்தை அறிமுகம் செய்தது (ஜுலை 5, 2021).
- 2026–27 குள் மூன்றாம் வகுப்பை நிறைவு செய்வதற்குள் ஒவ்வொரு குழந்தையும் வாசிப்பு, எழுத்து மற்றம் எண்ணறிவில் போதிய தகுதியை பெறுவதற்காக இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- 2011 சென்செஸ் படி ஹிந்தி மற்றும் அதன் துணை மொழி பேசுபவர்களின் சதவிகிதம் 36.99 (1971இல்) இருந்து 43.63% (2011) ஆக உயர்ந்துள்ளது.

## இ–சஞ்சீவினி திட்டம்

- தமிழகத்தில் 39 ஆயிரம் பேர் இத்திட்டத்தால் பயனடைந்துள்ளனர்.
- கொரோனா நோய் தொற்றால் மருத்துவமனைகளுக்கு செல்ல முடியாத சூழலில் தொலைபேசி மூலமும் ஆன்லைன் மூலம் மருத்துவர்களிடம் ஆலோசனை பெற இத்திட்டம் மத்திய அரசால் தொடங்கப்பட்டுள்ளது.
- இணைதளம் அல்லது ஆன்ட்ராய்டு செயலியில் காணொலி மூலம் ஆலோசனை பெறலாம்.
- மத்திய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலன் அமைச்சகத்தின் கீழ் இத்திட்டம் செயல்படுகிறது.

## இந்தியாவின் COVID R மதிப்பு செப்டம்பரில் ஒன்றுக்கும் கீழ் குறைந்துள்ளது

- R மதிப்பு என்பது COVID–19 தொற்றின் பரவலின் வீரியத்தை குறிக்கும். செப்டம்பரின் மத்தியில் பாதிப்பு 0.92 ஆக குறைந்துள்ளது. ஆகஸ்ட் மாதத்தில் ஒன்றுக்கும் அதிகமாக இருந்தது.
- முக்கிய நகரங்களான மும்பை, கொல்கத்தா, சென்னை, பெங்களூரு ஆகிய நகரங்களில் 1–க்கும் அதிகமாக உள்ளது. டெல்லி, மகாராஷ்டிரா, கேரளா, புனேவில் COVID–R மதிப்பு 1க்கு குறைவாக உள்ளது.

## 75 கிராமங்களின் கலாச்சார வரைப்படத்தின் சோதனை திட்டம்

- 75 கிராமங்களின் கலாச்சார வரைப்படத்தின் சோதனை திட்டம் விரைவில் தொடங்கப்பட உள்ளது. இந்திரா காந்தி தேசிய கலை மையத்தால் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.
- 2017ஆம் ஆண்டு 469 கோடி செலவில் கலாச்சார அமைச்சகம் (2017–20) இத்திட்டத்தை தொடங்கியது.

## சௌபாக்யா திட்டம் செயல்படுத்தப்பட்டு 4 ஆண்டுகள் நிறைவடைகிறது

- 16,320 கோடி செலவில் பிரதமர் அவர்களால் இத்திட்டம் 25 செப்டம்பர் 2019ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.
- நாடு முழுவதும் உள்ள ஏழை எளிய மக்களுக்கு மின்சார இணைப்பு வழங்குவதற்காக தொடங்கப்பட்ட திட்டமாகும்.
- மார்ச் 31, 2021 வரை 2.82 கோடி வீடுகளுக்கு மின்சார இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

## 75 மாற்று திறனாளிகளுக்கு 'Hunar–baaz' விருதுகள் வழங்கப்பட்டன

- தேசிய ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் அமைச்சகம் இவ்விருதினை வழங்குகிறது.
- தீனதயாள் உபாத்யா அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு இவ்விருதுகள் வழங்கப்பட்டன. தீனதயாள் உபாத்யா கிராமின் கௌசல் யோஜனா (DDU–GKY) மற்றும் கிராமப்புற சுயவேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி பெறும் மாணவர்களுக்கான திட்டமாகும்.

## பள்ளி மாணவர்களுக்கான மதிய உணவு திட்டத்தின் பெயர் மாற்றம் இத்திட்டத்திற்கு 1.30 லட்சம் கோடி ஒதுக்கீடு

- 1 முதல் 8–ஆம் வகுப்பு மாணவர்களுக்கான தேசிய உணவு திட்டத்தின் பெயர் "பிரதமர் போஷான் திட்டம்" என மாற்றப்பட்டுள்ளது (PM POSHAN), இதன் மூலம் 11.8 கோடி அரசுப்பள்ளி மாணவர்கள் பயனடைவார்கள்.
- இத்திட்டத்தின் கீழ் மாநில அரசுகள் சார்பில் நடத்தப்படும் அங்கன்வாடிகள், தொடக்க பள்ளிகள், நடுநிலை பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் பயன் பெறுவார்கள்.
- 1.80 லட்சம் கோடியில் (31,000 கோடி) மாநில அரசுகளின் பங்காகும்.
- மதிய உணவு திட்டத்தில் அங்கன்வாடி பள்ளிகள் மற்றும் தொடக்க பள்ளிகளை இணைப்பது புதிய கல்விக் கொள்கையின் முக்கியமான பரிந்துரையாகும்.

PM POSHAN – பள்ளி மாணவர்களுக்கான மதிய உணவு திட்டம்

- மத்திய அரசின் அரசு பள்ளி மாணவர்களுக்கான மத்திய உணவு திட்டம் – 1995ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.
- கல்வி அமைச்சகத்தின் கீழ் இத்திட்டம் செயல்படுகிறது.

# 3.புவியியல்



## 3.1 சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுச்சூழல் பற்றிய கொள்கை

### லடாக் யூனியன் பிரதேச விலங்காக பனிச் சிறுத்தை அறிவிப்பு

- லடாக் யூனியன் பிரதேச விலங்காக பனிச் சிறுத்தை, பறவையாக கருப்புக் கழுத்து கொக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான அறிவிப்பை அந்த யூனியன் பிரதேச அரசு வெளியிட்டது.
- ஜம்மு–காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்தை மத்திய அரசு கடந்த 2019–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ரத்து செய்தது. அந்த மாநிலத்தையும் ஜம்மு–காஷ்மீர், லடாக் என இரு யூனியன் பிரதேசங்களாக மத்திய அரசு பிரித்தது. இந்நிலையில், லடாக் யூனியன் பிரதேசத்துக்கான விலங்கு மற்றும் பறவை அறிவிக்கப்பட்டுள்ளன.
- யூனியன் பிரதேசத்தின் வனம், சுற்றுச்சூழல் துறை தலைமைச் செயலர் பவண் கோத்வால் இது தொடர்பான அறிவிப்பை வெளியிட்டார்.
- முன்பு ஜம்மு–காஷ்மீர் மாநிலமாக இருந்தபோது மாநில விலங்காக காஷ்மீர் மான், பறவையாக கருப்புக் கழுத்து கொக்கு இருந்து வந்தது என்பது குறிப்பிடத்தக்கது. அந்த மாநிலம் இப்போது இரு யூனியன் பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டதையடுத்து, தனக்கான விலங்கு மற்றும் பறவையை லடாக் யூனியன் பிரதேச நிர்வாகம் அறிவித்துள்ளது.
- இந்த விலங்கும், பறவையும் அரிய வகையைச் சேர்ந்தவையாகும். இதில் காஷ்மீர் மான், காஷ்மீர் பகுதியில் மட்டுமே காணப்படுகிறது. கருப்புக் கழுத்து கொக்கு கிழக்கு லடாக்கில் அதிகம் உள்ளது. பனிச் சிறுத்தைகள் லடாக் பகுதியில் 200 முதல் 300 வரையிலான எண்ணிக்கையில் இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

### கிழக்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் காணப்படும் மண்டா எருமைகளுக்கு தனித்துவ இனப்பெருக்க அடையாளம்

- கிழக்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் ஒடிசாவில் காணப்படும் கோராபுட் பீடபூமி பகுதியில் வாழும் மண்டா எருமைகளுக்கு தனித்துவ இனப்பெருக்க அடையாள எண் வழங்கப்பட உள்ளதாக தேசிய விலங்குகள் ஜீன் ஆராய்ச்சி அமைப்பு தெரிவித்துள்ளது.

### 'குலாப்" புயல்

- வங்காள விரிகுடாவில் உருவான "குலாப்" புயல் வடக்கு ஆந்திரம் மற்றும் தெற்கு ஒடிஸா இடையே கரையை கடந்தது.

### குஜராத் கடற்பகுதியில் புதிய புயல் "ஷாகீன்" பாகிஸ்தான் நோக்கி செல்லக் கூடும் என கணிப்பு

- குஜராத் கடற்பகுதியில் "ஷாகீன்" என்ற புதிய புயல் அக்டோபர் 1 இல் உருவாகி பாகிஸ்தானை நோக்கி செல்லக் கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்த புயலுக்கு ஷாகீன் என்ற பெயர் கத்தார் நட்டினால் வழங்கப்பட்டது

### 2020ஆம் ஆண்டில் நாடு முழுவதும் 202 புதிய தாவர இனங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக இந்திய தாவரவியல் ஆய்வு கூறுகிறது

- "தாவரக் கண்டுபிடிப்புகள் 2020" என்கிற புதிய ஆய்வில் இந்த தகவலை வெளியிட்டுள்ளது. 267 கண்டுபிடிப்புகளில் 119 ஆஞ்சியோஸ்பெர்ம்கள்: 3 ஸ்டெரிடோபைட்டுகள், 5 பிரையோபைட்டுகள், 44 லைகன்கள், 57 பூஞ்சை, 21 பாசி மற்றும் 18 நுண்ணுயிர்கள் அடங்கும்.

- புதிய கண்டுபிடிப்புகளில் 9 புதிய பால்சம் இனங்களும் ஒரு காட்டு வாழை (Musa Pradhani) டார்ஜிலிங்கிலும், காட்டு ஜாமூன் (Syzygium Anamalaiamun) கோயம்புத்தூரிலும் மற்றும் (Selaginella Odeshana) ஒடிசாவிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் 114 புதிய மேக்ரோ மற்றும் 31 மைக்ரோ பூஞ்சை இனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

| கண்டுபிடிக்கப்பட்ட தாவரங்களின் விகிதம் | இடம் |
|---|---|
| 22% | மேற்கு தொடர்ச்சி மலை |
| 15% | மேற்கு இமய மலை |
| 14% | கிழக்கு இமய மலை |
| 12% | வடகிழக்கு எல்லைகள் |
| 10% | கிழக்கு கடற்கரை |
| 9% | மேற்கு கடற்கரை |
| 4% | கிழக்கு மலைத்தொடர் மற்றும் தெற்கு டெக்கான் |
| 3% | வடக்கு டெக்கான் |

வாய்மையே வெல்லும்



# 4.பொருளாதாரம்

## 4.1 புதிய பொருளாதாரக் கொள்கை மற்றும் அரசுத்துறை

### ஏப்ரல்–ஜூன் காலாண்டில் 20.1% பொருளாதார வளர்ச்சி

- நடப்பு 2021–22–ஆம் நிதியாண்டின் ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான முதலாவது காலாண்டில் நாட்டின் பொருளாதாரம் 20.1 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது.
- கரோனா தொற்று பரவல் காரணமாக கடந்த 2020–21–ஆம் நிதியாண்டின் முதல் காலாண்டில் ஜிடிபி மதிப்பு 24.4 சதவீதம் வீழ்ச்சி கண்டு ரூ.26.95 லட்சம் கோடியாக இருந்தது.
- நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் ஜிடிபி மதிப்பு ரூ.32.38 லட்சம் கோடியாக அதிகரித்துள்ளதாக தேசிய புள்ளியியல் அலுவலகம் (என்எஸ்ஓ வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மதிப்பு கடந்த நிதியாண்டின் முதல் காலாண்டுடன் ஒப்பிடுகையில் 20.1 சதவீதம் அதிகம் என்ற போதிலும், அதற்கு முந்தைய நிதியாண்டுடன் ஒப்பிடுகையில் குறைவாகும்.

### முக்கிய 8 துறைகளின் உற்பத்தி 9.4% அதிகரிப்பு

- நாட்டின் முக்கிய 8 துறைகளின் உற்பத்தி சென்ற ஜூலையில் 9.4 சதவீதம் அதிகரித்துள்ளதாக மத்திய அரசு வெளியிட்ட புள்ளிவிவரத்தில் தெரிவித்துள்ளது.
- இதுகுறித்து தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத்துறை வெளியிட்ட புள்ளிவிவரத்தில் கூறியுள்ளதாவது:
- முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021 ஜூலையில் நிலக்கரி, இயற்கை எரிவாயு, சுத்திகரிப்பு பொருள்கள், உரம், உருக்கு சிமெண்ட் மற்றும் மின் சார துறைகளின் உற்பத்தி கணிசமான அளவில் முன்னேறம் கண்டுள்ளன.
- அதேசமயம், கச்சா எண்ணெய் துறையின் உற்பத்தி மட்டும் சென்ற ஜூலையில் 3.2 சதவீதம் சரிவடைந்துள்ளது. கரோனா கட்டுப்பாடுகள் காரணமாக முக்கிய 8 துறைகளின் உற்பத்தியானது 2020 ஜூலையில் 7.6 சதவீதம் சரிவடைந்திருந்தது. இந்த நிலையில், கரோனா இரண்டாவது அலையை கட்டுப்படுத்த விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் படிப்படியாக விலக்கப்பட்டதையடுத்து 2021 ஜூலையில் முக்கிய 8 உள்கட்டமைப்பு துறைகளின் உற்பத்தி 9.3 சதவீதம் அதிகரித்துள்ளது.

### இந்தியப் பொருளாதாரம் வேகமெடுக்கிறது: மூடிஸ்

- கரோனா கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு வருவதையடுத்து இந்தியாவின் பொருளாதார நடவடிக்கைகள் வேகமெடுக்கத் தொடங்கியுள்ளதாக மூடிஸ் இன்வெஸ்டார்ஸ் சர்வீஸ் தெரிவித்துள்ளது.
- இதுகுறித்து மூடிஸ் நிறுவனம் மேலும் கூறியுள்ளதாவது: கரோனா கட்டுப்பாடுகள் படிப்படியாக விலக்கிக் கொள்ளப்பட்டு வருவதையடுத்து இந்தியாவில் பொருளாதார நடவடிக்கைகள் வேகமெடுக்கத் தொடங்கியுள்ளன. உலகின் பிற பகுதிகளிலும் கரோனா கட்டுப்பாடுகள் அடுத்தடுத்து தளர்த்தப்படும் நிலையில் இந்தியாவின் பொருளாதார நடவடிக்கை தற்போதைக்காட்டிலும் மேலும் பல மடங்கு வேகமெடுக்கத் தொடங்கும்.

## ஆகஸ்ட் மாத ஜிஎஸ்டி வருவாய் ரூ.1 லட்சம் கோடியைக் கடந்தது

- ஆகஸ்ட் மாதம் வசூலிக்கப்பட்ட மொத்த ஜிஎஸ்டி வருவாய் ரூ.1,12,020 கோடியாக இருந்தது. இதன் மூலம் தொடர்ந்து இரண்டாவது மாதமாக ஜிஎஸ்டி வசூல் ரூ.1 லட்சம் கோடியைக் கடந்துள்ளது.
- 2021, ஆகஸ்ட் மாத ஜிஎஸ்டி வசூலில், மத்திய ஜிஎஸ்டி ரூ.20,522 கோடி, மாநில ஜிஎஸ்டி ரூ.26,605 கோடி, ஒருங்கிணைந்த ஜிஎஸ்டி ரூ.56,247 கோடி (இறக்குமதி பொருள்கள் மீது வசூலிக்கப்பட்ட ரூ.26,884 கோடி உள்பட) மற்றும் மேல்வரி (செஸ்) ரூ.8,646 கொடி (இறக்குமதி பொருள்கள் மீது வசூலிக்கப்பட்ட ரூ.646 கோடி உள்பட).
- ஒருங்கிணைந்த ஜிஎஸ்டியிலிருந்து மத்திய ஜிஎஸ்டிக்கு ரூ.23,043 கோடியும், மாநில ஜிஎஸ்டி"க்கு ரூ.19,139 கோடியும் மத்திய அரசு வழக்கம் போல் வழங்கிவிட்டது. மேலும், ஒருங்கிணைந்த ஜிஎஸ்டி தற்காலிக தீர்வாக மத்திய அரசு மற்றும் மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் இடையே 50:50 என்ற விகிதத்தில் ரூ.24,000 கோடியை மத்திய அரசு வழங்கியுள்ளது.

## நாட்டின் ஏற்றுமதி 3,314 கோடி டாலர்

- நாட்டின் ஏற்றுமதி கடந்த ஆகஸ்ட் மாதத்தில் 3,314 கோடி டாலராக (இந்திய மதிப்பில் சுமார் ரூ.2.48 லட்சம் கோடி) இருந்தது என வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- இதுகுறித்து அந்த அமைச்சகம் வெளியிட்ட தற்காலிக புள்ளிவிவரத்தில் கூறியுள்ளதாவது:
- இந்தியாவின் ஏற்றுமதி கடந்த ஆகஸ்ட் மாதத்தில் 3,314 கோடி டாலராக அதிகரித்துள்ளது. இது, 2020 ஆகஸ்ட் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதியான 2,283 கோடி டாலருடன் ஒப்பிடும்போது 45.17 சதவீதம் அதிகமாகும். இதே காலகட்டத்தில் நாட்டின் இறக்குமதி 3,103 கோடி டாலரிலிருந்து 51.47 சதவீதம் அதிகரித்து 4,701 கோடி டாலரைத் தொட்டது.
- 2021 ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரையிலுமான 5 மாத காலகட்டத்தில் நாட்டின் ஏற்றுமதியானது 16,367 கோடி டாலரை (ரூ.12.27 லட்சம் கோடி) எட்டியுள்ளது. கடந்த 2020–இல் இதே காலகட்ட ஏற்றுமதியான 9,805 கோடி டாலருடன் ஒப்பிடுகையில் இது 66.92 சதவீதம் அதிகம் என்பது நினைவுகூரத்தக்கது.
- நடப்பு நிதியாண்டின் ஏப்ரல்–ஆகஸ்ட் காலகட்டத்தில் நாட்டின் இறக்குமதியும் 81.75 சதவீதம் அதிகரித்து 21,954 கோடி டாலரைத் தொட்டது. 2021 ஆகஸ்ட் மாதத்தில் நாட்டின் வர்த்தக பற்றாக்குறையானது 1,387 கோடி டாலர் என்ற அளவில் இருந்தது. இது, 2020 ஆகஸ்டில் 820 கோடி டாலராக காணப்பட்டது என வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

## புதிய வளர்ச்சி வங்கியின் – புதிய உறுப்பினர்கள்

- ஐக்கிய அரபு அமீரகம் உருகுவே, வங்கதேசம் போன்ற நாடுகள் புதிய வளர்ச்சி வங்கியின் உறுப்பினர்களாக இணைக்கப்பட்டுள்ளது.

**புதிய வளர்ச்சி வங்கி:**

- துவக்கம் – 2015, பிரிக்ஸ் நாடுகள் அமைப்பால் துவங்கப்பட்டது.
- தலைமையிடம் – சாங்காய், சீனா.

## 9.5% பொருளாதார வளர்ச்சி சாத்தியமே: ரிசர்வ் வங்கி நம்பிக்கை

- நடப்பு நிதியாண்டில் 9.5 சதவீத பொருளாதார வளர்ச்சியை எட்டுவது என்பது சாத்தியமான நடவடிக்கையே என ரிசர்வ் வங்கியின் ஆளுநர் சக்திகாந்த தாஸ் நம்பிக்கை தெரிவித்தார்.

## 17 மாநிலங்களுக்கு வருவாய் பற்றாக்குறை மானியமாக ரூ.9,871 கோடி விடுவிப்பு

- மத்திய நிதி அமைச்சகம் நிதிப் பகிர்வுக்குப் பிந்தைய வருவாய்ப் பற்றாக்குறை மானியத்தின் 6–ஆவது மாத தவணைத் தொகையாக 17 மாநிலங்களுக்கு ரூ.9,871.00 கோடியை விடுவித்துள்ளது. இதில் தமிழகத்துக்கு ரூ.183.67 வழங்கப்பட்டுள்ளது.
- 15–ஆவது நிதி ஆணையம் ஐந்து ஆண்டுகளுக்கு (2021–26) வரி வருவாயில் ரூ.42.20 லட்சம் கோடியை மாநிலங்களுக்கு ஒதுக்கீடு செய்ய பரிந்துரை செய்துள்ளது.
- இதில் 10.33 லட்சம் கோடியை இதே ஐந்து ஆண்டுகளுக்கு மாநிலங்களின் வருவாய்ப் பற்றாக்குறை, உள்ளாட்சி, பேரிடர் போன்ற 13 வகைகளுக்கு மானியமாகக் கொடுக்கிறது.

## இந்திய தொழிலக உற்பத்தி 11.5% வளர்ச்சி

- சுரங்கம், மின் துறைகளின் செயல்பாடு சிறப்பான அளவில் மேம்பட்டதையடுத்து கடந்த ஜூலை மாதத்தில் இந்திய தொழிலக உற்பத்தி (ஐஐபி) 11.5 சதவீதமாக அதிகரித்துள்ளது.
- இதுகுறித்து தேசிய புள்ளியியல் அலுவலகம் (என்எஸ்ஓ) வெளியிட்ட புள்ளிவிவரத்தில் கூறியுள்ளதாவது:
- நடப்பாண்டு ஜூலை மாதத்தில் சுரங்க துறையின் உற்பத்தி 19.5 சதவீதமும், மின் உற்பத்தி துறையின் செயல்பாடு 11.1 சதவீதமும் முன்னேற்றம் கண்டுள்ளன. அதன் காரணமாக, ஜூலை மாதத்தில் இந்திய தொழிலக உற்பத்தியானது 11.5 சதவீதமாக அதிகரித்துள்ளது.
- இது, 2020 ஜூலையில் 10.5 சதவீதம் என்ற அளவில் வீழ்ச்சி கண்டிருந்தது.

## எரிப்பொருள் விலையேற்றத்தால் மொத்த விலை குறியீட்டின் பணவீக்கம் ஆகஸ்ட் மாதத்தில் 11.3% உயர்ந்துள்ளது

- மொத்த விற்பனை விலையின் பணவீக்கம் தொடர்ந்து ஐந்தாவது மாதமாக இரட்டை இலக்கத்தில் உள்ளது.
- சமையல் எரிவாயு, பெட்ரோல், டீசலின் பணவீக்கம் 48.1%, 61.5%, 50.7% உள்ளது.
- எரிப்பொருள், உணவு நீங்கலான மொத்த விற்பனை விலையின் பணவீக்கம் 11.1% தொட்டுள்ளது.
- ஒட்டுமொத்த மொத்த விற்பனையின் பணவீக்கம் ஜூலை மாதத்தில் 11.16% மே மாதத்தில் 13.11% இருந்தது.
- ஆகஸ்ட் மாதத்தில் மொத்த விற்பனை விலையின் பணவீக்கம் 1.04% உயர்ந்தது.

## இந்திய பொருளாதாரம்–2021ஆம் ஆண்டு 7.2% ரூ.2022இல்–6.7%வில் உயரும் என்று UNCTAD கணிப்பு

- United Nations conference on Trade and Development (UNCTAD) செப்டம்பர் 15 வெளியிட்ட அறிக்கையில் 2021 – 7.2%, 2022– 6.7%. இந்திய பொருளாதாரம் வளர்ச்சி அமையும்.
- 2020இல் இந்தியா பொருளாதாரம் 7% வீழ்ச்சி அடைந்தது.

## வாராக் கடன் வங்கி அமைக்க ரூ.30,600 கோடி ஒதுக்கீடு

- வங்கிகளில் உள்ள வாராக் கடன் அளவைக் குறைப்பதற்காக வாராக் கடன் வங்கி எனப்படும், தேசிய சொத்து மீட்டுருவாக்க நிறுவனம் (என்.ஏ.ஆர்.சி.எல்) அமைக்க ரூ.30,600 கோடியை ஒதுக்கீடு செய்வதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.
- தேசிய சொத்து மீட்டுருவாக்க நிறுவனத்தின் 51 சதவீத பங்குகள் பொதுத் துறை வங்கிகள் வசம் இருக்கும். இந்திய கடன் தீர்வு நிறுவனத்தை (ஐ.டி.ஆர்.சி.எல்) அமைப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது. அந்நிறுவனத்தில் பொதுத்துறைவங்கிகளும் அரசுக்குச் சொந்தமான நிதி நிறுவனங்களும் இணைந்து 49 சதவீத பங்குகளை வைத்திருக்கும்.

## இந்திய பொருளாதாரம் 7.2% வளர்ச்சியடையும்: ஐ.நா. அறிக்கை

- வர்த்தகம் மற்றும் மேம்பாட்டுக்கான ஐ.நா. கூட்டமைப்பு (யுஎன்சிடிஏடி) 2021 அறிக்கையில் அடுத்த ஆண்டு இந்த வளர்ச்சி குறையக்கூடும்.
- உலகப் பொருளாதாரம் 2020–இல் 3.5 சதவீத சரிவை சந்தித்ததற்கு பிறகு நடப்பாண்டில் 5.3 சதவீதமாக வளர்ச்சியை எட்டும் என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பெட்ரோல், டீசல் ஜிஎஸ்டி வரம்பில் இல்லை

- பெட்ரோல், டீசல், இயற்கை எரிவாயு உள்ளிட்ட பெட்ரோலிய பொருள்களை தற்போதைய சூழலில் சரக்கு–சேவை வரி (ஜிஎஸ்டி) வரம்புக்குள் கொண்டுவர வாய்ப்பில்லை என்று மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.
- ஜிஎஸ்டி கவுன்சிலின் 45–ஆவது கூட்டம், மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையில் லக்னௌ நகரில் நடைபெற்றது. கடந்த 2019–ஆம் ஆண்டு டிசம்பருக்குப் பிறகு முறையாக ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டம் நேரடியாக நடைபெற்றுள்ளது.
- கூட்டத்துக்குப் பிறகு அமைச்சர் நிர்மலா சீதாராமன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: கரோனா சிகிச்சையில் பயன்படுத்தப்படும் மருந்துப் பொருள்கள் மீதான ஜிஎஸ்டி குறைப்பு வரும் டிசம்பர் 31–ஆம் தேதி வரை நீட்டிக்கப்படுகிறது. கரோனா தொற்று சிகிச்சையில்

பயன்படாத அத்தியாவசிய மருந்துப் பொருள்கள் சிலவற்றின் மீது விதிக்கப்பட்டு வந்த ஜிஎஸ்டி ரத்து செய்யப்படுகிறது. அதன்படி, ரூ.16 கோடி மதிப்பிலான ஜோல்ங் ஜெல்ஸ்மா, வில்டேப்சோ ஆகிய மருந்துகளுக்கு ஜிஎஸ்டி–யில் இருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.

- இதோலிஜுமாப், கேசிரிவிமாப், 2–டி–ஜி, ஃபேவிபிராவிர் உள்ளிட்ட 7 மருந்துப் பொருள்கள் மீது விதிக்கப்பட்டு வந்த ஜிஎஸ்டி 12 சதவீதத்தில் இருந்து 5 சதவீதமாகக் குறைக்கப்படுகிறது. புற்றுநோய் சிகிச்சையில் பயன்படும் சில மருந்துகளுக்கான ஜிஎஸ்டியும் 5 சதவீதமாகக் குறைக்கப்படுகிறது. இந்த ஜிஎஸ்டி குறைப்பு வரும் டிசம்பர் 31–ஆம் தேதி வரை அமலில் இருக்கும்.

GST – சரக்கு மற்றும் சேவை வரி

- 101 வது அரசியல் அமைப்பு திருத்த சட்டம் மூலம் கொண்டுவரப்பட்டது ,2017, ஜூலை 1 ஆம் நாள் நடைமுறைக்கு வந்தது. அரசியலமைப்பு விதி எண் 279(A) இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஆசிய மேம்பாட்டு வங்கி (ADB) (2021–22)இல் இந்தியாவின் வளர்ச்சி 10% இருக்கும் என கணித்துள்ளது

- இந்தியாவின் வளர்ச்சி (2021) இல் 11% சதவீதமாக இருக்கும் என்று இதற்கு முன் கணித்திருந்தது.
- ADB தலைமையகம் – Mandaluyong, பிலிப்பைன்ஸ்
- தலைவர் – மசாட்சுகு அசகாவா (Masatsugu Asakawa)
- உருவாக்கம் – 19 டிசம்பர் 1966.
- உறுப்பினர்கள் – 68 நாடுகள்

## பங்குச் சந்தையில் அதிரடி ஏற்றம் சென்செக்ஸ் 8 மாதங்களில் 10,000 புள்ளிகள் உயர்வு

- கடந்த ஜனவரியில் 50,000 புள்ளிகள் என்ற நிலையில் இருந்த சென்செக்ஸ் குறியீட்டெண் 8 மாதங்களில் 60,000 புள்ளிகளை எட்டியுள்ளது.
- இந்நிலையில் கடந்த 2021 ஜனவரி 21ம் தேதி சென்செக்ஸ் குறியீட்டெண் 50,000 புள்ளிகளை முதன்முறையாக எட்டியது. அதன்பிறகு எட்டே மாதங்களில் 60,000 புள்ளிகளைக் கடந்துள்ளது. பங்குச் சந்தை இந்த ஆண்டில் மட்டும் கிட்டதட்ட 25 சதவீதம் ஏற்றம் கண்டுள்ளது.

## ஜிஎஸ்டி கவுன்சில் சீர்திருத்தக் குழுவில் பழனிவேல் தியாகராஜன்

- ஜிஎஸ்டி கவுன்சிலின் சீர்திருத்தக் குழு உறுப்பினராக தமிழக நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் நியமிக்கப்பட்டுள்ளார்.
- இணையவழியில் ஜிஎஸ்டி வசூல் செய்வதில் உள்ள சிக்கல்களைக் களைவதற்கு சீர்திருத்தக் குழு அமைக்கப்படுகிறது.
- இக்குழுவின் அமைப்பாளராக மகாராஷ்டிர துணை முதல்வர் அஜித் பவார் நியமிக்கப்பட்டுள்ளார்.

## 'உலகளாவிய செமிகண்டக்டர் சந்தை 17.3% வளர்ச்சி காணும்"

- உலகளாவிய செமிகண்டக்டர் சந்தை நடப்பாண்டில் 17.3 சதவீத வளர்ச்சியை காணும் என ஐடிசி ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

## இந்திய பொருளாதாரம் இரட்டை இலக்கு வளர்ச்சி அடையும்

- இந்திய பொருளாதாரம் இரட்டை இலக்கு வளர்ச்சி அடையும் என முதன்மை பொருளாதார ஆலோசகர் சஞ்சீவ் சன்யல் தெரிவித்துள்ளார்
- பொது முடக்கத்தால் புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. $60 பில்லியன் டாலர் மதிப்பிலான நிதியுதவி கிராம பொருளாதாரம் மற்றும் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் வளர்ச்சிக்காக செலவிடப்பட்டுள்ளது என்று நிதி அமைச்சர் தெரிவித்தார்.
- மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இத்தொகை 13% ஆகும்.

## தங்கப் பரிமாற்றங்களுக்கான விதிமுறைகளை தெளிவுப்படுத்தியது இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம் (SEBI)

- தங்கப் பரிமாற்றத்திற்கான கட்டமைப்பிற்கான ஒப்புதல் அளித்தது SEBI. இதன் மூலம் வர்த்தகத்தில் தங்க பரிமாற்றம் அமைய வழி செய்துள்ளது. SEBI வர்த்தகம் மின்னணு தங்க ரசீதுகள் (Electronics Gold Receipts (EGR)) மூலம் நடைபெறும். மின்னணு தங்க ரசீதுகள் (EGR) மூலம் வர்த்தகம் நடைபெறும்.

இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம் (SEBI)

- தொடக்கம் – 1992
- தலைமையகம் – மும்பை
- செயலர் – அஜய் தியாகி

## இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் ரூ.43 லட்சம் கோடியாக அதிகரிப்பு

- இந்தியாவின் வெளிநாட்டுக்கடன் நடப்பாண்டு மார்ச் இறுதி நிலவரப்படி ரூ.43 லட்சம் கோடியாக அதிகரித்துள்ளது.
- இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் நடப்பு 2021–ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதி நிலவரப்படி 57000 கோடி டாலராக (இந்திய மதிப்பில் சுமார் ரூ.43 லட்சம் கோடி) அதிகரித்துள்ளது.

## அடுத்த 10 ஆண்டுகளில் இந்திய பொருளாதாரம் 7 சதவீதத்திற்கும் அதிகமான வளர்ச்சியை அடையும்

- அடுத்த 10 ஆண்டுகளில் இந்திய பொருளாதாரம் 7 சதவீதத்திற்கும் அதிகமான வளர்ச்சியை அடையும் என தலைமை பொருளாதார ஆலோசக் கே.வி. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்
- ஜனவரி மாதம் வெளியிடப்பட்ட பொருளாதார ஆய்வில் (2020–21) நடப்பு ஆண்டின் உள்நாட்டு உற்பத்தி (GDP) வளர்ச்சி 11% இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

# 5.அறிவியல்



## 5.1 அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள்

### மேற்கு நைல் வைரஸ்

- கொசுக்கடி மூலம் பரவக் கூடிய மேற்கு நைல் வைரஸ் (West Nile Virus) வரும் பருவத்தில் அதிகம் பரவ வாய்ப்பிருப்பதாக ரஷ்ய விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.
- இந்த வைரஸ் நரம்புகள் தொடர்பான பாதிப்பை மனிதர்களுக்கு ஏற்படுத்துகிறது.

### 'U Breath life" உலகின் முதல் தாவரங்கள் அடிப்படையிலான காற்று தூய்மைப்படுத்தி

- ரோபார் இந்திய தொழில்நுட்ப நிறுவன விஞ்ஞானிகள் மற்றும் டெல்லி பல்கலைக்கழகம் இணைந்து தாவரங்கள் அடிப்படையிலான உலகின் முதல் காற்று தூய்மைப்படுத்தியான 'U Breath lite" என்ற அமைப்பை வெளியிட்டுள்ளது.

### நிலவை 9,000 முறை சுற்றிவந்துள்ள "சந்திராயன்–2"

- நிலவை ஆய்வு செய்வதற்காக இந்தியா சார்பில் அனுப்பப்பட்ட 'சந்திரயான்–2' விண்கலம், நிலவை 9000–க்கும் அதிகமான முறை சுற்றிவந்துள்ளது என்று இந்திய விண்வெளி ஆய்வு மைய (இஸ்ரோ) தலைவர் கே.சிவன் கூறினார்.
- நிலவை சுற்றிவந்து ஆய்வு செய்துவரும் சந்திரயான்–2 வெற்றிகரமாக இரண்டு ஆண்டுகளை நிறைவு செய்வதை குறிக்கும் வகையில் 'நிலவு அறிவியல் பயிலரங்கம் 2021' என்ற தலைப்பிலான இரண்டு நாள் பயிலரங்கு இந்திய விண்வெளி ஆய்வு மையம் (இஸ்ரோ) சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பெங்களூரில் நடைபெற்ற பயிலரங்கு தொடக்க விழாவில் பங்கேற்ற இஸ்ரோ தலைவர் கே.சிவன் பேசியதாவது:
- சந்திரயான்–2 விண்கலம் நிலவிலிருந்து 100 கி.மீ. தொலைவிலிருந்தபடி சுற்றிவந்து, தானியங்கி உணர்தல் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் நிலவின் பரப்பை ஆய்வு செய்து தகவல்களை அனுப்பி வருகிறது. விண்கலம் நிலவை இதுவரை 9,000–க்கும் அதிகமான முறை சுற்றிவந்துள்ளது. விண்கலம் அளிக்கும் தகவல்கள் மிகுந்த ஊக்கமளிக்கும் வகையில் உள்ளன என்று கூறினார்.

### நிலவின் பரப்பில் சந்திராயன்–2 புதிய கண்டுபிடிப்புகள்

- நிலவை ஆய்வு செய்து வரும் 'சந்திரயான்–2' விண்கலம் பல புதிய விஷயங்களைக் கண்டறிந்து, தகவல் அளித்து வருவதாக இந்திய விண்வெளி ஆய்வு மையம் (இஸ்ரோ) தெரிவித்துள்ளது.
- நிலவின் பரப்பில் குரோமியம், மாங்கனீஸ் ஆகிய தாதுக்கள் படிமங்களாக இருப்பதை சந்திரயான்–2 கண்டறிந்திருப்பதோடு, நீரேற்றம் மற்றும் பனிக்கட்டி வடிவில் நீர் இருப்பதற்கான தெளிவான அறிகுறிகளையும் கண்டறிந்து அனுப்பியுள்ளது.
- நிலவை ஆய்வு செய்வதற்காக இஸ்ரோ அனுப்பிய இந்த விண்கலம் இரண்டு ஆண்டுகளாக சிறப்பான முறையில் ஆய்வுப் பணியை மேற்கொண்டு வருகிறது. இதனைக் குறிக்கும் வகையில், 'நிலவு அறிவியல் பயிலரங்கம் 2021' என்ற தலைப்பிலான இரண்டு நாள் பயிலரங்கு இஸ்ரோ சார்பில் பெங்களூரு தலைமை அலுவலகத்தில் கடந்த வாரம் நடத்தப்பட்டது.
- இந்தப்பயிலரங்கில், சந்திரயான்–2 விண்கலத்தின் 'ஆர்பிட்டர்' இதுவரை அனுப்பியுள்ள தகவல்கள், ஆய்வு முடிவுகள் உள்ளிட்டவை குறித்த புள்ளி விவரங்கள், அறிவியல் ஆவணங்களை இஸ்ரோ தலைவர் கே.சிவன் வெளியிட்டார்.

- அப்போது, 'விண்கலம் நிலவை இதுவரை 9,000–க்கும் அதிகமான முறை சுற்றிவந்துள்ளது. விண்கலம் அளிக்கும் தகவல்களும் ஆய்வு முடிவுகளும் மிகுந்த ஊக்கமளிக்கும் வகையில் உள்ளன' என்று சிவன் கூறினார். இந்த நிலையில், ஆர்பிட்டரின் கண்டுபிடிப்புகள் குறித்த மேலும் பல தகவல்களை இஸ்ரோ இப்போது வெளியிட்டுள்ளது.
- நிலவை 100 கி.மீ. தொலைவில் இருந்தபடி சுற்றிவந்து ஆய்வு செய்து வரும் ஆர்பிட்டர் பகுதியில் எக்ஸ்ரே ஸ்பெக்டோமீட்டர் (கிளாஸ்), சூரிய சக்தியில் இயங்கும் எக்ஸ்ரே கண்காணிப்பு கருவி (எக்ஸ்.எஸ்.எம்), சுற்றுச்சூழல் ஆய்வு தொகுப்பு கருவி, ரேடார் கருவி, படம் பிடிக்கும் அகச் சிவப்பு ஸ்பெக்ட்ரோமீட்டர் (ஐஐஆர்எஸ்), டெரய்ன் படம்பிடிக்கும் கேமரா (டிஎம்சி2), மிகத் தெளிவாக படம்பிடிக்கும் உயர் தரத்துடன் கூடிய கேமரா (ஓஹெச்ஆர்சி), இரட்டை அதிர்வெண் ரேடியோ கருவி ஆகிய 8 விஞ்ஞான கருவிகள் இடம்பெற்றுள்ளன.

## இஸ்ரோவுடன் இணையும் முதல் நிறுவனம்

- ஹைதராபாத்தை சேர்ந்த ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ் நிறுவனம் இஸ்ரோவுடன் இணையும் முதல் தனியார் நிறுவனம் என்ற பெருமையை பெற்றுள்ளது.
- இஸ்ரோவின் தொழிற்நுட்பங்களை பயன்படுத்தி கொள்ளவும், விண்வெளி ஏவுதள வாகனங்களை சோதனை செய்யவும் இந்த நிறுவனம் உதவும்.
- சிறிய ரக செயற்கைக்கோள்களை செலுத்த விக்ரம் ரக ராக்கெட்டுகளை வடிவமைக்கிறது.
- முதல் ராக்கெட்டை (விக்ரம்–1) 2022 ஆம் ஆண்டு செலுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## பொதுமக்கள் 4 பேருடன் விண்வெளி சுற்றுலா

- அமெரிக்காவைச் சேர்ந்த 'ஸ்பேஸ் எக்ஸ்' நிறுவனம் பொதுமக்கள் 4 பேரை விண்வெளி ஃபால்கன் ராக்கெட் மூலம் விண்வெளிக்கு அனுப்பியது.
- உலகப் பெரும் கோடீஸ்வரரான எலான் மஸ்க்கின் 'ஸ்பேஸ் எக்ஸ் ' நிறுவனம் விண்வெளி சார்ந்த ஆய்வில் ஈடுபட்டு வருகிறது.
- ஃபுளோரிடாவின் கென்னடி விண்வெளி மையத்திலிருந்து இந்த ராக்கெட் செலுத்தப்பட்டது. புறப்பட்ட 12–ஆவது நிமிடத்தில் ராக்கெட்டிலிருந்து 'டிராகன்' எனப்படும் விண்கலம் தனியாகப் பிரிந்தது. பூமியிலிருந்து 160 கி.மீ. உயரத்தில் (சர்வதேச விண்வெளி நிலையத்துக்கும் அதிக உயரத்தில்) இந்த விண்கலம் பூமியின் சுற்று வட்டப் பாதையில் மூன்று நாள்கள் சுற்றி வரும். பின்னர், ஃபுளோரிடா கடலில் விண்கலம் தரையிறங்கும்.

## விண்வெளி ஆய்வு மையம் அமைக்கும் பணி 3 விண்வெளி வீரர்களை அடுத்த மாதம் விண்ணுக்கு அனுப்புகிறது சீனா

- சீனா விண்வெளியில் தனக்கென புதிதாக விண்வெளி ஆய்வு மையத்தை கட்டமைத்து வருகிறது. அடுத்த ஆண்டுக்குள் (2021) இந்த விண்வெளி நிலையத்தை முழுமையாக கட்டமைத்து பயன்பாட்டுக்கு கொண்டுவர சீனா திட்டமிட்டுள்ளது.
- 'தியான்ஹே' எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த விண்வெளி நிலையத்துக்கான மைய பகுதி கடந்த ஏப்ரல் மாதம் 29–ந்தேதி சுற்றுவட்டப்பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டது.
- இதையொட்டி விண்வெளி ஆய்வு மையத்தை கட்டமைப்பதற்கான உபகரணங்கள் மற்றும் விண்வெளி வீரர்களுக்கு தேவையான உணவு பொருட்கள் உள்ளிட்டவை 'தியான்சவ்–3' என்கிற சரக்கு விண்கலத்தில் விண்வெளிக்கு அனுப்பி வைக்கப்பட்டன.
- சீனாவின் தெற்கு பகுதியில் உள்ள ஹெனான் மாகாணத்தில் இருந்து லாங் மார்ச்–7 ராக்கெட் மூலம் விண்ணுக்கு அனுப்பப்பட்ட இந்த விண்கலம் புவி நீள்வட்ட பாதைக்குள் வெற்றிக்கரமாக நுழைந்ததாக சீன விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

## இதயநோய் ஆபத்தை முன்கூட்டியே கண்டறிய செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான செயலியை அறிமுகப்படுத்தியது அப்பலோ

- 10 வருடத்திற்கான தகவலை வைத்து, இந்த செயலி இதயநோய் பற்றிய முடிவை தெரிவிக்கும்.
- உணவுமுறை, மது மற்றும் புகைப்பழக்கம், குடும்ப வரலாறு, சுவாச விகிதம் முதலிய காரணிகளை கொண்டு இதய நோய்க்கான ஆபத்து சதவிதத்தை தெரிவிக்கிறது.

# 5.2 ஊடகம் மற்றும் தொலைதொடர்பு

## "Y–Break யோகா தளம்

- மத்திய அரசு பணிபுரிபவர்கள் மற்றும் மனஅழுத்தத்தில் உள்ளவர்களுக்காக 5 நிமிடம் சிறப்பாக பணியாற்றக்கூடிய Y–Break என்ற தளத்தை வெளியிட்டுள்ளார்.
- மொரார்ஜி தேசாய் யோகா நிறுவனத்தால் இந்த தளம் உருவாக்கப்பட்டுள்ளது.

## முறைசாரா தொழிலாளர்களுக்கான ஷரம் தளம்

- ஷரம் தளம் துவங்கப்பட்டதன் பிறகான குறுகிய கால இடைவெளியில் இருபத்தி ஒரு லட்சத்திற்கும் அதிகமான முறைசாரா தொழிலாளர்கள் இந்த தளத்தில் பதிவு செய்துள்ளதாக மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சக தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தடுப்பூசி விவரங்கள் அறிய புதிய செயலி

- கரோனா தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களின் விவரங்களை அறிய புதிய செயலியை கோவின் தொடங்க இருக்கிறது.
- இந்தியாவில் கரோனா தடுப்பூசி திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி கடந்த ஜனவரி 16–ஆம் தேதி தொடக்கிவைத்தார். இதுவரை 72 கோடிக்கும் மேற்பட்ட தடுப்பூசி டோஸ்கள் செலுத்தப்பட்டுள்ளன. தடுப்பூசி செலுத்தியதற்கான ஆதாரத்தை வழங்க, ஒவ்வொரு தனிநபருக்கும் கோவின் வலைதளம் ஏற்கெனவே எண்மய (டிஜிட்டல்) சான்றிதழ்களை வழங்கி வருகிறது.
- இந்தச் சான்றிதழை அறிதிறன்பேசிகள், மடிக்கணினி, டேப்லெட் அல்லது டிஜி லாக்கரில் சேமிக்க முடியும். தேவைப்படும்போது தடுப்பூசி செலுத்தியதற்கான ஆதாரமாக காட்ட முடியும். இந்தச் சான்றிதழ் தேவைப்படும் நுழைவிடங்களான வணிக வளாகங்கள், அலுவலக வளாகங்கள் மற்றும் பொது நிகழ்ச்சிகளில் இந்தச் சான்றிதழ்களை காகித வடிவிலும் மென்வடிவிலும் காண்பிக்கலாம்.

# 6 தினசரி தேசிய நிகழ்வு



## 3 தீர்மானங்களின் நீட்டிப்புக்கு ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் ஒப்புதல்

- இந்தியா தலைமையில் நடைபெற்ற ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தில் 3 தீர்மானங்களை நீட்டிப்பதற்கு அனுமதி வழங்கப்ப்பட்டது.
- ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் ஆகஸ்ட் மாதத்துக்கான தலைமைப் பொறுப்பை இந்தியா ஏற்றது. கடல்சார் பாதுகாப்பு, அமைதிப்படை, பயங்கரவாத எதிர்ப்பு ஆகிய தலைப்புகளில் முக்கியக் கூட்டங்களை இந்தியா நடத்தியது. இந்தியா தலைமையிலான கடைசி கூட்டம் நடைபெற்றது.
- அக்கூட்டத்துக்கு வெளியுறவுத் துறைச் செயலர் ஹர்ஷ்வர்தன் ஷ்ரிங்லா தலைமை வகித்தார். ஆப்கானிஸ்தான் விவகாரம் தொடர்பாக அக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும், 3 முக்கிய தீர்மானங்களுக்கான நீட்டிப்புக்கும் கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டது.
- லெபனானில் ஐ.நா. அமைதிப்படையை மேலும் ஓராண்டுக்கு நிறுத்திவைப்பதற்கான தீர்மானத்துக்குக் கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டது. அந்நாட்டில் உள்ள அமைதிப் படையில் 862 இந்திய வீரர்கள் பணியாற்றி வருகின்றனர்.
- ஆப்பிரிக்க நாடான மாலியில் அமைதியான சூழலை ஏற்படுத்தத் தடையாக இருப்போருக்கு விதிக்கப்பட்டுள்ள பயணத் தடையையும், அவர்களது சொத்துகள் முடக்க நடவடிக்கையையும் 2022-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31-ஆம் தேதி வரை நீட்டிப்பதற்கான தீர்மானத்துக்கும் அனுமதி அளிக்கப்பட்டது.

## இஸ்கான் நிறுவனர் நினைவு நாணயம்: பிரதமர் வெளியீடு

- அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தை (இஸ்கான்) நிறுவிய ஸ்ரீல பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதாவின் 125-ஆவது பிறந்த நாளை முன்னிட்டு நினைவு நாணயத்தை பிரதமர் நரேந்திர மோடி (செப்டம்பர் 1) வெளியிடுகிறார்.

## பஞ்சமி நிலங்கள்

- பஞ்சமி நிலங்கள் மீட்கப்பட்டு உரியவரிடத்தில் ஒப்படைக்கப்படும் என்று சட்டசபையில் K.K.S.S.R. ராமச்சந்திரன் (வருவாய் அமைச்சர்) தெரிவித்தள்ளார்.

**பஞ்சமி நிலம்:**

- ஆங்கிலேய ஆட்சி காலத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நிலம் வழங்கும் நோக்கத்தோடு 1892ல் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1991–1996 வரையிலான காலகட்டத்தில் இந்த நிலங்களை மீட்க சிறப்பு ஆணையம் ஏற்படுத்தப்பட்டது. 2011ல் இந்த அமைப்பிற்கு ந.மருதமுத்து தலைமையேற்றார்.

## அடல் ஓய்வூதியத் திட்டத்தில் 3.30 கோடி பேர்

- இந்திய அரசின் உத்தரவாதம் பெற்ற அடல் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ், 2021–22 நிதியாண்டில் 28 லட்சத்துக்கும் அதிகமான புதிய கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளன. ஒட்டுமொத்த கணக்குகளின் எண்ணிக்கை 2021, ஆகஸ்ட் 25 நிலவரப்படி 3.30 கோடியைக் கடந்தள்ளது.
- தமிழ்நாட்டை பொருத்தவரை, இதுவரை மொத்தம் 24,55,438 பேர் அடல் ஓய்வூதியத் திட்டத்தில் தங்களை இணைத்துக் கொண்டுள்ளனர். மத்திய அரசு வெளியிட்டுள்ள தரவுகளின்படி, அதிகம் பேர் இணைந்துள்ள 11 மாநிலங்களில் தமிழகம் ஐந்தாம் இடம் பிடித்துள்ளது.
- உத்தர பிரதேசம் முதலிடத்திலும், பிகார், மேற்கு வங்கம் மற்றும் மகாராஷ்டிரம் ஆகியவை முறையே இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் இடங்களிலும் உள்ளன.
- 2021, ஆகஸ்ட் 25 வரையிலான மொத்த உறுப்பினர்களில் 78 சதவீதம் பேர் ரூ.1000 ஓய்வூதியத் திட்டத்தையும், 14 சதவீதம் பேர் ரூ.5,000 ஓய்வூதிய திட்டத்தையும் தேர்ந்தெடுத்துள்ளனர். மொத்த உறுப்பினர்களில் 44 சதவீதம் பெண்கள். சுமார் 44 சதவீதம் பேர் 18–25 வயதுடைய இளம் வயதினர் ஆவர்.

## மக்கள் அனைவருக்கும் இலவச குடிநீர் வழங்கும் இந்தியாவின் முதல் மாநிலம்: கோவா

- கோவா செப்டம்பர் 1–2021 முதல் அனைத்து மக்களுக்கும் இலவச குடிநீர் வழங்கும் மாநிலமாக அறிவித்துள்ளது. அந்த மாநிலத்தில் அரசு வசூலிக்கும் குடிநீர் வரி ரத்து செய்யப்பட்டுள்ளது.

## ஸ்ரீநகரில் மிதக்கும் ஏடிஎம்

- ஜம்மு – காஷ்மீர் மாநிலம் ஸ்ரீநகரின் தால் ஏரியில் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா முதல் மிதக்கும் ஏடிஎம்–ஐ திறந்துள்ளது.

## காசநோய் இல்லாத இந்தியா மாநில அரசுகளுடன் மத்திய சுகாதார அமைச்சர் ஆலோசனை

- 2025–ஆம் ஆண்டுக்குள் காசநோய் இல்லாத இந்தியாவை உருவாக்குவது தொடர்பாக மாநிலங்கள், யூனியன் பிரதேச சுகாதார அமைச்சர்களுடன் மத்திய சுகாதார அமைச்சர் மன்சுக் மாண்டவியா ஆலோசனை நடத்தினார்.
- கடந்த ஆண்டுகளில் மேற்கொண்ட நடவடிக்கைகளின் பலன்கள் பற்றியும், 2025–ஆம் ஆண்டுக்குள் காசநோயை முற்றிலும் ஒழிக்கும் இயக்கத்திற்கு ஆதரவான தங்களது திட்டங்களையும் மாநில, யூனியன் பிரதேச பிரதிநிதிகள் எடுத்துரைத்தனர்.

## தேசிய பசுமைத் தீர்ப்பாயத்துக்கு தானாக முன்வந்து விசாரிக்கும் அதிகாரமில்லை

- தேசிய பசுமைத் தீர்ப்பாயத்துக்கு சுற்றுச்சூழல் தொடர்பான விவகாரங்களை தானாக முன்வந்து விசாரணைக்கு எடுக்கும் அதிகாரம் கிடையாது என்று உச்சநீதிமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- மகாராஷ்டிர மாநிலத்தில் திடக்கழிவு மேலாண்மை தொடர்பான விவகாரத்தை தானாக முன் வந்து விசாரித்த தேசிய பசுமைத் தீர்ப்பாயம், அதை சரிவர கையாளாத மாநகராட்சிக்கு ரூ. 5 கோடி அபராதம் விதித்து அண்மையில் உத்தரவு பிறப்பித்தது. இதனை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் ஏராளமான மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. அதில், பசுமைத் தீர்ப்பாயத்துக்கு, தானாக முன்வந்து விசாரணை நடத்தும் அதிகாரம் குறித்து கேள்வி எழுப்பப்பட்டிருந்தது.
- தேசியபசுமைத்பசுமைத்தீர்ப்பாயசட்டம்2010–இன் பிரிவு 19(1) விதியின்படி, பசுமைத் தீர்ப்பாயத்துக்கு தானாக முன்வந்து ஒரு விவகாரத்தை வழக்காக எடுத்து விசாரிக்கும் அதிகாரம் இல்லை. எனவே, ஒரு புகார் வருகின்றபோது, தனது அதிகாரத்துக்கு உள்பட்டுதான் தேசிய பசுமைத் தீர்ப்பாயம் விசாணையை மேற்கொள்ள வேண்டும். மாறாக, எந்தவொரு விவகாரத்தையம் தானாக முன்வந்து விசாரிக்க முடியாது என்று கூறினார்.

## பசுமைத் திட்டங்களில் முதலீடு: இந்தியா–பிரிட்டன் ஒப்பந்தம்

- இந்தியாவின் பசுமைத் திட்டங்களில் 120 கோடிடாலர் (சுமார் ரூ.8,760 கோடி) முதலீடு செய்வதற்கான ஒப்பந்தம் இந்தியாவுக்கும் பிரிட்டனுக்கும் மேற்கொள்ளப்பட்டது.
- இதுகுறித்து பிடிஐ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளதாவது: இந்தியாவுக்கும் பிரிட்டனுக்கும் இடையிலான 11–ஆவது பொருளாதார மற்றும் நிதிப் பேச்சுவார்த்தை நடைபெற்றது. காணொலி முறையில் நடைபெற்ற இந்தப் பேச்சுவார்த்தையில், நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனும் பிரிட்டன் நிதியமைச்சர் ரிஷி சுனக்கும் பங்கேற்றனர்.

## 75,000 ஹெக்டேரில் மூலிகை சாகுபடி ஆயுஷ் அமைச்சகம் திட்டம்

- நாடு சுதந்திரமடைந்து 75 ஆண்டுகள் ஆனதை கொண்டாடும் அம்ருத் மஹோத்ஸவத்தின் ஒரு பகுதியாக இந்தியாவில் மருத்துவ தாவரங்கள் (மூலிகைகள்) பயிரிடுவதை ஊக்குவிப்பதற்காக தேசிய திட்டத்தை ஆயுஷ் அமைச்சகத்தின் தேசிய மருத்துவ தாவரங்கள் வாரியம் தொடங்கியுள்ளது. இதன்படி நாடு முழுவதும் அடுத்த ஓராண்டில் 75,000 ஹெக்டேர் நிலப்பரப்பில் மூலிகைகள் பயிரிடப்படும். உத்தர பிரதேசத்தின் சஹாரன்பூர் மற்றும் மகாராஷ்டிரத்தின் புணேயில் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.
- ஒய் பிரேக் செயலி, நோய்களைத் தடுக்கும் ஆயுஷ் மருந்துகளின் விநியோகம், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான தொடர் கருத்தரங்கங்கள் உள்ளிட்ட நிகழ்ச்சிகளும் அம்ருத் மஹோத்ஸவத்தின் ஒரு பகுதியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தொடர் கருத்தரங்குகள் மற்றும் ஒய் பிரேக் செயலி குறித்த வலைதள கருத்தரங்கு செப்டம்பர் 5–ஆம் தேதி நடைபெறும்.

## கல்வித் திருவிழா

- மத்திய கல்வி அமைச்சகம் சார்பில், ஆசிரியர்களின் மதிப்புமிக்க பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையிலும், புதிய கல்விக் கொள்கை 2020–ஐ முன்னெடுத்துச் செல்லும் வகையிலும் செப்டம்பர் 5 முதல் 17–ஆம் தேதி வரை கல்வித் திருவிழா கொண்டாடப்படவுள்ளது. இதன் ஒரு பகுதியாக, ஆசிரியர்களுக்கு தேசிய விருதை செப்டம்பர் 5–ஆம் தேதி குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் காணொலி முறையில் வழங்குகிறார்.

## சுயஉதவிக் குழுக்களுக்கான சாத் முயற்சி

- ஜம்மு–காஷ்மீர் மாநிலத்தின் துணைநிலை ஆளுநர் சுயஉதவி குழுக்களுக்கான திட்டங்களை செயல்படுத்த (Saath) சாத் என்ற அமைப்பை துவங்கியுள்ளார்.

## ஐஐடி கல்வி நிறுவனங்கள் சார்பில் நவம்பரில் ஆராய்ச்சி கண்காட்சி

- இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்கள் (ஐஐடி) சார்பில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு கண்காட்சி, வரும் நவம்பரில் நடைபெறும் என்று மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் அறிவித்தார்.
- நாடு முழுவதும் உள்ள ஐஐடி கல்வி நிறுவனங்களில் ஆராய்ச்சி கண்காட்சி நடத்துவதற்கான ஏற்பாடுகளைக் கவனிப்பதற்கு அமைக்கப்பட்டு குழுவினருடன் தர்மேந்திர பிரதான் காணொலி முறையில் ஆலோசனை நடத்தினார்.

## காலத்தின் சவால்களைக் கடந்து இந்தியா–ரஷியா நட்புறவு நீடிப்பு

- கிழக்கு பொருளாதார அமைப்பின் கூட்டம் ரஷியாவின் விளாடிவாஸ்டாக் நகரில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் பிரதமர் மோடி காணொலி வாயிலாக உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது:
- கரோனா தொற்று பரவல் காலத்தில் இந்தியாவும் ரஷியாவும் ஒருங்கிணைந்து பணியாற்றி வருகின்றன. கரோனா தடுப்பூசித் திட்டத்திலும் இரு நாடுகளின் ஒத்துழைப்பு தொடர்ந்து வருகிறது. காலத்தின் சவால்களைக் கடந்து இரு நாடுகளுக்கும் இடையேயான நட்புறவு நிலைபெற்று வருகிறது.
- கடல்வழித் தொடர்பு: இந்தியாவின் ககன்யான் விண்வெளித் திட்டத்தில் ரஷியா ஒத்துழைப்பு நல்கி வருகிறது. வடக்கு கடல் பகுதி வழியாக சர்வதேச வர்த்தகப் போக்குவரத்தை மேற்கொள்வதிலும் இரு நாடுகளும் ஒருங்கிணைந்து செயல்படவுள்ளன.
- ஒத்துழைப்புக்கான சாத்தியக்கூறுகள்: கரோனா பரவலால் பல்வேறு கட்டுப்பாடுகள் காணப்பட்டாலும் இரு நாடுகளுக்கும் இடையேயான தொழில் ரீதியிலான தொடர்பு வலுவடைந்துள்ளது.

## 'கோர்பிவேக்ஸ்" தடுப்பூசி: சிறார்களுக்கு செலுத்திப் பரிசோதிக்க அனுமதி

- பயலாஜிகல்–இ நிறுவனம் தயாரித்துள்ள 'கோர்பிவேக்ஸ்' கரோனா தடுப்பூசியை 5 வயதைக் கடந்த சிறார்களுக்கு செலுத்தி 2–ஆம், 3–ஆம் கட்ட பரிசோதனைகளை நடத்துவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.
- கோர்பிவேக்ஸ் கரோனா தடுப்பூசியை பயலாஜிகல்–இ நிறுவனம், மத்திய உயிரி தொழில்நுட்பத் துறையுடன் இணைந்து தயாரித்துள்ளது. அத்தடுப்பூசியை 5 வயதைக் கடந்த சிறார்கள் மீது செலுத்தி 2–ஆம், 3–ஆம் கட்ட பரிசோதனைகளை மேற்கொள்ள இந்திய மருந்து தரக் கட்டுப்பாட்டு இயக்குநரகம் (டிசிஜிஐ) ஒப்புதல் அளித்துள்ளதாக மத்திய உயிரி தொழில்நுட்பத்துறை தெரிவித்துள்ளது.
- மேலும், 18 வயதைக் கடந்தோருக்கு செலுத்தி அத்தடுப்பூசியின் 3–ஆம் கட்ட பரிசோதனையை மேற்கொள்ளவும் டிசிஜிஐ ஒப்புதல் வழங்கியுள்ளது.

## பிராமணி நதி

- ஒடிசா மாநிலத்தில் பாயும் பிராமணி நதியின் நன்னீர் பயன்பாட்டின் அளவு அதிகரிக்கப்பட்டு பிட்டர்கனிகா ராம்சார் ஈர நிரப்பகுதியில் சென்று சேரும் நீரின் அளவு குறைக்கப்படுமாயின் பிட்டர்கனிகா ஈரநிலங்களில் உள்ள மாங்குரோவ் பகுதிகள் அதிகம் பாதிப்புக்கு உள்ளாகும் என அறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.

## ஓராங் தேசிய பூங்கா பெயரில் ராஜிவ்காந்தி பெயர் விடுவிப்பு

- அசாம் மாநிலத்தில் உள்ள ஓராங் தேசிய பூங்காவின் பெயரில் உள்ள ராஜிவ் காந்தி தேசிய பூங்கா பெயரில் உள்ள ராஜிவ் காந்தி பெயர் விடுவிக்கப்பட்டுள்ளது.

## பஞ்சு, கழிவுப் பஞ்சு மீதான வரி ரத்து

- பஞ்சு, கழிவுப் பஞ்சு மீதான ஒரு சதவீத வரி ரத்து செய்யப்படுவதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். சட்டப் பேரவையில் விதி 110–இன் கீழ் அவர் கீழ் அவர் படித்துளித்த அறிக்கை :
- இந்தியத் துணித் தொழில் வணிகத்தில் மூன்றில் ஒரு பங்கு தமிழ்நாடு துணித் தொழில் வகிக்கிறது. மாநிலத்திலுள்ள 1,570 நூற்பாலைகளின் மூலமாக நூற்கப்படும் நூலின் அளவு, நாட்டின் மொத்த நூற்புத் திறனில் 45 சதவீதமாகும். மாநிலத்தில் நூற்பாலைகளுக்குத் தேவையான பஞ்சின் அளவில் 95 சதவீதம் பிற மாநிலங்களில் இருந்து தருவிக்கப்படுகிறது.
- ஒரு சதவீதம் வரி: தமிழ்நாடு வேளாண் பொருள்கள் விற்பனைச் சட்டத்தின்படி, பஞ்சு மற்றும் கழிவுப் பஞ்சின் விற்பனை மதிப்பு மீது சந்தை நுழைவு வரியாக ஒரு சதவீதம் விதிக்கப்படுகிறது. இந்தச் சட்டத்தின்படி, பருத்திப் பொதி, பஞ்சு மற்றும் கழிவுப் பஞ்சு ஆகியன வேளாண் பொருள்களாகக் கருதப்படுகின்றன. இந்தப் பொருள்களை சந்தைப் பகுதியில் கொள்முதல் அல்லது விற்பனை செய்யும் போது ஒரு சதவீதம் வரி விதிக்கப்படுகிறது.
- சந்தை நுழைவு வரி என்பது, பருத்திப் பொதிகள் மீது மட்டுமே விதிக்கப்பட வேண்டும். மாறாக. பஞ்சு, கழிவுப் பஞ்சு போன்ற உற்பத்திப் பொருள்கள் மீது ஒரு சதவீதம் சந்தை நுழைவு வரி விதிக்கப்படுகிறது.

## முழுமையாக காப்பீடு ஒய்வூதியம் பெற்ற கிராமங்கள் அறிவிப்பு

- மத்திய அரசு திட்டங்களில் முழுமையாக காப்பீடு மற்றும் ஒய்வூதியம் பெற்றுள்ள கிராமங்களாக மதுரை மாவட்டத்தின் வாடிப்பட்டி அருகே உள்ள சின்னமநாயக்கன்பட்டி, தும்மிச்சம்பட்டி ஆகிய கிராமங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.
- மத்திய அரசின் பல்வேறு சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் இக் கிராமத்தில் உள்ளவர்களுக்கு காப்பீடு செய்யப்பட்டிகுக்கிறது. மேலும் தகுதியுள்ள அனைத்து நபர்களுக்கும் ஒய்வூதியம் வழங்கப்படுகிறது.
- யூனியன் பேங்க் ஆப் இந்தியா வங்கி இத் திட்டத்தை இவ்விரு கிராமங்களிலும் செயல்படுத்தியிருக்கிறது. வாடிப்பட்டி அருகே சின்னமநாயக்கன்பட்டியில் நடைபெற்ற விழாவில், இரு கிராமங்களையும் முழுமையாக ஒய்வூதியம், காப்பீடு பெற்றுள்ள கிராமங்களாக மாவட்ட ஆட்சியர் எஸ். அனிஷ்சேகர் அறிவித்தார்.

## நாள்தோறும் 1.25 கோடி தடுப்பூசிகளை செலுத்தி இந்தியா சாதனை

- நாள்தோறும் 1.25 கோடி கரோனா தடுப்பூசி டோஸ்களை செலுத்தி இந்தியா சாதனை படைத்து வருவதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.
- ஹிமாசல பிரதேசத்தில் 18 வயதைக் கடந்த அனைத்து நபர்களுக்கும் குறைந்தபட்சம் ஒரு தவணை தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. அச்சாதனையைக் கொண்டாடும் வகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பிரதமர் மோடி காணொலி வாயிலாகக் கூறினார்.

## பிரதமர் மோடியின் செயல்பாடுகளுக்கு 70% பேர் ஆதரவு

- பிரதமர் நரேந்திர மோடியின் செயல்பாடுகளுக்கு 70 சதவீதம் பேர் ஆதரவளித்துள்ளதாக ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பட்டியலில் மற்ற சர்வதேச தலைவர்களை விஞ்சி பிரதமர் மோடி முன்னிலையில் உள்ளார்.
- அமெரிக்காவை அடிப்படையாகக் கொண்டு இயங்கி வரும் 'மார்னிங் கன்சல்ட்' என்ற சமூக வலைதளம் உலக அளவில் மக்களின் ஆதரவு பெற்ற பிரபல தலைவர்களின் பட்டியலை வெளியிட்டு வருகிறது. இந்த வலைதளத்தில் பிரபல தலைவர்களுக்கு மக்கள் அளிக்கும் ஆதரவுகள் உடனுக்குடன் பதிவேற்றம் செய்யப்பட்டு வாரந்தோறும் புதிய பட்டியலை வெளியிட்டு வருகிறது.
- அந்த வகையில் செப்டம்பர் 2 –ஆம் தேதி உலக அளவில் மக்களின் ஆதரவு பெற்ற தலைவர்களின் பட்டியலை அந்த வலைதளம் வெளியிட்டது. அந்த ஆய்வில் 70 சதவீத மக்களின் ஆதரவுடன் பிரதமர் மோடி முதலிடத்தில் உள்ளார்.
- அவருக்கு அடுத்த இடங்களில் மெக்ஸிகோ அதிபர் ஆண்ட்ரூஸ் மேனுவல் லோபஸ் ஒப்ரடார் (54 சதவீதம்), இத்தாலி பிரதமர் மரியோ திராகி (63 சதவீதம்), ஜெர்மனி பிரதமர் ஏஞ்சலா மெர்கெல் (52 சதவீதம்), அமெரிக்க அதிபர் ஜோ பைடன் (48 சதவீதம்), ஆஸ்திரேலியா பிரதமர் ஸ்காட் மோரிஸன் (48 சதவீதம்) ஆகியோர் உள்ளனர்.

## இம்மாத இறுதியில் பிரதமர் அமெரிக்கா பயணம்

- பிரதமர் நரேந்திர மோடி இந்த மாத இறுதியில் அமெரிக்கா செல்லவிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

- இது தொடர்பாக, தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்திருப்பதாவது: ஐ.நா. பொதுச் சபையின் 76–ஆவது கூட்டம், நியூயார்க்கில் வரும் 14–ஆம் தேதி தொடங்கி 30–ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் பிரதமர் மோடி உரையாற்றவுள்ளார்.
- இதைத் தொடர்ந்து, வாஷிங்டனில் 'க்வாட்' கூட்டமைப்பு நாடுகளின் தலைவர்கள் நேரடியாகப் பங்கேற்கும் மாநாட்டுக்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதுதவிர, அமெரிக்க அதிபர் ஜோ பைடனை பிரதமர் மோடி சந்திக்க திட்டமிட்டுள்ளார்.
- இந்த நிகழ்வுகளில் பங்கேற்பதற்காக, பிரதமர் மோடி, வரும் 22–ஆம் தேதியில் இருந்து 27–ஆம் தேதிக்குள் அமெரிக்கா செல்வதற்குத் திட்டமிட்டுள்ளார். 'க்வாட் கூட்டமைப்பின் உறுப்பு நாடுகளில் ஒன்றான ஜப்பானின் பிரதமர் யோஷிஹிடே சுகா பதவி விலகுவதாக அறிவித்திருப்பதால், க்வாட்' மாநாடு திட்டமிட்டபடி நடைபெறுமா என்பதில் சந்தேகம் நிலவுகிறது. இதுதொடர்பாக, மாநாட்டை நடத்தும் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் முடிவை அடுத்து, பிரதமர் மோடியின் பயணம் உறுதிசெய்யப்படும் என்று அந்தவட்டாரங்கள் தெரிவித்தன.

## இந்தியாவின் முதல் உயிரி செங்கல் கட்டிடம்

- வேளாண் கழிவுகளில் இருந்து உயிரி செங்கல் கட்டிடத்தை IIT ஹைதராபாத் துவங்கியுள்ளது.
- BUILD என்ற திட்டத்தின் கீழ் முதன்முதலாக இந்த உயிரி செங்கல் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

## 75 வெளிநாட்டு இந்திய தூதுரகங்களில் பழங்குடியினரின் தயாரிப்புப் பொருள்கள் மையம்

- சுதந்திர இந்தியாவின் 75–ஆவது ஆண்டையொட்டி, 75 இந்திய தூதரகங்களில், இந்திய பழங்குடியினரின் தயாரிப்புகள், கைவினைப் பொருள்கள் மையங்கள் திறக்கப்படுகின்றன. பழங்குடியினர் கூட்டுறவு சந்தை மேம்பாட்டுக் கூட்டமைப்பின் (டிரைஃபெட்) உதவியுடன் இந்த மையங்கள் வெளிநாட்டு தூதுரங்களில் ஏற்படுத்தப்படுவதாக மத்திய பழங்குடியினர் துறை தெரிவித்துள்ளது.
- முதலில் தாய்லாந்து தலைநகர் பாங்காக்கில் உள்ள இந்திய தூதுரகத்தில் இந்த மையத்தை இந்திய தூதரும் தமிழகத்தைச் சேர்ந்தவருமான சுசித்ரா துரை தொடக்கி வைத்துள்ளார்.
- முன்னாள் இந்திய தூதர் ஆர்.சுவாமிநாதன் முன்னிலையில் பழங்குடியினரின் டிரைஃபெட் கண்காட்சி மையம் திறக்கப்பட்டுள்ளது.
- இதுகுறித்து மத்திய பழங்குடியினர் துறை தெரிவித்துள்ளதாவது: தாய்லாந்தைத் தொடர்ந்து, அயர்லாந்து, கென்யா, இஸ்ரேல், அமெரிக்கா, கனடா, சிங்கப்பூர், கிரீஸ், துருக்கி உள்ளிட்ட 75 நாடுகளில் உள்ள இந்திய தூதரகங்கள், இந்திய அலுவலகங்களில் இந்த மையங்கள் ஏற்படுத்தப்படுகின்றன.

## பள்ளிகள் மூடப்பட்டு இருப்பதே மாணவர்களின் கல்வியை பாதிக்கும்

- ஸ்கூல் (SCHOOL) எனப்படும் பள்ளிக் குழந்தைகளின் ஆன்லைன் மற்றும் ஆஃப்லைன் கல்வி குறித்த ஆராய்ச்சியை பல்வேறு நிறுவனங்கள் மேற்கொண்டுள்ளது இந்த கணக்கீட்டில் இந்தியா முழுவதும் ஆன்லைன் வழியிலான கல்வியை கிராமப்புறங்களில் 37 சதவீதத்திற்கும் மேற்பட்ட மக்கள் பெறுகின்றனர் பள்ளிகளில் சென்று படிப்பதற்கு பெற்றோர்கள் பெருமளவு சம்மதம் தெரிவிக்கின்றனர் தொன்னூத்தி ஏழு (97%) சதவிகிதத்திற்கும் அதிகமான பெற்றோர்கள் பள்ளிகளை மறுபடியும் திறப்பதற்கு சம்மதம் தெரிவிக்கின்றனர் மாணவர்கள் ஆன்லைன் கல்வியின் மூலம் வீட்டிலிருந்தே கல்வி பெறுவது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே சரியாக போதும் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர் மற்ற நிலையில் அவர்கள் பள்ளிக்குச் சென்று கற்பதே சிறப்பாக அமையும் என ஸ்கூல் (SCHOOL) என்ற கணக்கீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நவீன தொழில்நுட்பங்களை ஆசிரியர்கள் அறிந்துகொள்ள வேண்டும்

- மாறிவரும் சூழலுக்கேற்ப நவீன தொழில்நுட்பங்களை ஆசிரியர்கள் அறிந்துகொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- ஆசிரியர்கள் தினத்தையொட்டி கல்வித் திருவிழாவை பிரதமர் மோடி தொடக்கிவைத்தார். அப்போது, இந்திய சைகை மொழி அகராதி (உலகளாவிய கற்றல் வடிவமைப்புக்கு ஏற்ப காது கேளாதோருக்கான ஆடியோ மற்றும் சைகை மொழியுடன் கூடிய விடியோ), ஒலிப் புத்தகங்கள் (பார்வையற்றவர்களுக்கான ஆடியோ புத்தகங்கள்), சிபிஎஸ்இ–யின் பள்ளி தர உறுதி

மற்றும் மதிப்பீட்டுக் கட்டமைப்பு, நிபுண் பாரத் மற்றும் வித்யாஞ்சலி இணையதளத்துக்கான நிதிஷிதா' ஆசிரியர் பயிற்சித் திட்டம் ஆகியவற்றை பிரதமர் மோடி தொடக்கிவைத்தார். அந்நிகழ்ச்சியில் காணொலி வாயிலாக அவர் உரையாற்றியதாவது:

## ஜவுளி உற்பத்தியை ஊக்குவிக்க ரூ.10,683 கோடி திட்டம்

- ஜவுளித் துறையில் ரூ.10,683 கோடி மதிப்பிலான உற்பத்தி சார்ந்த ஊக்கத்தொகை திட்டத்துக்கு (பிஎல்ஐ) பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.
- இந்தத் திட்டத்தால் தமிழகம் உள்ளிட்ட மாநிலங்களுக்கு பெரும் பயன் கிடைக்கும்.
- 'தற்சார்பு இந்தியா' என்ற தொலைநோக்குப் பார்வையை முன்னெடுத்துச் செல்லும் முயற்சியாக, உள்நாட்டு உற்பத்தியையும், ஏற்றுமதியையும் அதிகரிக்கும் நோக்கில் 13 முக்கியத் துறைகளில் உற்பத்தி சார்ந்த ஊக்கத்தொகை திட்டத்துக்கு (பிஎல்ஐ) மத்திய பட்ஜெட்டில் ரூ.1.97 லட்சம் கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.
- பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்ற பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில், நடப்பு ராபி மற்றும் காரீஃப் பருவத்தில் சாகுபடி செய்யப்படும் 23 பயிர்களின் குறைந்தபட்ச ஆதரவு விலையை உயர்த்த முடிவு செய்யப்பட்டது.
- விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்க, உற்பத்தி விலையைவிட 1.5 மடங்கு லாபம் கிடைக்கும் வகையில், குறைந்தபட்ச ஆதரவு விலையை நிர்ணயிக்க வேண்டும் என கடந்த 2018–19–ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது. அதன்படி, 2022–23–ஆம் ஆண்டில் ராபி பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.
- குறைந்தபட்ச ஆதரவு விலை உயர்வால், கோதுமை, எண்ணெய் வித்துக்கள், கடுகு சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு உற்பத்தி விலையைவிட 100 சதவீத லாபம், பருப்பு வகைகளுக்கு 74 முதல் 79 சதவீத லாபம், பார்லிக்கு 60 சதவீத லாபம், குங்குமப்பூவுக்கு 50 சதவீத லாபம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- மாற்றுப் பயிர்களை விளைவிக்க விவசாயிகளை ஊக்குவிக்கவும், சிறந்த தொழில்நுட்பங்கள் மற்றும் நடைமுறைகளைப் பின்பற்றவும், தேவை மற்றும் விநியோகத்துக்கு இடையேயான சமநிலையற்ற தன்மையைச் சரிசெய்யவும், எண்ணெய் வித்துக்கள், பருப்புகள் மற்றும் தினை வகைகளுக்கு ஆதரவாக குறைந்தபட்ச ஆதரவு விலையை மாற்றியமைக்க கடந்த சில ஆண்டுகளாக ஒருங்கிணைந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

## 'சன்சத்" தொலைக்காட்சியை செப்டமட்பர் 15–இல் தொடக்கி வைக்கிறார் பிரதமர் மோடி

- நாடாளுமன்ற நடவடிக்கைகளை நேரடி ஒளிபரப்பு செய்வதற்கான 'சன்சத்' தொலைக்காட்சியை வரும் 15–ஆம் தேதி பிரதமர் நரேந்திர மோடி தொடக்கி வைக்கிறார்.
- கூட்டத்தொடர் நடைபெறும்போது மக்களவை நடவடிக்கைகளை 'லோக் சபா' தொலைக்காட்சியும், மாநிலங்களவை நடவடிக்கைகளை 'ராஜ்ய சபா' தொலைக்காட்சியும் நேரடியாக ஒளிபரப்பி வருகின்றன. அத்தொலைக்காட்சிகளை ஒன்றாக இணைத்து 'சன்சத்' என்ற பெயரில் ஒரே தொலைக்காட்சியாக மாற்ற மத்திய அரசு முடிவெடுத்தது.
- சன்சத் தொலைக்காட்சியை அதிகாரபூர்வமாகத் தொடக்கி வைப்பதற்கான நிகழ்ச்சி வரும் 15–ஆம் தேதி நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெறுகிறது. அதில் பிரதமர் மோடி பங்கேற்று தொலைக்காட்சியைத் தொடக்கி வைக்கிறார். குடியரசு துணைத் தலைவரும் மாநிலங்களவைத் தலைவருமான வெங்கையா நாயுடு, மக்களவைத் தலைவர் ஓம்பிர்லா ஆகியோரும் நிகழ்ச்சியில் கலந்து கொள்கின்றனர்.

## எரிசக்தித் துறையில் ஒத்துழைப்பை அதிகரிக்க இந்தியா–அமெரிக்கா முடிவு

- எரிசக்தித் துறையில் நிலவி வரும் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கு இந்தியாவும் அமெரிக்காவும் முடிவெடுத்துள்ளன.
- அமெரிக்கா–இந்தியா தூய எரிசக்தி ஒத்துழைப்பு அமைப்பின் கூட்டம் காணொலி வாயிலாக நடைபெற்றது. கூட்டத்தில் மத்திய பெட்ரோலியம்–இயற்கை எரிவாயுத் துறை அமைச்சர் ஹர்தீப் சிங் புரி, அமெரிக்க எரிசக்தித் துறை அமைச்சர் ஜெனிஃபர் கிரான்ஹோம் ஆகியோர் பங்கேற்றனர்.

## பனாரஸ் பல்கலைக்கழகத்தில் "பாரதியார்" தமிழ் ஆய்வு இருக்கை

- உத்தர பிரதேச மாநிலம், வாராணசியில் உள்ள பனாரஸ் ஹிந்து பல்கலைக்கழகத்தில் தமிழாய்வுக்காக மகாகவி பாரதியார் பெயரில் ஆய்வு இருக்கை அமைக்கப்படும் என்று பிரதமர் நரேந்திர மோடி அறிவித்தார்.
- குஜராத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் காணொலி முறையில் பங்கேற்றுப் பேசிய அவர், இதுகுறித்து மேலும் கூறியதாவது:
- இந்தியாவின் மாபெரும் கவிஞர், தத்துவஞானி, சுதந்திரப் போராட்ட வீரர் பாரதியாரின் 100–ஆவது ஆண்டு நினைவு தினம் அனுசரிக்கப்படுகிறது.
- 'ஒரே பாரதம் உன்னத பாரதம்' என்ற தொலைநோக்குப் பார்வையுடன் இருந்தவர் சர்தார் படேல்.
- அந்த பார்வையை தனது கவிதை வரிகளில் கொண்டு வந்தவர் மகாகவி பாரதி. அந்த தத்துவம் பாரதியின் தமிழ் எழுத்துகளில் தெய்விகத்தன்மையுடன் ஒளிவீசிக் கொண்டிருக்கிறது.

## இந்திய கலாசாரத்தை பிரதிபலித்த விவேகானந்தர் உரை: பிரதமர்

- சுவாமி விவேகானந்தரின் சிறப்பு மிக்க சிகாகோ சொற்பொழிவு நிகழ்த்தப்பட்ட செப்டம்பர் 11 தினத்தை நினைவு கூர்ந்து பிரதமர் சுட்டுரையில் பதிவிட்டுள்ளார்.
- இதுதொடர்பாக, அவர் சுட்டுரைப் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், 'சிகாகோவில் கடந்த 1893–ஆம் ஆண்டு செப்டம்பர் 11–இல் நடைபெற்ற உலக ஆன்மிக மாநாட்டில் சுவாமி விவேகானந்தர் ஆற்றிய உரை, இந்திய கலாசாரத்தை மிக அழகாக பிரதிபலித்தது. இந்த உலகை அனைவரையும் உள்ளடக்கியதாகவும் மேலும் வளமானதாகவும் நேர்மையாகவும் உருவாக்குவதற்கான ஆற்றல் அவருடைய உரையில் பொதிந்துள்ளது எனறு குறிப்பிட்டுள்ளார்.
- ஆசார்ய வினோபா பாவே பிறந்த தினம்: 1895–ஆம் ஆண்டு செப்டம்பர் 11–ஆம் தேதி பிறந்த வினோபா பாவேயையும் பிரதமர் மோடி நினைவுகூர்ந்தார். இதுகுறித்து அவர் தனது சுட்டுரைப் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், 'நாடு சுதந்திரம் அடைந்த பிறகு மகாத்மா காந்தி யின் கொள்கைகளை முன்னெடுத்துச் சென்றவர் ஆசார்ய வினோபாபாவே. பெருந்திரளாக மக்கள் கலந்து கொண்ட அவரது இயக்கங்கள் மூலம் ஏழை எளியவர்களின் வாழ்வை மேம்படுத்த உதவின. அவரது எழுச்சிமிக்க எண்ணங்கள் வரும் தலைமுறைகளுக்குப் பெரும் ஊக்கம் அளிக்கும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

## கழுகுகள் பாதுகாப்பு மையம்

- ஹரியானாவின் ஜடாயு கழுகுகள் இனப்பெருக்க மையம் மற்றும் பிர்சிக்கர்ஹா வனவிலங்கு சரணாலயம்–பீஞ்சூர் போன்ற பகுதிகளில் வெள்ளைக் கழுத்து கழுகுகள் விடப்பட்டுள்ளது.

## உணவு எண்ணெய்களின் மீதான வரி குறைப்பு

- இந்தியாவின் மொத்த உள்நாட்டு சமையல் எண்ணெய் தேவையில் 70 சதவீதம் இறக்குமதி மூலமே சமாளிக்கப்படுகிறது. தற்போது இறக்குமதி செய்யப்படும் சமையல் எண்ணெய் மீதான வரி 2.5% குறைக்கப்பட்டுள்ளதால் சந்தையில் 5 ரூபாய் வரை குறைய வாய்ப்புள்ளது.

## பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைக்கு உதவும் ஒருங்கிணைந்த தேசிய உளவுத் தரவுத் தளம்

- பயங்கரவாத எதிர்ப்புத் திறனை மேம்படுத்தும் வகையில் அதிநவீன தொழில்நுட்பத்தை வழங்கும் ஒருங்கிணைந்த தேசிய உளவுத் தரவுத் தளத்தை (NATGRID) பிரதமர் நரேந்திர மோடி விரைவில் தொடக்கிவைப்பார் என எதிர்பார்க்கப்படுவதாக அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.
- மும்பையில் 2008–ஆம் ஆண்டு செப்டம்பர் 26–ஆம் தேதி நடந்த பயங்கரவாதத் தாக்குதல் சம்பவமானது, முக்கியமான தகவல்களை உடனடியாகப் பெறும் எந்தச் செயல்முறையும் பாதுகாப்பு அமைப்புகளிடம் இல்லாததை வெளிப்படுத்தியது. மும்பை தாக்குதல் வழக்கின் முக்கியக் குற்றவாளியாகக் கருதப்படும் டேவிட் கோல்மேன் ஹெட்லி 2006–2009 காலகட்டங்களில் பலமுறை இந்தியாவுக்கு வந்து சென்றதைக் கண்டறிய முடியாததற்கு இதுவும் ஒரு முக்கியக் காரணமாக கருதப்படுகிறது. மும்பையில் தாக்குதல் நடத்துவதற்கான இடங்கள் பற்றிய முக்கியமான தகவல்கள், விடியோக்களை ஹெட்லிதான் பாகிஸ்தானின் லஷ்கர் –ஏ–தொய்பா பயங்கரவாத அமைப்புக்கு வழங்கினார்.

## உத்தரகண்டில் மிகப் பெரிய திறந்தவெளி பெரணி பண்ணை

- நாட்டின் மிகப்பெரிய திறந்தவெளி பெரணிச்செடி பண்ணை உத்தரகண்டில் அமைக்கப்பட்டுள்ளது.
- அல்மோரா மாவட்டத்தின் ராணிகேட் பகுதியில் 4 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள இந்தப் பண்ணையை உத்தரகண்ட் வனத்துறையைச் சேர்ந்த ஆராய்ச்சிப் பிரிவு 3 ஆண்டுகள் உழைப்பில் உருவாக்கியுள்ளது. 120 வகையான பெரணிச்செடிகள் இந்தப் பண்ணையில் அமைக்கப்பட்டுள்ளன.
- இயற்கை சூழலில் அமைக்கப்பட்டுள்ள நாட்டின் மிகப் பெரிய திறந்தவெளிப் பண்ணையாக இது திகழ்வதாக மாநில தலைமை வனப் பாதுகாவலர் சஞ்சீவ் சதுர்வேதி தெரிவித்தார்.

## Medicine from the sky

- மத்திய விமான போக்குவரத்து அமைச்சர் ஜோதிராதிய சிந்தியா ட்ரோன்கள் மூலம் தடுப்பூசி எடுத்துச் செல்லும் திட்டத்தை தெலுங்கானாவில் துவக்கி வைத்துள்ளார்.

## பருவநிலைக்கான அமெரிக்க சிறப்பு தூதருடன் ஆர்.கே.சிங் சந்திப்பு

- இந்தியா வந்துள்ள பருவநிலைக்கான அமெரிக்க சிறப்பு தூதர் ஜான் கெரி மத்திய மின்சாரம், புது மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை அமைச்சர் ஆர்.கே.சிங்கை புதுதில்லியில் சந்தித்து பருவநிலை மாற்ற பிரச்னைகள் மற்றும் எரிசக்தி மாற்றம் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆலோசனை நடத்தினார்.
- கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற பருவநிலைக்கான உலக தலைவர்கள் மாநாட்டில், பருவநிலை மாற்ற சவால்களை எதிர்கொள்ள இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து பணியாற்றுவதற்கான 'அமெரிக்க – இந்திய 2030 திட்ட இலக்கு ஒத்துழைப்பு' என்ற உடன்பாட்டை அதிபர் ஜோ பைடனும் பிரதமர் நரேந்திர மோடியும் கூட்டாக அறிவித்தனர்.

## சட்டீஸ்கர் மாநிலத்தை இந்தியாவின் "திணை மையம்"ஆக மாற்றுவதற்கு "திணை திட்டத்தை" அறிமுகம் செய்துள்ளது

- சிறிய ரக தானியங்களுக்கு விவசாயிகளுக்கு சரியான விலை கிடைக்க அம்மாநில முதல்வர் "பூபேஷ் பாகேல்" அவர்களால் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.
- இத்திட்டத்தை செயல்படுத்த அம்மாநிலம் ஹைதராபாத்தை சேர்ந்த இந்திய "திணை ஆராய்ச்சி" நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. (ஹைதராபாத்தில் பணிபுரியும் 14 மாவட்ட ஆணையர்களுடனும் ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது).

## இந்தியா–அமெரிக்கா இணைந்து காலநிலை நடவடிக்கை மற்றும் நிதி திரட்டும் மாநாட்டை தொடங்கியுள்ளது

- இந்த மாநாடு காலநிலை மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பான இருநாட்டு ஒத்துழைப்பை உறுதிப்படுத்தும்.
- இந்த மாநாடு ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல் வளம் மற்றும் காலநிலை அமைச்சர் திரு பூபேண்டர் யாதவ் மற்றும் திரு ஜான் கெர்ரி (SPEC) அவர்களால் தொடங்கப்பட்டது.
- (CAFMD), காலநிலையின் தலைவர்கள் உச்சி மாநாடு ஏப்ரல் 2021 இல் தொடங்கப்பட்டது.

## ராணுவத் தளவாட ஏற்றுமதிக்கு இந்தியா தயார்

- உத்தர பிரதேசத்தின் அலிகர் நகரில் அமைக்கப்படவுள்ள பாதுகாப்புத் தொழில் வழித்தடம் தொடர்பான கண்காட்சி நடைபெற்றது. அதை பிரதமர் மோடி நேரில் பார்வையிட்டார்.
- பாதுகாப்புத் தொழில் வழித்தடத்தின் அலிகர் முனையில் சிறு ஆயுதங்கள், ட்ரோன்கள், விண்வெளி ஆய்வு தொடர்பான பொருள்கள் ஆகியவற்றின் தயாரிப்பில் ஈடுபட புதிய நிறுவனங்கள் விருப்பம் தெரிவித்துள்ளன. இது அலிகர் மற்றும் அருகில் உள்ள பகுதிகளுக்குப் புதிய அடையாளத்தை வழங்கும்.

## ஐ.நா. பொதுச் சபைக் கூட்டம்: செப்டம்பர் 25 இல் பிரதமர் மோடி உரை

- ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி செப்டம்பர் 25–ஆம் தேதி பங்கேற்று உரையாற்றவுள்ளார்.
- கரோனா பரவல் காரணமாக கடந்த ஆண்டு காணொலி முறையில் நடைபெற்ற இக்கூட்டம் இந்த ஆண்டு நேரடியாக நடைபெறுகிறது. இதுகுறித்து மத்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருக்கிறது.

## உதான் திட்டத்தை "பாம்பே IIT" தொடங்கியது

- பொறியியல் மற்றும் அனைத்து முக்கிய உயர் படிப்புகளுக்கான புத்தகங்களும் ஆங்கிலத்திலிருந்து ஹிந்தி உட்பட அனைத்து இந்திய மொழிகளிலும் மொழியாக்கம் செய்யப்படுகிறது.
- உதான், நன்கொடை அடிப்படையிலான திட்டமாகும். கோயில்கள் நில ஆக்கிரமிப்பு தமிழகத்தில் பிணையில் விடுபடாக் குற்றமாகும்.
- கோயில்கள் நில ஆக்கிரமிப்பு கொள்கைகள் மாற்றப்பட்டுள்ளன.
- ஹிந்து மதச்சார்பற்ற கொடை சட்டத்தில் மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளது.
- இச்சட்டம் கோயில் நில ஆக்கிரமிப்பாளருக்கு எதிராக புகார் அளிக்கும் அதிகாரத்தை அனைவருக்கும் வழங்குகிறது.

## பிரதமர் மோடி அவர்கள் உ..பி. யின் அலிகரில் ராஜா மகேந்திர சிங் பல்கலைக்கழகத்துக்கான அடிக்கல் நாட்டினார்

- ராஜ பிரதாப் சிங் அவர்கள், சுதந்திர போராட்ட வீரர், கல்வியாளர் சமூக சீர்திருத்தவாதியாவார்.
- லோதா கிராமத்தில் 92 ஏக்கர் பரப்பளவில் இந்த பல்கலைக்கழகம் அமையவுள்ளது. அலிகரை சேர்ந்த 395 கல்லூரிகள் இந்த பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படும்.

## ரஷியாவில் "எஸ்சிஓ" நாடுகளின் கூட்டு ராணுவப் பயிற்சி: இந்தியா பங்கேற்பு

- ரஷியாவில் நடைபெறும் ஷாங்காய் ஒத்துழைப்பு கூட்டமைப்பு (எஸ்சிஓ) நாடுகளின் கூட்டு ராணுவப் பயிற்சியில் இந்தியா பங்கேற்றுள்ளது.
- பயங்கரவாதத்துக்கு எதிரான கூட்டு ராணுவத்தாக்குதல் பயிற்சி ஷாங்காய் ஒத்துழைப்பு நாடுகளிடையே இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெற்று வருகிறது. இதன் 6–ஆவது கட்டப்பயிற்சி செப்டம்பர் 13 முதல் 25–ஆம் தேதி வரை ரஷியாவின் ஆரன்பெர்க் பகுதியில் நடைபெறுகிறது.
- இந்தியாவின் சார்பில் 38 இந்திய விமானப்படை வீரர்கள் உள்பட 200 ராணுவ வீரர்கள் இந்தப் பயிற்சியில் இடம்பெற்றுள்ளனர் என்று இந்திய ராணுவம் தெரிவித்துள்ளது.

SCO

- எஸ்சிஓ சீனாவின் பெய்ஜிங்கை தலைமையகமாகக் கொண்ட பொருளாதார அரசியல் மற்றும் பாதுகாப்பை அடிப்படையாக கொண்ட யூரேஸிய அமைப்பாகும்.
- ஜனவரி 2017 இந்தியாவும், பாகிஸ்தானும் இதில் உறுப்பினர்களாக்கப்பட்டனர்.
- அமைப்பை ஏற்படுத்துவதற்கான தீர்மானம் ஜனவரி 2001–ஆம் ஆண்டு ரஷ்யா, சீனா, கஜகஸ்தான், கிர்கிஸ்தான், தஜுகிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய நிறுவன நாடுகளால் கையெழுத்திடபட்டு சீனாவின் பெய்ஜிங்கில் இவ்வமைப்பு ஏற்படுத்தப்பட்டது.

## தொலைத்தொடர்புத் துறையில் 100% அந்நிய நேரடி முதலீடு

- தொலைத்தொடர்புத் துறையில் 100 சதவீத அந்நிய நேரடி முதலீடு நிலுவைத் தொகையை தொலைத்தொடர்பு நிறுவனங்கள் 4 ஆண்டுகள் வரை தாமதித்து செலுத்த அனுமதியளிப்பது உள்ளிட்ட பல முக்கியச் சீர்திருத்தங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- தொலைத்தொடர்புத் துறையில் 9 அமைப்புரீதியான சீர்திருத்தங்களுக்கும், 5 செயல்பாட்டுச் சீர்திருத்தங்களுக்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

## சன்சத் தொலைக்காட்சியை பிரதமர் மோடி தொடக்கி வைத்தார்

- இரு அவைகளின் குரலாக இத்தொலைக்காட்சி ஒலிக்கும் என்று பிரதமர் கூறினார்.
- லோக்சபா மற்றும் ராஜ்யசபா தொலைக்காட்சியை இணைத்து "சன்சத்" தொடங்கப்பட்டுள்ளது. வெங்கையா நாயுடு, மோடி மற்றும் மக்களவை தலைவர் ஓம் பிர்லா இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.
- லோக்சபா தொலைக்காட்சி முன்னாள் மக்களவை தலைவர் சோம்நாத் சாட்டர்ஜி அவர்களால் அறிமுகம் செய்யப்பட்டதாகும்.
- லோக்சபா தொலைக்காட்சி – 15 வருடங்கள். ராஜ்யசபா தொலைக்காட்சி – 10 வருடங்களாக ஒளிபரப்பப்படுகிறது.

## இந்திய வீடுகளில் கடன் 2012–18இல் உயர்ந்துள்ளது

- கிராமங்களில் உள்ள குடும்பங்களின் சராசரி கடன் (2012–18) இல் 84% உயர்ந்துள்ளது.

- கோவிட்–19 இதை 2021–ல் இருமடங்காக உயர்த்தியுள்ளது.
- 2012–ல் 32,522 ஆக இருந்த சராசரி கடன் 2018–ல் 59,748 ஆக உயர்ந்துள்ளது. இந்திய புள்ளியியல் அமைப்பால் நடத்தப்பட்ட இந்திய கடன் மற்றும் முதலீட்டு கணக்கெடுப்பில் இத்தகவல் கண்டுபிடிக்கப்பட்டது.
- நகரங்களில் சராசரி கடன் 42% உயர்ந்து 1.20 லட்சமாக உள்ளது.

## சர்வதேச புத்த மாநாடு – நவம்பர் 2021

- நவம்பர் 19, 2020 தேதிகளில் நவ நாளந்தா மஹாவிஹாரா வளாகத்தில் (நாளந்தா, பீகாரில்) நடைபெற உள்ளது.
- இந்த மாநாடு "கலாச்சார உறவுகளுக்கான இந்திய கவுன்சிலால் (ICCR) நடத்தப்படுகிறது.
- இந்த மாநாட்டின் ஒரு பகுதியாக "புத்த மத ஆய்வுகளை ஊக்குவிக்க விருதுகள் வழங்கப்படுகிறது.
- நவம்பர் 21 அன்று பிரதமர் மோடி அவர்களால் ($20,000 USD), பரிதப்பணமும் தங்க முலாம் பூசப்பட்ட விருதும் வழங்கப்படுகிறது.

## இந்தியாவின் முதல் வெடிப்பு உலை எரிவாயுவிலிருந்து கரியமில வாயுவை எடுக்கும் ஆலையை டாடா எஃகு நிறுவனம் தொடங்கியுள்ளது

- செப்டம்பர் 14, 2021 அன்று ஜம்ஷத்பூரில் உள்ள ஆலையில் இப்பணி தொடங்கப்பட்டது.
- ஒரு நாளில் 5 டன் கரியமில வாயுவை வெடிப்பு உலை எரிவாயுவிலிருந்து பிரித்து எடுக்கிறது.
- பிரித்தெடுத்த கரியமில வாயுவை பயன்படுத்தி "கரியமிலம் சார்ந்த பொருளாதாரத்தை" டாடா நிறுவனம் முன்னெடுக்கிறது.

## நிதி ஆயோக் "ஷீன்யா திட்டத்தை" தொடங்கியுள்ளது

- இந்திய அரசாங்கம் அமெரிக்காவின் Rocky Mountain Institute (RMI) உடன் இணைந்து செப்டம்பர் 15, 2021 இத்திட்டத்தை துவங்கியுள்ளது. நுகர்வோர் மற்றும் நிறுவனங்கள் இணைந்து சுற்றுசூழலுக்கு மாசு ஏற்படுத்தாத விநியோக வாகனங்களை உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.
- இந்த திட்டம் நகர்ப்புறங்களில் மின்சார வாகனங்களின் செயல்பாட்டை அதிகரிக்கவும் நுகர்வோரிடம் இதைபற்றிய பொருளாதார நன்மைகள் உடல்நலத்திற்கு ஏற்படும் நன்மைகள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்த தொடங்கப்பட்டுள்ளது.

## நீதிபதி சீமாவுக்கு மீண்டும் என்சிஎல்டிஏ தலைவர் பதவி

- உச்சநீதிமன்றம் தலையிட்டதன் காரணமாக, தேசிய நிறுவனங்கள் சட்ட மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் (என்சிஎல்ஏடி) தலைவராக நீதிபதி அசோக் இக்பால் சிங் சீமா தொடர்ந்து பணியாற்ற மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- என்சிஎல்ஏடி தலைவராக இருந்த நீதிபதி சீமா வரும் 20–ஆம் தேதியுடன் ஓய்வுபெறுவதாக இருந்தது. இந்நிலையில், என்சிஎல்ஏடி பொறுப்பு தலைவராக நீதிபதி எம்.வேணுகோபால் செப்டம்பர் 11–ஆம் தேதியில் இருந்து செயல்படுவார் என்று மத்திய அரசு அறிவித்தது.

## நாடாளுமன்றத்தில் மகாகவி பாரதியார் நினைவு நூற்றாண்டு விழா

- மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் நினைவு நூற்றாண்டு விழா (செப்டம்பர் 18) நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள பாலயோகி அரங்கில் நடைபெறுகிறது. இந்த நிகழ்ச்சியில் குடியரசுத் துணைத் தலைவர் வெங்கையா நாயுடு சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.
- இந்த ஆண்டு டிசம்பர் 11–ஆம் தேதி வரை பாரதி பாதம் பதித்த 100 இடங்களில் சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெறும் வாராணசி பல்கலைக்கழக விழாவில் பிரதமர் நரேந்திர மோடி கலந்து கொள்ள இருக்கிறார்.
- பாரதி நினைவு நூற்றாண்டு ஆண்டு விழாவை முன்னிட்டு, பாரதியை உலகம் முழுவதும் எடுத்துச் செல்ல இருக்கிறோம். பாரதி நினைவு நூற்றாண்டு விழா மட்டுமல்ல, பாரதி தடம் பதித்த இடங்களில் 100 நிகழ்ச்சிகளை அவர் மறைந்த செப்டம்பர் 11–ஆம் தேதியில் தொடங்கி அவரது பிறந்த நாளான டிசம்பர் 11–ஆம் தேதி வரை 3 மாதங்களுக்கு நடத்த முடிவு செய்துள்ளோம்.

## பாதுகாப்பு துறைக்கான புதிய வளாகம் திறப்பு

- இரண்டு புதிய வளாகங்களை மத்திய அரசின் "சென்ட்ரல் விஸ்டா" திட்டத்தின் கீழ் திறக்கப்பட்டது. 775 கோடியில் இந்த வளாகம் கட்டப்பட்டுள்ளது.
- விழாவில் பிரதமர் மோடி பேசியது: 75வது சுதந்திர ஆண்டில் புதிய இந்தியாவின் தேவைக்கேற்ப

தலைநகரை மாற்றுவதில் இது முக்கியமான, முயற்சியாகும்.

## "ஒரு கிராம பஞ்சாயத்து" – ஒரு டிஜிபே சக்தி திட்டம்

- செப்டம்பர் 14, 2021 அன்று ஜம்மு காஷ்மீர் துணைநிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா இத்திட்டத்தை துவங்கி வைத்தார்.
- ஜம்மு–காஷ்மீரில் தொலைதூரத்தில் உள்ள கிராமங்களில் டிஜிட்டல் வங்கி நிதி சேவைகளை அனைத்து மக்களிடம் மற்றும் சேர்க்க இத்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
- முதற்கட்டமாக சுய உதவி குழுக்களை சேர்ந்த 80 பெண்களை தேர்ந்தெடுக்கப்பட்டு அதன்மூலம் அனைவரையும் உள்ளடக்கிய நிதி நிலைமையை அடைய முடியும்.

## உயர்நீதிமன்றங்களில் காலியாக உள்ள தலைமை நீதிபதி பணியிடங்களுக்கு 8 பெயர்கள்

- பல்வேறு உயர்நீதிமன்றங்களில் உள்ள தலைமை நீதிபதி பணியிடங்களில் நியமனம் செய்ய 8 பெயர்களை உச்சநீதிமன்ற கொலீஜியம் மத்திய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது.
- உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி என்.வி. ரமணா தலைமையில், நீதிபதிகள் யு.யு.லலீத், ஏ.எம்.கான்வில்கர் ஆகியோரை உள்ளடக்கிய உச்சநீதிமன்ற கொலீஜியம் மேற்கொண்ட தொடர் ஆலோசனைக் கூட்டத்தின் அடிப்படையில் இந்தப் பரிந்துரையை சமர்ப்பித்துள்ளது.
- அதில், 8 உயர்நீதிமன்றங்களுக்கு தலைமை நீதிபதி பணியிடத்துக்கான பெயர்களை அவர்கள் மத்திய அரசுக்கு பரிந்துரை செய்திருப்பதோடு, 5 உயர்நீதிமன்ற தலைமை நீதிபதிகள் மற்றும் பல்வேறு உயர்நீதிமன்றங்களைச் சேர்ந்த 28 நீதிபதிகளைப் பணியிட மாற்றம் செய்வதற்கான பரிந்துரையையும் சமர்ப்பித்துள்ளனர் என்று நீதித் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

## இந்தியாவுடனான தாராள வர்த்தக ஒப்பந்தம் விரைவில் முழுமை பெறும்

- இந்தியாவுடனான தாராள வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தைகள் (எஃப்டிஏ) விரைவில் முடிவுக்கு வரும் என பிரிட்டன் நம்பிக்கை தெரிவித்துள்ளது.
- இது குறித்து பிரிட்டனின் முதலீட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் லார்டு கெரி கிரிம்ஸ்டோன் அறிக்கை வெளியிட்டார்.

## மும்பை–நாக்பூர் விரைவு சாலையில் நாட்டிலேயே மிக அகலமான இரட்டை சுரங்க பாதை

- மகாராஷ்டிராவில் மும்பை – நாக்பூர் விரைவு சாலையில் நாட்டின் அகலமான சுரங்கத்தை 2 ஆண்டுகளில் அமைத்து பொறியாளர்கள் சாதனை படைத்துள்ளனர்.
- மகாராஷ்டிராவில் நாசிக் நெடுஞ்சாலையில் கசரா காட் என்ற இடத்தில் 8 கிலோ மீட்டர் நீளமும் தலா 17.5 மீட்டர் அகலமும் கொண்ட இரட்டை சுரங்கம் அமைக்கப்பட்டுள்ளது. ரூ. 2,475 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள இந்த சுரங்கம் நாட்டிலேயே மிகவும் அகலமான சுரங்கம் என்ற பெருமையைப் பெற்றுள்ளது. மேலும், நாட்டின் நீளமான 4–வது சுரங்கமான இதை 2 ஆண்டுகளில் பொறியாளர்கள் அமைத்துள்ளனர். மலைப் பகுதியை குடைந்து இந்த சுரங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

## புதிய கல்விக் கொள்கையை அமல்படுத்த 10 வருடங்கள் அவகாசம் இருக்கிறது: கஸ்தூரி ரங்கன்

- புவியியல் மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை கருத்தில் கொண்டு இந்த அவகாசம் வழங்கப்படுவதாக அறிவித்தார்.
- அமல்படுத்த 10 வருடமும் அதை மதிப்பிட 10 வருடம் தேவைப்படுகிறது.

## வேளாண் ஆராய்ச்சியில் அதிக முதலீடு: ஜி20 கூட்டத்தில் இந்தியா வலியுறுத்தல்

- அதிகரித்து வரும் உணவுப் பொருள்கள் தேவை, பருவநிலை மாற்ற சவால்கள் ஆகியவற்றை எதிர்கொள்ள வேளாண்துறை ஆராய்ச்சியில் முதலீடுகளை அதிகரிக்க வேண்டியது அவசியம் என்று ஜி20 கூட்டத்தில் இந்தியா வலியுறுத்தியுள்ளது.
- ஜி20 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கும் மாநாடு அக்டோபரில் இத்தாலியில் நடைபெறவுள்ளது. அந்த மாநாட்டின் ஒரு பகுதியாக ஜி20 நாடுகளின் வேளாண் அமைச்சர்களுக்கான கூட்டம் காணொலி வாயிலாக நடைபெற்றது. அதில் மத்திய வேளாண்துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் பங்கேற்றார்.
- உணவுப் பொருள்களை இறக்குமதி செய்யும் நாடாக இருந்த இந்தியாவை, வேளாண்துறை

சார்ந்த ஆராய்ச்சிகளே அவற்றை ஏற்றுமதி செய்யும் நாடாக மாற்றின. தற்போது இந்தியா ஆண்டுக்கு சுமார் 30.8 கோடி டன் உணவு தானியங்களை உற்பத்தி செய்து வருகிறது.

- உணவு உற்பத்தியில் தன்னிறைவு கண்டதோடு மற்ற நாடுகளின் உணவுத் தேவையையும் இந்தியா பூர்த்தி செய்து வருகிறது.

ஜி–20

- ஜி–20–பொருளாதார வளர்ச்சி அடைந்த மிகப்பெரிய இருபது உலக நாடுகள் மற்றும் நிதி வளங்களின் நிதி அமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்களின் கூட்டமைப்பாகும். இவ்வமைப்பில் உலகின் 19 வளர்ச்சியடைந்த நாடுகளும் ஐரோப்பிய ஒன்றியமும் உறுப்புரிமை பெற்றுள்ளன.
- உருவாக்கம் – 1999
- தலைவர் – டோனி அபோட் (ஆஸ்திரேலியா)

## மீனவர்களுக்கு விரைவில் கிசான் அட்டைகள் வழங்கப்படும் என மத்திய மீன்வளத்துறை இணை அமைச்சர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

- பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா திட்டத்தின் கீழ் மீனவர்களுக்கு வீடுகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் மற்றும் அனைத்து மீனவர்களுக்கும் (சொந்தமாக படகு இல்லாத) கிசான் அட்டைகள் வழங்கப்படும் என அவர் தெரிவித்தார்.

## நீதித்துறை இந்திய மயமாக்க வேண்டும்: உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி ரமணா கருத்து

- முன்னாள் நீதிபதி சந்தன கவுடாவின் மறைவைத் தொடர்ந்து கர்நாடக பார்கவுன்சிலில் பாராட்டு விழாவில் அவர் கூறியது: "ஆங்கிலத்தில் நீதிமன்ற நடவடிக்கைகள் அமைந்துள்ளன அதுதவிர தீர்ப்புகள் சாதாரணமாக மக்களால் புரிந்துகொள்ள முடியாத வகையில் உள்ளன.
- காலனி ஆதிக்க மயக்கத்தில் இருந்து நம்முடைய நீதிமன்றங்கள் விடுபட வேண்டும் என்ற சந்தன கௌடாவின் கனவை நினைவாக்கும் நேரம் வந்து விட்டதாக தெரிவித்தார்.

## சட்டம் மற்றும் நீதி அமைச்சகத்தின் கீழ் உள்ள நீதித்துறை "டெலி–Law" என்னும் சட்டத்தின் அதிக அளவிலான மக்களை பதிவிக்க ஏக் ப ஹைல் பிரச்சாரத்தை தொடங்கியுள்ளது

- "Tele–law" என்பது தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொடர்பை பயன்படுத்தி சட்டத்தை பற்றிய தகவல் மற்றும் ஆலோசனை வழங்குவதாகும்.
- தேசிய சட்ட ஆலோசனை மையம் (NALSA) மற்றும் CSC இ–கவர்னன்ஸ் உடன் நீதித்துறை இணைந்து ஒடுக்கப்பட்ட சமூகத்திற்கு சட்ட உதவி பெற இம்முன்னெடுப்பை ஏற்படுத்தியுள்ளது.
- வழக்கறிஞர்களுக்கும் மக்களுக்குமான இடையிலான இந்த மின் தொடர்பு CSCயின் உள்கட்டமைப்பை பயன்படுத்தி வீடியோ கான்ஃபரன்சிங் மூலம் நடைபெறும். நாடு முழுவதும் (செப்டம்பர் 17 முதல் – அக்டோபர் 2 வரை) நடைபெறும்.

## ஆதார் – பான் இணைப்பதற்கான காலக்கெடு மார்ச் 2022 வரை நீட்டிப்பு

- மத்திய நேரடி வரி வாரியம் மார்ச் 31, 2022 வரை காலக்கெடுவை நீட்டித்துள்ளது. செப்டம்பர் 30, 2021 இதற்கு முன்னர் அறிவிக்கப்பட்ட தேதியாகும்.

## ராஜ்நாத் சிங் தலைமையில் அமைச்சர்கள் குழு அமைத்தது மத்திய அரசு

- பட்டியலின சாதியினர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டவர்கள், சிறுபான்மையினர், பெண்கள் நல திட்டங்கள் சரியான முறையில் செயல்படுத்தப்படுவதை கண்காணிக்க இக்குழு அமைக்கப்பட்டுள்ளது.
- இக்குழுவில் உள்துறை அமைச்சர் அமித்ஷா, நிதித்துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன், கல்வித்துறை அமைச்சர் தர்மேந்த ப்ரதான், அஷ்வினி வைஷ்ணவ், முக்தர் அப்பாஸ் நவி, அர்ஜுன் முண்டா, கிரண் ரிஜ்ஜு மற்றும் விரேந்த்ர குமார் ஆகியோர் இடம் பெற்றனர்.

## கங்கையைத் தூய்மைப்படுத்த நினைவுப் பரிசு ஏலத் தொகை: பிரதமர்

- தனக்கு நினைவுப் பரிசாக வழங்கப்பட்ட பொருள்களின் ஏலத் தொகை கங்கையைத்

தூய்மைப்படுத்தும் திட்டத்துக்கு வழங்கப்படும் என பிரதமர் தெரிவித்துள்ளார்.

- பல்வேறு நிகழ்ச்சிகளில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்றபோது அவருக்கு அளிக்கப்பட்ட நினைவுப் பரிசுகளை pmmementos.gov.in வலைதளம் மூலம் ஏலம் விடும் நிகழ்ச்சி கடந்த தொடங்கியது. அண்மையில் நடைபெற்ற டோக்கியோ ஒலிம்பிக், பாராலிம்பிக் போட்டிகளில் பங்கேற்றவர்கள் தாங்கள் பயன்படுத்திய உபகரணங்களை பிரதமருக்கு நினைவுப் பரிசாக அளித்திருந்தனர். அவையும் ஏலத்தில் இடம் பெற்றுள்ளன. இவற்றில் சில உபகரணங்கள் அதிகபட்சமாக ரூ.10 கோடி வரை ஏலம் போனது.

**தூய்மை கங்கா திட்டம்**

- கங்கை நதியை சுத்தப்படுத்த ஜூன் 2014 ஆம் ஆண்டு மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டம்.
- இத்திட்டத்திற்கு 20,000 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. இத்திட்டம் நீர்வளத்துறை, நதி மேம்பாடு மற்றும் ஜல்சக்தி அமைச்சகத்தின் கீழ் செயல்படும்.

## ஒலிம்பிக் வீரர்களின் விளையாட்டு உபகரணங்கள் 10 கோடிக்கு ஏலம்

- செப்டம்பர் 10 அன்று நடைபெற்ற ஏலத்தில் நீரஜ் சோப்ரா, பாராலிம்பிக்ஸ் ஈட்டி எறிதலில் தங்கம் வென்ற சுமித் அன்டில் இருவரின் ஈட்டிகளும் தலா 10 கோடிக்கு ஏலம் போயின.
- குத்துச்சண்டை வீராங்கனை லாவ்லினா பொர்கோலின் கையுறை 10 கோடிக்கு ஏலத்தில் விடப்பட்டது.
- மகளிர் ஹாக்கி வீராங்கனைகள் கையெழுத்திட்ட ஹாக்கி மட்டை, வெண்கல பதக்கம் பி.வி.சிந்து அவர்களின் இறகு பந்து மட்டை 9 கோடிக்கு ஏலம் போனது.
- இதன் மூலம் பெறப்படும் தொகை "நமாமி கங்கா திட்டத்திற்கு செலவிடப்படும். இது ஏலத்தின் மூன்றாவது பதிப்பாகும். இதற்கு முன்னர் 2019ஆம் ஆண்டு நடைபெற்றது.

## இந்திய–செர்பிய பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்த முடிவு

- மத்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், செர்பியா வெளியுறவு அமைச்சர் நிக்கோலா செலகோவிச் ஆகியோர் இடையே நடைபெற்ற சந்திப்பில், இருநாடுகளுக்கு இடையிலான பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்த முடிவு மேற்கொள்ளப்பட்டது.
- செர்பியா வெளியுறவு அமைச்சர் நிக்கோலா செலகோவிச் 2 நாள் பயணமாக இந்தியா வந்துள்ளார். தில்லியில் அவர் ஜெய்சங்கரை சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பு குறித்து ஜெய்சங்கர் சுட்டுரையில் வெளியிட்ட பதிவில், "நிக்கோலா செலகோவிச்சுடன் நல்விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய நட்பார்ந்த கலந்துரையாடல் நடைபெற்றது.

## மணிப்பூரின் சிரராகொங் மிளகாய் மற்றும் டமெங்லாங் ஆரஞ்சு இந்திய புவிசார் குறியீடு அங்கிகாரத்தை பெற்றது

- மணிப்பூரின் சிராரகொங் மிளகாய் மற்றும் டமெங்லாங் ஆரஞ்சு இந்திய புவிசார் குறியீடு அங்கிகாரத்தை பெற்றது
- ஒரு குறிப்பிட்ட புவிசார்ந்த இடத்தையோ அல்லது தோற்றத்தையோ குறிக்கும்படி ஒரு பொருளின் மீது பயன்படுத்தப்படும் பெயர் அல்லது சின்னம் புவிசார் குறியீடு எனப்படும்.

## ஆரோக்கிய உணவுகளின் நாடாக உருவாகும் இந்தியா

- நீர் வளங்களை உகந்த முறையில் பயன்படுத்துவதை அதிகரிக்க, பாசனத்துக்கான உள்கட்டமைப்பை உருவாக்க, உரங்களை சமநிலையில் பயன்படுத்தி மண் வளத்தை பாதுகாக்க, விளைநிலங்களுக்கும் சந்தை களுக்கும் இணைப்பை ஏற்படுத்த இந்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

## 1 கோடி அமைப்புசாரா தொழிலாளர்கள் மத்திய அரசின் வலைதளத்தில் பதிவு

- அமைப்புசாரா தொழிலாளர்கள் ஒரு கோடிக்கும் மேற்பட்டோர் மத்திய அரசின் வலைதளத்தில் பதிவு செய்து கொண்டுள்ளனர்.
- அமைப்புசாரா தொழிலாளர்கள் இ–ஷ்ரம் (eshram.gov.in) என்ற வலைதளத்தில் பதிவு செய்து கொள்ளும் நடவடிக்கை கடந்த ஆகஸ்ட் 26–ஆம் தேதி தொடங்கப்பட்டது. இந்த வலைதளத்துக்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. 24 நாள்களில்

1,03,12,095 பேர் இந்த வலைதளத்தில் பதிவு செய்துள்ளனர். இவர்களில் 43 சதவீத பயனாளிகள் பெண்கள், 57 சதவீதம் பேர் ஆண்கள்.

## காப்பர் மஹ்சீர் மீன் வடகிழக்கு மாநிலமான சிக்கிமின் மாநில மீனாக அறிவிப்பு

- இந்த வகை மீன்களின் முக்கியத்துவத்தை உணர்த்தவும், பாதுகாக்கவும் மாநில மீனாக அறிவிக்கப்பட்டுள்ளதாக வனத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## அஸ்ஸாம்: 2019–இல் வெளியான தேசிய குடிமக்கள் பதிவேடு இறுதியானது

- 2019–ம் ஆண்டில் வெளியிடப்பட்ட தேசிய குடிமக்கள் பதிவேடு (என்ஆர்சி) இறுதியானது என்று அஸ்ஸாமில் உள்ள வெளிநாட்டினர் தீர்ப்பாயம் தனது உத்தரவில் குறிப்பிட்டுள்ளது.
- எனினும், இதை இந்திய பதிவாளர் இயக்குநரகம் இன்னும் உறுதிப்படுத்தவில்லை.
- அஸ்ஸாமில் சட்டவிரோதமாகக் குடியேறி வசிப்பவர்களை அடையாளம் காண்பதற்காக, உச்சநீதிமன்ற உத்தரவின்பேரில் தேசிய குடிமக்கள் பதிவேடு புதுப்பிக்கப்பட்டது.
- கடந்த 2018–ஆம் ஆண்டில் வெளியான அதன் வரைவுப்பட்டியலில் சுமார் 40 லட்சம் பேர் விடுபட்டிருந்தனர்.

## தேசிய மகளிர் ஆணையம் சார்பில் மாணவிகளுக்கு ஆளுமைத் திறன் பயிற்சி

- பெண்களை சுயாதீனமாக பல்வேறு பணிகளுக்குத் தயார்படுத்தும் விதமாக தேசிய மகளிர் ஆணையம் இளங்கலை, முதுகலை மாணவிகளுக்கு நாடு தழுவிய திறன் மேம்பாடு, தனிப்பட்ட ஆளுமை மேம்பாட்டுத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.

## நாட்டிலேயே முதல்முறையாக சொகுசு கப்பல் சுற்றுலா: ஐஆர்சிடிசி அறிமுகம்

- இந்தியாவின் நீர்வழி தடங்களில் சொகுசுக் கப்பலில் சுற்றுலா செல்வதற்கு இனி IRCTC இணையதளம் மூலம் பதிவு செய்யலாம். கார்டெலியா குருயிஸஸ் என்ற நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளது.
- இந்த பயணிகள் கப்பலில் கோவா, டையூ, கொச்சி, லட்சத்தீவுகள், இலங்கை உள்ளிட்ட பகுதிகளுக்கு பயணம் மேற்கொள்ள வழி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## உலகளாவிய கண்டுபிடிப்பு குறியீடு பட்டியலில் இந்தியா 46ஆம் இடம்

- உலக அறிவுசார் சொத்து நிறுவனம்–2020க்கான பட்டியலை வெளியிட்டுள்ளது. முதன்முறையாக இந்தியா 50 இடங்களுக்குள் இடம் பெற்றுள்ளது. குறைந்த நடுத்தர வருமானம் ஈட்டும் நாடுகளின் பட்டியலில் வியட்நாமிற்கு அடுத்து இந்தியா இரண்டாம் இடத்தில் உள்ளது.

## தேசிய பாதுகாப்பு அகாதெமியில் அடுத்த ஆண்டு முதல் பெண்கள் சேர்க்கை

- தேசிய பாதுகாப்பு அகாதெமியில் (என்டிஏ) அடுத்த ஆண்டு முதல் பெண்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர் என்று உச்சநீதிமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- தேசிய பாதுகாப்பு அகாதெமி, கடற்படை அகாதெமி ஆகியவற்றில் ஆண்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படுவதாகவும், அதனால் பெண்களுக்கு அரசமைப்புச் சட்டம் வழங்கும் அடிப்படை உரிமை பாதிக்கப்படுவதாகவும் வழக்குரைஞர் குஷ் கல்ரா உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

## பள்ளிகளுக்குப் புதிய பாடத் திட்டம்: கஸ்தூரிரங்கள் தலைமையில் குழு அமைப்பு

- பள்ளிக்கல்விக்கான புதிய பாடத்திட்டத்தை உருவாக்க கே.கஸ்தூரிரங்கன் தலைமையில் 12 பேர் கொண்ட குழுவை மத்திய கல்வி அமைச்சகம் அமைத்துள்ளது.
- இதுதொடர்பாக அந்த அமைச்சக அதிகாரிகள் கூறியதாவது:
- இந்தக் குழு குழந்தைப் பருவக் கல்வி, பள்ளிக்கல்வி, உயர்கல்வி மற்றும் ஆசிரியர் கல்விக்கான புதிய பாடத்திட்டங்களை உருவாக்கவுள்ளது. அந்தக் குழுவில் தேசிய கல்வி திட்டமிடல் மற்றும் நிர்வாக நிறுவனத்தின் வேந்தர் மகேஷ் சந்திர பந்த், ஜாமியா மில்லியா இஸ்லாமியா பல்கலைக்கழக துணைவேந்தர் நஜ்மா அக்தர், பஞ்சாப் மத்திய பல்கலைக்கழக வேந்தர் ஜக்பீர் சிங் உள்ளிட்டோர் இடம் பெற்றுள்ளனர்.

## காரீஃப் பருவ தானிய உற்பத்தி அளவு உச்சத்தை தொடும்: மத்திய அரசு

- நடப்பாண்டு காரீஃப் பருவத்தில் நாட்டின் உணவுதானிய உற்பத்தி 15.05 கோடி டன்னை எட்டும் என மத்திய அரசு நம்பிக்கை தெரிவித்துள்ளது.
- இதுகுறித்து வேளாண் துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் கூறியதாவது:
- கடந்த 2020–21 பயிர் பருவத்தின் (ஜூலை– ஜூன்) காரீஃப் பருவத்தில் உணவுதானிய உற்பத்தியானது புதிய உச்சமாக 14.96 கோடி டன்னை எட்டியது.
- இந்த நிலையில், நடப்பாண்டில் பருவமழைப் பொழிவு சிறப்பாக இருந்ததன் காரணமாக நெல் உற்பத்தி கணிசமாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதையடுத்து, நடப்பாண்டின் காரீஃப் பருவத்தில் உணவு தானிய உற்பத்தியானது 15.05 கோடி டன்னாக அதிகரித்து புதிய சாதனை படைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## இந்தியாவில் கருவுறுதல் விகிதம் முஸ்லிம்கள் முன்னிலை: அமெரிக்காவின் ஃபியூ ஆய்வு நிறுவனம்

- இந்தியாவில் கருவுறுதல் விகிதம் ஒட்டுமொத்தமாக குறைந்துள்ளது. 1992இல் ஒரு பெண்ணுக்கு சராசரியாக 4.4 குழந்தைகள் என்ற கருவுறுதல் விகிதம் 2015இல் 2.6 ஆக குறைந்துள்ளது.
- 1992–2015 இடையே மதங்கள் வாரியாக ஒரு பெண் சராசரியாக கருவுறும் விகிதம் ஒப்பீடு செய்யப்பட்டுள்ளது.

| மதங்கள் | 1992 | 1998 | 2005 | 2015 |
|---|---|---|---|---|
| முஸ்லிம் | 4.4 | 3.6 | 3.4 | 2.6 |
| ஹிந்து | 3.3 | 2.8 | 2.6 | 2.1 |
| கிறிஸ்தவம் | 2.9 | 2.4 | 2.3 | 2 |
| புத்தர்கள் | 2.9 | 2.1 | 2.3 | 1.7 |
| சீக்கியர்கள் | 2.4 | 2.3 | 1.9 | 1.6 |
| ஜெயின் | 2.4 | 1.9 | 1.5 | 1.2 |

- 1,200 மில்லியன் இந்திய மக்கள்தொகையில் 8 மில்லியன் மக்கள் மேற்குறிப்பிட்டுள்ள 6 மதங்களை சேர்ந்தவர்கள் அல்ல. இவர்களில் பழங்குடியினர் (சர்னாஸ் (5 மில்லியன்) கோண்ட் (1 மில்லியன்) சரி தர்மா (5,10,000)).

## FSSAI 2020–21 க்கான உணவு பாதுகாப்பு குறியீடு வெளியீடு

- மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா இது தொடர்பான அறிக்கையை வெளியிட்டுள்ளார். பெரிய மாநிலங்களின் பட்டியலில் குஜராத் முதலிடத்திலும், கேரளா இரண்டாமிடத்திலும், தமிழகம் மூன்றாமிடத்திலும் உள்ளது. சிறிய மாநிலங்கள் பட்டியலில் கோவா முதலிடம்.

## 1.2 கோடி ஆலோசனைகளை வழங்கியது இ–சஞ்சீவனி தேசிய தொலை மருத்துவ சேவை

- இந்திய அரசின் தேசிய தொலைபேசி மற்றும் காணொலி வாயிலான மருத்துவ சேவையான இ–சஞ்சீவனி 1.2 கோடி ஆலோசனைகளை வழங்கி நாட்டின் மிகவும் பிரபலமான தொலை மருத்துவ சேவையாக வளர்ச்சி அடைந்துள்ளது.
- இத்திட்டத்தின் மூலம் தொலைபேசி மற்றும் காணொலி அழைப்புகளில் மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன.
- இந்தியாவில் மொத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ள தொலை மருத்துவ ஆலோசனைகளில் முதல் 10 இடங்களை வகிக்கும் மாநிலங்களின் பட்டியல் பின்வருமாறு: ஆந்திரம் (37,04,258), கர்நாடகம் (22,57,994), தமிழ் நாடு (15,62,156), உத்தர பிரதேசம் (13,28,889), குஜராத் (4,60,326), மத்திய பிரதேசம் (4,28,544), பிகார் (4,04,345), மகாராஷ்டிரம் (3,78,912), மேற்கு வங்கம் (2,74,344) மற்றும் கேரளம் (2,60,654).

## அனைத்து மொழிகளிலும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு வரைவு அறிக்கை

- சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு வரைவு அறிக்கை அனைத்து பிராந்திய மொழிகளிலும் வெளியிடப்படும் என சென்னை உயர்நீதி மன்றத்தில் மத்திய அரசு உறுதியளித்துள்ளது.

## நாகா பேச்சுவார்த்தை மத்தியஸ்தர் பொறுப்பிலிருந்து தமிழக ஆளுநர் விலகல்

- வடகிழக்கு மாநிலங்களில் வசிக்கும் நாகா இன மக்களை ஒன்றிணைத்து தனி நாட்டை உருவாக்கும் நோக்கத்தில் நாகாலாந்து தேசிய

சோஷலிச கவுன்சில் உருவாக்கப்பட்டது. அவர்களின் கோரிக்கைக்கு மறுப்பு தெரிவித்துள்ள மத்திய அரசு, அவர்களுடன் தொடர்ந்து அமைதிப் பேச்சுவார்த்தை நடத்தி வந்தது. பல கட்ட பேச்சுவார்த்தைக்குப் பிறகு மத்திய அரசுக்கும், நாகா அமைப்பினருக்கும் இடையே கடந்த 2015–ல் உடன்பாடு ஏற்பட்டது. மத்தியஸ்தராக நியமிக்கப்பட்ட ஆர்.என்.ரவி, அந்த அமைப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்தி வந்தார்.

## புதுப்பொலிவு பெறும் இந்தியாவின் முதல் மசூதி

- இந்தியாவின் முதல் மசூதியாக கருதப்படும் கேரளத்தில் உள்ள சேரமான் ஜும்மா மசூதி, முன்பு இருந்த தோற்றத்திலேயே புதுப்பொலிவு பெற்று வருகிறது.
- கி.பி.629–இல் கட்டப்பட்ட இந்தமசூதியின் பழமை தோற்றத்தை ஏற்படுத்தும் வகையில் கடந்த 30 மாதங்களாக நடைபெற்று வரும் புனரமைப்பு பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளதால் விரைவில் இந்த மசூதியை அந்த மாநில முதல்வர் பினராயி விஜயன் திறந்து வைக்க உள்ளார்.
- கேரள மாநிலம் திருச்சூர் மாவட்டம் கொடுங்கல்லூர் தாலுக்காவில் உள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க சேரமான் மசூதியை ரூ.1.14 கோடியில் முன்பு இருந்த தோற்றத்திலேயே புதுப்பொலிவு செய்ய, திட்டமிடப்பட்டது. 1974–இல் கட்டப்பட்ட புதிய கட்டுமானங்களை இடித்துவிட்டு பழைய புகைப்படங்களில் உள்ளதைப்போல் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது என்று புனரமைப்புப் பணியில் ஈடுபட்டுள்ள மாநில அரசு அதிகாரி நவ்சத் தெரிவித்தார்.

## தொலைத்தொடர்புத் துறை செயலராக கே.ராஜாராமன் நியமனம்

- பொருளாதார விவகாரங்கள் துறையின் கூடுதல் செயலராக இருந்த கே.ராஜா ராமன், தொலைத் தொடர்புத் துறைச் செயலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## மாணவர்களின் வேலைவாய்ப்புத் திறன் குறியீடு: முதல் 500 இடங்களில் 12 இந்திய கல்வி நிறுவனங்கள்

- உலக அளவில் மாணவர்களின் வேலைவாய்ப்புத் திறனை மேம்படுத்தும் கல்வி நிறுவனங் களுக்கான பட்டியலின் முதல் 500 இடங்களில் 12 இந்திய கல்வி நிறுவனங்கள் இடம் பெற்றுள்ளன.
- பிரிட்டனைச் சேர்ந்த குவாக்குவரெல்லி சைமண்ட்ஸ் (க்யூஎஸ்) என்ற நிறுவனம், உலக அளவில் உயர்கல்வி நிறுவனங்களை ஆய்வு செய்து வருகிறது. மாணவர்களின் வேலைவாய்ப்புத் திறனை மேம்படுத்தும் கல்வி நிறுவனங்கள் குறித்த பட்டியலை க்யூஎஸ் நிறுவனம் அண்மையில் வெளியிட்டது.
- உலகின் தலைசிறந்த 500 நிறுவனங்கள் அடங்கிய அந்தப் பட்டியலில் இந்தியாவைச் சேர்ந்த 12 கல்வி நிறுவனங்கள் இடம் பெற்றுள்ளன. மும்பையில் உள்ள இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் (ஐஐடி) இந்திய அளவில் முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- தில்லிஐஐடி,சென்னைஐஐடி,கரக்பூர்ஐஐடி,கான்பூர் ஐஐடி, ரூர்கி ஐஐடி ஆகியவையும் பட்டியலில் இடம் பெற்றுள்ளன. பல்கலைக்கழகங்களில் தில்லி பல்கலைக்கழகம், மும்பை பல்கலைக்கழகம், கொல்கத்தா பல்கலைக்கழகம் ஆகியவை இடம்பெற்றுள்ளன. பெங்களூரில் உள்ள இந்திய அறிவியல் கல்வி நிறுவனமும் (ஐஐஎஸ்சி) பட்டியலில் இடம் பெற்றுள்ளது.
- தனியார் பல்கலைக்கழகங்களில் ஓ.பி. ஜிண்டால் குளோபல் பல்கலைக்கழகம், பிட்ஸ் பிலானி ஆகியவை இடம் பெற்றுள்ளன.

## தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் பரிந்துரை

- தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் பரிந்துரையின் பேரில் COVID–19இல் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு ரூ.50,000 வழங்கப்படும் என உள்துறை அமைச்சகம் உச்சநீதிமன்றத்திடம் தெரிவித்துள்ளது.
- மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து (மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையம்) மாவட்ட நிர்வாகத்தால் இத்தொகை பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்படும்.

## தொழில் தொடங்குவதற்கு உகந்த நகரங்களின் பட்டியல்: 23–ஆவது இடத்துக்கு முன்னேறியது பெங்களூரு

- உலக அளவில் தொழில் தொடங்குவதற்கு ஏற்ற சிறந்த சூழல் அமைந்துள்ள நகரங்களின் வருடாந்திரப் பட்டியலில் பெங்களூரு 23–ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.
- இதன் மூலம், கடந்த ஆண்டை விட அந்தப் பட்டியலில் பெங்களூரு 3 இடங்கள் முன்னேறியுள்ளது.

- சர்வதேச அளவில் தொழில் தொடங்குவதற்கு ஏற்ற பல்வேறு சூழல்களின் அடிப்படையில் சிறந்த 50 நகரங்களின் பட்டியலை அமெரிக்காவின் சான் ஃபிரான்சிஸ்கோவைச் சேர்ந்த "ஸ்டார்ட்டப் ஜினோம்" அமைப்பு ஆண்டுதோறும் வெளியிட்டு வருகிறது.
- இந்த ஆண்டுக்கான அந்தப் பட்டியலில் புதுதில்லி 36–ஆவது இடத்தில் உள்ளது. மும்பை நகரம் வளர்ந்து வரும் சூழல் அமைப்புகளைக் கொண்ட நகரங்களின் பட்டியலில் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக முதலிடத்தில் உள்ளது.

## நீதிமன்ற பதிவுகளை விரைவாக அனுப்ப உச்சநீதிமன்றம் புதிய முறையை அறிமுகப்படுத்தியுள்ளது

- பிணை மற்றும் கைது நடவடிக்கையை தடை செய்யும் உத்தரவுகள் சிறை அதிகாரிகள் மற்றும் விசாரணை அதிகாரிகளுக்கு பாதுகாப்பான முறையில் அனுப்ப முடிவு செய்யப்பட்டுள்ளது.
- உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி என்.வீ.ரமணா தலைமையிலான சிறப்பு அமர்வின் தீர்ப்பின் பேரில் விரைவான மற்றும் பாதுகாப்பான மின்னணு பதிவுகள் (FASTER) திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- விசாரணை கைதிகளுக்கான நீதிமன்றத்தின் தீர்ப்பு சிறைச்சாலை அதிகாரிகளை அடையும் நேர விரயம், தேவையில்லாத கைது நடவடிக்கைகள், நீதிமன்றத்தின் பாதுகாப்பு உத்தரவிற்கு பிறகும் மக்கள் காவலில் இருப்பதை இத்திட்டம் தவிர்க்கும்.

## செப்டம்பர் (20–26) வரை "வர்த்தக வாரத்தை" கொண்டாடுகிறது

- அம்ரித் திருவிழாவை முன்னிட்டு "வர்த்தக வாரத்தை" கொண்டாடுகிறது வர்த்தக அமைச்சகம்.
- மாநில அரசுகளுடன் சேர்ந்த நாடு முழுவதும் உள்ள 739 மாவட்டங்களுடன் மாநாடுகளை ஏற்பாடு செய்துள்ளது வெளிநாட்டு வர்த்தக இயக்குநரகம் (DGFT).

## அமெரிக்க அதிபர் பைடனுடன் பிரதமர் மோடி ஆலோசனை

- ஐ.நா. பொதுச் சபைக் கூட்டம், நாற்கரக் கூட்டமைப்பின் (க்வாட்) மாநாடு உள்ளிட்டவற்றில் பங்கேற்பதற்காக அமெரிக்க சுற்றுப்பயணம் மேற்கொள்ள பிரதமர் நரேந்திர மோடி, வெள்ளை மாளிகையில் அமெரிக்க அதிபர் ஜோ பைடனை முதல் முறையாக நேரில் சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

### துணை அதிபருக்குப் பரிசு

- துணை அதிபர் கமலா ஹாரிஸை சந்தித்த பிரதமர் மோடி, அவருக்கு வாராணசியின் 'குலாபி மீனாகரி' வேலைப்பாட்டில் உருவாக்கப்பட்ட சதுரங்கக் காய்களைப் பரிசாக அளித்தார்.

## ரூ.20,000 கோடியில் 56 ராணுவ விமானங்கள் கொள்முதல்

- இந்திய விமானப் படைக்கு ரூ.20,000 கோடியில் 56 ராணுவத்துக்கான சரக்கு விமானங்கள் கொள்முதல் செய்வதற்கு ஏர்பஸ் டிஃபன்ஸ் அண்ட் ஸ்பேஸ் நிறுவனத்துக்கும் மத்திய அரசுக்கும் இடையே ஒப்பந்தம் கையெழுத்தானது.
- விமானப் படையில் தற்போது பயன்பாட்டில் உள்ள ஏவ்ரோ–748 ரக விமானங்களுக்குப் பதிலாக, சி–295 ரக ராணுவ சரக்குப் போக்குவரத்து விமானங்கள் கொள்முதல் செய்யப்படவுள்ளன.
- இந்த ஒப்பந்தத்தின்படி, ஏர்பஸ் நிறுவனத்தின் ஸ்பெயினில் உள்ள தொழிற்சாலையில் இருந்து அடுத்த 4 ஆண்டுகளில் 16 விமானங்கள் இந்தியாவை வந்தடையும். எஞ்சியுள்ள 40 விமானங்கள், இந்தியாவில் உள்ள டாடா அட்வான்ஸ்டு சிஸ்டம் நிறுவனத்துக்குச் சொந்தமான தொழிற்சாலையில் தயாரிக்கப்படும். இது தொடர்பாக ஏர்பஸ் நிறுவனத்துக்கும் டாடா நிறுவனத்துக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. இந்தியாவில் ராணுவ விமானத்தை தனியார் நிறுவனம் தயாரிப்பது இதுவே முதல் முறையாகும்.

## நிகர நேரடி வரி வசூல் 74% அதிகரிப்பு

- நிகர நேரடி வரி வசூல் நடப்பு நிதியாண்டில் இதுவரையில் 74 சதவீதம் அதிகரித்துள்ளது.

### நேரடி வரி

- நேரடி வரி என்பது தனிநபர் மற்றும் நிறுவனங்கள் நேரடியாக அரசாங்கத்திற்கு செலுத்தும் வரியாகும்.
- வருமான வரி, நிறுவன வரி, சொத்து வரி, பரிசு வரி ஆகியவை நேரடி வரியாகும்.

### வருமான வரித்துறை

- நேரடி வரியானது வருமான வரித்துறையால் வசூலிக்கப்படுகிறது. வருமான வரித்துறை ஒரு அரசுத்துறை நிறுவனமாகும்.

- நிதிதுறை அமைச்சகத்தின் கீழ் வருமான வரித்துறை செயல்படுகிறது.
- தலைவர் – ஜெகநாத் பித்யாதர் (Jagannath Bidyadhar)

## கடுமையான கரோனா நோய்க்கு 'ஆன்டிபாடி' சிகிச்சை: உலக சுகாதார அமைப்பு பரிந்துரை

- கடுமையான கரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, செயற்கையான நோயெதிர்ப்புப் புரதங்களைக் கொண்டு (ஆன்டிபாடி) சிகிச்சை அளிக்க உலக சுகாதார அமைப்பு பரிந்துரைத்துள்ளது.

## சீன இறக்குமதி மருந்து மூலப் பொருளுக்கு மிகை குவிப்பு தடுப்பு வரி

- சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் மருந்துகளுக்கான மூலப்பொருளான செப்ட்ரியாக்ஸோன் சோடியம் ஸ்டிரில் மீது மிகை குவிப்பு தடுப்பு வரி விதிக்க மத்திய வர்த்தக அமைச்சகம் பரிந்துரைத்துள்ளது.
- இப்பொருளைத் தயாரிக்கும் இந்திய உற்பத்தியாளர்களின் நலனைக் காக்கும் கையிலும், சீனாவில் இருந்து குறைந்த மிகவும் குறைந்த விலைக்கு இவை இறக்குமதி செய்யப்படுவதைத் தடுக்கும் வகையிலும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- சுவாசப் பாதைத் தொற்று, தோல் தொற்று, அறுவைச் சிகிச்சையின்போது ஏற்படும் தொற்று உள்ளிட்டவற்றுக்கு மருந்துகளைத் தயாரிக்க செப்ட்ரியாக்ஸோன் சோடியம்ஸ்டிரில் பயன்படுத்தப்படுகிறது.

மிகை குவிப்பு தடுப்பு வரி (Anti Dumping Duty tax)

- உள்நாட்டு சந்தையில் மூலப்பொருட்கள் குறைந்த விலையில் அதிக அளவில் இறக்குமதி செய்யப்படும்போது அரசாங்கம் வெளிநாட்டு இறக்குமதிகளுக்கு "மிகை குவிப்பு தடுப்பு வரி" விதிக்கிறது.
- வெளிநாட்டு இறக்குமதியால் உள்ளூர் வணிகங்கள் மற்றும் சந்தைகளில் நியாயமற்ற முறையில் நடக்கும் வணிகத்திலிருந்து பாதுகாக்க எதிர்ப்பு வரி விதிக்கப்படுகிறது.

## இந்தியா முழுவதும் செப்டம்பர் 25 "அந்தியோதயா திவாஸ்" அனுசரிக்கப்படுகிறது

- 2015ஆம் ஆண்டு முதல் "அந்தியோதயா திவாஸ்" கொண்டாடப்படுகிறது.
- சமுதாயத்தின் பிற்படுத்தபட்டோரை உயர்த்துதல் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

## சர்வதேச அணுசக்தி (IAEA) தணிக்கையாளராக இந்தியா தேர்வு

- 2022–2027, 5 வருடங்களுக்கு இந்தியா இப்பதவிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- IAEA – 1957 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
- தலைமையகம் – வியன்னா, ஆஸ்த்ரியா
- தலைவர் – ரஃபேல் மரியானோ க்ராஸி

## "மருத்துவ சாதன பூங்காக்கள் அமைக்கும் திட்டத்தை அறிவித்தது மத்திய அரசு

- 2024–25 ஆண்டு வரை 400 கோடி இத்திட்டத்திற்கு ஒதுக்கியுள்ளது மத்திய அரசு.
- நோய்களை கண்டறியவும், மருத்துவ உள்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்ற இத்திட்டம் உதவும்.
- ஒரு பூங்காவிற்கு அதிகபட்சம் 100 கோடி ஒதுக்கப்படும்.

## விரைவில் புதிய கூட்டுறவுக் கொள்கை

- புதிய கூட்டுறவுக் கொள்கையை மத்திய அரசு விரைவில் வெளியிடும் என மத்திய கூட்டுறவு, அமைச்சர் அமித் ஷா தெரிவித்தார்.
- மேலும், கூட்டுறவு இயக்கத்தை வலுப்படுத்தும் வகையில் மாநிலங்களுடன் ஒருங்கிணைந்து மத்திய அரசு செயல்படும் என்றும் அவர் தெரிவித்தார்.
- கூட்டுறவு அமைச்சகம் கடந்த ஜூலை மாதம் உருவாக்கப்பட்டது. முதல் முறையாக நடைபெற்ற தேசிய கூட்டுறவு மாநாட்டில் மத்திய அமைச்சர் அமித் ஷா பங்கேற்று பேசினார். இந்த மாநாட்டில் நாடு முழுவதும் இருந்து பல்வேறு கூட்டுறவு நிர்வாகிகளும், 6 கோடிக்கும் மேற்பட்டோர் இணையவழி மூலமாகவும் பங்கேற்றனர்.

### காலத்துக்கேற்ப சட்டங்களை மறுஆய்வு செய்ய வேண்டும்

- கட்டாக்கில் ஒடிஸா மாநில சட்ட சேவை மையத்தைத் திறந்து வைத்த உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி என்.வி.ரமணா மேலும் கூறியதாவது:
- சட்டங்கள் மக்கள் நலனுக்காகவே இயற்றப்படுகின்றன. அவை மக்கள் நலனுக்கு உகந்ததாக உள்ளதா என்பதை அவ்வப்போது மறு ஆய்வு செய்வது அவசியம். நாட்டின் சட்டங்கள் மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு உதவிகரமாக உள்ளதா என்று அவர் கேள்வி எழுப்பினார்.

### கேரளாவில் ஆன்லைன் விளையாட்டிற்கு அடிமையாக உள்ள குழந்தைகளை மீட்க சிறப்பு மையங்கள்: முதல்வர் பினராயி விஜயன்

- இதற்கான ஒரு மையப்படுத்தப்பட்ட வசதி விரையில் நிறுவப்படும் பின்னர் அனைத்து மாவட்டங்களுக்கும் இந்த சேவை விரிவுப்படுத்தப்படும் என்று அவர் தெரிவித்தார்.

### இந்தியாவின் கனிமங்கள் உற்பத்தி 23% அதிகரிப்பு

- இந்தியாவின் கனிமங்கள் உற்பத்தி நடப்பாண்டு ஜூன் மாதத்தில் 23.1 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது.
- இதுகுறித்து மத்திய சுரங்க அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது: 2021 ஜூன் மாதத்தில் சுரங்கம் மற்றும் குவாரித் துறைக்கான குறியீடு 105.5-ஆக இருந்தது. இதையடுத்து, 2020 ஜூன் மாதத்துடன் ஒப்பிடுகையில் கனிமங்களின் உற்பத்தி நடப்பாண்டில் 23.1 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது. முந்தைய நிதியாண்டுடன் ஒப்பிடுகையில், நடப்பு 2021-22 நிதியாண்டின் ஏப்ரல்-ஜூன் காலகட்டத்தில் கனிமங்களின் ஒட்டுமொத்த உற்பத்தியானது 27.4 சதவீதம் வளர்ச்சியடைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

### எண்ம சுகாதாரத் திட்டம்: பிரதமர் இன்று தொடக்கி வைக்கிறார்

- தேசிய எண்ம சுகாதார இயக்கத்தின் மாதிரி திட்டத்தை கடந்த 2020 ஆகஸ்ட் 15-இல் செங்கோட்டை கொத்தளத்தில் உரையாற்றுகையில் பிரதமர் அறிவித்தார். தற்போது 6 யூனியன் பிரதேசங்களில் இந்த மாதிரித் திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகிறது.
- இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு நபருக்கும் சுகாதார அடையாள அட்டை அளிக்கப்படும். மக்களின் மருத்துவ சிகிச்சைக்கான ஆவணமாக செயல்படும்.

### கோவில்களுக்கு நன்கொடையாக பெற்ற நகைகளை உருக்கி தங்க கட்டிகளாக மாற்றும் பணியை மேற்பார்வையிட 3 நீதிபதிகள் கொண்ட குழுவை அமைத்து தமிழக அரசு

- ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி D.ராஜு மற்றும் ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி K.ரவிசந்திரபாபு மற்றும் R.மாலா.
- தங்க கட்டிகளை வங்கிகளில் வைத்து அதில் பெறப்படும் வட்டித்தொகை மூலம் கோயில்களுக்கான வருமானம் ஈட்டப்படும் என்று தெரிவித்துள்ளது.

### தேசிய பேரிடர் மேலாண்மை ஆணைய நிறுவன தின நிகழ்ச்சி

- தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் 17-ஆவது நிறுவன தின நிகழ்ச்சியை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா புது தில்லியில் தொடங்கி வைக்க இருக்கிறார்.
- 'இமயமலைப் பகுதிகளில் ஏற்படும் பேரிடர் நிகழ்வுகளின் தொடர் விளைவுகள்' என்பது இந்த ஆண்டு நிறுவன தினத்தின் கருப்பொருளாகும்.
- நிலச்சரிவு, அதீத கனமழை, நிலநடுக்கம் மற்றும் பனிப்பாறை வெடிப்பு போன்று இமாலயப் பகுதிகளில் ஏற்படும் பேரிடர் நிகழ்வுகளின் தாக்கம் குறித்து பிரபல நிபுணர்கள் கலந்துகொள்ளும் விவாத நிகழ்ச்சி, தொழில்நுட்ப அமர்வில் இடம்பெறும்.

### இந்திய-அமெரிக்க ஒத்துழைப்பால் சர்வதேச மருத்துவ சவால்களை எதிர்கொள்ள முடியும்

- இந்தியாவால் நடத்தப்படும் 4-வது இந்திய-அமெரிக்க சுகாதார பேச்சுவார்த்தை தொடங்கியது.
- இருநாடுகள் இடையே மருத்துவத் துறையில் இருதரப்பு உறவை வலுப்படுத்துவதிலும், ஒத்துழைப்பை மேம்படுத்துவதிலும் கடந்த

2020–ஆம் ஆண்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

- மருத்துவப் பாதுகாப்பு, தொற்று நோய்கள் மற்றும் தொற்று அல்லாத நோய்கள், சுகாதார அமைப்பு முறைகள் மற்றும் சுகாதார கொள்கைகள் சம்பந்தமான பிரச்னைகளில் ஒத்துழைப்பை அளிக்கும் வகையில் இந்திய அரசின் சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகத்திற்கும், அமெரிக்காவின் சுகாதாரம் மற்றும் மனித சேவைகள் துறைக்கும் இடையே மருத்துவத் துறையில் மற்றொரு புரிந்துணர்வு ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுள்ளது.

## ஊட்டச்சத்து செறிவூட்டப்பட்ட 35 பயிர் வகைகள்

- பருவநிலை மாற்றத்தைத் தாங்கக்கூடிய மற்றும் ஊட்டச்சத்து செறிவூட்டப்பட்ட 35 பயிர் வகைகளை பிரதமர் நரேந்திர மோடி அறிமுகப்படுத்தினார்.
- நாட்டில் பெரும்பாலான மக்களிடம் ஊட்டச்சத்துக் குறைபாடு காணப்படுகிறது. அதைக் கருத்தில் கொண்டு ஊட்டச்சத்து செறிவூட்டப்பட்ட பயிர் வகைகளையும், பருவநிலை மாற்றத்தால் ஏற்பட்டுள்ள சவால்களை எதிர்கொள்ளும் திறன் கொண்ட பயிர் வகைகளையும் இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில் (ஐசிஏஆர்) உருவாக்கியது.
- அத்தகைய 35 பயிர் வகைகளை பிரதமர் மோடி காணொலி வாயிலாக நாட்டுக்கு அர்ப்பணித்தார். வறட்சியைத் தாங்கி வளரக் கூடிய கொண்டைக் கடலை, விரைவில் முதிர்வடையக் கூடிய சோயாபீன், நோய் எதிர்ப்புத் திறன் கொண்ட நெல், ஊட்டச்சத்து செறிவூட்டப்பட்ட கோதுமை, சோளம், சிறுதானிய வகைகள் உள்ளிட்ட பயிர்கள் அதில் அடங்கும்.
- சிறுதானியங்கள் ஆண்டு: கிராமங்களுக்கு நவீன தொழில் நுட்பங்களைக் கொண்டு செல்வதில் தொழில்முனைவு நிறுவனங்கள் முக்கியப் பங்காற்ற வேண்டும். 2023–ஆம் ஆண்டானது சர்வதேச சிறு தானியங்கள் ஆண்டாக ஐ.நா. வால் கடைப்பிடிக்கப்படவுள்ளது. அதற்குள் இந்திய சிறுதானியங்களை உலகச் சந்தைகளுக்கு எடுத்துச் செல்ல வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை மாநிலங்கள் மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார்.

## பகத் சிங் பிறந்த தினம்: பிரதமர் மரியாதை

- சுதந்திரப் போராட்ட வீரர் பகத் சிங்கின் பிறந்த தினத்தை முன்னிட்டு பிரதமர் நரேந்திர மோடி பகத்சிங்கின் திருவுருவப்படத்திற்கு மரியாதை செலுத்தினார்.
- துணிச்சலான பகத்சிங், ஒவ்வொரு இந்தியரின் இதயத்திலும் வாழ்கிறார். அவரது தீரம் மிக்க தியாகம், எண்ணற்ற மக்களிடையே தேசபக்தியை தீப்பொறியாகத் தூண்டியது.

## காவிரி நீர் மேலாண்மை ஆணையத்துக்கு முழு நேரத் தலைவர் நியமனம்

- காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் முதல் முழுநேரத் தலைவராக சௌமித்ர குமார் ஹல்தார் (எ) எஸ்.கே. ஹல்தார் மத்திய அமைச்சரவையின் நியமனக் குழுவால் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இதற்கான உத்தரவை மத்திய பணியாளர் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

### காவேரி மேலாண்மை

- காவேரி மேலாண்மை குழு மத்திய அரசால் ஜூன் 1, 2018 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது சுயாதீனமாக செயல்படக்கூடிய நீதித்துறை அமைப்பாகும்.

## ஆராய்ச்சி–மேம்பாட்டுத் துறையில் தனியார் தொழில்துறை முதலீடு

- இந்திய ராணுவத் தளவாட உற்பத்தியாளர் சங்கத்தின் ஆண்டுக்கூட்டம் தில்லியில் நடைபெற்றது. இதில் பங்கேற்று ராஜ்நாத் சிங் பேசியது:
- வேகமாக மாறி வரும் உலக பாதுகாப்புச் சூழல் காரணமாக ராணுவத் தளவாடங்களுக்கான தேவை அதிகரித்துள்ளது. இந்த மாற்றங்களால் பாதிக்கப்படாத பகுதி எதுவும் உலகில் இல்லை. அதன் தாக்கத்தை வர்த்தகம், பொருளாதாரம், தகவல் தொடர்பு, அரசியல் சமன்பாடு, ராணுவ பலம் ஆகியவற்றில் காணலாம்.

## இந்தியாவின் 2022க்கான புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் நிறுவல்கள் பொது முடக்கத்தால் பெருமளவு குறைந்துள்ளது

- ஆற்றல் பொருளாதாரம் மற்றும் நிதி பகுப்பாய்வு (IEFFA) எனும் தனியார் நிறுவனத்தில் ஆய்வில் இத்தகவல் வெளியாகியுள்ளது.
- 2022க்குள் 175 (GW) 2030க்குள் 450 GW நிறுவ இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (2020–

21) காலகட்டத்தில் 7GW உற்பத்தி திறன் மட்டுமே நிறுவப்பட்டுள்ளது.

- மத்திய மின்சார அதிகாரத்தின் தகவலின்படி 2023க்குள் 100GW உற்பத்தி திறன் கொண்ட சூரிய மின் உற்பத்தி இலக்கில் 60 GW அளவிற்கு தரையில் பதிக்கப்படும் வகையை சேர்ந்தது.
- அவற்றுள் ஜூலை 31, 2021 வரை 43.93GW மட்டுமே நிறுவப்பட்டுள்ளது.

## ரூ.50,000 கோடி திட்டங்களை ஆய்வு செய்தார் பிரதமர் மோடி

- 38–ஆவது 'பிரகதி' கூட்டம் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்றது. இதில் ரூ.50,000 கோடி மதிப்பில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்கள் ஆய்வு செய்யப்பட்டன.
- மத்திய மற்றும் மாநில அரசுகளின் செயல்திறனை மதிப்பிடுவது, அரசின் திட்டங்களை உரிய நேரத்தில் செயல்படுத்துதல் ஆகியவையே 'பிரகதி' என்று அழைக்கப்படுகிறது. கடந்த 2015–இல் இந்த பிரகதி திட்டம் தொடங்கப்பட்டது.
- ஒடிஸா, ஆந்திரம், பிகார், ஜார்க்கண்ட் மத்திய பிரதேசம், மகாராஷ்டிரம், ஹரியாணா ஆகிய 7 மாநிலங்களில் நடைபெறும் இந்த திட்டங்களின் மொத்த மதிப்பு ரூ.50,000 கோடியாகும்.
- இதற்கு முன்பு நடைபெற்ற 37 பிரகதி கூட்டங்களில், ரூ.14.39 லட்சம் கோடி மதிப்பிலான 297 திட்டங்கள் ஆய்வு செய்யப்பட்டன.

## பாரத ஸ்டேட் வங்கிக் கிளைகளில் தேர்தல் நிதிப் பத்திரங்கள் விற்பனை

- அரசியல் கட்சிகளுக்கு நிதியளிக்க உதவும் தேர்தல் நிதிப் பத்திரங்களை அக்டோபர் 1 முதல் 10–ஆம் தேதி வரை பாரத ஸ்டேட் வங்கிகளின் அங்கீகரிக்கப்பட்ட கிளைகளில் பெறலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
- பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளுக்கு தனி நபர்கள் மற்றும் நிறுவனங்கள் நிதியளிக்க தேர்தல் நிதிப் பத்திரங்கள் திட்டத்தை மத்திய அரசு கடந்த 2018–ஆம் ஆண்டு அறிவித்தது. இந்த தேர்தல் பத்திரத்தை தகுதியான அரசியல் கட்சிகள் மட்டுமே தங்களின் வங்கிக் கணக்கு மூலம் பணமாக்க முடியும்.
- இந்தப் பத்திரங்கள் வழங்கப்பட்ட தேதியிலிருந்து 15 நாள்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும். மேலும், பத்திரம் டெபாசிட் செய்யப்பட்ட தேதியிலேயே அரசியல் கட்சிகளின் வங்கிக் கணக்குக்கு பணம் சென்றுவிடும்.
- பாரத ஸ்டேட் வங்கிகளில் 1000 முதல் எவ்வளவு தொகையும் விருப்பப்பட்ட கட்சிகளுக்கு அன்பளிப்பாக அளிக்க இயலும்
- இந்த திட்டம் மூலமாக அன்பளிப்பு அளிப்பவர் மற்றும் அதை பெறும் கட்சிகளின் நிதி சார்ந்த செயல்பாடுகள் வெளிப்படைத்தன்மை அடையும்.

## சென்னை ஐஐடி முன்னாள் மாணவர் சங்கம் "முன்னாள் மாணவர்களின் ஆற்றலின் மூலம் மக்களின் வாழ்வை மேம்படுத்துவதற்கான முயற்சியை தொடங்கியுள்ளது

- குறைந்தது 10% முன்னாள் மாணவர்கள் தன்னார்வளர்களாக இத்திட்டத்தில் பங்கேடுப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன்மூலம் இந்தியா மற்றும் வெளிநாட்டில் வாழும் 10 லட்சம் மக்கள் பயனடைவார்கள்.
- "5000 மில்லியன் ஸ்மைல்ஸ்" திட்டத்தின் மூலம் அறிவியல் தொழில்நுட்ப, புதிய கண்டுபிடிப்புகள், நீர் நிலைத்தன்மை பொறியியல், கணிதம் போன்ற துறைகளின் மாணவர்கள் மற்றும் பெண்களுக்கு வழி காட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது.
- இச்சங்கத்தின் சங்கம் நிகழ்வு "சமநிலையை மீட்டமைத்தல் – தலைமைத்துவத்தில் பெண்கள் மற்றும் STEM (Science, Technology, Engineering and Mathematics) அடிப்படையாக கொண்ட நிகழ்வாக நடத்தப்படும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

# 7 சர்வதேச நிகழ்வு



## ஆப்கானிஸ்தானின் சார்க் உறுப்பினர் நிலை

- ஆப்கானிஸ்தானில் ஏற்பட்டுள்ள நிலையற்ற தன்மையினால் இந்தியா உள்ளிட்ட 8 தெற்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பான சார்க் அமைப்பில் ஆப்கானிஸ்தானின் உறுப்பு நிலை குறித்து விவாதம் துவங்கியுள்ளது.

சார்க் (SAARC – South Asian Association for Regional Co-operation).

- துவக்கம் – 2007
- தலைமையிடம் – காத்மாண்டு, நேபாளம்
- உறுப்பு நாடுகள் – ஆப்கானிஸ்தான், வங்கதேசம், பூடான், இந்தியா, மாலத்தீவு, நேபாளம், பாகிஸ்தான், இலங்கை.

## இந்திய பெருங்கடலை அடையும் சீனாவின் சாலை, இரயில் இணைப்பு

- சீனாவின் செங்டு நகரத்திலிருந்து லின்சங் வழியாக மியான்மரின் யாங்கான் வழியாக சாலை மற்றும் இரயில் இணைப்பை ஏற்படுத்தி துவங்கியுள்ளது.
- பாகிஸ்தானின் கவாதர் துறைமுகம் வழியாக ஏற்கனவே இந்திய பெருங்கடலை அடையும் பாதையை சீனா ஏற்படுத்தியுள்ளது.
- தற்போது மியான்மர் வழியாக சீனா இந்திய பெருங்கடலை அடையும் பாதையை ஏற்படுத்தியுள்ளது.

## 2021 உலக பால் உற்பத்தி அறிக்கை

- ராபோபேங்க் 2021 உலகின் சிறந்த 20 பால் உற்பத்தி நிறுவனங்களில் இந்தியாவில் குஜராத் கூட்டுறவு மார்க்கெட்டிங் நிறுவனமான அமுல் 18வது இடத்தில் உள்ளது.
- கடந்த ஆண்டு அறிக்கையில் இந்த நிறுவனம் 16வது இடத்தில் இடம் பெற்றிருந்தது.
- பிரான்சின் லாக்டெய்ஸ் நிறுவனம் உலக அளவில் முதலிடத்தை பெற்றுள்ளது.

## ஆகஸ்டில் 18.6 கோடி கரோனா தடுப்பூசிகள்

- நாட்டின் மக்கள் தொகையில் தகுதி வாய்ந்த 50 சதவீதம் பேருக்கு தடுப்பூசியின் முதல் தவணையை செலுத்தும் இலக்கு அகஸ்ட் 26–ஆம் தேதி எட்டப்பட்டது. தகுதிவாய்ந்த அனைவருக்கும் தடுப்பூசியின் முதல் தவணையை செலுத்திய முதல் மாநிலம் என்ற பெருமையை ஹிமாசல பிரதேசம் பெற்றுள்ளது. அந்த இலக்கை ஆகஸ்ட் 29–ஆம் தேதி ஹிமாசல பிரதேசம் எட்டியது. நாட்டில் 90 சதவீத கரோனா தடுப்பூசி மையங்கள் அரசால் இயக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரஷியாவில் கூட்டு ராணுவப் பயிற்சி: இந்தியா பங்கேற்பு

- ரஷியாவில் 17 நாடுகள் இணைந்து மேற்கொள்ளவுள்ள கூட்டு ராணுவப் பயிற்சியில் இந்தியா பங்கேற்கவுள்ளது.
- ரஷியாவில் உள்ள நீஸ்நி நகரில் செப்டம்பர் 3 முதல் 16–ஆம் தேதி வரை "சபாட்" கூட்டு ராணுவப் பயிற்சி நடைபெறவுள்ளது. இந்தப் பயிற்சியில் இந்தியா, ரஷியா, சீனா, பாகிஸ்தான், இலங்கை, வங்கதேசம், மியன்மர், மலேசியா, மங்கோலியா, ஆர்மீனியா, செர்பியா உள்ளிட்ட நாடுகள் பங்கேற்கவுள்ளன.
- இந்தப் பயிற்சியில் பங்கேற்பது குறித்து இந்திய ராணுவ அதிகாரி ஒருவர் கூறுகையில், "ரஷிய பாதுகாப்புப் படைகளால் நடத்தப்படும் "சபாட்" கூட்டுப் பயிற்சியில் இந்தியா ராணுவ வீரர்கள் சுமார் 200 பேர் பங்கேற்கவுள்ளனர். அவர்களில் பெரும்பாலோனோர் நாகா படைப்பிரிவைச் சேர்ந்தவர்கள். இந்தப் பயிற்சி பயங்கரவாத தடுப்பு நடவடிக்கைகளில் கவனம் செலுத்தும். இதில் பங்கேற்கும் நாடுகளுக்கு இடையிலான

பாதுகாப்பு உறவையும், அவை ஒன்றிணைந்து செயல்படுவதையும் மேம்படுத்துவதுதான் இந்தப் பயிற்சியின் நோக்கம்" என்று தெரிவித்தார்.

## ASHA – பதிவு பெற்ற சமூக சுகாதார செயற்பாட்டாளர்கள்

- பெண்கள் மற்றும் குழந்தைகளின் எதிர்ப்பு சக்தியை அதிகரித்தல் பணிகளில் பதிவுபெற்ற சமூக சுகாதார செயல்பாட்டாளர்கள் பெருமளவு பணிபுரிகின்றனர். இவர்கள் ஆஷா பணியாளர்கள் என்று அழைக்கப்படுகின்றனர்.

ASHA – Accredited Social Health Activist

- 2006–ம் ஆண்டு தேசிய கிராமப்புற சுகாதார திட்டத்தின் கீழ் இந்த பெண் சுகாதார பணியாளர்கள் திட்டம் துவங்கப்பட்டது.
- ஆஷாவில் பணிபுரியும் பெண்கள் 25–45 வயதிற்குட்பட்ட திருமணமான/விதவை/ விவகாரத்து பெற்றவர்கள் பெரும்பாலும் இருப்பர்.

## ஸ்லோவேனிய அதிபருடன் எஸ். ஜெய்சங்கர் சந்திப்பு

- அரசு முறைப் பயணமாக, ஸ்லோவேனியா சென்றுள்ள வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், அந்நாட்டு அதிபர் போரட் பஹோரை சந்தித்துப் பேசினார். அப்போது, இந்தியாவும் ஐரோப்பிய யூனியனும் எதிர்கொண்டுள்ள முக்கியச் சவால்கள் குறித்து இருவரும் விவாதித்தனர்.

## அமெரிக்க வெளியுறவு அமைச்சருடன் ஷ்ரிங்லா சந்திப்பு

- அமெரிக்கா சென்றுள்ள வெளியுறவுத் துறை செயலர் ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லா, அந்நாட்டின் வெளியுறவு அமைச்சர் ஆன்டனி பிளிங்கன், இணை அமைச்சர் செயலர் வெண்டிட ஷெர்மன் ஆகியோரை சந்தித்து இரு நாட்டு உறவு, ஆப்கானிஸ்தான் நிலவரம் ஆகியவை குறித்து ஆலோசனை நடத்தினார்.

## ஜப்பான் பிரதமர் யோஷிஹிடே பதவி விலக முடிவு

- கரோனா விவகாரத்தை கையாண்டதில் எழுந்துள்ள விமர்சனங்களையடுத்து ஜப்பான் பிரதமர் பதவியிலிருந்து விலக யோஷிஹிடே சுகா முடிவு செய்துள்ளார்.

## உயர் பதவிகளில் குறைவான அளவே பெண்கள் உள்ளதாக உச்சநீதிமன்ற நீதிபதி கருத்து

- தற்போது உச்ச நீதிமன்றத்தில் 11 சதவீத அளவிற்கு பெண்கள் பணிபுரிகின்றனர் ஆனால் 75 ஆண்டு சுதந்திரத்தை கடந்த நாட்டில் தற்பொழுது 50 சதவீதம் அளவிற்கு பெண்கள் அனைத்து உயர் துறைகளிலும் பணிபுரிய வேண்டும் அதற்கான நடவடிக்கைகளில் அரசும் மக்களும் கலந்து ஈடுபட வேண்டும் என்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி என் வீரமணி தெரிவித்துள்ளார்.

## கண்டறியப்பட்ட ஒரு லட்சத்து 38 ஆயிரம் உயிரினங்களில் 28% உயிரினங்கள் அழிவை நோக்கி செல்வதாக IUCN தெரிவித்துள்ளது

- இந்தியாவில் கண்டறியப்பட்டுள்ள ஒரு லட்சத்து 38 ஆயிரம் உயிரினங்களில் வாழ்விட இழப்பு அதிக சுரண்டல் வேட்டையாடுதல் தவறான வணிகம் ஆகிய காரணங்களால் வனவிலங்கு சரணாலயங்களில் வாழும் அதிகப்படியான விலங்குகள் அழிவை நோக்கி செல்வதாக IUCN அமைப்பு அறிக்கையில் தெரிவித்துள்ளது கொமோடோ டிராகன் போன்ற உயிரினங்கள் விரைவில் அழிந்து போவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக அந்த அறிக்கையில் கூறியுள்ளது
- கொமோடோ டிராகன் மிகவும் அபாயகரமான நிலையில் உள்ள உயிரினங்கள் பட்டியலில் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

## டென்மார்க் பிரதமருடன் எஸ். ஜெய்சங்கர் சந்திப்பு

- டென்மார்க் தலைநகர் போபன்ஹேகனில் அந்நாட்டு பிரதமர் மெட்டே பிரெட்ரிக்ஸனை இந்திய வெறியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் சந்தித்துப் பேசினார்.

## தலிபான்களின் புதிய அரசு அறிவிப்பு

- ஆப்கானிஸ்தானில் புதிய இடைக்கால அரசை தலிபான்கள் அறிவித்தனர். 33 பேர் கொண்ட அமைச்சரவையில் பிரதமராக முல்லாஹசன் அகுண்ட் (60) அறிவிக்கப்பட்டுள்ளார்.
- தலிபான்களின் அரசுக்கு தலைமை வகிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட அந்த இயக்கத்தின் இணை நிறுவனரான முல்லா அப்துல் கனி பராதர் துணைப் பிரதமராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

## ஆப்கன் விவகாரம்: ரஷிய பாதுகாப்பு கவுன்சில் செயலர் இந்தியா வருகை பிரதமர் மோடியைச் சந்திக்கிறார்

- ஆப்கானிஸ்தான் விவகாரம் குறித்து இந்தியாவுடன் ஆலோசிப்பதற்காக ரஷிய பாதுகாப்பு கவுன்சில் செயலர் நிகோலாய் பட்ருஷேவ் இரு நாள் பயணமாக புது தில்லி வந்தார்.

## முதியோர் நலத் திட்டங்களுக்காக வரி உயர்வு: பிரிட்டன் திட்டம்

- பிரிட்டனில் முதியோர் நலத் திட்டங்களுக்கு அதிக நிதி திரட்டுவதற்காக வரிகளை உயர்த்த அந்த நாட்டுப் பிரதமர் போரிஸ் ஜான்சன் திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.
- இதுகுறித்து அசோசியேட்டட் பிரஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

## யூத புத்தாண்டு: பிரதமர் மோடி வாழ்த்து

- யூத புத்தாண்டான ரோஷ் ஹஷானா இஸ்ரேல் பிரதமர் நஃப்தாலி பென்னட் மற்றும் அந்நாட்டு மக்களுக்கு பிரதமர் மோடி வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.
- இது தொடர்பாக அவர் சுட்டுரையில் வெளியிட்ட பதிவில், 'ரோஷ் ஹஷானாவைக் கொண்டாடும் இஸ்ரேல் பிரதமர் நஃப்தாலி பென்னட்டுக்கும் இஸ்ரேலின் தோழமையான மக்களுக்கும் உலகெங்கிலும் உள்ள யூத மக்களுக்கும் மனமார்ந்த வாழ்த்துகள்' என்று கூறியுள்ளார்.

## பயங்கரவாதத்துக்கு எதிராக செயல் திட்டம்

- உலகை அச்சுறுத்தி வரும் பயங்கரவாதத்துக்கு எதிரான செயல்திட்டத்தை நடைமுறைப்படுத்த பிரிக்ஸ் நாடுகள் உறுதியேற்றுள்ளதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.
- பிரிக்ஸ் கூட்டமைப்பில் இந்தியா, பிரேஸில், ரஷியா, சீனா, தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகள் இடம் பெற்றுள்ளன. அக்கூட்டமைப்பின் 13–ஆவது மாநாடு இந்தியா தலைமையில் காணொலி வாயிலாக நடைபெற்றது. அந்த மாநாட்டுக்கு பிரதமர் மோடி தலைமை வகித்தார்.
- சீன அதிபர் ஷி ஜின்பிங், ரஷிய அதிபர் விளாதிமீர் புதின், பிரேஸில் அதிபர் ஜெயிர் போல்சனேரோ, தென்னாப்பிரிக்க அதிபர் சிறில் ராமபோசா ஆகியோர் மாநாட்டில் பங்கேற்றனர். ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் இடைக்கால அரசை அமைத்துள்ள சூழலில் நடைபெற்ற இந்த மாநாடு முக்கியத்துவம் பெற்றது.
- '15–ஆவது ஆண்டில் பிரிக்ஸ்: நீடித்த நிலையான ஒருமித்த ஒத்துழைப்பு' என்பதே இந்த மாநாட்டின் கருப்பொருளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதுவே பிரிக்ஸ் நாடுகளுக்கிடையேயான ஒத்துழைப்புக்கு அடிப்படையாக உள்ளது. புதிய வளர்ச்சி வங்கி உள்ளிட்ட அமைப்புகளை பிரிக்ஸ் கூட்டமைப்பு தொடக்கியுள்ளது.

## இந்திய, ஆஸ்திரேலிய பாதுகாப்பு அமைச்சர்கள் சந்திப்பு

- தில்லியில் அமைச்சர் ராஜ்நாத் சிங்கை ஆஸ்திரேலிய பாதுகாப்பு அமைச்சர் பீட்டர் டட்டன் சந்தித்தார். இரு நாடுகள் இடையேயான 2+2 பேச்சுவார்த்தை தில்லியில் (செப்டம்பர் 11) நடைபெறவுள்ள நிலையில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.
- இந்திய–ஆஸ்திரேலிய வெளியுறவு, பாதுகாப்பு அமைச்சர்கள் பங்கேற்கும் முதலாவது 2+2 பேச்சுவார்த்தை தில்லியில் நடைபெறவுள்ளது. அதில் பங்கேற்பதற்காக ஆஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் மாரிஸ் பெய்ன், பாதுகாப்பு அமைச்சர் பீட்டர் டட்டன் இந்தியா வந்தனர்.

## ஆயுதம் தாங்கிய ரோபோ: இஸ்ரேல் நிறுவனம் அறிமுகம்

- ரிமோட் மூலம் இயங்கும் ஆயுதம் தாங்கிய ரோபோவை இஸ்ரேலை சேர்ந்த ஒரு நிறுவனம் தயாரித்துள்ளது. இந்த ரோபோவால் போர் நடைபெறும் பகுதியில் ரோந்து செல்ல முடியும் எனவும், ஊடுருவலைக் கண்காணித்து துப்பாக்கியால் சுட முடியும் எனவும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

## பருவநிலை மாற்றத்தால் 20 கோடி மக்கள் இடம்பெயரக் கூடும்: உலக வங்கி

- அடுத்த 30 ஆண்டுகளில் 20 கோடி மக்கள் அவர்கள் இருப்பிடத்தை விட்டு வெளியேறக்கூடும் என்று அறிவித்துள்ளது.
- திங்கள்கிழமை வெளியிடப்பட்ட Groundswell ரிப்போர்ட்டின் இரண்டாவது பகுதியில் மெதுவாக தொடங்கும் காலநிலை மாற்றத்தால் தண்ணீர் தட்டுப்பாடு, பயிர்களின் மகசூல் கடற்மட்டத்தின் நீரின் அளவு உயர்வு போன்ற பிரச்சனைகளை சந்திக்ககூடும் என்று குறிப்பிட்டுள்ளது.
- இவர்களை "காலநிலை குடியேறியவர்கள்" என்று குறிப்பிடப்படுகிறது.

## அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா இணைந்து புதிய அமைப்பை உருவாக்கியுள்ளனர்

- AUKUS பாதுகாப்பு குழுமம் இந்தோ-பசிபிக் பகுதியில் அதிக கவனம் செலுத்தும்.
- வாஷிங்டனில் நடைபெற உள்ள குவாட் தலைவர்கள் மாநாட்டின் ஒரு வாரத்திற்கு முன்பு அமெரிக்க அதிபர் ஜோ-பைடன் புதனன்று "புதிய முத்தரப்பு பாதுகாப்பு அமைப்பை உருவாக்கியுள்ளார்.

## சீனாவுக்கு எதிராக முத்தரப்புக் கூட்டணி

- இந்தோ-பசிபிக் பிராந்தியத்துக்காக புதிய முத்தரப்பு பாதுகாப்பு கூட்டணியை அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் தொடங்கியுள்ளன.
- இந்த பிராந்தியத்தில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வரும் நிலையில், தங்களது நலன்களைப் பாதுகாக்கவும், அணுசக்தியால் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பலை ஆஸ்திரேலியா பெற உதவுவதற்கும் இந்தக் கூட்டணி தொடங்கப்பட்டுள்ளதாக அந்த நாடுகள் அறிவித்துள்ளன.
- இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் தென்சீனக் கடலின் 1.3 மில்லியன் சதுர மைல் பரப்பளவையும் தனது இறையாண்மைக்கு உள்பட்டதாக சீனா உரிமை கொண்டாடி வருகிறது. இப்பகுதியில் உள்ள செயற்கைத் தீவுகளில் ராணுவத் தளங்களையும் சீனா அமைத்துள்ளது. தனது கட்டுப்பாட்டில் உள்ள பல தீவுகளை சீனா ராணுவமயமாக்கியுள்ளது.

## கல்வி அறிவுசார் ஒத்துழைப்பு இரு நாட்டு உறவை வலுப்படுத்தும்: அமெரிக்காவுக்கான இந்திய தூதர்

- இந்தியா – அமெரிக்கா இடையேயான உறவை வலுப்படுத்துவதில் கல்வி – அறிவுசார் ஒத்துழைப்பு மிக முக்கிய பங்கு வகிக்கிறது என்று அமெரிக்காவுக்கான இந்திய தூதர் தரண்ஜீத் சிங் சாந்து கூறினார்.

## LAC விவகாரத்தில் விரைவாக தீர்க்க வேண்டும்: ஜெய்சங்கர்

- தஜிகிஸ்தான் தலைநகர் துசான்பேவில் நடைபெற்ற ஷாங்கை கூட்டுறவு அமைப்பில் "மற்ற நாடுகளுடன் சீனா கொண்டுள்ள உறவை வைத்து இந்தியாவை எடைப்போட வேண்டாம் என்று அவர் கேட்டுக்கொண்டார். இருவரும் லடாக்கில் உள்ள (LAC) இல் நடைபெறும் பிரச்சனைகளை குறித்து விவாதித்தனர்.
- இரு நாடுகளுக்கு இடையேயான உறவை LAC பிரச்சனை பாதிக்கின்றது என்று கூறினார்.

## மீத்தேன் உமிழ்வை குறைக்க ஜோ பைடன் முடிவு

- 26வது கட்சிகளின் மாநாடு (Cop26) நடக்க இன்னும் ஒன்றரை மாதமே உள்ள நிலையில் "பத்து ஆண்டுகளில் (அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் இணைந்து மீத்தேன் உமிழ்வை மூன்றில் ஒரு பங்காக குறைக்கும் என்று உலகளாவிய மீத்தேன் உறுதிமொழி எடுத்தார்.
- வீடியோ கான்ஃபரன்ஸிங் (மெய்நிகர்) முறையில் வெள்ளை மாளிகையில் நடைபெற்ற : Mayor Economies Forum on Energy and Climate (MEF) கூட்டத்தில் இவ்வாறு கூறினார்.
- நவம்பர் மாதம் கிளாஸ்கலோவில் அனைத்து நாடுகளும் பங்கேற்று பாரிஸ் ஒப்பந்தத்தில் (2015) கூறியது போல் 2050க்குள் நிகர பூஜ்ய உமிழ்வுகள் அடைய அர்ப்பணிப்புடன் செயல்படுகின்றதா என்பதை மதிப்பாய்வு செய்யப்படும்.
- வெப்பநிலை உயர்வை 2oC கீழ் கட்டுபடுத்துவதுடன், அதை 1.5oC ஆக மேலும் குறைப்பதே இதன் நோக்கமாகும்.

## பயங்கரவாதம், பருவநிலை மாற்றம், தடுப்பூசி விவகாரங்களை ஐ.நா. பொதுச் சபையில் எழுப்ப இந்தியா திட்டம்

- ஐ.நா. பொதுச் சபையின் 76-ஆவது கூட்டம் கடந்த 14-ஆம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. முக்கிய விவாதக் கூட்டங்கள் (செப்டம்பர் 21) முதல் நடைபெறவுள்ளன. கூட்டத்தில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன், பிரதமர் நரேந்திர மோடி செப்டம்பர் 25-ஆம் தேதியும் உரையாற்ற உள்ளனர்.
- பருவநிலை மாற்றம், நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள், அனைத்து நாடுகளுக்கும் மலிவான விலையில் தடுப்பூசிகள், ஏழ்மை ஒழிப்பு, பொருளாதார மீட்பு, பெண்கள் முன்னேற்றம், பயங்கரவாதம், இந்தோ-பசிபிக், ஐ.நா. சீர்திருத்தங்கள் உள்ளிட்ட விவகாரங்களை எழுப்ப இந்தியா திட்டமிட்டுள்ளது.

## அருகி வரும் 'கட்லா' வகை மீனை மாநில மீனாக அறிவித்தது சிக்கிம் அரசு

- கட்லாவை மாநில மீனாக சிக்கிம் மாநில அரசு அறிவித்துள்ளது. இந்த மீன்களை அருகி வரும் இனங்கள் பட்டியலில் சேர்த்தது.
- கட்லா மீன் இனங்களை பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அவற்றை மாநில மீன் என அறிவித்துள்ளது. இந்த மீன்களை பொதுமக்கள் மிகவும் விரும்புவதுடன் இவற்றுக்கு நல்ல சந்தை மதிப்பு உள்ளது குறிப்பிடத்தக்கது.

## ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO) 9வது உறுப்பினராக சேர்ந்தது ஈரான்

- 8 நிரந்த உறுப்பின நாட்டின் தலைவர்களும் ஈரான் நாட்டின் உறுப்பினர் நிலையை பார்வையாளர்கள் நாடுகளிலிருந்து முழு உறுப்பினராக மாற சம்மதித்துள்ளனர்.
- 15 ஆண்டுகளாக பார்வையாளர் நாடாக இருந்தது ஈரான்.
- துஷான்பே–யில் நடந்த 21வது மாநாட்டில் இதற்கான ஒப்பந்தம் கையெழுத்தானது.

**ஷாங்காய் ஒத்துழைப்பு**

- தலைமயிடம் – பீஜிங் – சீனா
- துவக்கம் – 2001 ஜுன் 15
- துவங்கிய உறுப்பு நாடுகள் – சீனா, ரஷ்யா, தஜிகிஸ்தான், கஜகஸ்தான், உஸ்பெகிஸ்தான், கிர்கிஸ்தான்
- 2017ல் இந்தியா, பாகிஸ்தான் உறுப்பு நாடுகளாக இணைந்தது.

## செப்டம்பர் 21–சர்வதேச அமைதி தினம்

- 24 மணி நேரத்தில் உலகம் முழுவதும் அகிம்சை, போர் நிறுத்தம், அமைதி மற்றும் நல்லிணக்கத்தை கடைப்பிடிக்க வேண்டும்.
- 1981இல் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் நிறுவப்பட்டு 2001 இல் முறையாக நியமிக்கப்பட்ட நாளாகும்.
- 2021ஆம் ஆண்டிற்கான கருப்பொருள் "ஒரு சமமான மற்றும் நிலையான உலகிற்கு சிறந்ததை மீட்டெடுப்பது".

## SAARC–உறுப்பு வெளியுறவுத் துறை அமைச்சர்களின் கூட்டம் நடைபெறாது என SAARC–கில் தற்போதைய தலைமையான நேபாள அரசு அறிவித்துள்ளது

- SAARC (தெற்காசிய நாடுகளின் பிராந்திய கூட்டமைவு
- தலைமையகம் – காட்மண்டு, நேபாளம்
- பொதுச் செயலாளர் – எசலா வீரக்கூன்
- உருவாக்கம் – டிசம்பர் 8, 1985

## சீனர்களின் ஆக்கிரமைப்பால் பெருமளவு மேய்ச்சல் பகுதிகளை இழந்துள்ள கோக்ரா கிராம மக்கள்

**கோக்ரா கிராம மக்கள்**

- கோக்ரா (கிழக்கு லடாக்கை சேர்ந்த பகுதியாகும்).
- ஏப்ரல் – மே 2020 இல் இருந்து இந்தியா மற்றும் சீன இராணுவம் மோதலில் ஈடுபடும் பகுதி.
- தெற்கு மற்றும் வடக்கு பங்காங் ட்சோ (Pangong Tso) மற்றும் கோக்ரா பகுதியிலிருந்து இரு நாட்டு இராணுவத்தினரும் விலகி விட்டனர்.
- ஏப்ரல் 2020 முதல் கிழக்கு லடாக்கை சேர்ந்த 10 Patrolling Points (PP)ஐ சீன இராணுவம் கைப்பற்றியுள்ளது.
- காரகோரம் முதல் ச்சுமார் வரை 65 Patrolling Points (PP) உள்ளது.

## விரிவான பொருளாதார கூட்டு ஒப்பந்தத்தின் (CEPA) காலக்கெடுவை 2022க்குள் ஐக்கிய அரபு அமீரகம் சந்திக்கும் என அந்நாடு அறிவித்துள்ளது

- இந்தியா–ஐக்கிய அரபு அமீரகத்திற்கு இடையேயான CEPA–வின் முறையான பேச்சுவார்த்தை தொடங்கியது.

## உலக நன்மைக்கான திட்டங்களை "க்வாட்" செயல்படுத்தும்

- 'உலக நன்மைக்கான திட்டங்களை க்வாட் செயல்படுத்தும் என்ற நம்பிக்கை உள்ளது' என்று பிரதமர் நரேந்திர மோடி கூறினார்.
- அமெரிக்கா, இந்தியா, ஆஸ்திரேலியா, ஜப்பான் நாடுகளை உள்ளடக்கிய 'க்வாட்' நாற்கரக்

கூட்டமைப்பின் மாநாடு, அமெரிக்க தலைநகர் வாஷிங்டனில் அதிபர் இல்லமான வெள்ளை மாளிகையில் நடைபெற்றது.

- இந்த மாநாட்டில் ஜோ பைடன், பிரதமர் மோடி, ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்காட் மோரிசன், ஜப்பான் பிரதமர் யோஷிஹிடே சுகா ஆகியோர் பங்கேற்றனர்.

**நாற்கர கூட்டமைப்பின் (Quad) உறுப்பினர் நாடுகள்:**

- அமெரிக்கர், ஆஸ்திரேலியா, இந்தியா, ஜப்பான்
- அமெரிக்க பிரதமர் – ஜோ பைடன்
- ஆஸ்திரேலியா – ஸ்கார் மாரிஸன்
- ஜப்பான் – யோஷிஹிடே சுகா

## அணுசக்தி பேச்சுவார்த்தைக்கு ஈரானிடம் அமெரிக்கா

- வல்லரசு நாடுகளுடன் நின்றுபோயுள்ள அணுசக்திப் பேச்சுவார்த்தையை ஈரான் உடனடியாகத் தொடங்க வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.
- இந்த நிலை நீடித்தால், கடந்த 2015–ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட அணுசக்தி ஒப்பந்தத்தை மீட்கவே முடியாத நிலை ஏற்பட்டுவிடும்.
- வியன்னாவில் நடைபெற்று வந்த அணுசக்திப் பேச்சுவார்த்தையில் ஈரான் மீண்டும் கலந்து கொள்ளும் என்று எதிர்பார்த்தோம். அதற்காக தயார் நிலையிலும் உள்ளோம்.

**ஈரான் அணு ஒப்பந்தம்**

- 2015ஆம் ஆண்டு ஈரான் மற்றும் உலகின் சக்திவாய்ந்த நாடுகள் மத்தியில் செய்யப்பட்ட ஒப்பந்தம்
- அனுமதி இல்லாமல் ஈரான் அணு ஆயுதத்தை தாயரிப்பதாக கூறி யுனைடெட் நேஷன்ஸ் செக்யூரிட்டி கவுன்சில் அமைப்பில் இருக்கும் உலகின் சக்திவாய்ந்த நாடுகள் பொருளாதாரத் தடை விதித்தது. (அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா, பிரான்ஸ், சீனா, ஜெர்மனி).
- 2 வருட பேச்சவார்த்தைக்கு பிறகு (JCPOA) Joint Comprehensive Plan of Action என்ற ஒப்பந்தம் இரு தரப்புகள் மத்தியில் செய்யப்பட்டது.
- இதன் மூலம் ஈரான் புளூடோனியம் மற்றும் யுரேனியம் ஆகிய இரு அணுசக்தி பொருட்களை பயன்படுத்த அதிக அளவிலான கட்டுபாடுகள் விதிக்கப்பட்டது.

## உலகின் மிக உயரமான EV சார்ஜிங் நிலையம் இமாச்சலப் பிரதேசத்தில் உள்ள காசாவில் தொடங்கப்பட்டது

- 23 செப்டம்பர், 2021 அன்று தொடங்கப்பட்டது.
- 500 அடி உயரத்தில் இந்த நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.
- நிலவின் தென் துருவத்தில் உள்ள ஒரு பள்ளதாக்கு பகுதிக்கு "ஆர்டிக் பிரதேசத்தை ஆய்வு செய்யவும் ஆய்வாளர் "மேத்யூ ஹென்சனின்" பெயர் வைத்துள்ளது சர்வதேச வானியல் ஒன்றியம்.

## ஹங்கேரியின் புடாபெஸ்டில் பிட்காயினை உருவாக்கியவராக நம்பப்படும் சதோஷி நாகமோட்டோவின் வெண்கல சிலை திறக்கப்பட்டது.

- கிராபிஷாப் தொழிற்நுட்ப பூங்காவில் திறக்கப்பட்டது.

## 157 கலைப் பொருள்கள் பிரதமரிடம் ஒப்படைப்பு

- அமெரிக்கப் பயணத்தை முடித்துக்கொண்டு திரும்பும் பிரதமர் நரேந்திரமோடி, இந்தியாவைச் சேர்ந்த 157 பழங்கால மற்றும் கலைப் பொருள்களைக் கொண்டு வருகிறார்.
- 'க்வாட்' உச்சிமாநாடு, ஐ.நா. பொதுச் சபை கூட்டம் ஆகியவற்றில் பங்கேற்பதற்காக அமெரிக்காவுக்கு 3 நாள் பயணமாகச் சென்ற பிரதமர் மோடி அங்கிருந்து இந்தியாவுக்குப் புறப்பட்டார்.
- பிரதமரின் பயணத்தின்போது இந்தியாவைச் சேர்ந்த பழைமை வாய்ந்த 157 கலைப் பொருள்களை அமெரிக்கா அவரிடம் வழங்கியது. இதுகுறித்து மத்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில், கலாசார பொருள்களின் திருட்டு, சட்டவிரோத வர்த்தகம், கடத்தல் ஆகியவற்றை எதிர்த்துப் போராடுவதற்கான முயற்சிகளை வலுப்படுத்த அதிபர் பைடனும், பிரதமர் மோடியும் தங்களது உறுதிப்பாட்டை வெளிப்படுத்தினர். அதன் ஒரு பகுதியாக இந்தக் கலைப்பொருள்கள் பிரதமர் மோடியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.
- இவற்றில் 71 கலாசார பொருள்கள், ஹிந்து மதம் தொடர்பான 60 சிலைகள், பௌத்த மதம் தொடர்பான 16 சிலைகள், சமண மதம் தொடர்பான 9 சிலைகள் உள்ளிட்டவை அடங்கும். 10–ஆம்

நூற்றாண்டைச் சேர்ந்த ஒன்றரை மீட்டர் ரேவந்தா கற்சிலை, 12–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த 8.5செ. மீ. உயரமுள்ள நேர்த்தியான வெண்கல நடராஜர் சிலை உள்ளிட்டவை இதில் இடம்பெற்றுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஐரோப்பாவில் முதல் பெண்கள் பெரும்பான்மை பாராளுமன்றத்தை தேர்வு செய்தது ஐஸ்லாந்து

- 63 இடங்களில் – 33 இடங்கள் பெண்கள் வெற்றி பெற்றுள்ளனர்.
- உலக வங்கியின் கணக்கெடுப்பின் படி எந்த ஐரோப்பிய நாடுகளிலும் 50% மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் இல்லை. சுவீடன் நாட்டில் 47% உறுப்பினர்கள் உள்ளனர்.
- 50% மேற்பட்ட பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ள நாடுகள் (ருவாண்டி –61%, க்யூபா–50%).
- உலகின் முதல் பெண் பிரதமரை 1980 ஆம் ஆண்டு தேர்வு செய்தது ஐஸ்லாந்து

## ஜெர்மன் அதிபருக்கான தேர்தலில் சமூக ஜனநாயகவாதிகள் கட்சி (SPD) வெற்றி பெற்றுள்ளது

- கன்சர்வேட்டிவ் கட்சியை வீழ்த்தி 2005ஆம் ஆண்டிற்கு பிறகு ஆட்சியை கைப்பற்றினார்.

## ஜப்பான் பிரதமாகிறார் ஃபுமியோ கிஷிடா

- ஜப்பானின் புதிய பிரதமராக முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சர் ஃபுமியோ கிஷிடா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- நடைபெற்ற ஆளுங்கட்சிக் கட்சித் தலைவருக்கான தேர்தலில் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, அவர் நாட்டின் பிரதமராக அடுத்த மாதம் பொறுப்பேற்கிறார்.
- இதுகுறித்து அசோசியேட்டட் பிரஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளதாவது: கடந்த ஓராண்டாக ஜப்பானின் பிரதமராக இருந்து வந்த யோஷிஹிடே சுகா, ஆளும் லிபரல் ஜனநாயகக் கட்சித் தலைவர் பதவியிலிருந்து விலகினார்.

## துனிசியாவின் முதல் பெண் பிரதமராக நஜ்லா பூடன் தேர்வு

- துளசியாவின் ஜனாதிபதி – "புவியியலாளர்" நஜ்லா போடனை நாட்டின் முதல் பெண் பிரதமராக அறிவித்தார்.

# 8 தமிழ்நாடு



## வெள்ளி வென்றார் மாரியப்பன்

- 2–ஆவது பாராலிம்பிக் பதக்கமாகும். சரத்குமாருக்கு இது முதல் பாராலிம்பிக் பதக்கம்.
- போட்டியின்போது மழை பெய்ததன் காரணமாக தனது முயற்சிகள் சற்று கடினமாக மாறியதாகவும், இதனால் உலக சாதனையுடன் தங்கம் வெல்லும் வாய்ப்பு தவறிப்போனதாகவும் மாரியப்பன் தெரிவித்துள்ளார். மறுபுறம், காயம் காரணமாக போட்டியிலிருந்து விலகும் மனநிலையில் இருந்த சரத்குமார், பின்னர் மனம் மாறி களம் கண்டதற்கு பலனாக பதக்கம் வென்றதாகக் கூறியுள்ளார்.
- துப்பாக்கி சுடுதல்: ஆடவர் (பி1) 10 மீட்டர் ஏர் பிஸ்டல் எஸ்ஹெச்1–இல் இந்தியாவின் சிங்ராஜ் அதானா (39) வெண்கலப் பதக்கம் வென்றார். தனது முதல் பாராலிம்பிக்கிலேயே பதக்கம் வென்றுள்ளார் சிங்ராஜ். கரோனா சூழல் காரணமாக பயிற்சிக் களங்கள் (ஷூட்டிங் ரேஞ்சஸ்) அனைத்தும் மூடப்பட பதக்க வேட்கையால் தனது இல்லத்திலேயே குடும்பத்தினரின் உதவியுடன் அத்தகைய பயிற்சிக் களத்தை உருவாக்கி அதில் பயின்று தற்போது பதக்கம் எட்டும் நிலைக்கு சிங்ராஜ் வந்துள்ளார்.
- வாழ்த்து: மாரியப்பன், சரத், சிங்ராஜுக்கு குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த், குடியரசு துணைத் தலைவர் வெங்கையா நாயுடு, பிரதமர் மோடி, மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் அனுராக் தாக்குதர், தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோஹித், முதல்வர் ஸ்டாலின் ஆகியோருடன் பல்துறை பிரபலங்கள் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

## வலிமை சிமெண்ட் அறிமுகப்படுத்தப்படும்

- வலிமை என்கிற பெயரில் புதிய சிமெண்ட் அறிமுகப்படுத்தப்படும் என்று தொழில் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு கூறினார்.
- சட்டப்பேரவையில் தொழில்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்துக்குப் பதில் அளித்து அமைச்சர் தங்கம் தென்னரசு கூறியது:
- தொழில்துறையில் மிக முக்கியமான முதுகெலும்பாக இருப்பது சிப்காட் நிறுவனம். அந்நிறுவனம் 50 ஆண்டுகளை முடித்து பொன்விழா காண்கிறது. 15 மாவட்டங்களில் 24 தொழில் பூங்காக்களை உருவாக்கியுள்ளது. 8 தொழில் பூங்காக்கள் 5,000 ஏக்கர் பரப்பளவில் உருவாக்கப்பட்டு வருகின்றன. வரும் காலங்களில் 18 தொழில் பூங்காக்களை உருவாக்கும் திட்டம் உள்ளது.
- டான்செம் சார்பில் அரியலூரில் புதிய ஆலை உருவாக்கப்பட்டுள்ளது. புதிய ஆலை அதனுடைய உற்பத்தித் திறனை 98 சதவீதம் எட்டியுள்ளது. வலிமை என்கிற பெயரில் புதிய சிமெண்ட் அறிமுகப்படுத்தப்பட உள்ளது என்றார்.

## நில எடுப்புக்குத் தனி அமைப்பு ஏற்படுத்தப்படும்

- நில எடுப்புக்குத் தனி அமைப்பு ஏற்படுத்தப்படும் என்று வருவாய்த் துறை அமைச்சர் கே.கே.எஸ். ஆர்.ராமச்சந்திரன் அறிவித்தார்.
- விவசாயிகள் மற்றும் வீட்டு உரிமையாளர்களின் பட்டா தொடர்பான பிரச்னைகளுக்குத் தீர்வு காணும் அளவில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, 2022 பொங்கல் திருநாளுக்குள் அனைத்து கிராம மக்களும் பயன்பெற வழிவகை செய்யப்படும்.
- நில எடுப்புக்குத் தனி அமைப்பு: நில எடுப்பு நடவடிக்கைகளில் உள்ள நடைமுறைச் சிக்கல்களை எளிமைப்படுத்திடவும், நில உரிமையாளர்களுக்கு சரியான இழப்பீட்டுத் தொகையினை விரைவாக வழங்குவதை உறுதி செய்திடவும் மாநில அளவில் நில எடுப்புக்கான தனி அமைப்பு ஏற்படுத்தப்படும் என்றார்.

## '3 இடங்களில் மினி டைடல் பூங்காக்கள்'

- தகவல் தொழில்நுட்பம் படித்த இளைஞர்களின் வேலைவாய்ப்புக்காக 3 இடங்களில் மினி டைடல் பூங்காக்கள் உருவாக்கப்படும் என்று

தொழில்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு கூறினார்.

- சட்டப்பேரவையில் தொழில்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்துக்குப் பதில் அளித்து அமைச்சர் தங்கம் தென்னரசு கூறியது:
- எல்லா மாவட்டங்களையும் சேர்ந்த இளைஞர்களுக்கும் வேலை வாய்ப்பு கிடைப்பதற்காக தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கு தமிழக அரசு முயற்சிகள் எடுக்கும். தொழிலிலும், கல்வி அறிவிலும் மிகவும் பின்தங்கிய வடமாவட்டங்களான திருவண்ணாமலை, விழுப்புரம் போன்ற மாவட்டங்களில் ஆயத்த ஆடை தொழிற்சாலைகள் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- தகவல் தொழில்நுட்பத்தைப் பொருத்தவரையில் கம்ப்யூட்டர் சயின்ஸ், தகவல் தொழில்நுட்பம் படித்தவர்கள் சென்னை டைடல் பூங்காவுக்கு வந்து குவிய வேண்டியிருந்தது. பெரிய தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் சென்னை நோக்கி வரும் சூழல் உள்ளது.
- இதற்காக சென்னையில் கருணாநிதி, டைடல் பூங்கா உருவாக்கிய போல் மினி டைடல் பூங்காக்கள் தூத்துக்குடி, வேலூர், விழுப்புரத்தில் ஆகிய இடங்களில் உருவாக்குகிறோம். இது இரண்டாம் நிலை நகரங்களிலும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்துவதாக அமையும் என்றார்.

## தவணை முறையில் வீடு வாங்கும் திட்டம் மீண்டும் அறிமுகம்

- தவணை முறையில் வீடு வாங்கும் திட்டம் மீண்டும் அறிமுகப்படுத்தப்படும் என வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற துறை அமைச்சர் சு.முத்துசாமி அறிவித்தார்.
- தமிழக சட்டப்பேரவையில் வீட்டுவசதி துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்துக்குப் பதில் அளித்து அமைச்சர் சு.முத்துசாமி வெளியிட்ட அறிவிப்புகள்:
- தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், பொருளாதாரத்தில் நலிவுற்ற மற்றும் குறைந்த வருவாய் அல்லது மத்திய வருவாய்ப் பிரிவுகளில் வீடு வாங்குவோரின் பொருளாதார அழுத்தத்தைக் குறைக்கும் வகையில் தவணை முறை திட்டம் மீண்டும் அறிமுகப்படுத்தப்படும்.
- சோளிங்கர், வடலூர், திருக்கோவிலூர் மற்றும் நீலகிரி மாவட்டம் கூடலூர் ஆகிய நகரங்களுக்கு முழுமைத் திட்டம் (மாஸ்டர் பிளான்) இல்லை. இயற்கை வளத்தைப் பாதுகாக்கவும், புராதனத் தொன்மையைப் பாதுகாக்கவும் திட்டமிட்ட வளர்ச்சியினை உறுதிப்படுத்த முழுமைத் திட்டங்கள் தயாரிக்கப்படும்.

## தமிழ் வழியில் படித்தவர்களுக்கு அரசுப் பணிகளில் முன்னுரிமை

- தமிழ் வழியில் படித்தவர்களுக்கு அரசுப் பணிகளில் முன்னுரிமை வழங்குவதற்கான வழிகாட்டுதல்களை அரசு வெளியிட்டுள்ளது.
- இது குறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள அரசாணையில் கூறியிருப்பதாவது: பள்ளிப்படிப்பு, பட்டயப்படிப்பு, பட்டப்படிப்பு, முதுநிலை பட்டப் படிப்பு என அனைத்தையம் முழுவதுமாக தமிழ் வழியில் படித்திருக்க வேண்டும். இதர மொழிகளை பயிற்று மொழியாகக் கொண்டு பயின்று, தேர்வுகளை மட்டும் தமிழில் எழுதியவர்களுக்கு இடஒதுக்கீடு மற்றும் முன்னுரிமை கிடையாது.
- ஒன்றாம் வகுப்பு முதல் 9–ஆம் வகுப்பு வரை பள்ளிக்குச் செல்லாமல் நேரடியாக பத்தாம் வகுப்பு தேர்வினை எழுதி தேர்ச்சி பெற்ற தனித்தேர்வர்கள் மற்றும் பிற மாநிலங்களில் தமிழ் அல்லாமல் இதர மொழியினை பயிற்று மொழியாக கொண்டு பயின்று பின்பு இம்மாநிலத்தில் நேரடியாகச் சேரும் வகுப்பிலிருந்து பள்ளி இறுதி வகுப்புகள் வரை தமிழ் வழியில் பயின்றவர்கள் இந்த முன்னுரிமைக்கு தகுதியுடையவர்கள் அல்லர். சான்றிதழ்களின் உண்மைத் தன்மையை சரிபார்த்த பின்னரே 20 சதவீத இடஒதுக்கீட்டின் கீழ் பணி நியமனம் செய்யப்படுவர்.
- தமிழ் வழியில் கல்வி பயின்றதற்கான சான்றிதழ்களில், மாணவர்களின் பெயர், பயின்ற பள்ளி, கல்லூரி, கல்வி நிறுவனங்களின் பெயர், முகவரி, வகுப்புகள், சான்றிதழ் வழங்கிய அதிகாரி ஆகிய விவரங்கள் அடங்கிய விரைவு தகவல் குறியீட்டினை (க்யூஆர்) இடம்பெறச் செய்வதுடன் அந்தச் சான்றிதழ்களை இ–சேவை மையங்கள் மூலம் வழங்குவதற்கு பள்ளிக் கல்வி மற்றும் உயர்கல்வித் துறைகள் உரிய ஆணைகளை வெளியிடும். தமிழ் இலக்கியத்தில் கல்வித் தகுதித் தகுதி பெற்றவர்களை மட்டுமே பள்ளி மற்றும் கல்லூரிகளில் தமிழ் பாடத்துக்கான ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும். தமிழ் பாடத்திலும் மாறுபட்ட வேறு ஒரு பாடத்திலும் பட்டம் பெற்றவர்களை தமிழ் ஆசிரியர்களாக நியமனம் செய்யக் கூடாது என்பதற்கான திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பாக பள்ளிக் கல்வி மற்றும் உயர்கல்வித் துறைகள் நடவடிக்கை மேற்கொள்ளும்.

## "கைம்பெண் மற்றும் ஆதரவற்ற மகளிர் நலவாரியம் உருவாக்கப்படும்"

- கைம்பெண் மற்றும் ஆதரவற்ற மகளிர் நலவாரியம் உருவாக்கப்படும் என்று சமூக நலத்துறை அமைச்சர் கீதா ஜீவன் அறிவித்தார்.
- சட்டப்பேரவையில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்துக்கு பதில் அளித்து அமைச்சர் கீதா ஜீவன் வெளியிட்ட அறிவிப்புகள்:
- தமிழகத்தில் 2030-இல் முதியோர் எண்ணிக்கை 1.5 கோடியாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு தமிழகத்தில் முதியோர்கள் கண்ணியமான வாழ்க்கை வாழ்வதை உறுதி செய்யும் வகையில் மாநில மூத்த குடிமக்கள் கொள்கை உருவாக்கப்படும்.

## குடிசை மாற்று வாரியத்தின் பெயர் மாற்றம்: முதல்வர் மு.க.ஸ்டாலின்

- குடிசைப் பகுதி மாற்று வாரியமானது இனி, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியமாக பெயர் மாற்றம் செய்யப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.
- சட்டப் பேரவையில் வீட்டுவசதி, குடிசை மாற்று வாரிய மானியக் கோரிக்கை மீது விவாதம் நடைபெற்றது. அப்போது, முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட அறிவிப்பு:
- முதல்வராக முதல் முறை ஆட்சிக்கு வந்த போது, குடிசை வாழ் மக்களின் மேம்பாட்டுக்காக குடிசைப் பகுதி மாற்று வாரியம் என்ற ஒரு திட்டத்தை கருணாநிதி தொடங்கினார்.

## சென்னை அருகே சித்த மருத்துவ பல்கலைக்கழகம்

- இந்தியாவிலேயே முதன் முறையாக சித்த மருத்துவப் பல்கலைக்கழகம் சென்னைக்கு அருகில் ஏற்படுத்தப்படும் என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவித்தார்.
- தமிழக சட்டப்பேரவையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்துக்குப் பதில் அளித்து அமைச்சர் மா.சுப்பிரமணியன் வெளியிட்ட அறிவிப்புகள்: தமிழகத்தின் பழைமையான மருத்துவ முறையான சித்த மருத்துவத்தைப் போற்றும் வகையில் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட சித்த மருத்துவத்துக்கு என தனிப் பல்கலைக்கழகம் (இந்திய மருத்துவ முறைகளான ஆயுர்வேதம், யுனானி, ஹோமியோபதி, யோகா, இயற்கை மருத்துவம் உள்பட) சென்னைக்கு அருகில் ஏற்படுத்தப்படும்.
- டாம்ப்கால் நிறுவனம் உற்பத்தி செய்யும் சித்த, ஆயுர்வேத மற்றும் யுனானி மருந்துகள் மக்களுக்கு எளிதாகக் கிடைக்கும் வகையில் தமிழக அரசின் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக விற்பனை செய்யப்படும்.
- முதியோர் நலனுக்காக நிறைவு வாழ்வு மையம் ரூ.3.25 கோடி செலவில் 100 சுகாதார நிலையங்களில் ஏற்படுத்தப்படும். சித்த மருத்துவத்தின் சிறப்பு சிகிச்சை முறையான காயகல்ப மருந்துகள் ஒற்றடம், நீராவிக் குளியல், தொக்கணம் நசியம் (ஆயில் மசாஜ்), திருமூலர் பிரணாயாமம், சித்தர் யோகம் போன்ற சிகிச்சைகள் இந்த முகாமில் அளிக்கப்படும்.
- 120 சித்த, ஆயுர்வேத, யுனானி, ஹோமியோபதி, யோகா மற்றும் இயற்கை மருத்துவ மருந்தகங்கள் சுகாதார நலவாழ்வு மையங்களாக ரூ.32 கோடி செலவில் தரம் உயர்த்தப்படும் என்றார்.

## திராவிடக் களஞ்சியம், சங்க இலக்கியம் இரண்டும் வேறு வேறு தொகுப்பு

- சங்கத் தமிழ் நூல் தொகுப்பிற்கு திராவிடக் களஞ்சியம் என பெயர் சூட்டுவதாக விமர்சனம் எழுந்தநிலையில், இரண்டும் வேறுவேறு என தமிழ் ஆட்சிமொழித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு விளக்கமளித்துள்ளார்.
- இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: தமிழ் வளர்ச்சித்துறை மானியக் கோரிக்கையின் போது வெளியிட்டுள்ள அறிவிப்பில், சங்க இலக்கிய வாழ்வியலை நூலாக வெளியிடுதல் மற்றும் திராவிட களஞ்சியம் வெளியிடுதல் தொடர்பாக சில தவறான தகவல்கள் சிலரால் ஊடகங்களில் திட்டமிட்டுப் பகிரப்படுகின்றன.

## 'வரும் முன் காப்போம் திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படும்'

- கலைஞரின் வரும் முன் காப்போம் திட்டம் மீண்டும் புதுப் பொலிவுடன் செயல்படுத்தப்படும் என்று மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவித்தார்.
- சட்டப்பேரவையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்துக்குப் பதில் அளித்து அமைச்சர் மா.சுப்பிரமணியன் வெளியிட்ட அறிவிப்புகள்:
- கலைஞரின் வரும் முன் காப்போம் திட்டம்

புதுப்பொலிவுடன் மீண்டும் செயல்படுத்தப்படும். ஆண்டுக்கு 1000 சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்படும்.

## தமிழ்நாட்டில் அனைவருக்கு தனித்துவ சுகாதார அடையாள அட்டை

- தமழ்நாட்டில் உள்ள அனைவரும் சுகாதார நடவடிக்கைகளை எளிதில் பெறும் வகையில் தனித்துவமான அடையாள எண்ணை உருவாக்க உள்ளதாக சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

## புலிகாட் பகுதிக்கு வெளிநாட்டு பறவைகள் வருகை

- வலசை போகும் பறவைகள் வடக்கு பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து வரும் பறவைகள் ஒடிசா மாநிலத்தின் சில்கா ஏரிப்பகுதிக்கும், புலிகாட் ஏரி பகுதிக்கும் வருகை புரிந்துள்ளது.
- பிளமிங்கோ, ஸ்பூன் பில் பறவைகள் போன்றவை நீலப்பட்டு பறவைகளின் சரணாலயத்தில் காணப்படுகின்றது.
- ஆண்டுதோறும் 189 பறவையினங்களில் 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட பறவைகள் இங்கு வருகை புரிகின்றன.

## வ.உ.சி. 150–ஆவது பிறந்த தினம்: சென்னை, கோவையில் சிலை

- சுதந்திரப் போராட்டத்தில் தீரத்துடன் ஈடுபட்டு செக்கிழுத்த செம்மல்' என மக்களால் புகழப்படும் வ.உ.சிதம்பரனாரின் 150–ஆவது பிறந்த தினத்தை (5–9–1872) முன்னிட்டு 14 புதிய அறிவிப்புகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்.
- இந்த அறிவிப்பின்படி, வ.உ.சி.க்கு சென்னை, கோவை என இரண்டு இடங்களில் புதிதாக சிலை வைக்கப்பட உள்ளது. இதுகுறித்து, சட்டப்பேரவை விதி 110–ன் கீழ் முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட 14 அறிவிப்புகள்:
- வ.உ.சி.யின்150–ஆவதுபிறந்ததினம்வரும்5–ஆம் தேதி கொண்டாடப்பட உள்ளது. இதையொட்டி, அரசு விழாவாக, அவரைப் பெருமைப்படுத்தும் வகையில் செயலாற்ற வேண்டுமென சட்டப் பேரவை உறுப்பினர் ஈஸ்வரன் கோரிக்கை விடுத்தார். வ.உ.சி.யின் 150–ஆவது பிறந்த தினம் அரசு விழாவாகக் கொண்டாடப்படும் என எனது சுதந்திர தின உரையிலேயே கூறப்பட்டுள்ளது. இந்த ஆண்டு அவரது 150–ஆவது ஆண்டு பிறந்த தினம் வருவதால், 14 புதிய அறிவிப்புகள் வெளியிடப்படுகின்றன.

## தமிழகத்தின் 4 பகுதிகளில் ஒலிம்பிக் மண்டலங்கள்

- தமிழகத்தின் 4 பகுதிகளில் ஒலிம்பிக் மண்டலங்கள் அமைக்கப்பட்டு, இளைஞர்களுக்கு விளையாட்டுப் பயிற்சி அளிக்கப்படும் என்று விளையாட்டுத் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் கூறினார்.
- சட்டப்பேரவையில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்துக்குப் பதில் அளித்து அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேசியது:
- 2006–11–ஆம் ஆண்டுகால திமுக ஆட்சியில் 12,524 ஊராட்சிகளில் அண்ணா கிராம மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் மைதானங்கள் உருவாக்கப்பட்டன.

## பிளாஸ்டிக் பைகளுக்கு செப்டம்பர் 30–ஆம் தேதி முதல் தடை

- தமிழகத்தில் 75 மைக்ரான் தடிமன் அளவுக்குக் கீழுள்ள பிளாஸ்டிக் பைகளுக்கு செப்டம்பர் 30–ந் தேதி முதல் தடை விதிக்கப்படுவதாக சுற்றுச்சூழல் துறை கொள்கை விளக்கக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து, பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பு:
- ஒரு முறை மட்டுமே பயன்படுத்தக் கூடிய பிளாஸ்டிக் பொருள்களுக்கு கடந்த 2019–ஆம் ஆண்டு ஜனவரி 1–ஆம் தேதி முதல் தடை விதிக்கப்பட்டது. பிளாஸ்டிக் பொருள்களின உற்பத்தி, சேமிப்பு, போக்குவரத்து, விற்பனை மற்றும் விநியோகம் ஆகியவற்றுக்குத் தடை கொண்டு வந்த போதிலும் அது திறம்பட செயல்படுத்தப்படவில்லை.

## மன்னார் வளைகுடா பகுதியில் கடற்பசு பாதுகாப்பகம்

- மன்னார் வளைகுடா பகுதியில் கடற்பசு பாதுகாப்பகம் ஏற்படுத்தப்படும் என்று வனத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் அறிவித்தார்.
- சட்டப் பேரவையில் வனத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்துக்குப் பதில் அளித்து அமைச்சர் கா.ராமச்சந்திரன் வெளியிட்ட அறிவிப்புகள்:
- 5 ஆவது காப்பகம்: கன்னியாகுமரி, திருநெல்வெலி, தென்காசி மாவட்டத்தில் உள்ள யானைகளின் வாழ்விடங்களை உள்ளடக்கி தமிழகத்தின் ஐந்தாவது யானைகள் காப்பமகாக அகத்தியர் மலை யானைகள் காப்பகம் ஏற்படுத்தப்படும்.
- மன்னார் வளைகுடா மற்றும் பாக் கடற்பகுதியில் கடற்பசு என்னும் மிக அரிய வகை கடல்வாழ்

பாலூட்டிகள் காணப்படுகின்றன. கடல்மாசு மற்றும் கடற்புல் படுகைகள் அழிக்கப்படுவதால் இந்த இனம் அழிவைச் சந்தித்து வருகிறது.

- கடல்வாழ் விலங்குகள் கொல்லப்படுதல் மற்றும் கடத்தல் தற்போது நன்கு திட்டமிடப்பட்டு, பல மாநிலங்களுக்கு இடையே உள்ள சட்ட விரோத குழுக்கள் உதவியுடன் நடைபெறுகிறது. இதைச் சரியாக கண்டறியவும், புலனாய்வு செய்யவும், சிறப்புப் பயிற்சி பெற்ற பணியாளர்களைக் கொண்டு கடல்சார் உயர் இலக்குப்படை ஏற்படுத்தப்படும்.

## அயோத்திதாசருக்கு வட சென்னையில் மணிமண்டபம் பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

- அயோத்திதாசருக்கு வடசென்னையில் மணிமண்டபம் அமைக்கப்படும் என்று சட்டப் பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார். பேரவை விதி 110-ன் கீழ் அவர் படித்தளித்த அறிக்கை:
- தமிழ்நாட்டு அரசியலைப் பொருத்தவரையில், இரண்டு சொற்கள் இல்லாமல் யாரும் அரசியல் நடத்த முடியாது. ஒன்று தமிழன். இன்னொன்று திராவிடம். இந்த இரண்டு சொற்களையும் அரசியல் களத்தில் அடையாளச் சொல்லாக மாற்றியவர் தான், அறிவாயுதம் ஏந்தியவர் தான் அயோத்திதாசப் பண்டிதர். 1881-ஆம் ஆண்டே மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் பூர்வத் தமிழர் என்று பதியச் சொன்னவர். 1891-ஆம் ஆண்டு அவர் தொடங்கிய அமைப்பின் பெயர் திராவிட மகாஜன சபை. 1907-ஆம் ஆண்டு 'ஒரு பைசாத் தமிழன்' என்ற இதழைத் தொடங்கி அதனை 'தமிழன்' என்ற இதழாக நடத்தி வந்தார். அவர் போட்டுக் கொடுத்த பாதையில்தான் தமிழ் நாட்டு அரசியல் செயல்பட்டு வருகிறது.

## தமிழ்நாட்டில் சுற்றுலா மேம்பாடு

- தமிழ்நாட்டில் உள்ள 300க்கும் மேற்பட்ட சுற்றுலா தளங்களை மேம்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு சுற்றுலா விருது வழங்க அரசு நடவடிக்கைகள் எடுத்துவருகிறது.

## கற்பித்தலில் புதுமையை புகுத்திய தமிழகம், புதுவை ஆசிரியர்கள்

- தேசிய நல்லாசிரியர் விருது பெற்ற தமிழகம், புதுவையைச் சேர்ந்த ஆசிரியர்கள் நவீன தொழில்நுட்பங்கள் மூலம் கற்பித்தலில் புதுமையைப் புகுத்தியவர்கள் ஆவர். ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியை டி.லலிதா ஆராய்ச்சி சார்ந்த கல்வியை, தொழில்நுட்பங்களைப் பயன்படுத்திக் கற்றுக் கொடுக்கும் செயல்முறைகளை அறிமுகப்படுத்தியுள்ளார்
- திருச்சி மாவட்டம், பிராட்டியூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியை கே.ஆஷா தேவி மாணவர்களுக்கு 10-க்கும் மேற்பட்ட தனித் திறன் பயிற்சிகள் வழங்குவது. மாணவர்கள் எண்ணிக்கையை அதிகரித்தது போன்ற பல்வேறு செயல்பாடுகளில் சிறந்து விளங்கியுள்ளார்.

## சிங்காரச் சென்னை திட்டத்தின் இரண்டாம் பாகத்தை 10 மையக் கருத்துகளின் அடிப்படையில் செயல்படுத்த மாநகராட்சி திட்டம்

- சென்னை மாநகராட்சியை ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் பொலிவுறு நகரமாக மாற்ற 10 முக்கியமான மையக்கருத்துகள் கருத்தில் கொள்ளப்பட்டு அவற்றின் அடிப்படையில் 200 கோடி ரூபாய் திட்ட மதிப்பில் மேம்படுத்தப்பட உள்ளதாக சென்னை மாநகராட்சி ஆணையம் தெரிவித்துள்ளது எழில்மிகு சென்னை நீர் மிகு சென்னை இவ்வாறு பத்து மையக் கருத்துக்களின் அடிப்படையில் சென்னை மாநகரம் அழகு படுத்தப்பட உள்ளது.

## ரூ.1,32,500 கோடி மின் திட்டங்களுக்கு ஆலோசனை

- மின் உற்பத்தியில் தமிழகம் தன்னிறைவு அடைவதற்கு ரூ.1 லட்சத்து 32,500 கோடியில் திட்டமிடப்பட்டுள்ள மின் திட்டங்களுக்கு ஆலோசனை வழங்குவது தொடர்பாக மின் வாரியம் - இந்திய மரபுசாரா எரிசக்தி மேம்பாட்டு நிறுவனத்துக்கும் (ஐஆர்இடிஏ) இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் திங்கள்கிழமை கையெழுத்தானது.
- தமிழகத்தின் மின்தேவைகளைப் பூர்த்தி செய்வதில் தன்னிறைவு பெறுவதற்கும், தனியாரிடமிருந்து மின் கொள்முதல் செய்யும் செலவைக் குறைப்பதற்கும், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் அடுத்த 10 ஆண்டுகளில் குறைந்தபட்சம் 20 ஆயிரம் மெகாவாட் சூரிய ஒளிமின்சாரம், 3,000 மெகாவாட் நீரேற்று புனல் மின்சாரம், 2,000 மெகாவாட் எரிவாயு மின்சாரம் என மொத்தம் 25,000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யத் திட்டமிட்டுவருகிறது.

## தகவல் பெறும் சட்டம்: மேல்முறையீட்டை டிஜிட்டல் மயமாக்க நடவடிக்கை

- தகவல் பெறும் உரிமைச்சட்டத்தின் கீழ், மேல்முறையீட்டுப் பணிகளை டிஜிட்டல்மயமாக்க நடவடிக்கை எடுத்து வருவதாக அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தெரிவித்தார்.
- சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின் போது, வேளச்சேரியில் தகவல் ஆணையக் கிளை அலுவலகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அந்தத் தொகுதியின் உறுப்பினர் ஹசன் மௌலானா கேள்வி எழுப்பினார்.

## "கைத்தறி நெசவாளர்களுக்கு 10% ஊதிய உயர்வு"

- கைத்தறி நெசவாளர்களுக்கு அடிப்படை கூலியில் 10 சதவீதமும், அகவிலைப்படியில் 10 சதவீதமும் உயர்த்தி வழங்கப்படும் என்று கைத்தறி துறை அமைச்சர் ஆர்.காந்தி அறிவித்தார்.
- சட்டப்பேரவையில் கைத்தறி மற்றும் துணிநூல் துறைமானியக்கோரிக்கைமீதானவிவாதத்துக்குப் பதில் அளித்து அமைச்சர் ஆர்.காந்தி வெளியிட்ட அறிவிப்புகள்: கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு அரசால் வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தள்ளுபடி மானியத்துக்குக் கூடுதலாக ரூ.160.11 கோடி வழங்கப்படும்.

## ஈயத்தால் ஏற்படும் மாசைக் கட்டுப்படுத்த சென்னை, கான்பூர் ஐஐடி–க்கள் ஆய்வு

- சென்னை ஐஐடி மற்றும் கான்பூர் ஐஐடி ஆராய்ச்சியாளர்கள் ஈய மாசுபாட்டைக் குறைக்க உதவும் கொள்கைகளையும் கருவிகளையும் கண்டறிய ஓர் ஆய்வு நடத்துகின்றனர்.
- ஈய மாசுபாடு மக்களின் மன மற்றும் உடல் ஆரோக்கியத்திற்குத் தீங்கு விளைவிப்பதுடன் சுற்றுச்சூழலையும் மாசுபடுத்தும் என்பதால் ஈயத்தை மறுசுழற்சி செய்வது குறித்த ஆய்வை இரு கல்வி நிறுவனங்களின் ஆராய்ச்சியாளர்கள் கூட்டாக மேற்கொண்டுள்ளனர்.
- இந்தியாவில் 27.5 கோடி சிறார்கள் உள்பட, உலகில் மூன்றில் ஒரு பங்கு சிறார்கள் ஈயத்தால் பாதிக்கப்படுவதாக யூனிசெஃப் அறிக்கை தெரிவிக்கிறது. ஈய மாசுபாட்டால் பாதிக்கப்படுவோர் ரத்தத்தில் ஈயத்தின் அளவு அதிகமாகி, புத்திக்கூர்மை, கவனம் ஆகியவற்றைப் பாதிப்பதுடன், ரத்தசோகை, சிறுநீரகம் மற்றும் கல்லீரல் நோய்களும் ஏற்படுகின்றன.
- ஈயத்தை மறுசுழற்சி செய்யும் தொழிலாளர்கள், முறையான வழியில் மறுசுழற்சி செய்ய பயிற்சியில்லாமல், ஈயம்–அமில பேட்டரிகளை உடைத்து, நிலத்திலும் சுற்றுப்புறங்களிலும் அமிலம் மற்றும் ஈய மாசை உருவாக்குகின்றனர். மேலும், திறந்த உலைகளில் ஈயத்தை உருக்குவதால் விஷ வாயுக்கள் வெளியேறி காற்றில் கலக்கின்றன. இது, பல்வேறு தீங்கான விளைவுகளை ஏற்படுத்துகிறது.
- செலவு குறைவான வழிமுறைகளைப் பின்பற்றும் முறைசாராச் செயல்முறைகளும் அதனால் ஏற்படக் கூடிய பாதகமான விளைவுகளும் வளரும் நாடுகளில் அதிகம் காணப்படுகின்றன. இதைத் தடுக்க கடுமையான சட்ட விதிமுறைகள் இல்லாமையும், மாற்றுமுறைகள் அதிக செலவு உள்ளதும் தவறான வழிமுறைகள் தொடர்வதற்கு காரணங்களாகக் கூறப்படுகின்றன.

## விரைவில் ஊரக உள்ளாட்சித் தேர்தல்

- தமிழகத்தில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் தேதி விரைவில் அறிவிக்கப்படும் என தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் வெ.பழனிகுமார் தெரிவித்தார்.
- உள்ளாட்சித் தேர்தல் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுடனான ஆலோசனைக் கூட்டம் சென்னை அரும்பாக்கத்தில் உள்ள தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் அலுவலகத்தில் நடைபெற்றது.

## கடைகளில் பணியாளர்களுக்கு இருக்கை வசதி கட்டாயம்

- கடைகள், நிறுவனங்களில் பணியாற்றும் அனைத்துப் பணியாளர்களுக்கும் இருக்கை வசதி அளிப்பதற்கான சட்ட மசோதா பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது.
- தொழிலாளர் நலன்– திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் தாக்கல் செய்த மசோதாவில் கூறப்பட்டுள்ளதாவது:– தமிழகத்தில் உள்ள கடைகள், நிறுவனங்களில் பணிபுரிவோர் அவர்களின் வேலை நேரம் முழுவதுமாக நிற்க வைக்கப்படுகின்றனர். அதன் விளைவாக பலவகையான உடல்நலக் கேடுகளுக்கு உள்ளாகின்றனர். தங்களின் வேலை நேரம் முழுவதும் நின்று கொண்டே இருக்க வேண்டிய நிலை உள்ளது. இதைக் கருத்தில் கொண்டு, கடைகள், நிறுவனங்களின் அனைத்துப் பணியாளர்களுக்கும் இருக்கை வசதி வழங்குவது அவசியமானது.

- இதற்கேற்ற வகையில், 1947–ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள், நிறுவனங்கள் சட்டத்தை உரிய முறையில் திருத்தம் செய்வதென முடிவு செய்யப்பட்டுள்ளது.
- பங்களிப்புத் தொகையை உயர்த்த : இதேபோன்று அமைச்சர் சி.வி.கணேசன் தாக்கல் செய்த மற்றொரு மசோதாவில், தொழிலாளர் நல நிதியத்துக்கான பங்களிப்புத் தொகையை உயர்த்த வழி செய்யப்பட்டுள்ளது. அதில் கூறப்பட்டுள்ளதாவது:– தமிழ்நாடு தொழிலாளர் நல நிதியத்துக்கான பங்களிப்புகளின் தொகை 2015–ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்டது. ஐந்து ஆண்டுகள் முடிவடைந்துவிட்டதால், தொழிலாளர் நலநிதியத்துக்கான பங்களிப்புகளின் உச்சவரம்பினை உயர்த்த வேண்டிய தேவை இருக்கிறது. இதைக் கருத்தில் கொண்டு தொழிலாளர் நல நிதிய பங்களிப்புக்கான உச்ச வரம்பாக, பணியாளரின் பங்களிப்பு ரூ.50–க்குக் குறையாத வகையிலும், பணியமர்த்துவரின் பங்களிப்பு ரூ.100–க்குக் குறையாமலும், அரசின் பங்களிப்பாக ரூ.50–க்குக் குறையாமல் ஒரு தொகையும் உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு வழிவகுக்கும் வகையில் மசோதா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## தமிழ்நாட்டின் வீட்டு வசதி திட்டங்களுக்கு ஆசிய வளர்ச்சி கடன்

- 150 மில்லியன் டாலர் ஆசிய வளர்ச்சி வங்கி தமிழ்நாட்டின் வீட்டு வசதி திட்டங்களுக்கு கடனுதவி அளிக்க ஒப்புதல் அளித்துள்ளது.

**ஆசிய வளர்ச்சி வங்கி**

- உருவாக்கம் – 1966
- தலைமையிடம் – மணிலா, பிலிப்பைன்ஸ்.
- தலைவர் – மஸாட்சுகு அஸாகாவா

## அகவிலைப்படி உயர்வு ஜனவரி 1 முதல் அமல்

- அரசு ஊழியர்கள், ஓய்வூதியதாரர்களுக்கு அகவிலைப்படி உயர்வு அடுத்த ஆண்டு ஜனவரி 1–ஆம் தேதி முதல் அமல்படுத்தப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.
- முன்னதாக, நிதிநிலை அறிக்கையில் அடுத்த ஆண்டு ஏப்ரல் 1–ஆம் தேதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. தற்போது ஜனவரி முதல் தேதியிலிருந்து அமல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
- சட்டப் பேரவையில் விதி 110–இன் கீழ் அரசு ஊழியர்களுக்கான பல்வேறு சலுகைகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார். அவர் படித்தளிக்க அறிக்கை விவரம்:–
- அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு அகவிலைப்படி உயர்வு குறித்து, நிதிநிலை அறிக்கையில் அடுத்த ஆண்டு ஏப்ரல் 1–ஆம் தேதி முதல் அமல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இதுகுறித்து அரசு ஊழியர்கள் சங்கங்கள் கோரிக்கைகள் விடுத்தன. அரசுக்கு கடும் நெருக்கடியான நிதிச் சூழல் இருப்பினும், அரசு அலுவலர்கள், ஓய்வூதியதாரர்களின் நலனைக் கருத்தில் கொண்டு அடுத்த ஆண்டு ஜனவரி 1–ஆம் தேதி முதல் அகவிலைப்படி உயர்வு அமல்படுத்தப்படும்.

## ஆதிதிராவிடர்– பழங்குடியினர் நல ஆணையம் புதிதாக அமைக்கப்படும்

- ஆதிதிராவிட மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க ஆதிதிராவிடர் – பழங்குடியினர் நல ஆணையம் என்கிற புதிய அமைப்பு உருவாக்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் சட்டப்பேரவையில் அறிவித்தார்.
- பேரவையில் 110–ஆவது விதியின் கீழ் முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட அறிவிப்புகள்: மாநில அளவில் ஆதி திராவிடர்கள், பழங்குடியினர் ஆகியோருடைய சட்டப்பூர்மான உரிமைகளைப் பாதுகாக்கவும், அவர்களுடைய முக்கியமான பிரச்னைகளுக்குத் தீர்வு காணவும், தமிழ்நாடு ஆதி திராவிடர்–பழங்குடியினர் நல ஆணையம் என்கிற புதிய அமைப்பு ஒன்றைத் தன்னாட்சி அதிகாரத்துடன் செயல்படும் வகையில் உருவாக்க தமிழக அரசு சட்டம் இயற்றும்.
- வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின்கீழ் பதியப்பட்டுள்ள வழக்குகளை விரைவாக இறுதி செய்வதற்குத் தற்சமயம் தமிழகத்தில் 18 சிறப்பு நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. மேலும் 4 புதிய நீதிமன்றங்கள் அமைப்பதற்கு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.
- 4 புதிய நீதிமன்ங்களை சேலம், கிருஷ்ணகிரி, மதுரை, திருநெல்வேலி என வழக்குகள் அதிகம் நிலுவையில் உள்ள மாவட்டங்களில் நியமிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.
- ரூ.10 லட்சம்: தமிழகத்தில் பல கிராமங்களில் ஜாதி வேறுபாடுகளற்ற மயானங்கள் பயன்பாட்டில் உள்ளன. இறுதிப் பயணத்திலும் பிரிவினைகள் இருக்கக் கூடாது என்பதில் மற்றவர்களுக்கு முன் மாதிரியாக விளங்கும் இத்தகைய சிற்றூர்களுக்கு ஊக்கத் தொகை வளர்ச்சிப் பணிகளைச்

செயல்படுத்த அரசு சார்பில் ரூ.10 லட்சம் பரிசுத் தொகையாக வழங்கப்படும்.

- வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழக்கின் தன்மைக்கேற்றவாறு ரூ.85 ஆயிரத்திலிருந்து ரூ.8.25 லட்சம் வரை தற்சமயம் வழங்கப்பட்டு வருகிறது. இனி இத்தொகை பாதிக்கப்பட்டவர்களுக்குக் குறைந்தபட்சமாக ரூ.1 லட்சம் முதல் அதிகபட்சமாக ரூ.12 லட்சம் வரை மாநில அரசு நிதி மூலம் உயர்த்தி வழங்கப்படும் என்றார்.

## அரசுத் துறைகளை மின்மயமாக்க புதிய திட்டம்

- அரசுத் துறைகளின் செயல்பாடுகளை படிப்படியாக எண்ம மயமாக்க, 'எண்ம (டிஜிட்டல்) தமிழ்நாடு' என்ற திட்டம் செயல்படுத்தப்படும் என்று தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் மனோ தங்கராஜ் அறிவித்தார்.
- வெளிப்படையான நிர்வாகத்தை குடிமக்களுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டு மின்னாளுகையைபடிப்படியாகஅரசின்அனைத்து நிலைகளிலும் புகுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதை நோக்கமாகக் கொண்டு "எண்ம தமிழ்நாடு' திட்டம் செயல்படுத்தப்படும். மக்களுடன் நேரடித் தொடர்பு கொண்ட மற்றும் அவர்களிடம் தாக்கத்தை ஏற்படுத்தும் அரசுத் துறைகளின் செயல்பாடுகள் படிப்படியாக மின்மயமாக்கப்படும்.
- தமிழக அரசுத் துறைகளின் அலுவலகச் செயல்பாடு மின்மயமாக்கும் திட்டம் அரசால் செயல்படுத்தப்படும். இது விரைந்து முடிவெடுப்பதற்கான செயல்திறனை மேம்படுத்த உதவும். இது காகிதப் பயன்பாட்டைக் குறைக்கவும் உதவும். இந்தத் திட்டம் முதல் கட்டமாக தலைமைச் செயலகத்தில் இந்த ஆண்டுக்குள் செயல்படுத்தப்படும். இரண்டாவது கட்டமாக பிற அரசுத் துறை அலுவலகங்களில் அமல்படுத்தப்படும்.
- மெய்நிகர் அருங்காட்சியகம்: மெய்நிகர் அருங்காட்சியகம் தமிழ் இணையக் கல்விக் கழகத்தில் அமைக்கப்படும். இதன்மூலம் தமிழகத்தின் பாரம்பரியம் வரலாற்றுச் சின்னங்கள், கலைப்பொருள் குறித்த ஆவணங்களை மெய்நிகர் மூலமாக அறிந்திட முடியும்.
- தகவல் தொழில்நுட்பம் சார்ந்த உலகளாவிய நிறுவனங்களுடன் இணைந்து யூமாஜின் எனும் வருடாந்திர தொழில்நுட்பத் தலைமை உச்சி மாநாடு தமிழகத்தின் பல்வேறு சுற்றுலா நகரங்களில் நடத்தப்பட உள்ளது. முதலாவது மாநாடு சென்னையில் நடத்தப்படும் என்று அமைச்சர் மனோ தங்கராஜ் அறிவித்தார்.

## தமிழ்ப் பண்பாட்டின் வேர்களைத் தேட இந்தியா–வெளிநாடுகளில் ஆய்வுகள் (முதல்வர் மு.க.ஸ்டாலின்)

- முதல் கட்டமாக, சங்ககாலத் துறைமுகமான முசிறி, இப்போது பட்டணம் என்ற பெயரில் கேரளத்தில் அமைந்துள்ளது. சேர நாட்டின் தொன்மையையும், பண்பாட்டையும் அறிந்து கொள்ளும் வகையில் கேரள மாநிலத் தொல்லியல் வல்லுநர்களுடன் இணைந்து அங்கு ஆய்வுப் பணி மேற்கொள்ளப்படும். ஆந்திர மாநிலம் வேங்கி, கர்நாடக மாநிலம் தலைக்காடு, ஒடிஸா மாநிலம் பாலூர் ஆகிய வரலாற்றுச் சிறப்புடைய இடங்களிலும் ஆய்வுகள் மேற்கொள்ள உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.
- ரோமப் பேரரசின் ஒரு பகுதியாக விளங்கிய எகிப்து நாட்டிலுள்ள குசிர்–அல்–காதிம் மற்றும் பெர்னிகா, ஓமன் நாட்டின் கோர் ரோரி ஆகிய இடங்களில் பழந்தமிழகத்தோடு இருந்த வணிகத் தொடர்பை உறுதி செய்யும் வகையில் தமிழி எழுத்து பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் கிடைத்துள்ளன. அந்தப் பகுதிகளில் அந்தந்த நாட்டின் தொல்லியல் வல்லுநர்களுடன் இணைந்து ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.
- தென்கிழக்காசிய நாடுகளான இந்தோனேசியா, தாய்லாந்து, மலேசியா, வியத்நாம் ஆகிய நாடுகளில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களில் அந்தந்த நாட்டுத் தொல்லியல் வல்லுநர்கள் துணையுடன் உரிய அனுமதி பெற்று ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

## தென் தமிழக பொக்கிஷங்களை காட்சிப்படுத்த நெல்லையில் ரூ.15 கோடியில் நவீன அருங்காட்சியகம்

- தென் தமிழகத்தில் அகழ்ந்தெடுக்கப்பட்ட அரிய பொக்கிஷங்களை காட்சிப்படுத்த நெல்லையில் ரூ.15 கோடியில் நவீன அருங்காட்சியகம் அமைக்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.
- சட்டப் பேரவையில் விதி 110–ன் கீழ் அவர் படித்தளித்த அறிக்கை:– தமிழ்நாடு தொல்லியல் துறையால் இப்போது மேற்கொள்ளப்பட்டு வரும் அகழாய்வின் போது ஆதிச்சநல்லூருக்கு அருகே சிவகளைப் பறம்புப் பகுதியில் முதுமக்கள் தாழி ஒன்று கண்டெடுக்கப்பட்டது. இதிலிருந்த நெல்மணிகள் அமெரிக்க நாட்டின் மியாமி

நகரத்தில் அமைந்திருக்கும் உலகப் புகழ்பெற்ற பீட்டா பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டன. இதன் ஆய்வு முடிவுகள் கிடைத்துள்ளன.

- கி.மு.1,155–ஆம் ஆண்டு: முதுமக்கள் தாழியில் கண்டெடுக்கப்பட்ட நெல்மணிகளின் காலம் கி.மு.1,155 எனக் கண்டறியப்பட்டுள்ளது. எனவே, தண்பொருநை என்று அழைக்கப்பட்ட தாமிரபரணி ஆற்றங்கரை நாகரிகம் 3, 200 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதை அறிவியல் ஆய்வுகளின் அடிப்படையில் உறுதிசெய்ய முடிகிறது. இதனை அறிவிப்பில் அளவிட முடியாத பெருமிதமும், மனமகிழ்ச்சியும் கொள்கிறேன். பண்டைய தமிழர்களின் செழுமையான பண்பாடு, கடல்வழி வணிகம், நீர் மேலாண்மை, இரும்பு உருக்குதல், அரிய மணிகள் தயாரித்தல், முத்துக் குளித்தல் போன்ற தொழில்நுட்பங்களை உலகம் அறிந்து கொள்ளத் தேவையான சான்றுகளைச் சேகரிக்கும் வகையில், இந்தியாவில் வேறெந்த மாநிலத்தை விடவும் அதிகளவு நிதியாக ரூ.5 கோடி நிகழ் நிதியாண்டில் ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக, ஆதிச்சநல்லூர், சிவகளை மற்றும் கொற்கை உள்ளிட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வின் போது கிடைத்த அரிய பொருள்களை அழகுறக் காட்சிப்படுத்தும் விதமாக, திருநெல்வேலி நகரில் ரூ.15 கோடியில் நவீன வசதிகளுடன் அருங்காட்சியகம் அமைக்கப்படும்.
- கீழடி நாகரிகம்: கீழடியில் தொடர்ந்து அகழாய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அங்கு அண்மையில் சூரியன், நிலவு மற்றும் வடிவியல் குறியீடுகள் கொண்ட முத்திரைகளுடன் கூடிய வெள்ளிக் காசு கண்டெடுக்கப்பட்டது. அதை ஆய்வு செய்த தலைசிறந்த நாணயவியல் அறிஞரும், கொல்கத்தா பல்கலைக்கழகப் பேராசிரியருமான சுஷ்மிதா மஜூம்தார், வெள்ளிமுத்திரைக் காசானது கி.மு.நான்காம் நூற்றாண்டுக்கு முற்பட்டது எனக் கருத்துத் தெரிவித்துள்ளார்.
- ஏற்கெனவே, கரிம பகுப்பாய்வு முடிவுகளின்படி, கீழடியில் கண்டெடுக்கப்பட்ட தமிழி எழுத்துகளின் காலம் கி.மு. ஆறாம் நூற்றாண்டு என்று அறிவிக்கப்பட்ட நிலையில், அதனை வலுப்படுத்தும் விதமாக இப்போது பெறப்பட்ட இரண்டு கரிம மாதிரிகளின் பகுப்பாய்வு முடிவுகளிலும் கீழடி நாகரிகம் கி.மு.ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனத் தெரிய வந்துள்ளது.
- கொற்கையிலும் அகழாய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த அகழாய்வில் இப்போது கருப்பு வண்ணப்பூச்சு பெற்ற கங்கை சமவெளியைச் சேர்ந்த பானை ஓடுகள் கிடைத்துள்ளன. இதன்மூலம், கொற்கைத் துறைமுகமானது, கி.மு.ஆறாம் நூற்றாண்டுக்கு முன்பே வெளிநாடுகளுடனும், இந்தியாவின் பல்வேறு பகுதிகளுடனும் வணிகத் தொடர்பு கொண்டிருந்தது என்பது உறுதியாகிறது முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

## தேசிய கல்வி நிறுவனங்கள் தரவரிசையில் சென்னை ஐ.ஐ.டி. முதலிடம்

- 2021–ஆம் ஆண்டு தேசிய கல்வி நிறுவனங்கள் தரவரிசையில் சென்னை ஐஐடி ஒட்டுமொத்தப் பிரிவிலும், பொறியியல் பிரிவிலும் தொடர்ந்து மூன்றாவது முறையாக முதலிடத்தைப் பெற்றுள்ளது.
- இதில், பல்வேறு பிரிவுகளில் தமிழகத்தைச் சேர்ந்த 10 கல்வி நிறுவனங்கள் (பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், தொழில்நுட்ப நிறுவனங்கள்) முதல் 10 இடங்களைப் பெற்றுள்ளன.
- நாடு முழுவதிலும் உள்ள கல்வி நிறுவனங்களைத் தரவரிசைப்படுத்த தேசிய கல்வி நிறுவன தரவரிசைக் கட்டமைப்பு (என்ஐஆர்எஃப்) ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் 2015–ஆம் ஆண்டுமுதல் கல்வி நிறுவனங்களைத் தரவரிசைப்படுத்தி வருகிறது. இந்த நிலையில், 2021–ஆம் ஆண்டுக்கான தரவரிசைப் பட்டியலை மத்திய கல்வித் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் காணொலி வழியில் வெளியிட்டார். கல்வித் துறை இணையமைச்சர்கள் அன்னபூர்ணா தேவி, டாக்டர் சுபாஷ் சர்க்கார், டாக்டர் ராஜ்குமார் ரஞ்சன் சிங் ஆகியோரும் பங்கேற்று தரவரிசைப் பட்டியலை வெளியிட்டனர்.
- ஒட்டுமொத்தப் பிரிவிலும், பொறியியலிலும் சென்னை ஐஐடி தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக முதலிடத்தைப் பெற்றுள்ளது. பல்கலைக்கழகப் பிரிவிலும், ஆராய்ச்சி நிறுவனப் பிரிவிலும் பெங்களூரு இந்திய அறிவியல் நிறுவனம் (ஐஐஎஸ்) முதலிடம் பெற்றுள்ளது. பல்கலைக்கழகங்கள் தரவரிசையில் கோவை அமிர்தா விஷ்வ வித்யா பீடம் மூன்றாவது இடத்தையும், திருச்சி தேசிய தொழில்நுட்பக் கழகம் 9 –ஆவது இடத்தையும் பெற்றுள்ளன. மேலாண்மைப் பிரிவில் ஆமதாபாத் ஐஐஎம் முதலிடத்தில் வந்துள்ளது.
- கல்லூரிகள் பிரிவில் முதல், இரண்டாம் இடங்களை முறையே தில்லியின் மிரண்டா ஹவுஸ், லேடி ஸ்ரீராம் மகளிர் கல்லூரி பெற்றுள்ளன. மூன்றாம் இடத்தில் சென்னை லயோலா கல்லூரியும், ஆறாவது, ஏழாவது இடங்கள் முறையே கோவை பிஎஸ்ஜி, ஆர்.

கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, சென்னை மாநிலக் கல்லூரி ஆகியவை இடம்பெற்றுள்ளன. மருத்துவக் கல்லூரியில் நான்காவது முறையாக தில்லி எய்ம்ஸ் முதலிடத்தைப் பெற்றது. வேலூர் கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரி (சிஎம்சி) 3–ஆவது இடம் பெற்றுள்ளது.

## செப்டம்பர் 11 மகாகவி நாள் ஆண்டுதோறும் "பாரதி இளம் கவிஞர்" விருது முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

- எழுத்து, கவிதைகள் வழியாக நாட்டு விடுதலைக்கு உழைத்திட்ட பாரதியார் நினைவு தினம் (செப்டம்பர் 11) ஆண்டுதோறும், மகாகவி நாளாகக் கடைப்பிடிக்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.
- இதுகுறித்து, அவர் வெளியிட்ட அறிவிப்புகள்:– தேசப் பற்று, தெய்வப் பற்று, தமிழ்ப் பற்று, மானுடப் பற்று ஆகிய நான்கும் கலந்தவர்தான் பாரதியார். நாட்டு விடுதலைக்காகப் போராடியவராக மட்டும் இருந்திருந்தால் அதற்காக மட்டுமே நினைவுகூரப்பட்டிருப்பார். அதையும் தாண்டி, சமூக, பொருளாதார உரிமைகளுக்காகவும் எழுதியதால்தான் பாரதியார் கவிதை வரிகளாய் உலவி வருகிறார். இதனாலேயே திமுக அரசு அமைந்து கருணாநிதி முதல்வரானபோது எட்டயபுரத்தில் பாரதியார் வீட்டை அரசு சார்பில் விலைக்கு வாங்கி அதனை நினைவில்லம் ஆக்கினார்கள்.
- பாரதிக்கு சிறப்பு சேர்க்கும் வகையிலும், அவரது நூற்றாண்டு நினைவை ஒட்டியும் 14 முக்கிய அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.
- பாரதியார் நினைவு நாளான செப்டம்பர் 11–ஆம் தேதியன்று, அரசு சார்பில் இனி ஆண்டுதோறும் மகாகவி நாளாகக் கடைப்பிடிக்கப்படும். இதையொட்டி, பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு மாநில அளவில் கவிதைப் போட்டி நடத்தி, பாரதி இளம்கவிஞர் விருதானது மாணவி, மாணவர் ஒருவருக்கு தலா ரூ.1 லட்சம் பரிசுத் தொகையுடன் அளிக்கப்படும்.

## சென்னையில் ரூ.2,500 கோடியில் தகவல் தரவு மையம்

- சென்னை அம்பத்தூரில் ரூ.2,500 கோடி முதலீட்டில் அமையவுள்ள தகவல் தரவு மையத்துக்கு காணொலி வாயிலாக அடிக்கல் நாட்டிய முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன் அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, மனோ தங்கராஜ், தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு உள்ளிட்டோர்.

## "பாரதி அருங்காட்சியம் அமைக்கப்படும்"

- தமிழகத்தில் பாரதி அருங்காட்சியகம் அமைக்க மத்திய அரசு தயாராக இருப்பதாக மத்திய இணையமைச்சர் அர்ஜுன்ராம் மேக்வால்கூறினார்.
- இதுகுறித்து நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது: மகாகவி பாரதியாரின் நினைவு என்றென்றும் போற்றப்படும். பெரும் புலவராக அவர் அறியப்பட்டாலும், சமூக சீர்திருத்தவாதியாகவும், நாட்டு நலனுக்காக பாடுபட்ட பத்திரிகையாளராகவும் பல முகங்கள் பாரதிக்கு உண்டு. நூற்றாண்டு கடந்து வாழும் இணையற்ற அக்கவிஞருக்கு புகழஞ்சலி செலுத்தும் வகையில், பல்வேறு செயல்திட்டங்களை முன்னெடுக்க கோரிக்கைகள் விடுத்தால் அதனை நிறைவேற்ற ஆவன செய்வோம்.

## நீட் விலக்கு மசோதா நிறைவேற்றம்

- குழுவின் பரிந்துரை: உயர்நிலைக் குழு அளித்த அறிக்கையில், பலதரப்பட்ட சமூகப் பிரதிநிதித்துவத்தை நீட் தேர்வு குறைத்து மதிப்பிட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளது.
- தமிழ் வழியில் கல்வி பயின்ற கிராமப்புற பின்னணியைக் கொண்டுள்ள அரசுப் பள்ளிகளின் பெரும்பாலான மாணவர்களது பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.2.5 லட்சத்துக்கும் குறைவே. அவர்களில் பலர் மிக பிற்படுத்தப்பட்ட, பட்டியல் மற்றும் பழங்குடியின வகுப்பைச் சேர்ந்தவர்கள். இந்தப் பிரிவினருக்கு நீட் தேர்வு எதிரானது எனக் குழு முடிவு செய்கிறது.
- 2006–ஆம் ஆண்டு சட்டம்: தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு அகற்றப்பட வேண்டியது அவசியமாகும். தமிழகத்தில் 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்சார் கல்வி நிறுவனங்களில் சேர்க்கை சட்டத்தைப் போன்றதொரு சட்டத்தை தமிழக அரசு நிறைவேற்றலாம் எனவும், அதற்காக குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெறலாம் என்றும் குழு பரிந்துரை செய்துள்ளது. இது சமூக நீதியை உறுதி செய்யும்.

## தேசிய கல்வி நிறுவனங்கள் தரவரிசை: சவீதா பல் மருத்துவக் கல்லூரி மூன்றாமிடம்

- தேசிய அளவில் சிறந்த கல்வி நிறுவனங்களின் பட்டியலில் (என்ஐஆர்எஃப்) பல் மருத்துவப் பிரிவில் சென்னை அருகில் உள்ள சவீதா பல் மருத்துவக் கல்லூரி மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது.

- மத்திய கல்வி அமைச்சகத்தின் கீழ் செயல்பட்டு வரும் தேசிய நிறுவனத் தரவரிசைக் கட்டமைப்பு (என்ஐஆர்எஃப்) ஆண்டுதோறும் சிறந்த பல்கலைக்கழகம், கல்லூரிகளின் தேசிய தரவரிசைப் பட்டியலை வெளியிட்டு வருகிறது. அந்த வகையில் நிகழாண்டுக்கான தரவரிசைப் பட்டியல் கடந்த வாரம் வெளியிடப்பட்டது.
- இதில் சென்னை அருகில் உள்ள சவீதா பல் மருத்துவக் கல்லூரி, சவீதா சட்டக் கல்லூரி ஆகியவை மாநில அளவில் முதலிடம் பெற்றுள்ளன.

## அரசுப் பணி: பெண்களுக்கான இடஒதுக்கீடு 40 சதவீதமாக உயர்வு

- அரசுப் பணி நியமனங்களில் பெண்களுக்கான இட ஒதுக்கீடு 30 சதவீதத்தில் இருந்து 40 சதவீதமாக உயர்த்தப்படுவதாக நிதியமைச்சர் பிடிஆர்.பழனிவேல் தியாகராஜன் அறிவித்தார்.
- சட்டப்பேரவையில் மனித வள மேலாண்மைத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்துக்குப் பதில் அளித்து நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் வெளியிட்ட அறிவிப்புகள்:
- தமிழக அரசுத் துறைகளில் உள்ள பணியிடங்கள் மற்றும் மாநில பொதுத்துறை நிறுவனங்களில் உள்ள பணியிடங்கள் அனைத்திலும், தமிழக இளைஞர்களை 100 சதவீதம் நியமனம் செய்யும் பொருட்டு, தேர்வு முகமைகளால் நடத்தப்படும் அனைத்துப் போட்டித் தேர்வுகளிலும் தமிழ்மொழி பாடத்தாள் தகுதித் தேர்வாகக் கட்டாயமாக்கப்படும்.
- வேலைவாய்ப்பில் முன்னுரிமை: வேலை வாய்ப்பகங்கள் வழியாக நிரப்பப்படும் அரசுப் பணியிடங்களில் கரோனா தொற்றால் பெற்றோர் இருவரையும் இழந்த இளைஞர்கள், முதல் தலைமுறை பட்டதாரிகள், தமிழக அரசுப் பள்ளிகளில் தமிழ்மொழியில் பயின்ற நபர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
- கரோனா பெருந்தொற்று காரணமாக பணியாளர் தெரிவு முகமைகளால் நடத்தப்படும் அரசுப் பணிகளுக்கான போட்டித் தேர்வுகள் தாமதமானால், நேரடி நியமன வயது உச்ச வரம்பு 2 ஆண்டுகளாக உயர்த்தப்படும்.

## ஊரக உள்ளாட்சித் தேர்தல்

- வேலூர், திருநெல்வேலி, காஞ்சிபுரம், விழுப்புரம் உள்ளிட்ட மாவட்டங்களுக்கான ஊரக உள்ளாட்சித் தேர்தல் அக்டோபர் 6, 9–ஆம் தேதிகளில் இரண்டு கட்டங்களாக வாக்குப் பதிவும், அதைத் தொடர்ந்து அக்டோபர் 12–ஆம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெறும் என்று மாநிலத் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

**பஞ்சாயத்து ராஜ்:**

- இந்த திட்டம் இந்திய அரசியலமைப்பில் 73வது திருத்தமாக 1992ல் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.
- ஏப்ரல் 24, 1993 ஆண்டு அமல்படுத்தப்பட்டது.
- டிசம்பர், 1996 ஆம் ஆண்டு பழங்குடியினர் வாழும் பகுதிகளான எட்டு மாநிலங்களில் விரிவுப்படுத்தப்பட்டது.
- 1986 ஆம் ஆண்டு L.M.சிங்வி குழுவின் பரிந்துரையின் பேரில் மாற்றங்கள் செய்யப்பட்டு அமல்படுத்தப்பட்டது.
- 74வது திருத்தத்தில், SC/ST, பெண்களுக்கு ஒதுக்கீடு வழங்கப்பட்டதுடன், மூன்றில் ஒரு பங்கு இடங்கள் பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- உள்ளாட்சி அமைப்பு கலைக்கப்பட்ட 6 மாதத்திற்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும் ஆகிய மாற்றங்கள் 74வது சட்ட திருத்தத்தில் கொண்டு வரப்பட்டது.
- 20,000 முதல் 1,00000 மக்கள் தொகை கொண்ட நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு நகர்பாலிக்கா என்றழைக்கப்படும்.

## தமிழகத்தின் முதல் கரோனா மரபணு ஆய்வகம் திறப்பு

- தமிழகத்தில் சென்னை தேனாம்பேட்டை டிஎம்எஸ் வளாகத்தில் ரூ.4 கோடியில் அமைக்கப்பட்டுள்ள கரோனா மரபணு பகுப்பாய்வுக்கூடத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.
- நாளடைவில் அது உருமாற்றமடைந்து வீரியமானது. இந்தியாவில் உருமாற்றமடைந்த அந்த தீநுண்மியை டெல்டா வகை கரோனா என்று உலக சுகாதார அமைப்பு வகைப்படுத்தியது. அதன் தொடர்ச்சியாக அதிலிருந்தும் வேறுபட்ட புதிய தீநுண்மிகள் கண்டறியப்பட்டன. அதற்கு டெல்டா பிளஸ் எனப் பெயரிடப்பட்டது.
- அதனைக் கண்டறிய சளி மாதிரிகள் பெங்களூரு அல்லது புணே ஆய்வகங்களுக்கு இன்றளவும் அனுப்பப்பட்டு வருகின்றன. இதனால், பரிசோதனை முடிவுகள் வருவதற்கு காலதாமதம் ஏற்படுவதால் தமிழகத்தில் உருமாற்றம் அடையும் கரோனா தீநுண்மியை கண்டறிய ஆய்வகம் அமைக்க முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டார்.

## கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம்

- கலைஞரின் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பணிகளை ஒதுக்கவும், கண்காணிக்கவும் 5 ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைக் கொண்ட குழு

அமைக்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சிவதாஸ் மீனா பிறப்பித்துள்ளார். அந்த உத்தரவு விவரம்:

- தமிழ்நாட்டில்121நகராட்சிகள்,528பேரூராட்சிகளில் உட்கட்டமைப்பு இடைவெளிகளை சீர்செய்திட கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ், குடிநீர் விநியோகம், தெருவிளக்குகள், சாலைகள், தெருக்கள், சமூக நலக் கூடங்கள், சந்தைகள் போன்ற உட்கட்டமைப்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன. மேலும், நவீன நூலகங்கள், அறிவுசார் மையங்களும் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளன.
- திட்டங்கள் ஒதுக்கம் கண்காணிப்பு: திட்டங்களைச் செயல்படுத்த ஒப்புதல் அளிப்பது, கண்காணிப்பது போன்ற பணிகளை மேற்கொள்ள 5 ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைக் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. அதன்படி, குழுவின் தலைவராக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் செயல்படுவார். நிதித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அல்லது அவரின் பிரதிநிதி, நகராட்சி நிர்வாக ஆணையர், பேரூராட்சிகள் இயக்குநர் ஆகியோர் உறுப்பினர்களாக இருப்பர்.

## நெடுஞ்சாலைகளில் வாகனங்களின் வேகம்: மத்திய அரசின் ஆணை ரத்து

- நெடுஞ்சாலைகளில் வாகனங்கள் செல்லும் வேகத்தை மணிக்கு 100 கி.மீ அதிகரித்து மத்திய அரசு பிறப்பித்த அறிவிப்பாணையை ரத்து செய்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
- அதிவேக சாலைகளில் (எக்ஸ்பிரஸ் சாலை) மணிக்கு 120 கிலோமீட்டர் வேகத்திலும், தேசிய நெடுஞ்சாலைகளில் 100 கிலோமீட்டர் வேகத்திலும் செல்லலாம் என, கடந்த 2018–ஆம் ஆண்டு மத்திய அரசு பிறப்பித்த உத்தரவை மறு பரிசீலனை செய்ய வேண்டுமெனக் கூறி, 12–க்கும் மேற்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்குமாறு குறிப்பிட்டு வழக்கின் விசாரணை ஒத்தி வைத்திருந்தது.

## 'அண்ணாவின் தமிழியம்' குறுகிய கால படிப்பு தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைகத்தில் அறிமுகம்

- தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தில் 'அண்ணாவின் தமிழியம்' என்ற குறுகிய கால படிப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக அதன் துணைவேந்தர் கோ.பார்த்தசாரதி கூறினார்.
- தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழக அண்ணா இருக்கை' சார்பாக, மறைந்த முன்னாள் முதல்வர் அண்ணாவின் 113 ஆம் ஆண்டு பிறந்தநாள் விழாவை முன்னிட்டு 'அண்ணாவின் ஆளுமை' என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது.
- இந்த கருத்தரங்குக்கு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் கோ.பார்த்தசாரதி தலைமை வகித்துப் பேசுகையில், தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தில் 'அண்ணாவின் தமிழியம்' என்ற குறுகிய கால படிப்பு அறிமுகம் செய்யப்படும். இந்தப் படிப்பின் மூலம் இளைய சமுதாயத்திற்கு அண்ணாவின் தமிழியம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும் என்றார்.

## அண்ணா பதக்கங்கள்

- தமிழ்நாட்டில் காவல், தீயணைப்பு, சிறைத் துறை, ஊர்க்காவல், விரல் ரேகை உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் சிறப்பாகப் பணியாற்றும் காவலர்களைப் பாராட்டும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் 15–இல் அண்ணா பிறந்த தினத்தின் போது முதலமைச்சரின் பதக்கங்கள் அறிவிக்கப்பட்டு வருகின்றன.
- இந்த ஆண்டு காவல் துறையில் இரண்டாம் நிலை காவலர் முதல் காவல் கண்காணிப்பாளர் வரையிலான 100 பணியாளர்கள், தீயணைப்புத் துறையில் எட்டு பேர், சிறைத்துறையில் 10 பேர், ஊர்க்காவல் படையில் 5 பேர், விரல் ரேகைப் பிரிவில் 2 பேர், தடய அறிவியல் துறையில் 2 பேருக்கும் பதக்கங்கள் அளிக்கப்படும்.
- மேலும், மதுரையில் உள்ள சஞ்சய் டெக்ஸ்டைல் என்ற நிறுவனத்தில் நடந்த விபத்தில் தீயை அணைக்கப் போராடி உயிரைத் தியாகம் செய்த ஏழு தீயணைப்பு வீரர்களுக்கும் அண்ணா பதக்கங்கள் அளிக்கப்பட உள்ளன. மொத்தமாக 134 பேருக்கு பதக்கங்கள் வழங்கப்படுகிறது. இந்தப் பதக்கங்கள் வேறொரு நாளில் அளிக்கப்படும்.

## திருச்செந்தூர், சமயபுரம், திருத்தணி கோயில்களில் முழுநேர அன்னதானம்

- திருச்செந்தூர், சமயபுரம், திருத்தணி உள்ளிட்ட 3 கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடக்கி வைத்தார்.
- திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயில், சமயபுரம் மாரியம்மன் கோயில், திருத்தணி சுப்பிரமணிய சுவாமி கோயில் ஆகிய கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானம்

வழங்கும் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமைச்செயலகத்தில் இருந்து காணொலி காட்சி வாயிலாக தொடக்கி வைத்தார்.

## அரசுப் பணிகளுக்கான நேரடி நியமன வயது 32-ஆக உயர்வு

- அரசுப் பணிகளுக்கான நேரடி நியமன வயது வரம்பை 32-ஆக உயர்த்தி தமிழக அரசு அரசாணை வெளியிட்டது. சட்டப்பேரவையில் மனிதவள மேலாண்மைத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் கரோனா பெருந்தொற்று காரணமாக பணியாளர் தெரிவு முகமைகளால் நடத்தப்படும் அரசுப் பணிகளுக்கான போட்டித் தேர்வுகள் தாமதமானதால், நேரடி நியமன வயது உச்சவரம்பு இரண்டு ஆண்டுகள் உயர்த்தப்படும் என அறிவித்திருந்தார்.
- அதன்படி அரசுப் பணிகளில் நேரடி நியமனத்துக்கான வயது வரம்பை 30-லிருந்து 32 ஆக உயர்த்தி தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.
- கருணை அடிப்படை பணி நியமன வயது உச்சவரம்பில் எந்தவித மாற்றம் இல்லை எனவும் கூறப்பட்டுள்ளது.
- மாற்றுத்திறனாளிகளுக்கு 4 சதவீத இடஒதுக்கீடு: மேலும் அரசு வேலைவாய்ப்பு களில் மாற்றுத் திறனாளிகளுக்கான 4 சதவீத இடஒதுக்கீட்டை உறுதி செய்வதற்காக அனைத்துத் துறைகளிலும் கண்காணிப்பு அதிகாரிகளை நியமிக்கவும் தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

## இடஒதுக்கீடு முறை சரியாகக் கடைப்பிடிப்பதை உறுதிசெய்ய சமூக நீதி கண்காணிப்புக் குழு

- கல்வி, வேலை வாய்ப்புகளில் சமூகநீதி அளவுகோல் சரியாகக் கடைப்பிடிக்கப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க சமூகநீதி கண்காணிப்புக் குழு அமைக்கப்படுவதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.
- சமூகநீதி அரசாணை வெளியீட்டு நூற்றாண்டு நாளையொட்டி முதல்வர் வெளியிட்ட அறிக்கை:
- திராவிட இயக்கம் என்பது சாமானியர்கள் உயர்வதற்காக, சாமானியர்களால் சரித்திரம் படைக்கப்பட்ட – தொடர்ந்து படைக்கப்படும் உயரிய வரலாற்றைக் கொண்டது என்று கருணாநிதி குறிப்பிட்டார். இந்த வரலாறு இன்று நேற்றல்ல. நூற்றாண்டுத் தொடர்ச்சியைக் கொண்டது ஆகும்.

## பனை மேம்பாட்டுத் திட்டம்: முதல்வர் தொடக்கி வைத்தார்

- பனை மரங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வகை செய்யும் பனை மேம்பாட்டுத் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடக்கி வைத்தார். இதன் ஒரு பகுதியாக, சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு தனது சார்பில் ஒரு லட்சம் பனை விதைகளை முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் வழங்கினார்.
- தமிழ்நாட்டில் பனைமரங்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து வருவதைக் கருத்தில் கொண்டு, இப்போதுள்ள பனை மரங்களைப் பாதுகாப்பதுடன், கூடுதலாக பனை மரங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கத் திட்டம் வகுக்கப்பட்டது. அதன்படி, நடப்பாண்டு 30 மாவட்டங்களில் 76 லட்சம் பனை விதைகளையும், ஒரு லட்சம் பனங்கன்றுகளையும் முழு மானியத்தில் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது.
- ஒருலட்சம் விதைகள்: சட்டப் பேரவைக் கூட்டத்தொடரின் போது தனது சார்பில் ஒரு லட்சம் பனை விதைகளை வழங்குவதாக பேரவைத் தலைவர் மு.அப்பாவு உறுதி அளித்தார். அதன்படி, பேரவைத் தலைவரால் வழங்கப்பட்ட ஒரு லட்சம் பனை விதைகள், ஏரிக்கரை, சாலையோரம், விவசாய நிலங்களில் நடவு செய்யும் பனை மேம்பாட்டுத் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடக்கி வைத்தார்.

## இந்தியாவில் என்டிபிசி-க்கு சொந்தமான மிகப் பெரிய சூரிய மின்னுற்பத்தி நிலையம் தொடக்கம்

- நாட்டிலேயே மிகப்பெரிய மிதக்கும் சூரிய மின்னுற்பத்தி நிலையத்தை பொதுத்துறை நிறுவனமான தேசிய அனல் மின்கழகம் நிறுவியுள்ளது. இது 25 மெகாவாட் மின்னுற்பத்தி செய்யும் திறன் கொண்டது. 100 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள இந்த ஆலையின் செயல்பாடு 2 நாட்களுக்கு முன்னர் தொடங்கி வைக்கப்பட்டது.
- பொதுத்துறை நிறுவமான பாரத மிகு மின் நிறுவனம் (பிஹெச்இஎல்) இதை நிறுவியுள்ளது. ஆந்திர மாநிலம் சிம்ஹாத்ரி அணைக்கட்டு பகுதியில் நிறுவப்பட்டுள்ள இந்த மிதக்கும் சூரிய மின்னுற்பத்தி பேனல்களால் தண்ணீர் ஆவியாவதும் தடுக்கப்படும். சுற்றுச் சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் மின்னுற்பத்தியும் செய்யப்படும்.

- அணையில் உள்ள சுவர்களில் மோதாத வகையிலும், நீர் குறையும் போது தரை தட்டாத வகையிலும் இந்த மிதக்கும் நிலையத்தை பிஹெச்இஎல் நிறுவனம் வடிவமைத்துள்ளது.
- கடலோர பகுதியில் உள்ளதால் அதிகபட்சமாக மணிக்கு 180 கி.மீ. வேகத்தில் காற்று வீசினாலும் தாக்குப் பிடிக்கும் திறன் கொண்டதாக இது வடிவமைக்கப்பட்டுள்ளது. அதேபோல துருப்பிடிக்காத தன்மைகொண்டதாகவும் இது உருவாக்கப்பட்டுள்ளது. பிஹெச்இஎல் நிறுவனம் இதுவரை 45 மெகாவாட்டுக்கு மேற்பட்ட திறன் கொண்ட சிறப்பு திட்டப் பணிகளை செயல்படுத்தி வருகிறது. 107 மெகாவாட் உற்பத்திக்கான மின்னுற்பத்தி பணிகளை தற்போது இந்நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

## சமூக நீதியின் மீது ஒரு மாற்று பார்வை

- சமூக நீதி உறுதி மொழி அனைத்து துறைகளிலும் சமூகநீதி செயல்படுத்தப்படுகிறதா என்பதை மேற்பார்வையிட ஒரு குழு அமைத்ததன் மூலம் சமூகநீதியின் மீது புதுப்பிக்கப்பட்ட கவனம் இந்த அரசால் செலுத்தப்படுகிறது.
- 50 வருடங்களுக்கு முன்பு திரு சட்டநாதன் தலைமையில் முதல் பிற்படுத்தப்பட்டோர்க்கான ஆணையம் அமைக்கப்பட்டது.
- ஒதுக்கீடு முறையின் சலுகைகளை பெற வருட வருமானம் 9,000 கீழ் இருக்க வேண்டும் என்று 1979 ஆம் ஆண்டு ஆஇஅதிமுக அரசு உத்தரவிட்டது.
- 1980 மக்களவை தேர்தலின் தோல்விக்கு பிறகு அந்த உத்தரவு ரத்து செய்யப்பட்டு, பிற்படுத்தப்பட்டோருக்கான ஒதுக்கீடு 50% உயர்த்தப்பட்டது.
- அந்த அரசு J.A.அம்பாசங்கர் தலைமையில் பிற்படுத்தப்பட்டோருக்கான ஆணையம் ஒன்றையும் அமைத்தது. அந்த ஆணையம் பிற்படுத்தப்பட்டோருக்கான ஒதுக்கீட்டை 32% சதவீதமாக குறைக்கவும், 24 சாதிகளை நீக்கவும் பரிந்துரைத்தது.
- 125 சாதிகள் (1980–83) ஆண்டுகளில் எந்த பிரதிநித்துவமும் பெறவில்லை என்பதையும் மேற்கோள் காட்டியது. 30 வருடங்களுக்கு பிறகு M.S.ஜனார்த்தனம் இட ஒதுக்கீட்டு முறையில் "Creamy layer" பற்றி அறிக்கை வெளியிட்டார்.
- 2011இல் அவர் அளித்த பரிந்துரையில், அவர் கூறியது தமிழ்நாட்டில் இட ஒதுக்கீட்டில் Creamy Layerக்கான தேவை ஏற்படவில்லை. அது அமல்படுத்தப்பட்டால், தகுதியான பிற்படுத்தவர்களுக்கு வாய்ப்பு மறுக்கப்படும்.

## பிரதமர் பெற்ற பரிசுப் பொருட்கள் E–auction முறையில் ஏலம் விடப்படுகிறது

- பாரலிம்பிக்ஸ், ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்ற போட்டியாளர்களின் விளையாட்டு பொருட்கள் இதில் சிறப்பு கவனம் பெற்றன.
- 1,330 பரிசுப் பொருட்கள் ஏலம் விடப்படுகிறது அதில் ஈட்டி எறிதலில் தங்கம் வென்ற நீரஜ் சோப்ராவின் ஈட்டியின் அடிப்படை விலை 1 கோடியாகும்.
- கலாச்சார அமைச்சகத்தால் இந்த ஏலம் ஒருங்கிணைக்கப்படுகிறது. வெள்ளிக்கிழமை தொடங்கிய ஏலம் அக்டோபர் 7 வரை நடைபெறும். இதன் மூலம் பெறப்படும் தொகை "நமாமி கங்கா" திட்டத்திற்கு செலவிடப்படும்.
- டோக்கியோ ஒலிம்பிக்கில் வெண்கலப் பதக்கம் வென்ற லவ்லீனா போர்கோஷன் கையெழுத்திட்ட குத்துச்சண்டை கையுறை, பாராலிம்பிக்கில் இறகுபந்து போட்டியில் தங்கம் வென்ற கிருஷ்ணாநகரின் இறகுப் பந்து ராக்கெட், பவானி பட்டேல் (டேபிள் டென்னிஸ்) வெள்ளி பதக்கம் அவரின் மட்டை ஏலம் விடப்படுகிறது.

## 7,000 இடங்களில் ஜிஐஎஸ் மூலம் கண்காணிப்பு

- தமிழகத்தில் கள்ளச்சாராயம் தயாரிப்பு நடைபெறும் இடங்கள், சட்ட விரோதமாக மது கடத்தல் மற்றும் விற்பனை செய்யும் இடங்கள் என மொத்தம் 7,000 இடங்களை ஜிஐஎஸ் தொழில்நுட்பம் மூலம் காவல்துறை கண்காணிக்கிறது.
- ஜிஐஎஸ் தொழில்நுட்பம் அறிமுகம்: மதுவிலக்குப் பிரிவு ஜிஐஎஸ் தொழில்நுட்பம் எனப்படும் புவியியல் தகவல் அமைப்பு மூலம் கண்காணிக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறது. கடந்த காலங்களில் கள்ளச்சாராயம் தயாரிக்கப்பட்ட இடங்கள், பதுக்கி வைக்கப்பட்ட இடங்கள், சாலைகள், சட்டவிரோத மது விற்பனை நடைபெற்ற இடங்கள் என சுமார் 7,000 இடங்கள் அடையாளம் காணப்பட்டு ஜிஐஎஸ் வரைபடத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

GIS Technology (புவியியல் தகவல் முறைமை)

- தகவல்களையும், இடஞ்சார் முறையில் புவியுடன் தொடர்பு குறிக்கதக்க வேறு தொடர்பான விஷயங்களை பெறுதல், சேமித்தல், பகுத்தாய்தல் மேலாண்மை செய்தல் போன்றவற்றை உள்ளடக்கிய ஒருமுறைமை ஆகும்.
- பயன்கள்: அறிவியல் ஆராய்ச்சி, வள மேலாண்மை,

சொத்து மேலாண்மை சூழல்சார் தாக்க மதிப்பீடு (Environmental Impact Assessment). நகர்ப்புறத் திட்டமிடல்.

## சிலம்பாட்டத்துக்கு மத்திய அரசு அங்கீகாரம்

- தமிழகத்தின் வீர விளையாட்டான சிலம்பத்தை மத்திய அரசு கேலோ இந்தியா திட்டத்தில் சேர்த்து அங்கீகரித்துள்ளதாக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் கூறியுள்ளார்.
- இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கை: தமிழர்களின் பாரம்பரிய பெருமைமிக்க சிலம்ப விளையாட்டைப் பாதுகாக்கவும், சிலம்பத்தை உலகறியச் செய்யும் நோக்கத்திலும் மத்திய அரசின் கேலோ இந்தியா திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுப் பட்டியலில் சேர்த்திட முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுரையின்படி கோரப்பட்டது. அதனையேற்று, புதிய கேலோ இந்தியா திட்டத்தின் கீழான விளையாட்டின் மூலம் அனைத்து தரப்பு மக்களையும் உள்ளடக்கி ஊக்குவித்தல்' என்பதில் சிலம்பம் விளையாட்டினைச் சேர்த்துள்ளது. சிலம்பம் மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டது, தமிழினத்துக்குப் பெருமை சேர்த்துள்ளது.

## 7.5% இட ஒதுக்கீட்டின் கீழ் 6 முதல் 12-ம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் படித்த மாணவர்களின் பொறியியல் கல்வி விடுதிக் கட்டணத்தை அரசே ஏற்கும் என்று முதல்வர் ஸ்டாலின் அறிவித்துள்ளார்

- இத்திட்டத்திற்கு 250 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் பொறியியல், வேளாண்மை, கால்நடை மருத்துவம், மீன்வளம், சட்டம் படிக்கும் மாணர்வகள் 12,000 பேர் பயனடைவார்கள்.

## கொரோனா தடுப்பூசி செலுத்தியதில் கோவை முதலிடம்

- 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் 22 லட்சத்து 4 ஆயிரத்து 631 பேருக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. முதல் தவணை தடுப்பூசி 75% பேருக்கு போடப்பட்டுள்ளது. 2வது தவணை 7 லட்சத்து 18 ஆயிரத்து 355 பேருக்கு போடப்பட்டுள்ளது.
- தேசிய அளவில் தடுப்பூசி செலுத்தியவர் சராசரி – 62%
- தமிழ்நாடு சராசரி – 45% (செப்டம்பர் 11 வரையில்)
- செப்டம்பர் 12 நடைபெற்ற மெகா தடுப்பூசி முகாம் மூலம் தமிழ்நாடு சராசரி –52% உயர்ந்தது. ஒரு வார இடைவெளியில் 56% உயர்ந்துள்ளது.

## நீட் தேர்வு நீதிபதி ஏ.கே.ராஜன் குழு ஆய்வறிக்கையில் தகவல்

- நீட் தேர்வில் உள்ள பாதகங்களை ஆராய நீதிபதி ஏ.கே.ராஜன் தலைமையில் மக்கள் நல்வாழ்வுத்துறை முதன்மைச் செயலாளர், மருத்துவக் கல்வி இயக்குநர் உள்பட 9 பேர் அடங்கிய உயர்நிலைக் குழு ஒன்றை அரசு அமைத்தது. இக்குழுவானது அது தொடர்பான ஆலோசனைக் கூட்டங்களை நடத்தியதுடன், பொதுமக்களிடம் இருந்தும் கருத்துகளைக் கேட்டிருந்தது. அதன்படி, சுமார் 85 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தங்களுடைய கருத்துகளை தெரிவித்து இருந்தனர்.

## சென்னையின் தெற்கு பகுதியில் வெள்ள நீரை தடுக்க நீர்வள மேலாண்மை துறை

- உலக வங்கியின் உதவியுடன் 240 கோடியில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளது.

## போலிஸாரின் மனஅழுத்தத்தை குறைக்க சிறப்பு பயிற்சிக்கான டிப்ளமோ

- தமிழக அரசு (NIMHANS) தேசிய மனநல மற்றும் நரம்பியல் நிறுவனத்துடன் இணைந்து இந்த திட்டம் நடத்தப்படுகிறது.
- இதன் தொடக்கமாக 246 மனநல பயிற்சி ஆசிரியர்களுக்கு டிப்ளமோ படிப்பு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் ஈடுபடும் 246 நபர்களில், 112 பேர் காவல் அதிகாரிகள், 134 பேர் மனநல ஆலோசகர்கள் தமிழகத்தை சார்ந்த 1 லட்சத்து 80 ஆயிரம் காவலருக்கு 3 லட்சம் காவல் குடும்பத்தினருக்கும் நிறை வாழ்வு பயிற்சி வழங்குவார்கள்.

## மாநில ஏற்றுமதி அபிவிருத்திக் குழு அமைப்பு

- மாநிலத்தில் ஏற்றுமதி அபிவிருத்தியை ஊக்குவிக்கவும், கண்காணிக்கவும் தலைமைச் செயலாளர் தலைமையில் தனிக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவில் ஆறு முக்கிய துறைகளின் செயலாளர்கள் இடம் பெற்றுள்ளன. மேலும், ஏற்றுமதி அபிவிருத்திக்கான கூட்டமைப்பைச் சேர்ந்த ஆறு பேரும் இடம் பெறவுள்ளனர்.
- "ஏற்றுமதியில் ஏற்றம்–முன்னணியில் தமிழ்நாடு"

என்ற தலைப்பில் தொழில் துறை கருத்தரங்கு சென்னையில் நடைபெற்றது.

- இதில் பங்கேற்ற முதல்வர் மு.க.ஸ்டாலின், ஏற்றுமதி அபிவிருத்திக்கென தனிக் குழுவை தமிழக அரசு அமைக்கும் என அறிவித்தார்.
- மேலும், தமிழ்நாடு ஏற்றுமதி அபிவிருத்தி கொள்கை 2021–ஐயும் அவர் வெளியிட்டார். இந்தக் கொள்கையில் மாநில ஏற்றுமதி அபிவிருத்திக் குழு குறித்த விவரங்கள் இடம் பெற்றுள்ளன.
- குழுவில் யார் யார்?: தமிழ்நாடு மாநில ஏற்றுமதி அபிவிருத்தி குழுவின் தலைவராக, தலைமைச் செயலாளர் செயல்படுவார்.

## "கற்போம் எழுதுவோம்"

- தமிழகத்தில் 2011–ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பை அடிப்படையாகக் கொண்டு 15 வயதுக்கு மேற்பட்டவர்களில் முற்றிலும் எழுத, படிக்கத் தெரியாதவர்களுக்கு அடிப்படை எழுத்தறிவை வழங்கிடும் நோக்கில் தமிழ்நாடு எழுத்தறிவு முனைப்பு ஆணையத்தின் கீழ் கற்போம் எழுதுவோம்' என்ற வயது வந்தோர் கல்வித் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

## 18,000 கிராமப்புற இளைஞர்களுக்கு சுய தொழில் பயிற்சித் திட்டம்

- தமிழகத்தில் 18,000 கிராமப்புற இளைஞர்களுக்கு சுயதொழில் பயிற்றுவிக்கும் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடக்கி வைத்தார். இதற்கான நிகழ்ச்சி தலைமைச்செயலகத்தில் நடைபெற்றது.

## மதுரை எனது தாய் நிலம்

- சுதந்திரப் போராட்டத்தின் போது மதுரையில் 1921 செப்டம்பர் 22–இல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொதுக்கூட்டத்துக்கு வந்த மகாத்மா காந்தி இங்குள்ள மக்களின் நிலையைக் கண்டு தனது உடையைக் களைந்து அரையாடைக்கு மாறினார்.

## நிலமற்றவர்களுக்கு நிலம் வழங்க தனிக்குழு அமைத்தது தமிழக அரசு

- பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா (கிராமின்) (PMYGA)–வின் கீழ் நிலம் வழங்க அரசு உத்தரவு. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை செயலாளர், நான்கு பேர் கொண்ட பணிக்குழுவின் தலைவராக இருப்பார்.
- நிலமற்ற பயனாளிகளுக்கு இரண்டு மாதங்களுக்குள் நிலங்களை வழங்க மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.
- "PMAY–G" 2022–க்குள் அனைவருக்கும் வீடு என்னும் நோக்கத்துடன் மத்திய அரசால் தொடங்கப்பட்ட திட்டம்.

## தமிழ்ப்பேராயம்: பாரிவேந்தர் பைந்தமிழ் விருதுக்கு பா.வளன் அரசு தேர்வு

- எஸ்.ஆர்.எம். தமிழ்ப் பேராயத்தின் இந்த ஆண்டுக்கான பாரிவேந்தர் பைந்தமிழ் விருது தமிழறிஞர் பா.வளன் அரசுக்கு வழங்கப்படுகிறது என்று தமிழ்ப்பேராயம் புரவலர் டி.ஆர்.பாரிவேந்தர் கூறினார்.
- இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் மேலும் கூறியதாவது: எஸ்.ஆர்.எம். கல்வி நிறுவனத்தின் தமிழ்ப்பேராயம் சார்பில் கடந்த 2012–ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் சிறந்த தமிழ் அறிஞர்கள், சிறந்த நூலாசிரியர்களுக்கு ரூ.20 லட்சம் ரொக்கப் பரிசுடன் 12 வகை விருதுகள் வழங்கி கௌரவித்து வருகின்றோம்.

## தரப் பரிசோதனை: 37 மருந்துகள் தரமற்றவையாக அறிவிப்பு

- மருந்து உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் விற்பனையகங்களில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் 37 மருந்துகள் தரமற்றவையாக இருந்ததாக மத்திய மருந்து தரக்கட்டுப்பாட்டு வாரியம் அறிவித்துள்ளது.

**தேசிய மருந்து கட்டுப்பாடு ஆணையம் (CDSCO)**

- (CDSCO) சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.
- தலைமையகம் – FDA Bhawan, புதுதில்லி
- இந்தியாவில் CDSCO–வின் 6 மண்டல அலுவலகங்கள் உள்ளன.

## தமிழகத்தில் ஏற்றுமதியை அதிகரிக்க மாநில மேம்பாடு குழு அமைப்பு

- ஏற்றுமதியில் ஏற்றம் முன்னணியில் தமிழ்நாடு புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்ச்சியில் முதலமைச்சர் இதனை தெரிவித்தார்.
- தமிழகத்தில் விவசாய ஏற்றுமதி சேவை மையம் மற்றும் பணலூர், தூத்துக்குடியில் பொருளாதார வேலைவாய்ப்பு பகுதிகளை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது.
- 10 ஏற்றுமதி மையங்களை அரசு அடையாளம் கண்டுள்ளது. இவை ஆம்பூர், சென்னை, கோயம்புத்தூர், ஒசூர், காஞ்சிபுரம், கரூர், மதுரை, பொள்ளாச்சி, தூத்துக்குடி மற்றும் திருப்பூர்.
- தேனி, மனப்பாறை, திண்டிவனத்தில் உணவு பூங்காக்கள் அமைக்கப்படவுள்ளது.

## தமிழகத்தின் கோவளம் கடற்கரை மற்றும் புதுச்சேரி ஈடன் கடற்கரைக்கும் உலகப் புகழ்பெற்ற Blue Flag (நீலக்கொடி) விருது வழங்கப்பட்டுள்ளது

- சுற்றுச்சூழல் எழில்மிக்க, கடல்சார் சூழலைப் பேணிக்காக்கும் அழகிய சிறந்த கடற்கரைக்கு நீலக்கொடி சான்றிதழ் வழங்கப்படுகிறது.
- டென்மார்க்கின் "சுற்றுச்சூழல் கல்விக்கான அறக்கட்டளை" இவ்விருதை வழங்குகிறது.

Foundation of Environmental Education (FEE)

- அமைப்பு – 1981
- தலைமையகம் – Copenhagen, டென்மார்க்
- இந்தியாவின் ஒடிசா, ஆந்திரா, குஜராத் உட்பட 8 மாநில கடற்கரைகளுக்கு இந்த சான்று வழங்கப்பட்டுள்ளது.

## உலகளாவிய காற்றின் தர விதிமுறைகளை கடுமையாக்கியது உலக சுகாதார மையம் (WHO)

- 2005க்கு பிறகு விதிமுறைகளை மாற்றியமைத்துள்ளது.
- இதற்கு முன்னரே தேசிய சுற்றுப்புற காற்று தரநிலை (NAAQS) அமலில் உள்ளதால் இந்தியாவில் இந்த மாற்றம் எந்தவிதமான பாதிப்பையும் ஏற்படுத்தாது.
- இந்தியாவில் தேசிய சுத்தமான காற்று திட்டம் மூலம் 122 நகரங்களில் துகள்களின் செறிவுகளை 2024க்குள் (20%–30%) மாக குறைக்க திட்டமிடப்பட்டுள்ளது. (2017ஐ அடிப்படையான ஆண்டாக கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

**இந்தியாவின் (NAAQ's) 2009இன் வரம்புகள்**

- வருடத்திற்கு 24 மணி நேரத்தில் 60 (Minogram/Cubic metre) (PM10 மற்றும் PM100)
- 40–PM 2.5 (வருடத்திற்கு)
- 60–24 மணிநேரத்திற்கு

**WHO (உலக சுகாதார மையம்)**

- தலைமையகம் – ஜெனீவா, சுவிட்சர்லாந்து
- தொடக்கம் – 7 ஏப்ரல் 1948
- தலைமை அமைப்பு – ஐக்கிய நாடுகள் சபை
- தலைவர் – டெட்ரோஸ் அதானம் (Tedros Adhanom)

## திருக்குறள் பேருந்துகளில் மட்டுமில்லாமல் இரயில் பெட்டிகளிலும் காட்சிப்படுத்த வேண்டும்

- திரு டி.இ.எஸ். ராகவனின் முதல் திருக்குறளின் ஹிந்தி மொழிப்பெயர்ப்பு 1990 ஆம் ஆண்டு வெளிவந்தது.

## 1 லட்சம் விவசாய மின் இணைப்பு வழங்கும் திட்டம்

- தமிழகத்தில் 1 லட்சம் விவசாயமின் இணைப்பு வழங்கும் திட்டத்தை, முதல்வர் மு.க.ஸ்டாலின், சென்னை அண்ணா நூலக அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தொடக்கி வைத்தார். இத்திட்டமானது ரூ.3,025 கோடியில் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டது.

## திருவாரூரில் முதல் சூரிய சக்தி பூங்கா: முதல்வர் அறிவிப்பு அறிக்கையில் அவர் கூறியது

- சூரிய சக்தி மின்சார தயாரிப்புக்கு முன்னுரிமை வழங்க இருக்கிறோம். திருவாரூரில் முதல் சூரிய சகதி பூங்கா அமைக்கப்பட இருக்கிறது. சூரிய மின் உற்பத்தி புனல் நீரேற்று மின் உற்பத்தி மற்றும் இயந்திர மின் திட்டங்களைத் தொடங்குவதற்கான ஆலோசனைகளை வழங்கவும், தேவையான நிதி ரூ.1 லட்சத்து 32,500 கோடியை திரட்டுவதற்கும் இந்திய மரபுசாரா எரிசக்தி மேம்பாட்டு நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளோம்.
- மரபுசாரா எரிசக்தித் துறையில் இவ்வளவு பெரிய ஒப்பந்தம் செய்த ஒரே மாநிலம் தமிழகம் என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன்.

## பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தை "ராம்சார் தளமாக அறிவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம் கோரிக்கை

- வனவிலங்கு பாதுகாப்பு சட்டம் 1972ன் கீழ் பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தை பறவைகள் சரணாலயமாக அறிவிப்பதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய தமிழக அரசுக்கு உயர்நீதிமன்றம் ஆணை பிறப்பித்துள்ளது.

**ராம்சார்**

- 1971 ஆம் ஆண்டு "ராம்சார் சாசனம்" (Ramsar Convention) ஈரானில் உள்ள ராம்சார் நகரில் கையெழுத்தானது.

- 1982 ஆம் ஆண்டு முதல் "ராம்சார் சாசனம்" இந்தியாவில் நடைமுறையில் உள்ளது.
- ஈரநில பாதுகாப்பு மற்றும் மேலாண்மை விதிகள் 2017இன் படி பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தை பாதுகாக்கவும் உத்தரவு.

**ராம்சார் சாசனம் (Ramsar Convention)**

- நடைமுறைக்கு வந்தது – 21 டிசம்பர் 1975
- வைப்பகம் – யுனெஸ்கோ (Director General)
- 170 நாடுகள் "ராம்சார் சாசனத்தில்" கையெழுத்திட்டுள்ளது.

## தொன்மை வாய்ந்த மரம்

- ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை வளாகத்தில் உள்ள ஆனைப்புளி பெருக்க மரம், உலகின் பழைமையான மரவகைகளில் ஒன்றாகும். இம்மரத்தின் பூர்விகம் ஆப்பிரிக்க கண்டம் என அறியப்படுகிறது. ஏறத்தாழ 500 ஆண்டுகள் வரை ஆயுட்காலம் கொண்டது ஆனைப்புளி பெருக்க மரம்.
- அதன் இலைகளில் விட்டமின் சி சத்து நிறைந்துள்ளதாகக் கூறப்படுகிறது. மருத்துவமனை வளாகத்தில் உள்ள 150 ஆண்டு பழைமையான அந்த மரம் 37 அடி சுற்றளவும், 65 அடி உயரமும் கொண்டது. தொன்மையான இந்த மரம் சென்னை மருத்துவக் கல்லூரியின் புராதனச் சின்னங்களில் ஒன்றாகத் திகழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.

## முதலமைச்சரின் விரிவான சுகாதார காப்பீட்டு திட்டத்தின் கீழ் (CMCHIS) 4101 குழந்தைகளுக்கு கோக்லர் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன

- இத்திட்டத்திற்கு 327 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. 2009–ம் ஆண்டு முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்களால் ஒரு குழந்தைக்கு 636 லட்சம் ஒதுக்கி இத்திட்டம் தொடங்கப்பட்டது.

## பாரத் நெட் திட்டத்தை விரைந்து செயல்படுத்த அரசு உத்தரவு

- பாரத் நெட் திட்டத்தை விரைந்து செயல்படுத்த தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இதற்கென மாவட்ட அளவில் குழுவை அமைத்துள்ளது.
- இது குறித்து தகவல் தொழில் நுட்பவியல் துறைச் செயலாளர் நீரஜ் மிட்டல், வெளியிட்ட உத்தரவு:
- பாரத் நெட் திட்டமானது கிராம பஞ்சாயத்துகளுக்கு இணைய இணைப்பு அளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**பாரத் நெட் சேவை**

- அனைத்து கிராம ஊராட்சிகளை இணைத்து அரசின் சேவைகளை இணையதளம் மூலம் மக்களுக்கு வழங்கும் திட்டமாகும்.
- அக்டோபர் 2011ஆம் ஆண்டு இத்திட்டம் செயல்பாட்டிற்கு வந்தது.

## சேமித்து வைக்கப்பட்டுள்ள கனிமங்களை மறுபரிசீலனை செய்ய மூன்று குழுக்களை அமைத்தது தமிழக அரசு

- பூட்டிவைக்கப்பட்ட கடற்கரை மணல் தாதுக்கள் கடத்தப்படுவதாக தகவல் வந்ததை அடுத்து தமிழக அரசு நடவடிக்கை.
- திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி பகுதிகளை ஆய்வு செய்ய இக்குழு அமைக்கப்பட்டது.
- ஆகஸ்ட்/செப்டம்பர் 2013 அரசு உத்தரவின்படி (கார்னட், இல்மெனைட், ருடைல், ஸிர்கான், சிலிமானைட் போன்ற தாதுக்களின் போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளது.
- திரு சகோ தலைமையில் 2017ஆம் ஆண்டு உயர்நீதிமன்றத்தின் பேரில் சிறப்பு படை அமைக்கப்பட்டு 3 மாவட்டங்களில் சேமித்து வைக்கப்பட்டுள்ள தாதுக்களை மதிப்பீடு செய்யப்பட்டது.
- 1 வருடத்திற்கு பிறகு விரிவான அறிக்கை உயர்நீதிமன்றத்தில் சமர்பிக்கப்பட்டது.

## 202/505 வாக்குறுதிகள் நிறைவேற்றம்

- தேர்தலின் போது அறிவித்த 505 வாக்குறுதிகளில் 202–ஐ நிறைவேற்றி இருப்பதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதத்துடன் தெரிவித்தார்.
- இதுதொடர்பாக, அவர் வெளியிட்ட காணொலிக் காட்சி: வாக்காளர்கள் அளித்த ஒவ்வொரு வாக்கும் இன்றைக்கு நான் கோட்டையில் உட்காருவதற்கு அடித்தளமாகஅமைந்தது. நீங்கள் எங்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கையை நாங்கள் இம்மியளவும் பிசகாமல் காப்பாற்றிக் கொண்டிருக்கிறோம். சட்டப் பேரவைத் தேர்தலுக்கு முன்பாக, திமுக சார்பில் தேர்தல் அறிக்கையை வெளியிட்டோம். ஆட்சிக்கு வந்து இன்றோடு நான்கு மாதங்கள்தான் கடந்துள்ளன.
- நான்கு மாதங்களுக்குள் சொன்னவற்றில் பெரும்பாலானவற்றைச் செய்து விட்டோம். தேர்தல் அறிக்கையில் சொல்லாத பல நல்ல செயல்களும்

செய்யப்பட்டுள்ளன. தொழில்கல்வி பயில விரும்பும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5 சதவீதம் இடஒதுக்கீடு, 14 வகையான விலையில்லாத மளிகைப் பொருள்கள் உள்ளிட்ட 23-க்கும் அதிகமான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. 505 வாக்குறுதிகளில் நான்கு மாதங்களுக்குள் 202 வாக்குறுதிகளை நிறைவேற்றிக் காட்டிய அரசு, இந்தியாவிலேயே திமுக அரசாகத்தான் இருக்கும். இதனை ஏதோ ஆரம்ப வேகம் என்று நினைக்க வேண்டாம். எப்போதும் இப்படித்தான் இருப்போம். அனைத்து நாள்களிலும் இப்படித்தான் செயல்படுவோம்.

## தமிழகத்தில் மகாபலிபுரம், ஏற்காடு, காஞ்சி, குமரி, குற்றாலம், தஞ்சை உட்பட தேசிய கல்விச் சுற்றுலாவுக்காக 100 நகரங்கள் பட்டியல் வெளியீடு

- ஒரே பாரதம், உன்னத பாரதம் திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் கல்விச் சுற்றுலாவுக்கு 100 நகரங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இதில் தமிழகத்தில் உள்ள மகாபலிபுரம், ஏற்காடு உட்பட 6 இடங்கள் இடம்பெற்றுள்ளன.
- தேசிய ஒருமைப்பாட்டை வளர்ப்பதற்காக 'ஒரே பாரதம் உன்னத பாரதம்' என்ற திட்டம் மத்திய அரசால் 2015-ம் ஆண்டு தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் தேசிய கல்விச் சுற்றுலாவுக்கு தகுதியான 100 நகரங்கள் பட்டியலை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.
- இதுகுறித்து பல்கலைக்கழக மானியக்குழு (யுஜிசி) செயலர் ரஜினிஷ் ஜெயின், அனைத்து உயர்கல்வி நிறுவனங்களுக்கும் அனுப்பிய சுற்றறிக்கை:
- தேசிய கல்விச் சுற்றுலாவுக்கு உகந்த 100 இடங்களை தேர்ந்தெடுத்து மத்திய அரசு வழங்கியுள்ளது. இதையடுத்து அனைத்து உயர்கல்வி நிறுவனங்களும் தங்கள் மாணவர்களை இந்த பட்டியலில் உள்ள இடங்களுக்கு சுற்றுலா அழைத்துச் செல்ல வேண்டும். ஒவ்வொரு சுற்றுலாத் தலங்களின் வரலாறு, பண்பாடு, தொழில்நுட்பம் உள்ளிட்ட அம்சங்களை மாணவர்களுக்கு எடுத்துரைத்து நம் நாட்டின் பன்முகத் தன்மையின் சிறப்பு குறித்த புரிதலை உணர வைக்க வேண்டும்.
- கரோனா கட்டுப்பாடுகள் முழுவதும் தளர்த்தப்பட்ட பின்னரே, சுற்றுலா செல்ல கல்லூரிகள் அனுமதிக்க வேண்டும். அதுவரை இணையவழியில் சுற்றுலா மையங்கள் தொடர்பாக தகவல்களை அறிந்துகொள்ள மாணவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.
- ஒரே பாரதம், உன்னத பாரதம்திட்டம் நாட்டின் பன்முகத்தன்மை, தேச ஒற்றுமையை வலுப்படுத்தும் அம்சமாகும். அதன்படி நாடு முழுவதும் அனைத்து மாநிலங்களில் இருந்தும் கல்விச் சுற்றுலாவுக்கு தகுதியான 100 இடங்கள் தேர்வுசெய்யப்பட்டுள்ளன. அதில் தமிழகத்தில் இருந்து மகாபலிபுரம், ஏற்காடு, காஞ்சிபுரம், கன்னியாகுமரி, குற்றாலம், தஞ்சாவூர் ஆகிய6 இடங்கள் இடம்பெற்றுள்ளன.

## வங்கக்கடலில் உருவானது 'குலாப்' புயல்

- மத்திய கிழக்கு வங்கக்கடலில் உருவான காற்றழுத்தத்தாழ்வுப்பகுதி அடுத்தடுத்து வலுவடைந்து, புயலாக மாறியது. இந்தப் புயலுக்கு பாகிஸ்தான் வழங்கிய 'குலாப்' என்ற பெயர் வைக்கப்பட்டுள்ளது.

## நெல் கொள்முதலுக்கு முன்பதிவு முறை: தமிழக அரசு ஏற்பாடு

- நீண்ட நேரம் காத்திருக்காமல் முன்பதிவு செய்து, குறிப்பிட்ட தேதி, நேரத்தில் விவசாயிகள் நெல்லை கொள்முதலை செய்து கொள்ளலாம் என்ற புதிய திட்டத்தை தமிழக அரசு அறிவித்துள்ளது.
- இதுகுறித்து, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், வெளியிட்ட செய்தி:-
- ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆட்சித் தலைவரின் அனுமதி பெற்று நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு அதன் மூலமாக கொள்முதல் பணிகள் நடைபெற்று வருகின்றன. விவசாயிகள் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் எளிதில் பதிவு செய்து நெல் விற்பனை செய்ய ஏதுவாக, ஏற்கெனவே இணைதளம் பயன்பாட்டில் உள்ளது.
- இந்த இணையதளத்தில் விவசாயிகள் தங்களது பெயர், ஆதார் எண், புல எண், வங்கிக் கணக்கு எண் உள்ளிட்ட விவரங்களை எளிய முறையில் www.tncsc.tn.gov.in, www.tncsc}edpc.in ஆகிய இணையதளங்களில் பதிவேற்றம் செய்யலாம். அப்போது கொள்முதல் செய்ய வேண்டிய தேதியினை முன்பதிவு செய்திடலாம்.
- இணையதளத்தில் பதிவு செய்யப்பட்டவுடன், விவசாயிகள் நிலம் இருக்கும் கிராமங்களின் அடிப்படையில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இணைய வழியின் மூலமாகவே கிராம நிர்வாக அலுவலரின் ஒப்புதல் பெறப்படும்.
- ஒதுக்கீடு செய்யப்பட்ட நேரடி நெல் கொள்முதல் நிலையத்தின் பெயர், நெல் விற்பனை

செய்யப்படும் நாள், நேரம் ஆகிய விவரங்கள் விவசாயிகளின் செல்லிடப்பேசி எண்ணுக்கு குறுஞ்செய்தியாக அனுப்பி வைக்கப்படும்.

- விவசாயிகள் தங்களது செல்லிடப்பேசி எண்ணில் பெறப்பட்ட குறுஞ்செய்தியின் அடிப்படையில் நீண்ட நேரம் காத்திருக்காமல் குறித்த காலத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் தாங்கள் விளைவித்த நெல்லை விற்பனை செய்து கொள்ளலாம் என நுகர்பொருள் வாணிபக் கழகம் தெரிவித்துள்ளது.

## தமிழக அரசுப் பள்ளிகளுக்கு 100% குடிநீர் இணைப்பு

- ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் தமிழகத்தில் உள்ள அரசுப் பள்ளிகளுக்கு 100 சதவீத குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதற்கு மத்திய அமைச்சர் பிரகலாத் சிங் படேல் பாராட்டு தெரிவித்தார்.
- தமிழகத்தில் 2 நாள்கள் சுற்றுப்பயணமாக சென்னை வந்த மத்திய உணவு பதப்படுத்துதல் துறை மற்றும் ஜல் சக்தி இணை அமைச்சர் பிரகலாத் சிங் படேலை தமிழக ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் மரியாதை நிமித்தமாக சந்தித்து பேசினார்.

## சூரிய சக்தி மின் உற்பத்தியில் 100 சதவீதம் இலக்கை எட்டியது சென்ட்ரல் ரயில் நிலையம்

- சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் உள்ள நடைமேடைகள், தங்குமிடங்களில் நிறுவப்பட்ட சூரிய மின் தகடுகள் மூலமான, மின்உற்பத்தி 100 சதவீத இலக்கை எட்டியுள்ளது. இந்தத் தகவலை சுட்டுரையில், ரயில்வே அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் பெருமிதத்துடன் தெரிவித்துள்ளார்.
- இதைத்தொடர்ந்து, மூர் மார்க்கெட் வளாகத்தில் உள்ள நடைமேடைகளின் மேற்கூரைகளில் 900 கிலோ வாட் மின் மின் உற்பத்திக்காக சூரிய மின்தகடுகள் நிறுவப்பட்டன. இதன் மூலமாக, ஆண்டுக்கு 21 லட்சத்து 90 ஆயிரம் யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுவதுடன், ரூ.1.75 கோடி மின் கட்டணம் செலுத்துவது தவிர்க்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## 500 ஊராட்சிகளில் 100% கரோனா தடுப்பூசி

- தமிழகத்தில் 500–க்கும் மேற்பட்ட ஊராட்சிகளில் 100 சதவீதம் கரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது என தமிழக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.
- மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி தென்பாதியில் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற 3ஆம் கட்ட கரோனா சிறப்பு தடுப்பூசி முகாமை நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

## நாக நதியை மீட்ட தமிழக பெண்கள்

- அப்பகுதி பெண்கள் ஒன்றிணைந்து நாகநதியை மீட்கும் பணியில் இறங்கினர். அவர்கள் மக்களை ஒன்று திரட்டினர், கால்வாய்களை தோண்டினர். தடுப்பணைகளை உருவாக்கினர், மறுசெறிவு குளங்களை வெட்டினர். இதன்விளைவாக இன்று நாகநதியில் தண்ணீர் ததும்பி ஓடுகிறது.
- தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் நாக நதியை மீட்கும் திட்டம் கடந்த 2014–ம் ஆண்டில் தொடங்கப்பட்டது. வாழும் கலை அமைப்பின் முயற்சியால் தொடங்கப்பட்ட இந்த நதி மீட்பு திட்டத்தில் 20,000–க்கும் மேற்பட்ட பெண்கள் ஆர்வத்தோடு ஈடுபட்டு 3,500–க்கும் மேற்பட்ட மீள் கிணறு, மறுசெறிவு குளங்களை வெட்டினர். 250 தடுப்பணைகள் கட்டப்பட்டன. 5 ஆண்டு உழைப்பின் பலனாக நாகநதி மீண்டும் உயிர் பெற்றது.

## எழுத்தாளர் அசோகமித்திரனுக்கு அஞ்சலி

- எழுத்தாளர் அசோகமித்திரனுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக கடலூர் குடிமூடி மூலை கிராமத்தை சேர்ந்த பிள்ளையார் கோவில் குளம் மறுசீரமைக்கப்பட்டது.
- அவரது மகன் திரு ரவிசங்கர், அரசு சாரா நிறுவனத்துடன் இணைந்து இப்பணியை மேற்கொண்டார்.

## உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு புனித ஜார்ஜ் கோட்டையை சுற்றி 3 கிலோ மீட்டர் (Heritage Walk) நடைபெற்றது

- சுற்றுலாத்துறை அமைச்சர் மதிவாணன், சுற்றுலாத் துறை செயலர் B. சந்திர மோகன் மற்றும் குழந்தைகள், கல்லூரி மாணவர்கள் இதில் பங்கேற்றனர்.
- வரலாற்றாசிரியர் ஸ்ரீராம் ஜார்ஜ் கோட்டை பற்றிய வரலாற்று தகவல்களை விளக்கினார்.

## போயிங் விமான பாகங்கள் தயாரிக்க ஒப்பந்தம்

- தமிழகத்தில் முதல்முறையாக போயிங் விமான பாகங்கள் தயாரித்து வழங்குவதற்கான ஒப்பந்தம் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் ஏரோஸ்

பேஸ் என்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட்டுக்கு வழங்கப்பட்டது.

- முதன்முறையாக: இந்த உத்தரவின் மூலம் தமிழகத்தில் முதல் முறையாக போயிங் விமான நிறுவனத்துக்கு முக்கிய விமான பாகங்கள் தயாரித்து வழங்க வழி காணப்பட்டுள்ளது. இது உலகாளவிய விண்வெளி நிறுவனத்தின் முக்கிய விமான பாகங்கள் தயாரித்து வழங்குவதற்கான நீண்டகால ஒப்பந்தமும் ஆகும்.

## காவலர் அருங்காட்சியகம்

- சென்னை எழும்பூரில் பழைய காவல் ஆணையர் அலுவலகத்தில் உள்ள 178 ஆண்டுகள் பழைமையான கட்டடத்தில் பழைய காவல் ஆணையர் அலுவலகத்தை அருங்காட்சியகமாக மாற்ற முடிவு செய்யப்பட்டு, ரூ.7 கோடியில் சுமார் 36 ஆயிரம் சதுர அடி பரப்பளவில் இரு தளங்களுடன் அருங்காட்சியகம் அமைக்கப்பட்டது உள்ள சென்னை எழும்பூரில் பழைய காவல் ஆணையர் அலுவலகத்தில் உள்ள 178 ஆண்டுகள் பழைமையான கட்டடத்தில் பழைய காவல் ஆணையர் அலுவலகத்தை அருங்காட்சியகமாக மாற்ற முடிவு செய்யப்பட்டு, ரூ.7 கோடியில் சுமார் 36 ஆயிரம் சதுர அடி பரப்பளவில் இரு தளங்களுடன் அருங்காட்சியகம் அமைக்கப்பட்டது.

## "தமிழ்நாட்டைக் கண்டு மகிழ்வோம்"

- உலக சுற்றுலாத் தினத்தை முன்னிட்டு சென்னை தீவுத்திடலில், 'தமிழ்நாட்டைக் கண்டு மகிழ்வோம்"என்ற நிகழ்ச்சியை சுற்றுலாத்துறை அமைச்சர் மதிவேந்தன் தொடக்கி வைத்தார்.
- சமூக வலைதள ஆர்வலர்கள் மூலம் தமிழகத்தில் அறியப்படாத சுற்றுலாத்தலங்களை மக்களுக்கு தெரியப்படுத்தும் முயற்சியில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை இறங்கியுள்ளது. அந்த வகையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பேருந்து மூலம் தமிழ்நாடு முழுவதும் உள்ள சுற்றுலாத் தலங்களுக்கு 10 பேர் கொண்ட சமூக ஊடகவியலாளர்கள் (Social Media Influencers Team) பயணம் மேற்கொள்கின்றனர். இதற்கான வாகனத்தை சுற்றுலாத்துறை அமைச்சர் மதிவேந்தன் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

## 101 அடி உயர மலை உச்சியில் இருந்து சாய்ந்த கோணத்தில் அம்பு எய்தி தாய், மகன் சாதனை

- தாம்பரத்தை அடுத்த பழைய பெருங்களத்தூரைச் சேர்ந்தவர் சண்முகப்பிரியா. சென்னையில் உள்ள தனியார் மென்பொருள் நிறுவனத்தில் பணியாற்றி வருகிறார். இவரது மகன் ஜிஷ்ணுவர்தன், ஆறாம் வகுப்பு படித்து வருகிறார். உலக சுற்றுச்சூழல் தினத்தையொட்டி, சண்முகப்பிரியாவும், ஜிஷ்ணுவர்தனும் காஞ்சிபுரம் மாவட்டம், படப்பையை அடுத்த மலைப்பட்டு கிராமத்தில் உள்ள 101 அடி உயர மலை உச்சியில் நின்றபடி, 45 டிகிரி சாய்ந்த கோணத்தில் 25 நிமிஷத்தில் 101 அம்புகளை எய்துவிட்டு, கயிறு மூலம் மலை உச்சியில் இருந்து கீழே இறங்கி சாதனை படைத்தனர்.

## உணவு உற்பத்தி

- நாட்டில் உணவு உற்பத்தியை அதிகரித்து முன்னேற்றமடைவோம் என்றார் மத்திய ஜல்சக்தி, உணவு பதப்படுத்தும் தொழில்கள் துறை இணை அமைச்சர் பிரகலாத்சிங்படேல்.
- தஞ்சாவூரிலுள்ள இந்திய உணவு பதன தொழில்நுட்பக் கழகத்தில் நடைபெற்ற பிரதமரின் உணவு பதப்படுத்தும் குறுந்தொழில் நிறுவனங்களை முறைப்படுத்தும் திட்டம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் அவர் மேலும் பேசியது:
- உணவு பதனத் தொழில் துறை நம் முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும். உற்பத்தி செய்த உணவுப்பொருள்களை மக்களிடம் கொண்டு செல்லும்போது, உலக அரங்கில் நாம் வளர்ச்சிபெற்றதை உணர முடியும்.

## "100–ஆவது நாளில் மின்னகம்: 3.50 லட்சம் புகார்களுக்கு தீர்வு"

- மின்னகம் தொடங்கப்பட்டு 100 நாள்களை எட்டிய நிலையில், 3.50 லட்சம் புகார்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாக மின்சாரத்துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி தெரிவித்தார்.
- சென்னை, அண்ணாசாலையில் உள்ள தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைமை அலுவலகத்தில், மின்னகம் திறந்து வைக்கப்பட்டு நூறு நாள்கள் நிறைவடைந்துள்ளன. இதையொட்டி மின்சாரத்துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி நேரடியாக மின்னகத்தை ஆய்வு செய்தார். மின்னகம் சிறப்பாக செயல்பட துறை சார்ந்த அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கு அவர் ஆலோசனைகளை வழங்கினார்.

## பாதுகாப்புத் துறையில் தொழில்நுட்பங்களை கொண்டுவரும் டிஆர்டிஓ.வின் சென்னை "புதுமை ஆராய்ச்சி மையம்"

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனமான டிஆர்டிஓ, நாட்டின் பாதுகாப்புத் தேவைகளையும் ஆராய்ச்சிப் போக்கையும் இணைக்கும் நோக்கில், 'புதுமை ஆராய்ச்சி மையம்' (ஆர்.ஐ.சி) செயல்பட்டு வருகிறது. இம் மையம் சென்னை ஐஐடி ஆராய்ச்சி பூங்காவில், கடந்த 2012–ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.
- கல்வியாளர்கள், ஆராய்ச்சி அறிஞர்கள், தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றை இணைக்கும் தொடர்புக் கண்ணியாக இருப்பதும், பாதுகாப்புத் துறையில் வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களை அடையாளம் கண்டு, அவற்றில் ஆராய்ச்சி மேற்கொண்டு, அவற்றை எளிதாக்கி பயன்பாட்டுக்குக் கொண்டு வருவதுமே இந்த மையத்தின் முக்கிய நோக்கம்.
- எலக்ட்ரானிக்ஸ், மைக்ரோ எலக்ட்ரானிக்ஸ், கம்ப்யூட்டேஷன் சிஸ்டம்ஸ் (EMECS), கடற்படை அமைப்பு, கடற்படை தொழில்நுட்பங்கள் (NSNT), மேம்பட்ட வாகனதொழில்நுட்பங்கள் (AVT) போன்றவற்றில் இந்த ஆராய்ச்சி மையம் மேற்கொண்டிருக்கும் ஆராய்ச்சிகளும் கண்டுபிடிப்புகளும் புதுமையாக உள்ளன.
- இந்த ஆராய்ச்சி மையத்தின் வெற்றிக்கு, சமீபத்தில் ஹைதராபாத்தில் தொடங்கப்பட்ட மற்றொரு மையமே சான்று.

**பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பு (DRDO)**

- தலைமையகம் –புதுதில்லி
- தொடக்கம் – 1958
- செயலர் – டாக்டர் G.சதிஷ் ரெட்டி
- பாதுகாப்பு துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.

## தமிழகத்தில் நகர்புற உள்ளாட்சித் தேர்தலை நடத்த 4 மாத கால அவகாசம்: உச்சநீதிமன்றம் உத்தரவு

- அரசு கட்டிடங்கள் மற்றும் பொது இடங்களின் சுவர்களில் வரைதல், பேனர்கள் அமைத்தல் கூடாது என்று மாநில தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.
- தமிழ்நாடு திறந்த வெளிகள் (அழகுச் சீர்குலைப்பு தடுப்பு) சட்டம்–1959ன் படி பொது மக்கள் பார்வையில் உள்ள இடங்களிலும் சுவர் ஓவியம், பேனர்கள், போஸ்டர்கள் வைக்க அனுமதியில்லை என்று தேர்தல் ஆணையம் எச்சரித்துள்ளது.

**மாநில தேர்தல் ஆணையம்**

- மாநில தேர்தல் ஆணையம் 73 மற்றும் 74 சரத்தில் திருத்தத்திற்கு பிறகு 26–08–1993 ஆண்டு அன்று நடைமுறைக்கு வந்த அரசிலமைப்பு அதிகாரம் ஆகும்.

## ஓரகடத்தில் ரூ.450 கோடியில் மருத்துவ சாதனப் பூங்காவுக்கு மத்திய அரசு அனுமதி

- காஞ்சிபுரம் மாவட்டம் ஒரகடத்தில் ரூ.450 கோடி மதிப்பில் மருத்துவ சாதனங்கள் உற்பத்திப் பூங்கா அமைக்க மத்திய அரசு அனுமதித்துள்ளதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
- இதுகுறித்து, அவர் வெளியிட்ட செய்தி: தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் தொழில் பூங்காக்களும் குறிப்பிட்ட தொழில்களுக்கான சிறப்புப் பூங்காக்களும் சிப்காட் நிறுவனத்தின் மூலம் அமைக்கப்பட்டு வருகின்றன. இதன்படி, தமிழ்நாடு நிதிநிலை அறிக்கையில் காஞ்சிபுரம் மாவட்டம் ஒரகடத்தில் சிப்காட் நிறுவனம் மூலமாக மருத்துவ சாதனங்கள் பூங்கா அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.
- மத்திய அரசு அனுமதி: மருத்துவ சாதனங்கள் பூங்காவுக்கு அனுமதி தர வேண்டுமென மத்திய அரசுக்குக் கோரிக்கை விடப்பட்டது. இந்தக் கோரிக்கையை ஏற்று, தமிழ்நாட்டில் காஞ்சிபுரம் மாவட்டம் ஒரகடத்தில் மருத்துவ சாதனங்கள் பூங்கா அமைக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. பூங்காவில் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த அதிகபட்சமாக ரூ.100 கோடி நிதியை மத்திய அரசு அளிக்கும்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்துக்கு 3 தேசிய விருதுகள்

- தேசிய உயர்கல்வித் திட்டத்தின் கீழ் இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில் நடத்திய போட்டிகளில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்துக்கு பசுமை மற்றும் தூய்மையான வளாகம் உள்பட 3 தேசிய விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.
- தேசிய அளவில் தோட்டக்கலை, வனவியல் மற்றும் மத்திய, மாநில வேளாண் பல்கலைக்கழகங்களுக்கு தேசிய உயர்கல்வித் திட்டத்தின் கீழ் பசுமை மற்றும் தூய்மை வளாகப் போட்டி இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில்

சார்பில் 2020 அக்டோபரில் நடத்தப்பட்டது.

- இதில் வீணாக தூக்கி எறியப்படும் பொருள்களை மறுசுழற்சி செய்து கையாளுதல், தினசரி மின் தேவைகளுக்குப் புதுப்பிக்கவல்ல ஆற்றல் மூலங்களைப் பயன்படுத்துதல், சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருள்களை வாங்குதல் ஆகியவற்றில் பல்கலைக்கழகங்களின் ஈடுபாடு ஆகியவை மதிப்பீடு செய்யப்பட்டன.

## கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம்

- சேலம் மாவட்டம் வாழப்பாடியில் 'கலைஞரின் வருமுன் காப்போம் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடக்கி வைத்தார்.
- தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், சேலம், தருமபுரி மாவட்டங்களில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக சென்னையில் இருந்து விமானம் மூலம் சேலம் வந்தார். அவருக்கு சேலம் மத்திய மாவட்ட திமுக செயலாளரும், எம்எல்ஏவுமான ஆர்.ராஜேந்திரன், சேலம் மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் டி.எம்.செல்வ கணபதி, சேலம் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் எஸ்.ஆர். சிவலிங்கம், தேர்தல் பணிக்குழு செயலாளர் வீரபாண்டி ஆ.ராஜா உள்ளிட்ட கட்சியினர் வரவேற்பு அளித்தனர்.
- பின்னர் அங்கிருந்து வாழப்பாடி சென்ற முதல்வர் மு.கஸ்டாலின், அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கலைஞரின் வருமுன் காப்போம்' திட்டத்தைத் தொடங்கிவைத்தார்.

# Government of Tamil Nadu

## Department of Employment and Training

Course : Competitive Exam

Subject : Current Affairs

Topic : Current Affairs – September 2021(Tamil)-Q & A


**© Copyright**

The Department of Employment and Training has prepared the Competitive Exams study material in the form of e-content for the benefit of Competitive Exam aspirants and it is being uploaded in this Virtual Learning Portal. This e-content study material is the sole property of the Department of Employment and Training. No one (either an individual or an institution) is allowed to make copy or reproduce the matter in any form. The trespassers will be prosecuted under the Indian Copyright Act.

It is a cost-free service provided to the job seekers who are preparing for the Competitive Exams.

**Director,**
**Department of Employment and Training.**

# வினா – விடை

1. பாரா ஒலிம்பிக்கில் தங்கம் வென்றுள்ள முதல் இந்திய பெண் யார்?
(A) பவினா படேல்
(B) அவானி லெகாரா
(C) ருபினா பிரான்சிஸ்
(D) சோனல்பன் மனுபாய் படேல்

2. ராஜீவ் காந்தி கிஸான் நியாய் யோஜனா எந்த மாநிலத்தின் முயற்சி?
(A) பஞ்சாப் (B) கேரளா
(C) சட்டீஸ்கர் (D) ஆந்திர பிரதேசம்

3. சார்க் நாடுகள் அமைப்பின் தலைமையிடம் எந்த நாட்டில் அமைந்துள்ளது?
(A) நேபாளம் (B) வங்கதேசம்
(C) பூடான் (D) இந்தியா

4. தமிழ்நாடு அரசு அறிமுகம் செய்ய உள்ள சிமெண்டின் பெயர் என்ன?
(A) வலிமை (B) கலைஞர்
(C) தமிழ்நாடு
(D) நம்ம ஊர் சிமெண்ட்

5. மாநிலத்தின் அனைத்து மக்களுக்கும் இலவச குடிநீர் வழங்க உள்ள இந்தியாவின் முதல் மாநிலம் எது?
(A) உத்திரபிரதேசம் (B) கோவா
(C) ஹாக்கி (D) தமிழ்நாடு

6. ஸ்ரீநகரின் தால் ஏரியில் மிதக்கும் முதல் ATM–ஐ துவங்கியுள்ள வங்கி எது?
(A) பஞ்சாப் நேஷனல் வங்கி
(B) ஸ்டேட் பாங் ஆப் இந்தியா
(C) பேங்க் ஆப் பரோடா
(D) இந்திய யூனியன் வங்கி

7. லடாக் மாநிலத்தின் மாநில விலங்காக பின்வரும் எந்த விலங்கு சேர்க்கப்பட்டுள்ளது?
(A) பணிக்கரடி (B) பனிச்சிறுத்தை
(C) பனி கழுதை (D) ஒட்டகம்

8. அடல் ஒய்வூதிய திட்டத்தில் முதலிடத்தில் உள்ள மாநிலம் எது?
(A) உத்திர பிரதேசம் (B) மத்திய பிரதேசம்
(C) தமிழ்நாடு (D) குஜராத்

9. 63வது ராமன் மகசேசே விருது வென்றுள்ள டாக்டர் பிர்தௌசி காத்ரி எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
(A) பாகிஸ்தான் (B) வங்கதேசம்
(C) இந்தோனேசியா (D) இலங்கை

10. செய்திகளில் காணப்பட்ட "ஒய்–பிரேக்" செயலி பின்வரும் எந்த அமைச்சகத்துடன் தொடர்புடையது?
(A) உள்துறை (B) பாதுகாப்பு
(C) ஆயுஷ் அமைச்சகம் (D) நிதி அமைச்சகம்

11. தேசிய பசுமை தீர்ப்பாயம் சட்டம் எந்த ஆண்டு இயற்றப்பட்டது?
(A) 2004 (B) 2006
(C) 2008 (D) 2010

12. FSSAI அமைப்பு 5–ஸ்டார் ஈட் ரைட் நிலையம் என்ற சான்றிதழை எந்த ரயில்வே நிலையத்திற்கு வழங்கியுள்ளது?
(A) புது தில்லி (B) சண்டிகர்
(C) மும்பை சென்ட்ரல்
(D) சென்னை சென்ட்ரல்

13. ஜப்பான் பிரதமரின் பெயர் என்ன?
(A) பெஞ்சமின் நெதன்யாகு
(B) யோஷிகுடா சுகா
(C) யோஷிகோ நோடா
(D) ஷின்ஷோ அபே

14. தமிழ்நாட்டின் ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பைகளுக்கு எந்த நாள் முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது ?
(A) ஆகஸ்ட் 31 (B) செப்டம்பர் 30
(C) செப்டம்பர் 30 (D) அக்டோபர் 30

15. அயோத்தி தாச பண்டிதர் எந்த ஆண்டில் "ஒரு பைசா தமிழன்" என்ற இதழைத் தொடங்கினார்?
(A) 1904 (B) 1905
(C) 1906 (D) 1907

16. பன்னாட்டு இராணுவ பயிற்சியான பிரைட் ஸ்டார் பயிற்சி எந்த நாட்டில் நடத்தப்படுகிறது?
(A) இந்தியா (B) ஜப்பான்
(C) அமெரிக்கா (D) எகிப்து

17. 'பிலானிப்பன் 2021' உலக தபால் தலை கண்காட்சி எங்கு நடைபெற்றது?
(A) சீனா (B) மலேசியா
(C) தைவான் (D) ஜப்பான்

18. வ.உ.சி–யின் முதல் அரசியல் கட்டுரையின் பெயர் என்ன?
(A) இந்தியா (B) சுதந்திர காற்று
(C) கப்பல் வாணிபம் (D) சுதேச அபிமானம்

19. 2020 டோக்கியோ பாராலிம்பிக்கில் இந்தியா எத்தனை பதக்கங்களை வென்றுள்ளது?
(A) 15 (B) 17
(C) 19 (D) 21

20. எந்த நிறுவனம் பல்ஸ் என்னும் இந்தியாவின் முதல் டிஜிட்டல் பேமெண்ட் இன்டராக்டிவ் ஜியோஸ்பேஷியல் தளத்தை அறிமுகப்படுத்தியது?
(A) பேட்டியம் (B) கூகுள்
(C) ஃபோன்பே (D) ஃபேஸ்புக்

21. டென்மார்க் தலைநகரின் பெயர் என்ன?
(A) ஜெனீவா (B) ரோட்டர்டம்
(C) கோபன் ஹேகன் (D) ஸ்டாக் ஹோம்

22. சிங்காரச் சென்னை திட்டத்தின் இரண்டாம் பாகம் எத்தனை மையக் கருத்துகளின் அடிப்படையில் செயல்படுத்தப்பட உள்ளது?
(A) 5 (B) 10
(C) 15 (D) 20

23. இந்தியாவின் எந்த மாநிலத்தின் வீட்டு வசதி திட்டத்திற்கு 150 மில்லியன் டாலர் ஆசிய வளர்ச்சி வங்கி கடன் வழங்க உள்ளது?
(A) மேகாலாயா (B) மகாராஷ்ட்ரா
(C) தமிழ்நாடு (D) ஆந்திர பிரதேசம்

24. இந்தியாவின் முதல் உயிர் – செங்கல் அடிப்படையிலான கட்டிடம் எந்த அமைப்பால் துவங்கப்பட்டள்ளது?
(A) IIT– சென்னை (B) IIT– கான்பூர்
(C) IIT– ஹைதராபாத் (D) IIT– தில்லி

25. தகவல் பெறும் உரிமைச் சட்டம் (RTI) எந்த ஆண்டு இயற்றப்பட்டது?
(A) 2004 (B) 2006
(C) 2005 (D) 2009

26. சந்திரயன் – 2 விண்கலத்துடன் அனுப்பட்ட ரோவரின் பெயர் என்ன?
(A) விக்ரம் (B) பிரக்யான்
(C) சாராபாய் (D) APJ

27. சமீபத்தில் புவியை கடந்த 1000–ஆவது சிறு கோளின் பெயர் என்ன ?
(A) 2021 PJ1 (B) 2021 AJ193
(C) 2021 AFK (D) 2021 TJY

28. 2023 இல் ஜி–20 நாடுகளுக்கு தலைமை தாங்க உள்ள நாடு எது?
(A) அமெரிக்கா (B) இங்கிலாந்து
(C) இந்தியா (D) ரஷ்யா

29. சமீபத்தில் செய்திகளில் காணப்பட்ட மகமூத் மம்தாநி எந்த துறையை சேர்ந்தவர்?
(A) அரசியல் (B) விளையாட்டு
(C) எழுத்தாளர் (D) விஞ்ஞானி

30. NIRF இந்தியா 2021 தரவரிசைப் பட்டியலில் எந்த இந்திய நிறுவனம் முதலிடத்தில் உள்ளது?
(A) IIT சென்னை (B) IISC பெங்களூரு
(C) AIIMS தில்லி (D) IIT தில்லி

31. மன்னார் வளைகுடாவில் ஆற்றல் தீவை உருவாக்க தமிழ்நாடு எந்த நாட்டுடன் இனைந்துள்ளது?
(A) ஜெர்மனி (B) டென்மார்க்
(C) ஜப்பான் (D) தென் கொரியா

32. எரிசக்தி துறையில் ஒத்துழைப்பை அதிகரிக்க இந்தியா எந்த நாட்டுடன் இணைய முடிவெடுத்துள்ளது?
(A) அமெரிக்கா (B) துருக்கி
(C) இஸ்ரேல் (D) ஜப்பான்

33. கோவிட்–19 தடுப்பூசி நிலவரத்தை உடனுக்குடன் அறிந்துகொள்ள எந்த செயலி புதிய தொழில் நுட்பத்தை (APP) உருவாக்கியுள்ளது?
(A) கோவின் (B) ஆரோக்ய சேது
(C) கோவிராப் (D) c–விஜில்

34. தமிழ்நாட்டில் 2500 கோடியில் தகவல் தரவு மையம் எங்கு அமைக்கப்பட்டு உள்ளது?
(A) திருவள்ளூர் (B) அம்பத்தூர்
(C) ஆவடி (D) சோழிங்கநல்லூர்

35. செய்திகளில் காணப்பட்ட எல்பிரஸ் சிகரம் எந்த நாட்டில் அமைந்துள்ளது?
(A) பிரான்ஸ் (B) ரஷ்யா
(C) ஜெர்மனி (D) கஜகஸ்தான்

36. பஞ்சாப் மாநிலத்தின் ஆளுநராக நியமனம் செய்யபட்டுள்ளவர் யார்?
(A) R.N ரவி
(B) பன்வாரிலால் புரோஹித்
(C) குர்மித்சிங்
(D) ஜெகதீப் தக்கார்

37. குஜராத் புதிய முதல்வராக பதவியேற்றுள்ளவர் யார்?
(A) விஜய் ருபானி
(B) புபேந்திர படேல்
(C) ஆனந்திபென் படேல்
(D) நிதின் படேல்

38. நாட்டின் மிகப்பெரிய திறந்த வெளி பெரணி பண்ணை எங்கு அமைக்கப்பட்டுள்ளது?
(A) உத்திர பிரதேசம்
(B) உத்திரகாண்ட்
(C) ஹிமாச்சல பிரதேசம்
(D) நாகாலந்து

39. ட்ரோன்கள் மூலம் தடுப்பூசி கொண்டு செல்லும் திட்டத்தை துவங்கியுள்ள மாநிலம் எது?
(A) ஆந்திரா (B) தெலுங்கானா
(C) கேரளா (D) புது தில்லி

40. 'இந்தியாவில் மனித உரிமையும் தீவிரவாதமும்' என்ற புத்தகத்தை எழுதியவர் யார்?
(A) அஜித் தோவல்
(B) சுப்ரமணியன் சுவாமி
(C) பிபின் ராவத்
(D) சஷி தரூர்

41. இந்தியா தானிய மையமாக மாற 'தானிய' திட்டத்தைத் தொடங்கிய மாநிலம் எது?
(A) கேரளா (B) தமிழ்நாடு
(C) சட்டீஸ்கர் (D) குஜராத்

42. துபாய் நாட்டின் "கோல்டன் விசா" பெறும் முதல் கோல்ஃப் வீரர் யார்?
(A) டைகர் வுட்ஸ் (B) கேரி ப்ளேயர்
(C) அதீதி ஆஷோக் (D) ஜீவ் மில்கா சிங்

43. தஞ்சாவூர் தமிழ்பல்கலைகழகத்தின் திறனாய்வுச் செம்மல் விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டவர் யார்?
(A) எஸ். ராமகிருஷ்ணன்
(B) ஜெயமோகன்
(C) பஞ்சாங்கம்
(D) ராஜன்

44. நீட்டிலிருந்து நிரந்தர விளக்கு கோரி சட்டசபையில் மசோதா நிறைவேற்றிய மாநிலம் எது?
(A) குஜராத் (B) தமிழ்நாடு
(C) ஆந்திர பிரேதசம் (D) கேரளா

45. 50 வகையான புற்றுநோயைக் கண்டறிய, உலகின் மிகப்பெரிய இரத்த பரிசோதனையை நடத்தியது எந்த நாடு?
(A) சீனா (B) ரஷ்யா
(C) ஃப்ரான்ஸ் (D) இங்கிலாந்து

46. 'தேசிய பொறியாளர்கள்' தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?
(A) செப்டம்பர் 12 (B) செப்டம்பர் 13
(C) செப்டம்பர் 14 (D) செப்டம்பர் 15

47. இந்தியா எந்த நாட்டின் கடலோர காவல் படைக்கு டார்னியர் ரக விமானங்களை வழங்கியது?
(A) மலேசியா (B) பிலிப்பைன்ஸ்
(C) மொரிஷியஸ் (D) சிங்கப்பூர்

48. இந்தியாவின் முதல் வெடிப்பு உலை வாயுவிலிருந்து கரிய அமில வாயுவை பிரிக்கும் திட்டத்தை தொடங்கிய நிறுவனம் எது?
(A) டாடா எஃகு (B) ONGC
(C) Larsen and Toubro (D) BHEL

49. 2020–ம் ஆண்டில் அதிகமாக தேசதுரோக வழக்குகளில் பதியப்பட்ட மாநிலம் எது?
(A) அஸ்ஸாம் (B) கர்நாடகா
(C) தமிழ்நாடு (D) மணிப்பூர்

50. லோக்சபா மற்றும் ராஜ்ய சபா தொலை காட்சிகளை இணைத்து பிரதமர் மோடி அவர்களால் துவக்கப்பட்ட தொலைக்காட்சியன் பெயர் என்ன?
(A) சன்சத் தொலைகாட்சி
(B) நாடாளுமன்ற தொலைகாட்சி
(C) அஸாத் தொலைகாட்சி
(D) அஜ்தக் தொலைகாட்சி

51. கேரள மாநில அரசின் சிறப்பு அதிகாரியாக அறிவிக்கப்பட்ட ஒய்வு பெற்ற ஐ.எப்.எஸ் அதிகாரி யார்?
(A) குமாரவேல் (B) வேணு ராஜாமணி
(C) ஆர்ப்பிதா கோஷ் (D) தியாகராஜன்

52. உலக ஓஸோன் தினம் – 2021 என்று கடைபிடிக்கப்படுகிறது?
(A) செப்டம்பர் 14 (B) செப்டம்பர் 15
(C) செப்டம்பர் 16 (D) செப்டம்பர் 17

53. உலகில் முதல்முறை பொதுமக்கள் நால்வரை பூமியை சுற்றி வரும் பயணத்திற்கு ஒருங்கிணைத்த நிறுவனம் எது?
(A) Blue Origin (B) Virgin Galactic
(C) SpaceX (D) Lockheed Martin

54. டைம் பத்திரிக்கையின் "உலகின் செல்வாக்குமிக்க 100 தலைவர்கள் பட்டியலில் இடம் பெறாதவர்" யார்?
(A) அதர்பூனவாளா
(B) நரேந்திர மோடி
(C) சாவித்திரி ஜிண்டால்
(D) மம்தா பேணர்ஜி

55. தமிழக அரசு பணிகளுக்கான நேரடி நியமன வயது என்ன?
(A) 34 (B) 33
(C) 32 (D) 35

56. "Swachhata Pakhwada 2021" எங்கு தொடங்கப்பட்டது?
(A) மொர்முகோ துறைமுகம்
(B) கொச்சின் துறைமுகம்
(C) ஜவஹர்லால் நேரு துறைமுகம்
(D) எண்ணூர் துறைமுகம்

57. இந்தியா எந்த நாட்டுடன் சூரிய கிரண்–XV இராணுவ கூட்டு பயிற்சி மேற்கொள்கிறது?
(A) இலங்கை (B) நேபாளம்
(C) மாலத்தீவு (D) வங்காள தேசம்

58. புதிதாக பதவியேற்க உள்ள தமிழக ஆளுநர் யார்?
(A) ஆர்.என். ரவி
(B) சாதிக் அலி
(C) P.C. அலேக்ஸான்டர்
(D) சுர்ஜித் சிங் பர்னலா

59. மாமத் குகை தேசிய பூங்கா எங்கு அமைந்துள்ளது?
(A) ஜெர்மனி (B) ஆஸ்திரேலியா
(C) அமெரிக்கா (D) கனடா

60. மத்திய அரசின் கேலோ திட்டத்தில் சேர்த்து அங்கீகரிக்கப்பட்டுள்ள தமிழக விளையாட்டு எது?
(A) கபடி (B) சிலம்பம்
(C) இறகுபந்து
(D) இவற்றில் ஏதுமில்லை

61. தேசிய ஒபன் தடகள சேம்பியன்ஷிப்பில் மும்முறை தாண்டுதலில் தங்கம் வென்ற தமிழக வீரர் யார்?
(A) பிரவின் சித்ரவேல்
(B) ராகுல்
(C) தமிழரசன்
(D) நடராஜன்

62. அமைப்புச்சாரா தொழிலாளர்கள் பதிவு செய்ய மத்திய அரசு உறுவாக்கி இணையதளம் பெயர் என்ன?
(A) e–shram.gov.in (B) dot.gov.in
(C) techgov.innitiprit.in (D) nvsp.in

63. பான் மற்றும் ஆதார் இணைப்பதற்கான கடைசி தேதி எது?
(A) ஜனவரி 31, 2022
(B) டிசம்பர் 31, 2021
(C) மார்ச் 31, 2022
(D) அக்டோபர் 31, 2021

64. தமிழக அளவில் தடுப்பூசி செலுத்தியவர்களில் முதலிடத்தில் உள்ள மாவட்டம் எது?
(A) சென்னை (B) மதுரை
(C) திருச்சி (D) கோயம்புத்தூர்

65. இந்தியாவின் 61–வது மென்பொருள் தொழில்நுட்ப பூங்கா எங்கு தொடங்கப்பட்டுள்ளது?
(A) மணிப்பூர் (B) நாகாலந்து
(C) அஸ்ஸாம் (D) மேகாலயா

66. தேசிய ஒபன் தடகள சாம்பியன் ஷிப் போட்டியில் பெண்களுக்கான மும்முறை தாண்டுதலில் தங்கப்பதக்கம் வென்றவர் யார்?
(A) பி. ஐஸ்வர்யா
(B) ஹர்மிலன் பெயின்ஸ்
(C) வித்யா (D) சுவேதா

67. இந்தியாவின் 70–வது செஸ் கிராண்ட் மாஸ்டர் யார்?
(A) S.P. சேதுராமன்
(B) கிருஷ்ணன் சசிகரன்
(C) R. ராஜா ரித்விக்
(D) ஸ்ரிநாத் நாராயணன்

68. காவலர்களின் நலனுக்காக எந்த கல்வி நிறுவனத்துடன் இணைந்து தமிழக அரசு டிப்ளோமா பயிற்சி அளிக்கிறது?
(A) AIMS (B) IIMS
(C) JIPMER (D) NIMHANS

69. இந்தியத் தாவரவியல் ஆய்வு 2020 இல் அதிகப்படியான தாவரங்கள் எந்தப் பகுதியில் கண்டு பிடிக்கப்பட்டன?
(A) மேற்கு தொடர்ச்சி மலை
(B) மேற்கு இமய மலை
(C) கிழக்குமலைத் தொடர்
(D) கிழக்கு கடற்கரை

70. 7.5 சதவித உள் ஒதிக்கீடு கீழ் பொறியியல் படிப்புகளில் சேரும் கல்வி, விடுதி கட்டணத்தை அரசே ஏற்கும் என்று அறிவித்த மாநிலம் எது?
(A) கேரளா (B) தமிழ்நாடு
(C) தெலுங்கானா (D) ஆந்திரா

71. பெண்களுக்கான ஓட்டபந்தயத்தில் (1500 மீட்டர்) தேசிய சாதனையை முறியடித்தவர் யார்?
(A) ஐஸ்வர்யா (B) பருள் சௌத்ரி
(C) ஹர்மிலன் கௌர் பெயின்ஸ்
(D) சுஷிலா சாணு

72. 2022–கிற்கான உலகப் பொருளாதார மன்றத்தின் கூட்டம் எங்கு நடைபெறவுள்ளது ?
(A) புது தில்லி (B) தாவோஸ்
(C) இந்தோனேசியா (D) பெய்ஜிங்

73. இந்தியாவின் 61–வது மென்பொருள் தொழிற்நுட்ப பூங்கா எந்த மாநிலத்தில் திறக்கப்பட்டது ?
(A) அஸ்ஸாம் (B) நாகாலாந்து
(C) கேரளா (D) உத்தர பிரதேசம்

74. தெற்காசியாவின் மிகப்பெரிய தயாரிப்பு மேம்பாட்டு மையமான "டிஜிட்டல் ஹப்"–ஐ எந்த மாநிலம் திறந்துள்ளது?
(A) கேரளா (B) கர்நாடகா
(C) உத்தர காண்ட் (D) உத்தர பிரதேசம்

75. சார்க் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் தாலிபான்கள் பங்கேற்க வேண்டும் என்று வலியுறுத்திய நாடு எது?
(A) பாகிஸ்தான் (B) சீனா
(C) பங்களாதேஷ் (D) நேபாளம்

76. உலகளாவிய செமிகண்டக்டர் சந்தை நடப்பாண்டில் எத்தனை சதவிகிதம் உயரும் என (ஐ.டி.சி) ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது?
(A) 25% (B) 37.3%
(C) 17.3% (D) 21%

77. இந்தியாவின் முதல் மசூதியாக கருதப்படும் சேரமான் ஜூம்மா மசூதி சமீபத்தில் மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளது எந்த மாநிலத்தில் இந்த மசூதி அமைந்துள்ளது?
(A) தெலுங்கானா (B) கர்நாடகா
(C) கேரளா (D) ஆந்திரா

78. WHO–வின் கூற்று படி இப்போது உலகிலேயே சக்தி வாய்ந்த கொரானா (COVID–19) வகை எது?
(A) ஆல்பா (B) பீட்டா
(C) காமா (D) டெல்டா

79. CBSE/NCERT பாடதிட்டத்தை மறுபரிசீலனை செய்ய சமீபத்தில் அமைக்கப்பட்ட 12 பேர் கொண்ட குழுவின் தலைவர் யார்?
(A) அமித் ஷா
(B) கஸ்தூரி ரங்கன்
(C) பிமல் ஜலன்
(D) இன்ஜெட்டி ஸ்ரீனிவாஸ்

80. இந்தியா – சீனா எல்லை பகுதியில் சீன இராணுவம் எந்த இடத்தை பெருமளவு ஆக்கிரமித்துள்ளனர்?
(A) கோக்ரா (B) ஷிம்லா
(C) நைநிடால் (D) தெற்கு லடாக்

81. எந்த வகை நவீன பீரங்கிகள் தயாரிக்க பாதுகாப்பு அமைச்சகம் ஆவடி கனரக வாகன தொழிற்சாலையுடன் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது?
(A) அர்ஜூன் – எம். கே – 2
(B) அர்ஜூன் – எம்–3
(C) அர்ஜூன் – எம். கே – 1A
(D) அர்ஜூன் – எம் (10)

82. உலகின் உயரமான EV சார்ஜிங் நிலையம் எங்குள்ளது ?
(A) ஜார்கண்ட்
(B) தமிழ்நாடு
(C) ஹிமாச்சல் பிரதேசம்
(D) ஹைதராபாத்

83. எந்த ஊரில் சோழர் காலத்தைச் சேர்ந்த செங்கல் கட்டிடங்கள் தொல்லியல் துறையால் கண்டுபிடிக்கப்பட்டது ?
(A) கொடுமணல் (B) பூம்புகார்
(C) கீழ்அடி (D) மாளிகை மேடு

84. நடப்பு நிதி ஆண்டில் நிகர நேரடி வரி வசூல் எத்தனை சதவீதம் உயர்ந்துள்ளது?
(A) 65% (B) 60%
(C) 54% (D) 74%

85. பிட்காயினை கண்டுபிடித்த "சேடோஷி நனமோட்டோவின் வெண்கல சிலை எந்த நாட்டில் திறக்கப்பட்டது?
(A) சன் சல்வெடார் (B) துபாய்
(C) புதபெஸ்ட் (D) மாட்ரிட்

86. "சாங்–5" விண்வெளி திட்டம் எந்த நாட்டால் நடத்தப்படுகிறது?
(A) இந்தியா (B) ஜப்பான்
(C) அமெரிக்கா (D) சீனா

87. வீடியோ–கேம் மற்றும் கைபேசியில் ஆன்லைன் விளையாட்டுகளுக்கு அடிமை யானவர்களுக்கு "De–Addiction" நிலையங் களை தொடங்கிய மாநிலம் எது?
(A) தமிழ்நாடு (B) ஆந்திரா
(C) தெலுங்கானா (D) கேரளா

88. உலக நதிகள் தினம் – எப்போது கொண்டாடப்படுகிறது?
(A) செப்டம்பர் – 25 (B) செப்டம்பர் – 26
(C) செப்டம்பர் – 27 (D) செப்டம்பர் – 28

89. சூரிய சக்தி மின் உற்பத்தியில் 100 சதவிதம் இலக்கை எட்டிய தமிழக இரயில் நிலையம் எது?
(A) சென்னை சென்ட்ரல் இரயில் நிலையம்
(B) எழும்பூர் இரயில் நிலையம்
(C) ஃப்ரான்ஸ்
(D) பிரேசில்

90. ஐரோப்பாவின் எந்த நாட்டின் பாராளுமன்றத்தில் அதிக அளவில் பெண் நாடாளுமன்ற உறுப்பினர்களாக உள்ளனர்?
(A) இத்தாலி (B) ஸ்பெயின்
(C) ஐஸ்லாந்து (D) சுவிடன்

91. உலக வில்வித்தை போட்டியில் வெள்ளி பதக்கத்தை வென்ற இந்திய வீராங்கனை யார்?
(A) ஜோதி சுரேக்கா வெண்ணம்
(B) தீபிகா குமாரி
(C) அன்கிதா பாகத் (D) டோலா பேனர்ஜி

92. கமலா ஆறு பின்வரும் எந்த நாட்டில் உருவாகிறது?
(A) இந்தியா (B) நேபாளம்
(C) வங்காளதேசம் (D) பூட்டான்

93. ஜெர்மனியின் முதல் பெண் அதிபர் யார்?
(A) ஹெல்லே தோர்னிங்–ஷ்மிட்
(B) ஏஞ்சலா மெர்கல்
(C) தெரசா மே
(D) மைக்கேல் பேச்லெட்

94. தமிழகத்தில் இரண்டாவது காவல் அருங்காட்சியகம் எங்கு திறக்கப்பட்டுள்ளது?
(A) சென்னை (B) திருச்சி
(C) கோயம்புத்தூர் (D) மதுரை

95. ஐ.நா.வின் உலகில் மகிழ்ச்சியான நாடுகள் – 2021–க்கான பட்டியலில் இந்தியாவின் இடம் என்ன?
(A) 139 (B) 144
(C) 149 (D) 142

96. ஆசியாவின் நீளமான இருவழி சுரங்கப்பாதை எந்த கணவாயில் அமைந்துள்ளது?
(A) ஷிப்கீலா (B) சோஜிலா
(C) ஜெலெப்லா (D) நதுலா

97. சமீபத்தில் எந்த வர்த்தகத்திற்கான அனுமதியையும் விதிமுறைகளையும் வெளியிட்டது SEBI?
(A) வெள்ளி (B) தங்கம்
(C) Cryptocurrency (D) வைரம்

98. எந்த இரு நாட்டு அரசு கடற்படைகளுக்கு இடையே பேச்சுவார்த்தை நடத்துவதற்கான ஒப்பந்தம் கையெழுத்தானது ?
(A) இந்தியா – ஜப்பான்
(B) இந்தியா – அமெரிக்கா
(C) அமெரிக்கா – ஆஸ்திரேலியா
(D) இந்தியா – ஆஸ்திரேலியா

99. இந்தியாவின் வெளிநாட்டு கடன் 2020–ஐ ஒப்பிடும் போது எத்தனை சதவீதம் உயர்ந்துள்ளது?
(A) 5.1% (B) 4.2%
(C) 2.1% (D) 3.2%

100. எந்த கல்லூரியின் முன்னாள் மாணவர்களின் சங்கம் – "5000 Ignited Minds" என்னும் திட்டத்தை முன்னெடுத்துள்ளது?
(A) ஐஐடி – மும்பை
(B) ஐஐடி – டெல்லி
(C) ஐஐடி – சென்னை
(D) ஐஐடி – கொல்கத்தா

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| B | C | A | A | B | B | B | A | B | C |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| D | B | B | C | C | C | D | D | C | C |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| C | B | C | C | C | B | A | C | C | A |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 | 37 | 38 | 39 | 40 |
| B | A | A | B | B | B | B | B | B | B |
| 41 | 42 | 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 | 50 |
| C | D | C | B | D | D | C | A | D | A |
| 51 | 52 | 53 | 54 | 55 | 56 | 57 | 58 | 59 | 60 |
| B | C | C | C | C | B | B | A | C | B |
| 61 | 62 | 63 | 64 | 65 | 66 | 67 | 68 | 69 | 70 |
| A | A | C | D | B | A | C | D | A | B |
| 71 | 72 | 73 | 74 | 75 | 76 | 77 | 78 | 79 | 80 |
| C | B | B | A | A | C | C | D | B | A |
| 81 | 82 | 83 | 84 | 85 | 86 | 87 | 88 | 89 | 90 |
| C | C | D | C | C | D | D | B | A | C |
| 91 | 92 | 93 | 94 | 95 | 96 | 97 | 98 | 99 | 100 |
| A | B | B | A | A | B | B | D | C | C |